பேரியல் பொருளாதாரம்

ஆசிரியர்
M. S. சீனிவாசன், எம்.ஏ., எம்.எஸ். (ஹவாய்),
பேராசிரியர், பொருளியல் துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண் — 508

பேரியல் பொருளாதாரம்

(பட்டப் படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்

M. S. **சீனிவாசன்**, எம்.ஏ., எம்.எஸ். (ஹவாய்),

பேராசிரியர், பொருளியல் துறை,

மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1973

T.N.T.B.S. (C.P.) No. 508

© Tamil Nadu Text Book Society

MACRO ECONOMICS

M. S. SRINIVASAN

Price Rs. 5-40

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
MEKALA ACHAGAM,
85, Strahan's Road,
Madras-600012.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'பேரியல் பொருளாதாரம்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 508ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 543 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

ஆசிரியர் முன்னுரை

பேரியல் பொருளாதாரம் (Marco Economics) முதன் முறையாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பிற்குப் பொருளாதார மாணவர்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப் புத்தகத்தின் முதல் நான்கு அத்தியாயங்களில், நாட்டின் மொத்த வருமானம், தொன்மைப் பொருளாதாரிகளின் பேரியல் பொருளாதாரம் (Classical Macro Economics), கீன்ஸியப் பொரு ளாதாரம் போன்ற பகுதிகள் வழக்கமான முறையில் எளிதாகக் கூறப்பட்டிருக்கின்றன. அத்தியாயம் ஐந்திலிருந்து பேரியல் பொரு ளாதார மாதிரிகள் (Macro Economic Models) IS, LM சார்புகள் (IS, LM Functions) போன்ற பகுதிகள், புதிய முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. கணிதப் பகுதிகள் சுருக்கமாகவும் வரைபடமாகவும் காட்டப்பட்டிருக்கின்றன. சில சிறிய சாம்யங்கள் கருத்துகளை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இப் புத்தகத்தைத் தமிழில் எழுதுவதில் பல இடர்ப்பாடுகள் இருக்கத்தான் செய்தன. இப் புத்தகத்தின் பொருளாதார வளர்ச்சி என்ற அத்தியாயம் மாநிலக் கல்லூரியின் தலைமைப் பேராசிரியர் டாக்டர் டி. எஸ். வெங்கடசாமி அவர்களின் யோசனைப்படி சேர்க்கப்பட்டது.

பேரியல் பொருளாதாரத்தின் முழு விளக்கத்தையும் பெற இந் நூல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படும் எனக் கருதுகிறேன்.

M. S. சீனிவாசன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	முன்னுரை	1
2.	நாட்டின் மொத்த வருமானம்	8
3.	தொன்மைப் பொருளாதாரிகளின் பேரியல் பொருளாதாரம் (Classical Macro Economics)	19
4.	கீன்ஸீயப் பொருளாதாரமும் தொன்மைப் பொருளாதாரிகளும்	23
5.	எளிமையான பேரியல் பொருளாதார அமைப்பில் வருமானம் நிர்ணயம் (Income Determination in a Simple Macro Model)	34
6.	அரசாங்கமும் வருமான அளவும்	46
7.	முதலீட்டுச் செலவுகள் (Investment Expenditure)	54
8.	பணத் தேவையும் வட்டி வீதமும்	65
9.	பண அளிப்பு	73
10.	உற்பத்தி, பண மார்க்கெட்டுகளின் பொதுச் சமன்பாடு (General Equilibrium of the Product and Money Markets)	82
11.	பணத்தேவையும் பொருளாதாரத்தை நிலைப் படுத்தும் கொள்கையும்	93
12.	வேலைவாய்ப்புகளின் அளவுகள்	102
13.	பொது விலைகளின் மட்டம் (The General Price Level)	112
14.	கீன்ஸும் தொன்மைப் பொருளாதாரிகளும் ஓர் ஒப்பீடு (வரைபடங்கள், சமன்பாடுகள்)	123
15.	பன்னாட்டு வாணிபமும் வருமான அளவும்	129
16.	அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை - கணக்கு	138
17.	பொருளாதார வளர்ச்சி	154
18.	வளர்ச்சியுறும் பொருளாதாரத்தின் மாதிரி	162
19.	பேரியல் பொருளாதாரத்தில் இயக்கநிலை (Macro Economic Dynamics)	180
20.	வேலையைப்பற்றிய பொதுக் கோட்பாடு (பணவீக்கம்பற்றிய கோட்பாடு)	190
21.	வாணிபச் சுழற்சி	218
	மேற்கோள் நூற்பட்டியல்	228
	கலைச்சொற்கள்	229

1. தோற்றுவாய்

கீன்ஸ், 1936ஆம் வருடம் 'பொது வேலைக் கோட்பாடு, வட்டி, பணம்' (General Theory of Employment, Interest and Money) என்ற புத்தகத்தை வெளியிட்டார். பொருளாதார இலக்கியங் களில் இப் புத்தகம் ஒரு புது முறையான திடீர்த் திருப்பத்தை ஏற்படுத்தியது. கார்ல்மார்க்ஸ் அவர்களின் 'முதல்' (Dascapital) என்ற நூலைப் போன்று, கீன்ஸின் நூலும், பொருளாதாரத்தில் ஒரு புதுமுறையை ஏற்படுத்தியது. கீன்ஸ், கார்ல்மார்க்ஸின் நூலைப்பற்றிக் குறிப்பிடும்போது, அதன் குழப்பமான தன்மையைக் கடுமையாக விமரிசனம் செய்தார்.[1] இதுபோன்ற விமரிசனம் கீன்ஸ் அவர்களுடைய நூலுக்கும் பொருந்தும். ஆனால், மார்க்ஸ், கீன்ஸ் இவர்கள் எடுத்துக்கொண்ட பொருளாதார பிரச்சனைகளும் அவர் களுடைய கோட்பாடுகளும் கருத்துப் புரட்சியைத் தோற்றுவித்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. கீன்ஸுக்குப் பின்னர் வந்த பேராசிரியர் ஹேன்ஸன் (Hansen) போன்றவர்கள் பொதுக் கோட்பாட்டின் (General Theory) ஒவ்வொரு பக்கத்தையும் அலசி, கீன்ஸின் தத்துவங்களை விரிவுபடுத்தி, அதை ஒழுங்காகச் செம்மைப் படுத்தினார்கள்.

நவீனகாலத்தில், கீன்ஸ் பொருளாதாரம் மேலும் வளர்ந்து, பேரியல் பொருளாதாரம் (Macro economics) என்ற ஒரு தனிப் பிரிவே பொருளாதாரப் பிரிவில் ஏற்பட்டுவிட்டது. பேரியல் பொரு ளாதார அளவீடு, கோட்பாடு, கொள்கை ஆகியவற்றைப்பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்ளவேண்டி இருக்கின்றது. இத் தேவையைப் பூர்த்தி செய்யவே, இப் புத்தகம் எழுதப்பட்டிருக் கிறது. இந்தியப் பொருளாதாரப் பிரச்சினைகள் சிலவற்றை எடுத்துக்கொள்வோம். 1972-73ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிக்கை,பார்லிமெண்டில் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் பெருகிவரும் வேலையின்மையைப்பற்றிக் குறிப்பிட்டு இருக் கிறார்கள். 1971ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 44·95 லட்சம் மனிதர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள் எனப் புள்ளிவிவரங்கள்

கூறுகின்றன. இஃது ஒரு வருடம் கழித்து 56·68 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இதைத் தவிர, பணவீக்கம் வளர்ந்துகொண்டு வருவதையும் பார்க்கலாம். விவசாய உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்பட்டு, விலைவாசிநிலை மிகவும் பயங்கரமாகக் காட்சி அளிப்பதை இந்தியப் பொருளாதாரத்தில் பார்க்கிறோம். மொத்த விலைக் குறியீட்டு எண்கள் 1969-ல் 2·1% உயர்ந்தது. 1970-ல் அது 6·2% வீதமாக உயர்ந்தது. 1972-ல் 7·8% வீதமாக உயர்ந்து மேல் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. பண அளிப்பும் தொடர்ந்து பெருகிக் கொண்டு வருகிறது. 1969-ல் 10·8% வீதமும் 1970–71-ல் 12·9% வீதமும் 1971–72-ல் 12·9% வீதமும் பண அளிப்புப் பெருகச்செய்தது. இதுபோன்ற பொருளாதாரப் பிரச்சினைகளையெல்லாம் தெளிவாகப் புரிந்துகொள்ள பேரியல் பொருளாதாரம் தேவைப்படுகிறது. பேரியல் பொருளாதாரத்தில் இதுபோன்ற பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் அளவீடுகள் ஏற்பட்டிருக்கின்றன.

பொருளாதார வளர்ச்சி என்பது ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தின் அமெரிக்க நாடுகளில் (Latin American countries) ஒரு முக்கிய பிரச்சனையாக இருக்கிறது. காலனி ஆதிக்கத்தின்கீழ் அவதியுற்ற இந்த நாடுகள் விடுதலை அடைந்த பின்னர், வெகுவேகமாக முன்னேற விரும்புகின்றன. ஆனால், உலக வரலாற்றைப் பார்க்கும்போது 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை பெரும்பாலான நாடுகள் வறுமையிலும் ஏழ்மையிலும் காணப்பட்டன; பொருளாதார வளர்ச்சி என்பது கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் தான் சில நாடுகளில் ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் முதலிய சில நாடுகளே வளம் கொழிக்கும் நாடுகளாகத் திகழ்கின்றன. 18ஆம் நூற்றாண்டு தொடங்கி முதல் உலகயுத்தம் வரை, தனிச் சுதந்திரப் பொருளாதாரம் (Free enterprise economy) என்ற அமைப்பின் கீழ்த்தான் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது. 1917ஆம் ஆண்டிற்குப் பின்னர், கம்யூனிஸ முறையில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது. இம் முறையில் உற்பத்திக் காரணிகளை அரசாங்கம் உடைமையாகக் கொண்டு, அவற்றைத் திட்டங்களின்மூலமாக முதலீடு செய்தது. இம் முறையின்கீழ் அதிகமான பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. இதற்கு மாறாகச் சுதந்திரப் பொருளாதார அமைப்பில்தான் வளர்ச்சி அதிகம் ஏற்படும் என்று வாதிடப்படுகிறது. தற்போது கிடைக்கும் உண்மையான விவரங்களை வைத்துக்கொண்டு இதுபற்றி முடிவாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

இதுபற்றி விவரமாகத் தெரிந்துகொள்ளப் பேரியல் பொருளாதாரம் தேவைப்படுகிறது. பொருளாதார வளர்ச்சிகளைப் பற்றித்

தெரிந்துகொள்ள நாட்டின் வருமானம், நாட்டு உற்பத்தி முதலிய அளவீடுகள் நமக்குப் பயன்படும். ஒரு நாட்டின் முழு வேலை என்று கூறுமிடத்து, நாம் உழைப்பின் முழுமையை மட்டுமல்லாமல் உற்பத்தியில் இயற்கை வளங்களின் முழு ஈடுபாட்டையும் குறிக்கிறோம். முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டை இங்கு நாம் காணவேண்டும். முன்னேற்றம் (Development) என்று கூறும்போது, இருக்கும் வளங்களைத் திறமையாக உபயோகித்து அதிக உற்பத்தியை அடைதல்; வளர்ச்சி (Growth) என்று கூறும்போது, நாட்டின் ஆக்கச் செல்வங்களையே அதிகரித்து அவற்றைத் திறம்பட உபயோகித்தல் என்பதும் பெறப்படும்.

இந்தப் பேரியல் பொருளாதாரத்தில் நாம் இந்தப் பிரச்சனைகளைத்தான் காணப்போகிறோம். முழு வேலை வாய்ப்பை எவ்வாறு ஏற்படுத்துவது? நாட்டின் மொத்த ஆக்கத்தையும் (Gross National Product) எவ்வாறு அதிகரிப்பது? அதற்குத் தேவைப்படும் காரணிகள் யாவை? அவற்றை அடைய நாம் கடைப்பிடிக்க வேண்டிய பொருளாதாரக் கொள்கைகள் (Economic policies) யாவை? இவற்றுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் காணலாம். ஆயினும், பொருளாதாரத்தின் இந்தப் பிரிவைப்பற்றி ஒரு குறிப்புக் கொடுப்பது அவசியமாகிறது.

முன்னேற்றம் என்று கூறும்போது, அதற்கு நுகர்வுதான் அடிப்படையாக அமைந்திருக்கிறது. பெரும்பாலான மக்கள், தம் வருமானத்தில் 75 சதவீதத்தைச் சேமித்துவைத்து, 25 சதவீதம் மட்டுமே செலவழித்தால், நாட்டின் வருமானம் அதிவேகமாக அதிகரிக்க வாய்ப்பில்லை. உதாரணமாக, நாட்டு வருமானம் ரூ. 100 என்று கொள்வோம். நுகர்வு, 25 சதவீதமாக இருப்பதால், பெருக்கியின் காரணமாக (multiplier) வருமானம் 1·3 மடங்குதான் அதிகரிக்க வாய்ப்புண்டு. ஆனால், அதுவே 75 சதவீதமாக இருந்தால் 4 மடங்காக உயர வாய்ப்புண்டு. ஆகையால் அதிகப்படியான சேமிப்பு, பயனுள்ள தேவையைக் (Effective demand)குறைக்கிறது. தேவை குறையும்போது, பொருள்களை உற்பத்தி செய்வதால் பிரயோசனமில்லை. ஆகையால், அந்த அதிகப்படியான சேமிப்பு, மூலதனமாக மாற்றப்படுவதில்லை. இஃது இறுதியாக ஒரு மந்த நிலையைத் (depression) தோற்றுவிக்கிறது. தனி மனிதர்களின் நிகழ்ச்சி ஒரு பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதை இங்கு நாம் காண்கிறோம்.

அதேபோல், வணிகத் துறையின் நிகழ்ச்சிகளும் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றன. ஒரு துறையில் முதலீடு செய்ய வேண்டுமானால், அதிலிருந்து கிடைக்கப்பெறும் இலாபம் (profit)

வட்டி வீதத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக இருக்கவேண்டும். ஆகையால், முதலீடு வட்டிவீதத்தைவிட இலாபத்தையே பொறுத்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், அரசாங்கம் மூலதனத்தை அதிகரிக்க வட்டிவீதத்தைக் குறைத்துப் பயனில்லை. பொதுக் கடனைக் குறைத்தும் பயனில்லை. ஆகையால்தான், பொருளாதார மந்த நிலையிலிருந்து ஒரு நாட்டை மீட்க அதிக நாள்கள் ஆகின்றன.

அதைப்போல, அரசாங்கநடவடிக்கைகள் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றன. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்க பொதுச் செலவுகளை அதிகரிக்கவேண்டியுள்ளது. பொதுவாகக் கூறினால், பொருளாதாரத்தை ஒரு நிலையில் நிறுத்த (stabilize) அல்லது அந்த நிலையிலிருந்து உயர்த்த அரசாங்க நடவடிக்கைகள் ஒரு தூணாக (supporter) அமைந்துள்ளன. வணிகத்துறை முதலீட்டைக் குறைக்கும்போது, அதை ஈடுகட்ட அரசாங்கம் முன்வர வேண்டும். அப்பொழுதுதான் நாட்டு வருமானத்தை அதே நிலையில் நிறுத்தமுடியும். அதைப்போலப் பண வீக்க (Inflationary situation) காலத்தில், பணத்தின் அளவைக் குறைத்து, அரசாங்க முதலீட்டைக் கட்டுப்படுத்துவதும் தேவையாகிறது. இவை யாவும் நிதியியல் கோட்பாடு (Fiscal policy), பணவியல் கோட்பாடு (Monetary policy) ஆகியவற்றின்மூலம் செய்யப்படுகின்றன.

நாம் மேற்கூறிய நுகர்வு, மூலதனம் அதை நிலைநிறுத்த அல்லது முன்னேற்ற அரசாங்க நடவடிக்கை, கடைப்பிடிக்கப் பெறும் கொள்கைகள் இவற்றைப்பற்றித்தான் நாம் இந்தப் பேரியல் பொருளாதாரத்தில் காணப்போகிறோம்.

இந்தப் பேரியல் பொருளாதாரம், பொருளாதாரத்தில் ஒரு புதிய தோற்றமாகும். 20ஆம் நூற்றாண்டில்தான் இந்தப் பிரிவே ஏற்பட்டது. தொன்மைப் பொருளாதாரிகள் (Classical economists) ஒரு குறிப்பிட்ட தனி நிறுவனத்தில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது (Price determination); தனி மனிதனின் தேவை எக்காரணங்களைப் பொறுத்திருக்கிறது; நுகர்வினால் தனி மனிதன் அடையும் எச்சப்பாடு (Consumers' surplus) என்ன என்பன முதலிய பிரச்சனைகளில் ஈடுபட்டிருந்தனர். இதன் விளைவாக, சிற்றியல் பொருளாதாரம், ஆடம் ஸ்மித் (Adam Smith) காலத்திலிருந்தே தொடங்கி முன்னேற்றமடைந்தது. ஆனால், பேரியல் பொருளாதாரத்திற்கு இந்த அளவிற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய அடைய, இந்தப் பிரச்சினைகள் தலைதூக்க ஆரம்பித்தன. வேலை தேடுவோர் அனைவருக்கும் வேலைகள் கிடைப்பதில்லை. அரசாங்க ஈடுபாடு

அல்லது தலையீடு (Interference) இல்லாமல் பொருளாதாரம் சீராகச் செல்ல வாய்ப்பில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இயற்கைச் செல்வங்கள் பற்றாக்குறையாக (scarce) இருப்பதால் நாடுகளுக்கிடையே போட்டியும், போரும், மறைமுகமான சுரண்டலும் (Indirect exploitation) அதிகரித்துவிட்டன. பல உலக சபைகளின் (International organizations) தோற்றுவாய்க்கும் இவைதாம் காரணம். ஆகையால் பேரியல் பொருளாதாரம் எவ்வளவுக்கெவ்வளவு மறைவாக, கவனம் செலுத்தப்படாத ஒன்றாக இருந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு ஒரு பெரிய பிரச்சினையாக இப்பொழுது இருக்கிறது. ஆகையால் இதைப்பற்றி அறிவதும் நமது கடமையாகிறது.

ஆனால் இந்தப் பேரியல் பொருளாதாரம், வளரும் சமுதாயங்களுக்கு (Developing economies) எவ்வளவு உறுதுணையாக இருக்கிறது என்று நோக்குமிடத்து, நமக்கு ஏமாற்றமே ஏற்படுகிறது. வளரும் சமுதாயங்களில் காணப்படும் சூழ்நிலையில், பேரியல் பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது கடினம். ஒரு குறிப்பிட்ட அளவு முன்னேற்றம் அடைந்த பின்னர், பொருளாதாரத்தை அந்த நிலையிலிருந்து கீழ்நோக்கிச் செல்லாமல் தடுக்க, பேரியல் பொருளாதாரக் கொள்கைகள் எவ்வளவுக்கெவ்வளவு பயன்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வளரும் சமுதாயங்களுக்கு அவை பயன்படுவதில்லை.

வளரும் சமுதாயங்களில் கண்கூடாகக் காணப்பெறும் சில குறைபாடுகளை நாம் நன்கு அறிவோம். பண்டமாற்று முறை (Barter system) அடியோடு நீங்கிவிடவில்லை. விவசாயம் இன்றும் தன் தேவையைப் பூர்த்திசெய்யும் அளவுக்கே செய்யப்படுகிறதே ஒழிய, வியாபார நோக்கோடு (Commercialization of agriculture) செய்யப்படுவதில்லை. பழைய சம்பிரதாயங்கள், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியன அடியோடு மறைந்து விடவில்லை. செல்வத்தையும் சேமிப்பையும், நகைகளாகவும், பாத்திரங்களாகவும்தான் வைத்திருக்கிறார்களேயொழிய வங்கியில் போட்டு, அது நாட்டின் மூலதன அபிவிருத்திக்கு உபயோகப்பட அனுமதிப்பதில்லை. கல்வியறிவு இல்லாமை காரணமாகக் கடனுக்கு இன்றும் வட்டிக்கடைக்காரர்களை, லேவாதேவி செய்பவர்களை நம்பியிருக்கும் அவலநிலை காணப்படுகிறது. வங்கிப் பத்திரங்களின் புழக்கம் அதிகம் இல்லை.

இந்தக் காரணங்களினால், அரசாங்கம் எவ்வளவு தூரம் தலையிட்டுக் கொள்கைகளை மாற்றினாலும், அவற்றின் விளைவுகள் (Impact) மக்களைச் சிறிதும் அணுகுவதில்லை. வட்டிக்கடைக்காரர்கள் இருக்கும்வரை, வங்கிகள் கடனைக் கட்டுப்படுத்த முடியாது;

பண விக்கத்தைக் (inflation) குறைக்க முடியாது. பதுக்கலைத் (hoarding) தவிர்ப்பது கடினம். வியாபாரத்திற்குத் தன்னம்பிக்கையும், எதையும் தாங்கும் நெஞ்சுறுதியும் வேண்டுமே தவிர, மூடப் பழக்க வழக்கங்களில் நம்பிக்கையும், பஞ்சாங்கமும் சிறிதும் பொருந்தாது. அதுவுமன்றி, இப் பொருளாதாரங்களில் அரைகுறை நாகரிகத்தின் காரணமாக உழைப்பிற்கு மதிப்பில்லாமல் போய் விட்டது. எல்லாரும் சிறிதளவே கல்வி பெற்றிருந்தாலும், 'ஆபீஸ்' உத்தியோகம்தான் (White coller jobs) வேண்டும் என்கிறார்களே தவிர தன் பூர்வீக உழைப்பான விவசாயத்தை மேற்கொள்வது சுய கௌரவத்திற்கு இழுக்கு என்று நினைக்கின்றனர்.

இத்தகைய பல காரணங்களால், ஒரே மாதிரியான பேரியல் பொருளாதாரக் கொள்கைகளை முன்னேறிய சமுதாயத்திற்கும், முன்னேறாத சமுதாயத்திற்கும் உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளோம்.

அதுவுமன்றி, பேரியல் பொருளாதாரக் கொள்கைகளிலேயே சில குறைபாடுகள் உள்ளன. இக் கொள்கைகள் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைச் (Great economic depression of 1930s) சரிக்கட்ட, கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகள் ஆகும். முன்னேற்றமடைந்த ஒரு நாடு, அந்த உச்ச நிலையிலிருந்து வழுக்கி விடாமல்தடுக்க இந்தக் கொள்கைகள் உதவின. உதாரணமாக, நாட்டு வருமானத்தை ஒரே நிலையில் நிறுத்த, நுகர்வானது குறையாமல் இருக்க வேண்டும் என்று கீன்ஸ் கூறினார். ஒரு முன்னேறிய நாட்டைப் பொறுத்தவரை, இக் கூற்று முற்றிலும் சரி. ஆனால், ஒரு முன்னேறாத நாட்டிற்கு இது பொருந்தாது. இந்த நாடுகளில் வாங்கும் சம்பளம் அவ்வளவும் நுகர்வுக்காகத்தான் செலவிடப் படுகிறது. இருந்தும் நாட்டு வருமானம் அதிகரிப்பதில்லை.

அதைப்போலவே, இச் சமுதாயங்களில் பெரும்பாலான தொழிற்சாலைகளை அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. ஏனெனில், தனிமனிதர்களிடம் அவ்வளவு மூலதனம் இல்லை. ஆகையால், பொருளாதாரப் பூரிப்புக் காலத்தில் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தக் கடைப்பிடிக்கப்படும் கொள்கையை இந்த நாடுகளில் கடைப்பிடிக்க இயலாது. அப்படி அரசாங்கச் செலவைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், தொழிற் சாலைகளைப் பாதியில் மூடவேண்டியதுதான். 75 சதவீதச் செலவு அரசாங்கத்தினுடையதாக இருக்கும்போது, அச் செலவைக் குறைப்பதனால் முன்னேற்றம் தடைப்படுகிறதேயொழிய, அது பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த அதிகம் பயன்படுவதில்லை.

மேற்கூறிய இரண்டு உதாரணங்களும், பேரியல் பொருளாதாரக் கொள்கைகள் வளரும் சமுதாயங்களுக்கு எவ்வாறு பொருந்தாமல் இருக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. இன்னும் பல உதாரணங்கள் இவ்வாறு கொடுக்க முடியும். ஆனால் அவை தேவையில்லை. ஏனெனில், இக் கொள்கைகளைப் பயன்படாதவை என்று ஒதுக்கி விட முடியாத நிலையில் நாம் உள்ளோம். அவற்றை உடனடியாகக் கொள்கை வடிவில் உபயோகிக்க முடியாவிட்டாலும், சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அக் கொள்கைகளைச் சிறிது மாற்றி அமைத்து உபயோகிக்க முடியும். சிறு மாறுதல்கள் செய்வதன்மூலம் அவை நடைமுறைக்கு உபயோகிக்கப்படுகின்றன. பல நாடுகள் இந்தச் சிறு மாறுதல்களைச்செய்து இக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றன. மேலும் இக் கொள்கைகளை அறிவதன் மூலம், வளரும் சமுதாயங்களில் என்ன குறைபாடுகள் (shortcomings) காணப்படுகின்றன; அவற்றை நிவர்த்தி செய்வதால் எவ்வளவு லாபம்? எந்த அளவிற்கு இந்தச் சமுதாயங்கள், முன்னேறிய சமுதாயங்களிலிருந்து மாறுபட்டு இருக்கின்றன? என்பனவாகிய பல விஷயங்களை நாம் அறிய முடிகிறது.

பின்வரும் பகுதிகளைப் படிப்பதன்மூலம் நமது அறிவு விரிவடைவதுடன், நாம் நம் பொருளாதாரக் குறைகளைத் தீர்க்க நல்ல கொள்கைகளை உருவாக்கி உபயோகிக்க வாய்ப்பும் இருக்கிறது.

2. நாட்டின் மொத்த வருமானம்

தற்போது இயங்கிவரும் பொருளாதார அமைப்பில், வேலை செய்ய விரும்பும் அனைவருக்கும் வேலைகள் கிடைப்பதில்லை. இக் குறை எல்லாராலும் பொதுவாக ஒத்துக் கொள்ளப்படுகிறது. இதைப்போக்கப் பலவிதமான வழிமுறைகள் சொல்லப்படுகின்றன. இப் பொருளாதார நோயைத் தீர்ப்பதற்கு முன்னால், நோயின் காரணங்கள் என்ன என்று ஆராயவேண்டும். இப் புத்தகத்தின் பல பக்கங்களில் இது பற்றி எளிமையான முறையில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வியாபாரச் செழிப்பிற்கான (Trade prosperity) காரணங்களைத் தெரிந்து வைத்திருக்கும் பொருளாதார அறிஞர்கள், அதைக் கடைப்பிடித்து, முழு வேலை வாய்ப்பைப் பெற முடியுமே என்று இதைப் படிப்பவர்கள் கேட்க முடியும். வியாபாரச் செழிப்பைத் தெரிந்திருப்பவர்கள் ஏன் வேலையின்மையைப்பற்றிப் படிக்க வேண்டும்? இஃது ஒரு சிக்கலான கேள்வி ஆகும். பொருளாதார வாழ்க்கை நல்லதும், கெட்டதும் கலந்த பல சமூகப் பிரச்சினைகளை நமக்குக் காட்டுகிறது. இதில் சிலர், வியாதியைக் குணப்படுத்துவதைவிட, வியாதியுடனே வாழ்ந்து விடலாம் என்று நினைக்கின்றனர். இவர்கள் இதைப்போல நினைக்கக் காரணமிருக்கிறது. இவர்கள் நோயை ஒப்புக்கொண்டாலும், நோயைப் போக்கும் வழிமுறைகளில் கருத்து வேற்றுமை கொண்டவர்களாக இருக்கின்றனர்.

தனியார் துறையுடன் இயங்கும் ஒரு பொருளாதார அமைப்பில் தொழில் துணிவோர்கள் (entrepreneurs) வேலையின் அளவை நிர்ணயிக்கின்றனர். இது போன்ற அமைப்பில் பல ஆயிரக் கணக்கான தொழில் துணிவோர்கள் இலாபத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்கின்றனர். இங்கே மத்திய அரசின் கட்டுப்பாடோ, அன்றித் திட்ட நடவடிக்கைகளோ (planning) பொதுவாக இல்லை. இப் பொருளாதார அமைப்பில் விலைவாசிகள் அதிகரிக்கும்

போது, அதற்கு ஈடாகக் கூலியையும், சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுவதை நாம் காண்கிறோம். ஓய்வு பெற்று நிலைபெற்ற வருமானத்தையுடைய வர்கள், விலைவாசி உயர்வின் காரணமாக வெகுவாகப் பாதிக்கப் படுகின்றார்கள். பண வீக்கத்தின் (inflation) காரணமாகக் குடும்பத் தலைவிகள் சரியான முறையில் குடும்பம் நடத்தமுடியாதபடி உணவின் விலை அதிகரித்து விடுகின்றது. படித்துவிட்டுப் பட்டம் பெற்று, வேலையில்லா நிலையில் இளைஞர்கள் பதட்டம் அடை வதையும் நாம் பார்க்கிறோம். இப் பிரச்சினைகளை ஆராய்வதற்குப் பொருளாதாரக் கோட்பாடுகளில் தனியான ஒரு முறை தேவைப் படுகிறது.

உணவின் விலை அதிகமாகும்போது, அது பருவக் கோளாறினால் மழையில்லாமல் ஏற்பட்டதா, அல்லது பெருகி வரும் பொருளா தார நடவடிக்கைகளால் ஏற்பட்டதா என்பதையும் நாம் ஆராய வேண்டி இருக்கின்றது. அதுபோலவே, படித்த பட்டதாரிகள் வேலையில்லாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதையும் நாம் ஆராயவேண்டும். உற்பத்தி நிறுவனங்கள், ஒரு குறிப்பிட்ட பட்டப்படிப்பையுடைய மனிதர்களை வேலைக்கு அமர்த்தினாலும், அந்த நிறுவனத்தின் பொருள்களுக்கு அங்காடியில் தேவையில்லா விடில், அப் பட்டதாரிகளுக்கும் வேலையில்லாத நிலை ஏற்படலாம். இவ் வேலையில்லாத நிலையைப் பொது வேலையின்மை (General unemployment) என்று பாகுபடுத்திச் சொல்லிவிடமுடியாது. எனவே, பொருளாதாரத்தின் எல்லாப் பிரச்சினைகளையும் தெளி வாகத் தெரிந்துகொள்ள பொருளாதாரத்தின் முழுமையான படவிளக்கம் நமக்குத் தேவைப்படுகிறது.

இந்த முழுமையான பொருளாதாரத்தின் நடவடிக்கைகளைத் தொகுத்து, அதற்குரிய பொருளாதார மாதிரிகளையும் (economic models) கோட்பாடுகளையும் விளக்கம் செய்யும் பகுதியே பேரியல் பொருளாதாரம் (Macro economics) ஆகும். அது மட்டு மன்றிப் பேரியல் பொருளாதாரமானது, ஒரு நாட்டின் மொத்த வருமானமும், முழு வேலை வாய்ப்பும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் (At a moment of time) எவ்வளவு இருக்கிறது; அஃது எவ்வாறு வளர்கிறது அல்லது தாழ்கிறது; வியாபாரச் சுழற்சிகள் ஏன் ஏற்படுகின்றன என்பதைப் பற்றியும் விளக்கவல்லது.

இப் பேரியல் பொருளாதாரத்தில், தனிப்பட்ட நுகர்வோன் (Individual consumer), தனிப்பட்ட நிறுவனம் (Individual firm) இவை எப்படி இயங்குகின்றன என்பதை நாம் ஆராயப் போவ தில்லை. இது போன்ற தனிப்பட்ட நிறுவனம், அதன் உற்பத்தி

விலைக் கொள்கைகள், தனிப்பட்ட நுகர்வோன், ஆகிய தனிக் கூறுகளின் இயல்பைப்பற்றிய நூல், சிற்றியல் பொருளாதாரம் (Micro economics) ஆகும். இப்பொழுது, இயல்பாக ஒரு வினா எழக்கூடும். தனிப்பட்ட நுகர்வோர்களின் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் கூட்டி, அவற்றின் மூலமாய் நாட்டின் நுகர்வோர்களின் அனைவருடைய நடவடிக்கைகளையும் கண்டுபிடிக்க இயலாதா என்பதே அந்த வினாவாகும். தனிப்பட்ட கூறுகளை முழுமையாக்கிப் பேரியல் கூறுக மாற்றும்போது,அதன் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படுகிறது. உதாரணமாக, சேமிப்பை எடுத்துக் கொள்வோம். ஒரு தனி மனிதனுக்குச் சேமிப்பு நன்மை பயக்கக் கூடியதாக இருப்பினும், பொருளாதார மந்தக் காலத்தில், அது நாட்டிற்கு நன்மை பயப்பதில்லை. சேமிப்பு அதிகரிக்க அதிகரிக்க மந்தநிலை நீடிப்பதையும், வேலையின்மை அதிகரிப்பதையும் பார்க்கிறோம். அதைப்போல, எல்லாமே மாறக்கூடிய ஒரு சமூக அமைப்பில் பேரியல் பொருளாதார விதிகளும், சிற்றியல் பொருளாதார விதிகளும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன. இதை ஓர் எடுத்துக்காட்டுமூலமாக விளக்க முடியும். ஒரு நிறுவனம், கூலியையும், சம்பளத்தையும் குறைப்பதாக வைத்துக்கொள்வோம். இதனால், அந்த நிறுவனத்தின் உற்பத்திச் செலவு (Production cost) குறைந்து, அதன்மூலம் பொருளின் விலையும் குறையும். பொருளின் விலை குறைவதால் அப் பொருளுக்குத் தேவை அதிகரிக்கும். இதனால் இலாபம் அதிகரிக்கும். அந்த நிறுவனம் உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் அதிக நபர்களுக்கு வேலை கொடுக்கும் வாய்ப்பையும் அடைய முடியும். இத் தனிப்பட்ட நிறுவனத்தின் உதாரணத்தை நாட்டின் முழுமைக்கும் பயன்படுத்த முடியாது. இத் தனிப்பட்ட நிறுவனத்தின் செயலை எல்லாரும் கடைப்பிடித்தால், போட்டியின் காரணமாக விலைகள் மிக மிகத் தாழ்ந்து, தொழில் முனைவோரிடையே ஒரு நம்பிக்கையின்மை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இந்த நம்பிக்கையின்மை, கடைசியாகப் பல தொழிற்சாலைகளின் அடைப்பிற்கும், வேலையின்மைக்கும் காரணமாக அமைகிறது. எனவே, பேரியல் பொருளாதாரம் என்பது ஒரு முழுமைப்படுத்தும் பிரச்சினை (Aggregate problem) என்று சொல்வதற்கில்லை. நாம் இப் புத்தகத்தில், பேரியல் பொருளாதாரத்தில் படிக்கப்போகும் மாறிகள் (variables), அவற்றிற்குள்ள உறவுகள், அவற்றின் நடவடிக்கைகள் ஆகியவற்றை விரிவான முறையில் எழுத இருக்கிறோம்.

மாறிகள் (variables) என்றால் என்ன? கீழ்க்கண்ட சமன்பாட்டைக் கவனியுங்கள்.

$$X = f(Y)$$

X என்ற மாறியின் மதிப்பு Y என்ற மாறியின் மதிப்பைப் பொறுத்

இருக்கிறது. X என்பது ஒரு மாறி. Y என்பது ஒரு மாறி. இவை இரண்டிற்கும் உள்ள உறவு சாம்யம்மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரத்தில் இதுபோன்ற பல மாறிகளின் உறவுகள் நமக்குத் தெரியும். கீழே இரண்டு பொருளாதார மாறிகள் (Economic variables) கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் உறவும் அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

$$QD = f(P)$$

QD என்பது தேவைப்படும் பொருளின் அளவு. P என்பது அப்பொருளின் விலை. அங்காடியில் தேவைப்படும் பொருளின் அளவு, அதன் விலையைச் சார்ந்திருக்கிறது. இங்கே அந்த உறவு எதிர் மறையான உறவாக (Inverse relation) இருப்பதை நாம் அறிவோம்.

நாம் பேரியல் பொருளாதாரத்தில் தனிப்பட்ட நுகர்வோன், தனி நிறுவனம் இவற்றையெல்லாம் நீக்கிவிட்டு, நாட்டு வருமானம் (National income), நாட்டின் உற்பத்தி (National product), நாட்டின் மொத்த நுகர்ச்சி (Aggregate consumption) முதலிய மாறிகளைப் பற்றி (variables) ஆராயவிருக்கிறோம்.

நாம் முன்னரே கூறியவாறு தனிப்பட்ட நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய ஒரு பொருளாதாரக் கொள்கை, நாட்டின் எல்லா நிறுவனங்களுக்கும் பொருந்தக்கூடியதாக இல்லை. பொருளாதாரப் பூரிப்பும் (Prosperity) முழு வேலை வாய்ப்பும் இருக்கும் காலத்திலுங்கூட, ஒரு சில நிறுவனங்கள் நஷ்டத்தில் நடப்பதைப் பார்க்கிறோம். அதைப்போலப் பொருளாதார மந்தக் காலத்தில் (depression) ஒரு சில நிறுவனங்கள் செழிப்பதைப் பார்க்கிறோம். இந்தச் சந்தர்ப்பங்களில் பேரியல் பொருளாதாரக் கொள்கையை அந்தக் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு நாம் உபயோகிக்க முடியாது. அதைப்போல, சிற்றியல் பொருளாதாரக் கொள்கையை நாடு முழுமைக்கும் ஒரு பொது நடவடிக்கையாக இப் பொருளாதாரம் முழுவதையும் பாதிக்கக்கூடிய வகையில் பயன்படுத்த இயலாது. ஆகவே, முழு வேலை வாய்ப்பு, உச்ச உற்பத்தி ஆகியவற்றிற்கான பொருளாதார விதிகள், நடைமுறைகள் ஆகியவற்றைத் தனியாகத் தொகுத்து எழுதவேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது.

பேரியல் பொருளாதாரத்தில் பல பெரிய துறைகள் செயல்படுவதைக் காணமுடியும். அவற்றை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. இல்லத் துறை (Household sector)
2. வணிகத் துறை (Business sector)
3. அரசாங்கத் துறை (Government sector)
4. வெளிநாட்டுத் துறை (Foreign sector)

இல்லத் துறை என்பது, ஒரு தனிப்பட்ட குடும்பத்தின் வரவு செலவுகளின் பாகுபாட்டைக் குறிப்பதாகும். வணிகத் துறையில் அதன் வருமானம் மூலப்பொருள்களை வாங்கவும், இயந்திரங்களை வாங்கவும், இருப்புகளைப் (inventory) பாதுகாக்கவும் செலவிடப் படுகிறது. அதைப்போல, அரசாங்கம் நாட்டு நிர்வாகத்திற்கும் அமைதி, வளர்ச்சி, பொது நலப்பணி முதலிய பல செலவுகளை மேற்கொள்கிறது. வெளி நாட்டுத்துறை ஏற்றுமதி இறக்குமதி முதலிய பல நடவடிக்கைகளில் நிறுவனங்களை நிறுவி அதற்கான செலவுகளை மேற்கொள்ளுகிறது. இத் துறைகள் உற்பத்தி செய்வதோடல்லாமல், ஒன்றற்கொன்று இணைந்தும் இருக்கின்றன. உதாரணமாக, தனி மனிதன் தன் உழைப்பை விற்றுக் கூலி பெறு கிறான். அஃது அவனுக்கு வருமானமாக இல்லத் துறையை அடை கிறது. இல்லத் துறையிலிருந்து அவனது உழைப்பானது வணிகத் துறையை அடைகிறது. அவ்வாறே அரசாங்கத் துறையும், நிர் வாகத்தின் பொருட்டு மனித சேவையை இல்லத் துறையினின்றும், தேவையான மேஜை, நாற்காலிகள், மின் விசிறிகள் ஆகியவற்றை வணிகத் துறையினின்றும் பெறுகிறது. வெளி நாட்டுத் துறையைப் பொறுத்தவரையில், மூலதனம் வெளி நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டபோதிலும், உழைப்பிற்கு உள்நாட்டு மனிதர் களையே நம்பியிருக்கிறது. இவ்வாறு ஒரு துறையின் செலவு, மறு துறைக்கு வருமானமாகவும், அதன் வருமானம் மறு துறை யின் செலவாகவும் அமைந்துள்ளது. பின்வரும் பகுதியில் தேசிய வருமானத்தைக் கணிக்கும் வகையைப்பற்றிப் படிக்கும்போது இத் துறைகளின் இணைப்பு அல்லது சார்பு நன்கு புரியவரும்.

பொருளாதார நடவடிக்கைகளின் அளவீடுகள்

பேரியல் பொருளாதாரத்தின் அளவீடுகளில் தேசிய வருமானம் அல்லது நாட்டு வருமானம் என்பது முக்கியமானது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில், நாட்டின் நிகர ஆக்கம் (National net product) 1929-ல் 95.8 பில்லியன் டாலர்களாக இருந்தது. அது 1933-ல் 48.8 பில்லியன் டாலர்களாகக் குறைந்தது. இந்தத் திடீர்த் திருப்பத்தி னால், ஒரு பெரிய பொருளாதார மந்தம் ஏற்பட்டுப் பாங்கு முறிவு களும், வேலையின்மையும் ஏற்பட்டு, ஓர் அரசியல் கொந்தளிப்பே

வந்துவிட்டது. எனவே, நாம் இந்த அளவீடுகளைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

நாம் மூன்று விதமான கலைச்சொற்களை இங்கு விவரிக்க வேண்டியிருக்கின்றது. அவை,

1. நாட்டு வருமானம் (National Income)
2. நாட்டின் நிகர ஆக்கம் (Net National Product)
3. நாட்டின் மொத்த ஆக்கம் (Gross National Product)

நாட்டு வருமானம் என்பது இல்லத் துறை, வணிகத் துறை, அரசாங்கத் துறை, மற்றும் வெளிநாட்டுத் துறை ஆகிய துறைகளிலிருந்து உற்பத்திக் காரணிகளுக்கு செலவிடப்பட்ட தொகையைக் கூட்டுவதன் மூலமாகக் கிடைக்கிறது. இதில் கூலி, சம்பளம், வார வருமானம், நிகர வட்டி, கம்பெனிகளுக்குக் கிடைத்த இலாபம், கம்பெனிகளின் நேர்முக வரிகள், உள்நாட்டு வெளிநாட்டு இலாப ஈவுத் தொகைகள், பகிர்ந்து கொடுக்கப்படாத இலாபங்கள், இருப்பு மதிப்பீடுகள் (Inventory valuation) முதலியன அடங்கும். இவற்றைக் கூட்டி முழுமைப்படுத்தும்போது, கிடைப்பது நாட்டு வருமானம் ஆகும்.

இந்த நாட்டு வருமானத்தோடு, மறைமுக வரிகளை (indirect business taxation) சேர்த்தால் கிடைப்பது நாட்டின் நிகர ஆக்கமாகும். இந்த நாட்டின் நிகர ஆக்கத்தோடு தேய்மானத்தையும் சேர்க்கும்போது கிடைப்பது நாட்டின் மொத்த ஆக்கமாகும்.

இக் கருத்துகளைக் கீழ்க்கண்ட முறையில் தெளிவுபடுத்திக் காட்ட முடியும்.

நாட்டின் மொத்த ஆக்கம் = நாட்டு வருமானம் + மறைமுக வணிக வரிகள் + தேய்மானச் செலவு

நாட்டின் நிகர ஆக்கம் = நாட்டு வருமானம் + மறைமுக வரிகள்.

நாட்டு வருமானம் = காரணிகளுக்கு ஆன செலவினங்கள்.

இதை வேறு விதமாகவும் சொல்ல முடியும்.

நாட்டின் நிகர ஆக்கம் = நாட்டின் மொத்த வருமானம் — தேய்மானச் செலவு

நாட்டு வருமானம் = நாட்டின் நிகர வருமானம் — மறைமுக வணிக வரிகள்.

நாட்டு வருமானமும் நாட்டின் நிகர ஆக்கக் கணிப்பு முறையும்

நாம் இப்போது தனித்தனியாக ஒவ்வொரு துறையிலும், வருமானம் எப்படிக் கணக்கிடப்படுகிறது என்பதைப் பட்டியல் மூலமாகக் கணக்கிட்டுச் சொல்லமுடியும். முதலில் வணிகத்துறையின் ஆக்கக் கணக்கை எடுத்துக்கொள்வோம். கீழே கொடுக்கப் பட்டுள்ள பட்டியலில் இடப் பக்கம் உற்பத்திச் செலவினங்களும், வலப்பக்கம் விற்பனைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பட்டியல் I

அமெரிக்க வணிகத் துறையின் வருமான உற்பத்திக் கணக்கு (1961ஆம் ஆண்டு) பில்லியன் டாலர்களில்

செலவுகள்			வருமானம்		
B_1	கூலியும் சம்பளமும்	230	B_{15}	நுகர்வோர்கள்	317
B_2	பொதுநலப் பாதுகாப்புக்குக் கொடுக்கப்பட்டது.	9	B_{16}	அரசாங்கம்	54
B_3	கம்பெனி இல்லாத வணிகத்தின் நிகர வருமானமும் இருப்பு மதிப்பீடுகளும்	47	B_{17}	வெளிநாட்டிற்கு	4
B_4	வார வருமானம்	12	B_{18}	முதல் கணக்கீட்டில் வணிகம்	67
B_5	நிகர வட்டி	12	B_{19}	நிகர இருப்பீடுகளில் மாற்றம்	2
B_6	கம்பெனி வரிகள்	22			
B_7	செலுத்தப்பட்ட ஈவுத்தொகைகள்	14	B_{20}	வணிகத் துறையின் மொத்த ஆக்கம்	444
B_8	பகிர்வு செய்யப்படாத இலாபம்	7			
B_9	இருப்பு மதிப்பீடுகள்	1			
B_{10}	வருமானம்	354			
B_{11}	மறைமுக வணிக வரிகள்	46			
B_{12}	வணிகத் துறையின் நிகர ஆக்கம்	400			
B_{13}	தேய்மானம்	44			
B_{14}	வணிகத் துறையின் மொத்த ஆக்கம்	444			

மேலே குறிப்பிட்ட கணக்கில் B_4 என்பது வார வருமானம் (rent). சொந்த வீட்டில் குடியிருப்பவர்கள், தங்கள் வாரத்தைக் கணக்கிட்டு அதை வருமானத்தில் சேர்க்கவேண்டும். உற்பத்திக் காரணிகளின் செலவுகள் B_1 முதல் B_9 வரை இருக்கின்றன. வணிகத் துறையினர் தங்கள் முதலீடுகளின் தேய்மானச் செலவாக 44 பில்லியன் டாலர்களைக் காட்டியிருக்கிறார்கள்.

நாம் பட்டியல் II-ல் அமெரிக்காவின் இல்லத் துறையின் வருமானத்தை விளக்கம் செய்வோம்.

பட்டியல் II

அமெரிக்க இல்லத் துறை வருமான ஆக்கக் கணக்கு (1961)
(Household Sector) பில்லியன் டாலர்களில்

H_1 சம்பளம்	13		
H_2 வட்டி செலுத்தியது	7		
H_3 வருமானம்	20	H_4 நிகர, மொத்த ஆக்கம்	20

இங்கே தவணை முறையில் வாங்கிய கடன்களுக்குச் செலுத்தப்படும் வட்டி H_2-ல் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பட்டியல் III-ல் அமெரிக்காவின் அரசாங்கத் துறையிலுள்ள வருமான ஆக்கக் கணக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பட்டியல் III

அமெரிக்க அரசாங்கத்துறை, வருமான ஆக்கக் கணக்கு (1961)
பில்லியன் டாலர்களில்

G_1 கூலியும் சம்பளமும்	50		
G_2 பொதுநலப் பாதுகாப்பிற்குக் கொடுக்கப்பட்டது	1		
G_3 வருமானம்	51	G_4 நிகர மொத்த ஆக்கம்	51

பட்டியல் IV, வெளிநாட்டுத் துறையின் வருமானமும், ஆக்கமும் எப்படிக் கணக்கிடப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

பட்டியல் IV

அமெரிக்க வெளிநாட்டுத்துறை (Rest of the world Sector)

பில்லியன் டாலர்கள்

F_1 கூலியும் சம்பளமும்	20		
F_2 நிகர வட்டி	700		
F_3 நிகர ஈவுத் தொகை	1,000		
F_4 நிகர இலாபம்	1,000		
	——	F_6 நிகர, மொத்த	
F_5 வருமானம்	2,720	ஆக்கம்	2,720

நாம் இந்த 2,720 பில்லியன் டாலர்களை எளிமைக்காக 3,000 பில்லியன் டாலர்கள் என்று வைத்துக்கொள்வோம்.

இந்த நான்கு துறைகளிலிருந்து உற்பத்தியான வருமானத்தையும், ஆக்கத்தையும் பட்டியல் V-ல் மொத்தமாகக் காட்டி இருக்கிறோம்.

பட்டியல் V

நாட்டு வருமானமும் ஆக்கமும், துறை ரீதியாக (1961)

பில்லியன் டாலர்கள்

வருமான உற்பத்தி		நிகர மொத்த உற்பத்தி துறை ரீதியாக.	
H_3 இல்லத் துறை	20	H_4 இல்லத் துறை	20
G_3 அரசாங்கத் துறை	51	G_4 அரசாங்கத் துறை	51
F_5 வெளி நாட்டுத் துறை	3	F_6 வெளி நாட்டுத் துறை	3
B_{10} வணிகத் துறை	354	வணிகத் துறை	444
	——		——
நாட்டு வருமானம்	428	நாட்டின் மொத்த ஆக்கம்	518
B_{11} மறைமுக வணிக வரிகள்	46		
நிகர நாட்டு ஆக்கம்	474		
நாட்டின் தேய்மான ஆக்கம்	44		
	518		

நாட்டின் வருமானத்தையும், நாட்டின் மொத்த நிகர ஆக்கத்தையும் செலவு முறையில் இறுதியாகக் காணும் VIவது பட்டியவில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பட்டியல் VI

நாட்டின் மொத்த செலவுகள் 1961. பண்டங்களின் செலவுகள்
பில்லியன் டாலர்கள்

நுகர்வோர் செலவுகள்		338
உறுதிப் பொருள்கள்	44	
நுகர்வுப் பொருள்கள்	155	
பணிகள்	139	
தனியார் உள்நாட்டு மொத்த முதலீடுகள்		69
நிகர ஏற்றுமதிப் பொருள்களும் சேவைகளும்		4
அரசாங்கச் செலவுகள்		107
நாட்டின் மொத்த ஆக்கம்		518

மேலே நாம் கொடுத்திருக்கிற பட்டியல்கள் மூலமாக நாட்டின் மொத்த ஆக்கத்தை உற்பத்திக் காரணிகள் மூலமாகவும், தனித் தனியாக உற்பத்தித் துறைகள் மூலமாகவும், இறுதியாகச் செலவினங்கள் மூலமாகவும் கணக்கிட முடியும் என்பது தெளிவாகிறது.

நாம் மேலே குறிப்பிட்டிருக்கிற வருமானக் கணக்குகள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் 1961ஆம் வருடக் கணக்காகும். எனவே, ஓர் ஆண்டில் இறுதியாக அங்காடிக்கு வரும் பொருள்களை அடிப்படையாகக்கொண்டு இந்தக் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது வணிக முறைப்படி இரு முறை பதிவு செய்யப்பட்ட கணக்கேயாகும்.

நாட்டின் மொத்த ஆக்கத்தைக் கணக்கிடுவதில் உள்ள சிக்கல்கள்

நாட்டின் வருமானத்தைக் கணக்கிடும்போது சிலவற்றைக் கூட்ட வேண்டும். சிலவற்றை நீக்க வேண்டும். ஓர் அங்காடி அமைப்பிலுள்ள பொருளாதாரத்தில், அங்காடியில் விற்கும் இறுதிப் பொருள்கள், பணிகள் அனைத்தும் வருமானக் கணக்கில் இடம் பெறுகின்றன. ஆனால், சில பணிகளை அமெரிக்க ஐக்கிய

நாட்டிலுள்ள வணிகத் துறை, பொருளாதார நடவடிக்கைகளாகக் கொள்வதில்லை. வீட்டில் மனைவிகள் செய்யும் உணவுகள் வருமானக் கணக்கில் வருவது இல்லை. அந்த உணவு, விடுதியில் விற்கும்போது, நாட்டின் வருமானக் கணக்கில் இடம் பெறுகின்றது. மாற்றம் செய்யப்பட்ட செலவினங்களை (transfer payments) வருமானக் கணக்கில் சேர்த்துக்கொள்வதில்லை. லாட்டரிப் பரிசில் வென்று வந்த பணம் வருமானம் ஆவதில்லை. மாறுபட்ட அங்காடி மதிப்பீடுகளால் அதிகரித்த சொத்துகளின் இலாபத்தை வருமானக் கணக்கில் சேர்ப்பது இல்லை. சட்டத்திற்கு விரோதமான காரியங்கள்மூலம் வரும் வருமானங்களையும் கணக்கிடுவதில்லை. ஆனால், சில அங்காடியில் இல்லாத நடவடிக்கைகளைத் தேசிய வருமானக் கணக்கில் சேர்க்கலாம். நாம் வணிகத்துறைக் கணக்கில் சொந்த வீட்டில் வசிக்கும் நபர்களின் வாரத்தை மதிப்பீடு செய்து அதை வாரத்தின் வருமானமாகச் சேர்த்திருக்கிறோம். ஆனால், அரசாங்கம் பொதுக் கடன்களுக்கு அளிக்கும் வட்டிகளை வருமானத்தில் சேர்ப்பதில்லை.

நாம் இறுதியாக வெளிவரும் பொருள்களை மாத்திரம் சேர்க்கவேண்டும். ரொட்டி இறுதியாக வருவதற்கு முன்னால், கோதுமையை வாங்கி, அதை மில்லில் மாவாக்கி, ரொட்டிக் கடையில் ரொட்டியாக மாறும் ஒவ்வொரு நிலையையும் மதிப்பீடு செய்தால், வருமானம் மிகைப்பட்டதாகக் காணப்படும். நாம் பலமுறை ஒரு பொருளையே கணக்கிட்டு விடுவோம். இதைத் தவிர்ப்பதற்காகத்தான் நாம் இறுதிப் பொருள்களின் மதிப்பையே கணக்கில் கொண்டுவரவேண்டும்.

வருமான மதிப்பீடு செய்யும்போது, பொதுவாக அங்காடி விலைகளையே (market prices) பயன்படுத்தவேண்டும். அங்காடியில் தான் காரணிகளின் உண்மை விலைகளை மதிப்பிடமுடியும். ஆனால், மிதமிஞ்சி நடவடிக்கைகளால் அதிகமாகும் விலைகளை வைத்து வருமானத்தைக் கணக்கிடுதல் கூடாது. அதற்கு ஏற்றாற்போலக் குறியீட்டு எண்களைப் பயன்படுத்தி உண்மையான நாட்டின் மொத்த ஆக்கத்தை மதிப்பிடவேண்டும்.

3. தொன்மைப் பொருளாதாரிகளின் பேரியல் பொருளாதாரம்
(Classical Macro Economics)

தொன்மைப் பொருளாதாரிகள் என்ற வார்த்தையைப் பொருளாதார இலக்கியங்களில் முதலில் புகுத்தியவர் காரல் மார்க்ஸ் (Karl Marx) ஆவார். ஆடம் ஸ்மித் (Adam Smith), ரிக்கார்டோ (Ricardo), ஜான் ஸ்டுவர்டுமில் (John Stewart Mill), ஜே பி. ஸே (J. B. Say) முதலியவர்களைக் குறிப்பிடத் 'தொன்மைப் பொருளாதாரிகள்' என்ற சொல்லைக் காரல் மார்க்ஸ் பயன்படுத்தினர். ஆனுல், ஜே. எம். கீன்ஸ் (J. M. Keynes), பேராசிரியர் ஏ. சி. பிகு (Pigou) முதலியவர்களையும் இந்தக் குழுவில் சேர்த்து, தொன்மைப் பொருளாதாரிகளின் பட்டியலை விரிவு படுத்தினர். இப் பொருளாதார வல்லுநர்களில் பலர், 19ஆம் நூற்றுண்டில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை வைத்துக் கொண்டு, சில கோட்பாடுகளைச் செய்திருக்கிறுர்கள். அவர்கள் உலக மகாயுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தங்களையும் பொருளாதார நெருக்கடிகளையும் கருத்தில் கொண்டார்கள் இல்லை. அவர்களுடைய எடுகோள்கள் நடைமுறைக்கு ஒவ்வாதவையாகவும் இருந்தன.

ஆகையால், இத் தொன்மைப் பொருளாதாரிகளின் முழு வேலைக் கோட்பாடுகளையும், அவர்களின் பொருளாதார மாதிரிகளையும் இங்கு விவாதிக்கவேண்டும்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களைப் பொறுத்தவரை, தன்னிச்சையற்ற வேலையில்லாத் திண்டாட்டம் (Involuntary unemployment) நாட்டில் இருக்கமுடியாது. அதைப்போல அமித உற்பத்தி அல்லது தேவைக்கு மிஞ்சிய உற்பத்தி (Over production) இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அவர்களைப் பொறுத்தவரை

அளிப்புத்தான் தேவையை உருவாக்குகிறது. ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்கும்போது, அந்த அதிகப்படியான உற்பத்திக்காக, உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றை அதிக அளவில் உபயோகிக்கிறோம். அந்தக் காரணிகளுக்கு ஊதியம் தரப்படுகிறது. இந்த அதிகப்படியான ஊதியமானது, அதிகப்படியான உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வாங்க உபயோகப்படுத்தப்படுகிறது. ஆகவே, அளிப்பே, தேவையை உண்டாக்கும்போது மிதமிஞ்சிய உற்பத்திக்கு வாய்ப்பில்லை. பொருள்கள் விற்காமல்போகும் நிலை ஏற்படுவதில்லை.

அதைப்போல வேலையில்லாத் திண்டாட்டத்தையும் காண வாய்ப்பில்லை. ஏனெனில் எப்பொழுது உழைப்பின் அளிப்பு அதிகமாக இருக்கிறதோ, அப்பொழுது கூலி விகிதம் கீழ் நோக்கிச் செல்கிறது. கூலிகள் குறைவதால், அதிகப்படியான வேலையாட்களை நியமிக்க முடிகிறது. ஆகையால், தொன்மைப் பொருளாதார அறிஞர்களைப் பொறுத்தவரை, பேரியல் பொருளாதாரம் தானே இயங்கும் தொல்லையில்லா ஒரு சமுதாய அமைப்பை நம் கண் முன்னே நிறுத்துகிறது.

எனவே, இவர்கள் முழுமையாக இயங்கும் பேரியல் பொருளாதாரத்தைப்பற்றி அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. அதற்கு மாறாகக் கொடுக்கப்பட்ட சாதனப் பங்கீட்டை வைத்துக் கொண்டு பொருளாதாரம் இயங்கும் முறையை இவர்கள் காட்டினார்கள்.

ஜே. பி. ஸே (J. B. Say) அவர்களின் விதி

ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜே. பி. ஸே (1767 - 1832) என்பவர், பொது வேலையின்மை என்பது ஏற்பட முடியாது என்றார். அமித உற்பத்தி என்பது நடைமுறையில் ஏற்பட முடியாதது. ஏனென்றால், அளிப்பே அதற்குரிய தேவையைத் தானே உருவாக்குகிறது (Supply creates its own demand). ஜே. பி. ஸேயின் வாதங்கள் கீழ்க்கண்ட எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

(1) இல்லத்துறையில் வரும் எல்லா வருமானமும், நுகர்ச்சிப் பொருள்களையும், பணிகளையும் வாங்கச் செலவு செய்யப்படுகிறது. அங்கே சேமிப்பும் பணப் பதுக்கலும் இல்லை. சேமிக்கப்படும் தொகையும் தொழில் வளர்ச்சிக்கு உடனே மூலதனமாக உபயோகப்படுத்தப்படுகிறது. அங்கே ஒழுகல் (leakage) இல்லை.

(2) அரசாங்க நடவடிக்கைகள், அரசாங்கச் செலவுகள், வரி மற்றும் விலைக்கட்டுப்பாடு முதலியன அங்கில்லை.

(3) அஃது ஒரு மூடப்பட்ட பொருளாதாரம் (Closed economy). அப் பொருளாதாரத்திற்கு மற்ற பொருளாதார அமைப்புகளுடன் உறவுகள் இல்லை.

ஜே. பி. ஸேயின் பொருளாதார மாதிரியைக் கீழ்க்கண்ட வடிவத்தில் கூற முடியும்.



படம் 1

ஜே. பி. ஸே பொருளாதார அமைப்பில் பணச் சுழற்சி.

இங்கு இல்லத்துறையில் உள்ள மக்களில் சிலர் தம் உழைப்பை விற்றுக் கூலி பெறுகின்றனர். சிலர், தம் நிலத்தை வாடகைக்கு விட்டு வாரம் (rent) பெறுகின்றனர். சிலர், தம் சேமிப்பை வட்டிக்குக் கடன் கொடுக்கின்றனர். இவ்வாறு கிடைக்கும் ஊதியத்தை அவர்கள் நுகர்வுப் பொருள்கள் வாங்க உபயோகிக்கின்றனர். ஆகையால், இந்த ஊதியமானது நிறுவனங்களுக்கு விலைகள் மூலம் போய்ச் சேருகிறது. இந்த நிறுவனங்கள் பொருள்களை விற்றுப்பெறும் தொகையை மீண்டும் உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு ஆகியவற்றிற்கு ஊதியமாக அளித்து விடுகின்றன. ஆகையால் இவை மீண்டும் காரணிகளின் ஊதியமாக இல்லத்துறையைச் சென்று அடைகின்றன. இவ்வாறு இவை யாவும் ஒன்றற்கொன்று தொடர்புகொண்டு சுழல் வீதத்தில் சம்பந்தப் பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

சேமிப்பும் ஜே. பி. ஸேயின் விதியும்

நாம் 1000 டாலர்கள் சமன்பாடு வருமானம் உள்ள பொருளாதாரத்தை எடுத்துக்கொள்வோம். இங்குள்ள இல்லத்துறையினர், 10% வருமானத்தைச் சேமித்தால், நிறுவனங்களின் வருமானம் 900 டாலர்களாகக் குறைந்து விடுகிறது. இந்தச் சேமிப்பு ஒழுகல் (Saving leakage) வருமானத்தைக் குறைத்து விடுகிறது. இது படம் இரண்டில் காட்டப்பட்டு இருக்கிறது.



படம் 2

ஜே. பி. ஸேயின் விதிப்படி சேமிப்பு.

இவ் வரைபடத்தில் ரூ. 100 சேமிப்பாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகையால், ரூ. 900 மட்டுமே பொருள்களை வாங்க உபயோகப்படுத்தப்பட்டு நிறுவனங்களை அடைகிறது.

ஆனால், தொழில் துணிவோர்கள் இந்த 100 டாலர்களையும் முதலீடு செய்தால் வருமானம் மறுபடியும் அதிகரிக்க வழி இருக்கிறது. இந்தச் சேமிப்புகளைப் பாங்குகளின் மூலமாக நிறுவனத்திற்கு முதலீடாக மாற்றமுடியும்.

சேமிப்பையும் முதலீட்டையும் செய்பவர்கள் வெவ்வேறாக இருந்தாலும், வட்டிவீதம் இவ்விரண்டையும் சமமாக்குகிறது. வட்டிவீதம் அதிகரிக்கும்போது, சேமிப்பின் அளிப்பு அதிகரிக்கிறது. ஆனால் தேவை அதிகரிப்பதில்லை. வட்டிவீதம் குறையும்போது, மூலதனத்திற்குத் தேவை அதிகரிக்கிறது. ஆனால் சேமிப்பின் அளிப்பு அதிகரிப்பதில்லை. இந்த இரண்டும், தேவையும் அளிப்பும், ஒரு குறிப்பிட்ட வட்டிவீதத்தில் தடையில்லா

அங்காடியின் நடவடிக்கைகளால் சமமாக்கப்படுகிறது. ஆகையால் தொன்மைப் பொருளாதாரக் கருத்தைப் பொறுத்தவரை, சமநிலை இல்லாத நிலையை நாம் காணமுடியாது. இதைக் கீழ்வரும் வரைபடம் விளக்குகிறது.



படம் 3

ஜே. பி. லே பொருளாதார அமைப்பில் சேமிப்பும் முதலீடும்.

இங்குச் சேமிக்கப்படும் ரூ. 100 ஆனது பாங்குகளின் வழியாக மூலதனமாக நிறுவனங்களைச் சென்றடைகின்றது.

வட்டி வீதமும், கூலியின் இணைப்புத் தன்மையும்(Wage flexibility)

நாம் மேலே கூறியவாறு வட்டி வீதங்கள் குறையும்போது, கடன் நிதியின் தேவை அதிகரிக்கிறது. அதுபோல, வட்டி வீதங்கள் அதிகமாகும்போது கடன் நிதியின் அளிப்பு அதிகமாகும். எனவே, கடன் நிதிக்குத் தேவைக் கோட்டையும், அளிப்புக் கோட்டையும் வரைய முடியும். கீழ்க்கண்ட வரைபடத்தில் இது விளக்கம் செய்யப்பட்டு இருக்கிறது.

இவ் வரைபடத்திலிருந்து சேமிப்பையும் முதலீட்டையும் இணைக்கும் கருவியாக வட்டிவீதம் செயல்படுவதைக் காண்கிறோம். சேமிப்புக்குள்ள தேவை முதலீட்டுக்கு வாங்கும் கடன்

நிதியாக மாறிவிடுகிறது. சேமிப்பின் அளிப்புச் சேமிப்பிலிருந்து கொடுக்கும் கடன் நிதியாக மாறிவிடுகிறது.



படம் 4

ஒரு குறிப்பிட்ட நிலையில் சேமிப்பின் தேவை OM என்று கொள்வோம். அப்பொழுது வட்டி வீதமானது oi ஆக உள்ளது. ஆனால், இந்த நிலை சமநிலையைக் குறிக்கவில்லை என்று கொள்வோம். அஃதாவது, இது முழு வேலைவாய்ப்புள்ள ஒரு சூழ்நிலையைக் குறிக்கவில்லை. நாட்டின் மொத்த ஆக்கமும் உச்சநிலையில் இல்லை. இத் தருணத்தில் வட்டிவீதம் தானாகவே இறங்கி வரும். அங்காடி நடவடிக்கைகளால் வட்டிவீதம் oi க்குக் குறைக்கப்படுகிறது. இவ்வாறு குறைக்கப்படுவதால், சேமிப்பும், முதலீடும் எப்போதும் முழு வேலை வாய்ப்புள்ள சமநிலையில் இருக்கும் என்று ஜே. பி. ஸே அவர்கள் கருதினார்கள்.

இதைத் தவிரக் கூலியின் இணையும் தன்மையானது முழு வேலையைத் (full employment) தானாகவே திருப்பிக் கொண்டுவர முடியும் என்பது இவர்கள் வாதம். இதைக் கீழ்க்கண்ட வரை படம்மூலம் விளக்கம் செய்யமுடியும்.

படம் 5-ல் இறுதிநிலை உற்பத்திக் கோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. செங்குத்துக் கோட்டில் கூலியும், படுக்கைக் கோட்டில் வேலைவாய்ப்பும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. OW_1 கூலிவீதத்

தில் OM_1 மனிதர்களைத்தான் வேலைக்கு வைத்துக்கொள்ள முடியும். முழு வேலை வேண்டுமென்றால் OM மனிதர்களை வேலை



படம் 5

யில் ஈடுபடுத்த வேண்டும். எனவே, M_1 M மனிதர்களுக்கு வேலையில்லா நிலைமை ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க கூலி வீதத்தை OW_1 என்பதிலிருந்து OW ஆகக் குறைக்கவேண்டும். இப்படிக் கூலியைக் கீழ்மட்டத்திற்குக் குறைப்பதன்மூலமாக முழுவேலையை அப்பொருளாதாரம் அடைய முடிகிறது.

எனவே, தொன்மைப் பொருளாதாரிகளின் கருத்தை நாம் கீழ்க்கண்டவாறு சுருக்கமாகக் கூறமுடியும். அங்காடியின் சக்திகளே முழுவேலைச் சமநிலையைத் (full employment equilibrium) தானாகவே இயக்கிக்கொண்டுவந்து வைத்துவிடும். அங்காடியில் தேவைப் பற்றாக்குறை ஏற்பட்டுத் தேவை குறையப் போவதில்லை. போட்டியும் (competition), நெகிழ்ந்து கொடுக்கும் விலைகளும், கூலியின் இணைப்புத் தன்மையும் (wage freeze), முழுவேலையைத் தானாகவே இயக்கிவிட்டுவிடும்.

இத் தொன்மைப் பொருளாதாரிகளின் கோட்பாடுகள், பண அளவுக் கோட்பாடுகளுடன் ஒருங்கே இணைந்து அமையப் பெற்றவை. பணஅளவு அதிகரிக்க, விலைகள் அதிகரிக்கும் என்றும், பண அளவு குறையும்போது பொது விலைகள் இறங்கும் என்றும் இந்தப் பண அளவுக் கோட்பாடுகள் கூறுகின்றன.

நாம் தொன்மைப் பொருளாதாரிகளின் கருத்தைக் கணித ரீதியில் சமன்பாடாகச் சுலபமாகக் கூறமுடியும்.

$$ND = D(W/P)$$

ND என்பது உழைப்பின் தேவையாகும்.

W/P என்பது உண்மையான கூலியாகும்.

இதை, உழைப்பின் தேவை உண்மையான கூலியைச் சார்ந்திருக்கிறது என்று படிக்கவேண்டும்.

$$NS = S(W/P)$$

NS என்பது உழைப்பின் அளிப்பு. இந்த உழைப்பின் அளிப்பு உண்மையான கூலியைச் சார்ந்திருக்கிறது. தொன்மைப் பொருளாதாரிகளின் கருத்துப்படி உழைப்பு அங்காடியில் (labour market) சமன்பாடு கீழ்க்கண்டவாறு அமையும்.

$$D(W/P) = S(W/P)$$

Demand for labour = Supply of labour

வருமானம், இவர்கள் கோட்பாட்டின்படி உற்பத்திச் சார்பின் (Production function) மூலம் முடிவு செய்யப்படுகிறது. இதைக் கீழ்க்கண்ட சாம்யம்மூலம் எடுத்துக் காட்டமுடியும்.

$$Y = X(N, K)$$

Y என்பது வருமானம். N என்பது உழைப்பு. K என்பது முதலீட்டுச் சாதனங்கள். இந்தச் சமன்பாட்டைக் கீழ்க்கண்டவாறு படிக்கவேண்டும். அஃதாவது, வருமானம் என்பது, உழைப்பையும் முதலீட்டுச் சாதனங்களையும் சார்ந்திருக்கிறது என்று கொள்ளவேண்டும். மேலும், முதலீடு வட்டி வீதத்தைச் சார்ந்திருக்கிறது. எனவே, சமன்பாட்டு ரீதியில்,

$$I = I(i)$$

என்று கூறலாம். இங்கே I முதலீட்டையும், i என்பது வட்டி வீதத்தையும் குறிக்கிறது. சேமிப்பு என்பது

$$S = Y - c(Y)$$

எனவே சேமிப்பும், முதலீடும் சமநிலையில் இருப்பதால்,

$$S = I$$

$$\text{i.e. } I(i) = Y - c(Y)$$

என்பது உற்பத்தி அங்காடியில் காணப்படும் கணிதச் சாம்யங்கள் ஆகும்.

பண மார்க்கெட்டில் (Money market) பண அளிப்பு வருமானத்தைச் சார்ந்து இருக்கிறது. எனவே, பணச் சமநிலை சமன்பாடு

$$MS = M/P = KY$$

MS என்பது பண அளிப்பையும், M என்பது பணத்தையும் P என்பது பொது விலைகளையும், Y என்பது வருமானத்தையும், K என்பது வருமானத்தின் நிலைபெற்ற (constant) ஒரு பகுதியையும் குறிக்கின்றன,

தொன்மைப் பொருளாதாரிகளின் அமைப்பில் வட்டிவீதம் ஒரு சாரா மாறியாக (Independent variable) இருக்கிறது. அது, பண அளிப்பைச் சார்ந்து இருக்கவில்லை என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். பண அளிப்பின் முக்கிய வேலை, விலைவாசிகளை நிர்ணயம் செய்வதில் அமைந்து விடுகின்றது. இதைப் பற்றிய விவரங்கள் பின்னர் வரும் அதிகாரங்களில் இடம்பெறும்.

4. கீன்ஸியப் (Keynes) பொருளாதாரமும் தொன்மைப் பொருளாதாரிகளும்

சென்ற பகுதியில் தொன்மைப் பொருளாதாரக் கொள்கை களைக் கண்டோம். அவர்களைப் பொறுத்தவரை, முழு வேலை வாய்ப்பு அரசாங்கத்தின் முயற்சியில்லாமல் தன்னிச்சையாக இயங்கும் அங்காடி நடவடிக்கைகளால் அடையப்படுகிறது. ஆகையால், மனித முயற்சிக்கு அங்கு இடமில்லை என்று கண்டோம். ஆனால், இருபதாம் நூற்றாண்டில், தொன்மைப் பொருளாதாரி களின் முழுவேலைக் கோட்பாடு தானாக இயங்கும் தன்மையைப் பெற்றிருக்கிறது என்பது தவறாகிவிட்டது. 1930-ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளும், பொருளாதார மந்தமும், பல மில்லியன் மனிதர்களை வேலையை இழக்கச்செய்தன. உதாரண மாக, 1937-ல் பிரிட்டனில் 1½ மில்லியன் மனிதர்களுக்குமேல் வேலையை இழந்தனர். எனவே, தொன்மைப் பொருளாதாரி களின் எடுகோள்கள் தவறாகப் போய்விட்டன. வலிவான தொழிற் சங்கங்கள் இருக்கும் இக் காலத்தில் பணக் கூலியைக் கீழ்நோக்கிக் குறைப்பது என்பது அசாத்தியமாகும்.

கீன்ஸ், சேமிப்பையும் முதலீட்டையும் சமநிலைக்குக் கொண்டு வரும் கருவி, வட்டிவீதம் என்ற கருத்தை மறுத்தார். அதற்கு மாறாகச் சேமிப்பையும், முதலீட்டையும் சமநிலைக்குக் கொண்டு வருவது வருமானம் என்பதை நிரூபணம் செய்தார். எனவே, முழு வேலைக்குத் தேவையான மொத்தத் தேவையும் தானாகவே ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் அமைந்துவிடும் என்று சொல்வதற் கில்லை. மேலும், அங்காடி விலைகளும், பணக்கூலியும் கீழ்நோக்கி என்றும் குறைவதில்லை. நவீன உலகில் 'தேவை அதிகரிக்கும். என்ற நம்பிக்கையில்தான் பொருள்கள் முன்னோடியாக அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், அங்காடியில் உள்ள அளிப் புக்கு மொத்தத் தேவையானது போதுமானதாக இல்லாமல் குறை யும்போது, பொருளாதார நெருக்கடிகள் ஏற்படச் செய்கின்றன.

கீன்ஸின் வாதம்

நாட்டின் உற்பத்திப் பொருள்களை உண்டாக்குவதற்குத் தொழில் துணிவோர்கள் ஒரு குறைந்த அளவு வருவாயை எதிர்பார்க்கிறார்கள். இதைத்தான் ஒரு நாட்டின் மொத்த அல்லது முழு அளிப்புச் சார்பு (Aggregate supply function) என்று சொல்கிறோம். இதைப்போலவே உற்பத்திப் பொருளை உண்டாக்க ஓர் அதிக அளவு வருவாயையும், தொழில் துணிவோர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதைத்தான் மொத்த அல்லது முழுத்தேவைச் சார்பு (Aggregate demand function) என்று சொல்கிறோம். இந்த இரண்டும் சேரும் இடத்தில்தான் பயனுள்ள தேவை (effective demand) ஏற்படுகிறது. முழு அளிப்புக் கோடும், முழுத் தேவைக் கோடும் சேரும் இடம் முழு வேலைக்கு வேண்டிய உற்பத்தியைக் கொடுக்கும் அளவாக இருக்கவேண்டிய அவசியமில்லை. கீன்ஸ், இந்த முழுத் தேவையைத் திட்டமிட்ட அரசாங்கப்பணக்கொள்கை மூலமாகவும் (Monetary policy), நிதிக்கொள்கை (fiscal policy) மூலமாகவும்தான் செயல்படுத்த முடியும் என்றார். முழுத் தேவையும், முழு அளிப்பும் முழு வேலை கொடுக்கப்படும் பயனுள்ள தேவைப் புள்ளியில் (effective demand) சந்தித்தால், அதைப் பொருளாதாரத்தில், சிறப்பாக ஏற்பட்ட ஒரு நிலை என்று கருத வேண்டுமேயன்றி, தானாக இயங்கும் அங்காடி நடவடிக்கைகளால் ஏற்பட்ட ஒன்றாக இருக்க முடியாது என்று வாதாடினார். இதைக் கீழ்க்கண்ட வரைபடம் மூலம் விளக்கம் செய்யலாம்.



படம் 6

மேலேயுள்ள படத்தில் OX அச்சில் வேலை தேடுவோர்

களின் அல்லது வேலைக்கு அமர்த்தப்படும் மனிதர்களின் மொத்த எண்ணிக்கையை எடுத்துக்கொள்கிறோம். OY அச்சில் நிறுவனங்களின் வருவாயைக் குறிக்கிறோம். AS என்பது மொத்த அளிப்புக் கோடாகும். இது வலப்புறமாக மேல்நோக்கிச் செல்கிறது. வருவாய் அதிகரிக்க, அதிகரிக்க மொத்த அளிப்பு அதிகரிக்கும் என்பதை இம் மேல்நோக்கிச் செல்லும் கோடு எடுத்துக் காட்டுகிறது. AD என்பது மொத்த தேவைக் கோடாகும். இஃது இடப்புறமாக மேல்நோக்கிச் சென்று பின்னர்க் கீழிறங்குகிறது. இது விலைகள் ஏற ஏறத் தேவை குறைகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இப்பொழுது, முழு அளிப்புச் சார்பு, முழுத் தேவைச் சார்பு ஆகியவை என்ன என்பதைப் பார்ப்போம். P^1 என்ற புள்ளியை எடுத்துக்கொள்வோம். OP^1 ஆட்களை வேலைக்கு அமர்த்த குறைந்தபட்ச வருவாயாகத் தொழில் துணிவோர் எதிர்பார்ப்பது OM^1 ஆகும். OM^1 வருவாய்கூட இல்லையெனில், அவர்கள் அவ்வுற்பத்தியைச் செய்வதில் எவ்விதப் பயனுமில்லை. OM^{11} என்பது அதிகப்பட்ச வருவாயைக் குறிக்கிறது. அதே OP^1 வேலையாட்களை வேலைக்கு அமர்த்த அவர்கள் எதிர்பார்க்கும் அதிகப்பட்ச வருவாய் OM^{11} ஆகும். இவ்வாறு அவர்கள் எதிர்பார்க்கும் குறைந்தபட்ச வருவாயும், அதிகப்பட்ச வருவாயும், அளிப்புக் கோடும், தேவைக் கோடும் சந்திக்கும் புள்ளியான E-ல் சமநிலை அடைகின்றன. அஃதாவது, வருவாயை அதிகரிக்க அதிக ஆட்களை நியமிக்கும் போது, நிறுவனங்கள் எதிர்பார்க்கும் குறைந்தபட்ச வருவாய் அதிகரிக்கிறது. அதிகப்பட்ச வருவாய் குறைகிறது. ஆகையால் இவை இரண்டும் E என்ற புள்ளியில் சந்திக்கின்றன. இது OP^{11} ஆட்களை வேலைக்கு அமர்த்த உதவுகிறது. ஆனால் நாட்டில், மொத்த ஆட்களின் எண்ணிக்கை OP^{111} ஆகும். ஆகையால் OP^{11}, OP^{111} அளவுள்ள மக்கள் வேலையின்றி இருக்கின்றனர். இவர்களை வேலைக்கு அமர்த்தவேண்டுமானல், பயனுள்ள தேவையானது அதிகரிக்கவேண்டும். அது E என்ற புள்ளிக்கும் மேலே இருக்கவேண்டும். இதை அடுத்து வரும் படம் விளக்குகிறது.

அடுத்த பக்கத்தில் காட்டியுள்ள வரைபடத்தில் P^{11} P^{111} மனிதர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதை நீக்க AD என்ற மொத்தத் தேவைக் கோடானது மேலே பெயர்ந்து எழவேண்டும். AD^{11} கோடானது E_2 என்ற இடத்தில் மொத்த அளிப்புக் கோட்டைச் சந்திக்கிறது. AS-ன் இந்தப் பகுதிக்கு

மேல், மொத்த உற்பத்தியை அதிகரிக்க முடிவதில்லை. ஏனெனில் இந்த நிலையில் எல்லா உற்பத்திக் காரணிகளும், முழுவேலைவாய்ப்பைப் பெற்றிருக்கின்றன. அந்த மொத்த உற்பத்தியை AD¹¹ என்ற மொத்தத் தேவைக் கோடானது



படம் 7

பயனுள்ள தேவையை (effective demand) உண்டாக்கி, எல்லாக் காரணிகளையும் முழு வேலையில் இருக்கும்படி செய்கிறது. எனவே கீன்ஸ், ஒரு சுதந்திரப் பொருளாதாரத்தில், இந்த மொத்தத் தேவைதான் முழு வேலையை நிர்ணயம் செய்கிறது என்று முடிவு செய்தார் இந்தப் பயனுள்ள தேவை (effective demand) நவீனப் பேரியல் பொருளாதாரத்தின் இதயமாக மாறிவிட்டது.

இந்தக் கீன்ஸின் கோட்பாடுகளை நாம் கணித ரீதியில் சாம்யங்களாகவும், மற்றும் பேரியல் பொருளாதார மாறிகளுக்கு உள்ள சார்பு உறவுகளைச் சமன்பாடுகளாகவும் எடுத்துச்சொல்லமுடியும். இதை டாக்டர் லாங்கே (Dr. Lange) என்பவர், நான்கு அடிப்படைச் சாம்யங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

முதலி... விருப்ப சார்பை எடுத்துக் கொள்ள வேண்டும் இது, பண அளவிற்கும் வட்டிக்கும் உள்ள சார்பு உறவுகளைக் காட்டுகிறது இதை,

$$M = x(i, Y)$$

என்று எழுதலாம் இதில் M என்பது பண அளவையும், i என்பது வட்டி வீதத்தையும், Y என்பது வருமானத்தையும்

குறிக்கும். மக்கள் சேர்த்துவைக்கும் பண ரொக்கம் வட்டியையும் வருமானத்தையும் சார்ந்து இருக்கிறது.

Dr. லாங்கே அவர்களின் இரண்டாவது சமன்பாடு நுகர்ச்சிச் சார்பை விளக்குகிறது.

$$C = \phi (Y, i)$$

C என்பது நுகர்ச்சியையும், Y என்பது வருமானத்தையும், i என்பது வட்டிவீதத்தையும் குறிக்கின்றது. இதை நுகர்ச்சியானது, வருமானத்தையும் வட்டிவீதத்தையும் பொறுத்திருக்கிறது என்று படிக்கவேண்டும்.

மூன்றாவதாக, நாம் சொல்லப்போவது முதலீட்டுச் சார்பு ஆகும். இது வட்டியையும், நுகர்ச்சியையும் சார்ந்திருக்கிறது. இதை,

$$I = f (i, c)$$

என்று எழுதலாம். I என்பது முதலீட்டையும், i என்பது வட்டிவீதத்தையும், c என்பது நுகர்ச்சியையும் குறிக்கின்றன.

நான்காவது, சாம்யம் வருமானத்தைப்பற்றிய ஒற்றுமையைக் கூறுகிறது. அஃதாவது,

$$Y = C + I$$

Y என்ற வருமானம், நுகர்ச்சிச் செலவுகளையும், முதலீட்டுச் செலவுகளையும் கூட்டிக் கிடைப்பது ஆகும்.

மேலே கூறப்பட்ட Dr. லாங்கே அவர்களின் நான்கு சாம்யங்களில் 5 தெரியாத மாறிகள் இருக்கின்றன. நான்காவது சாம்யம் ஓர் ஒற்றுமைச் சமன்பாடு ஆகும். எனவே, இந்தச் சாம்யங்களைத் தீர்க்க C, I, i மற்றும் M-ன் மதிப்புகள் தெரிந்தால் நாம் இதைத் தீர்வு காணமுடியும்.

எனவே, நாம் இறுதியாக இந்தப் பகுதியில் கூறிய கருத்துகளை மறுபடியும் சுருக்கமாகச் சொல்வோம்.

(1) சமன்பாட்டில் இருக்கும் உற்பத்தி, மொத்தத் தேவைகளைகோட்டிற்கும், மொத்த அளிப்புக் கோட்டிற்கும் உள்ள உறவைப் பொறுத்திருக்கிறது.

(2) தானாகவே இயங்கி முழுவேலைக்குரிய உற்பத்தியை ஒரு பொருளாதாரம் தானாகவே அடைந்துவிடமுடியாது. முழு வேலை

உற்பத்தியை அடையப் பணக்கொள்கையும், நிதிக் கொள்கையும் தேவைப்படுகின்றன.

(3) முழு வேலையை அடைய அரசாங்கம், மொத்தத் தேவைச் சார்பைக் கவனித்து, அவ்வளைகோட்டை முழு வேலையை அடையும்படி பெயர்த்து, அளிப்புக் கோடு செங்குத்தாக இருக்கும் இடத்தில் வெட்டும்படி செய்யவேண்டும்.

(4) மொத்தத் தேவைக்கோடு (Aggregate demand function) தொழில் துணிவோர்கள் எதிர்பார்க்கும் வருவாயைப் பொறுத்திருக்கிறது.

5. எளிமையான பேரியல் பொருளாதார அமைப்பில் வருமானம் நிர்ணயம்

(Income determination in a simple Macromodel)

நுகர்வுச் சார்பு

மொத்த நுகர்வுச் செலவுகளும் (Consumption expenditure) செலவுக்குரிய வருமானமும் (Disposable income) நெருங்கிய உறவைப் பெற்றிருக்கின்றன. இந்த உறவுதான் ஓர் எளியபொருளாதார அமைப்பில் வருமானத்தை நிர்ணயம் செய்யப் பயன்படுகிறது. இந்த உறவைத்தான் நுகர்வுச் சார்பு என்கிறோம். செலவுக்குரிய வருமானத்தையும் நுகர்வுச் செலவையும் இணைக்கும் பட்டியலை நுகர்வு நாட்டம் பட்டியல் (Propensity to consume) என்று கூறுகிறோம்.

ஒரு கற்பிதமான (Hypothetical) பொருளாதாரத்தில், கீழ்க்கண்ட எடுகோள்களை மனத்தில் கொள்வோம். இங்கு நாம் எளிமையான பேரியல் பொருளாதார மாதிரியைப்பற்றிப் படிக்க இருப்பதால், இங்கு அரசாங்கத்துறையும் வெளிநாட்டுத் துறையும் இல்லை என்று வைத்துக்கொள்ளவேண்டும். எனவே, இங்கு வருமானம் நுகர்வுச் செலவுகளையும், முதலீட்டுச் செலவுகளையும் மாத்திரம் உள்ளடக்கியிருக்கிறது. இதைக் கீழ்க்கண்டவாறு கணித ரீதியில் கூறலாம்.

$$Y = C + I$$

Y என்பது வருமானத்தையும், C என்பது நுகர்வுச்செலவுகளையும், I என்பது முதலீட்டுச் செலவுகளையும் குறிக்கின்றன. இங்குக் கம்பெனிகள் சேமிப்பதில்லை என்று வைத்துக் கொள்வோம். ஆகவே, தனிப்பட்டவர்களுடைய சேமிப்பு மாத்திரம்தான் இருக்க முடியும். இந்த நிலையில் வருமானமானது நுகர்வுச் செலவாகவும், சேமிப்பாகவும் பிரிக்கப்படுகிறது.

$$Y = C + S$$

அஃதாவது, நுகர்வுச் செலவுகளையும், தனிப்பட்டவர்களுடைய சேமிப்பையும் கூட்டுவதனால் வருமானம் கிடைக்கின்றது. எனவே, இங்கு I = S முதலீடும் சேமிப்பும் கணக்குப்படி சமமாக இருக்கவேண்டும். I என்பது முதலீட்டையும், S என்பது சேமிப்பையும் இங்குக் குறிப்பிடுகின்றன.

இப் பொருளாதாரத்தில், வருமானம் நிர்ணயம் ஆக, நுகர்ச்சிச் சார்பையும் முதலீட்டையும் கூட்டவேண்டும். இதை இங்கே விரிவாக ஆராய்வோம்.

நுகர்வுச் சார்பை நாம் கீழ்க்கண்ட முறையில் கணித ரீதியாகக் கூறலாம். C_0 என்பதை வருமானம் பூஜ்யமாக இருக்கும்போது இருக்கக்கூடிய நுகர்வு எனக்கொண்டால், நுகர்ச்சிச் சார்பைக் கீழ்க்கண்ட சாம்யத்தில் எளிதாகச் சொல்லலாம்.

$$C = C_0 + bY$$

இங்கு C என்பது நுகர்வுக்காகச் செலவிடப்படும் தொகையைக் குறிக்கிறது. வருமானம் பூஜ்யமாக இருக்கும்போது (Zero level of income) கூட நாம் உயிர்வாழ, எதையாவது அருந்திக் கொண்டுதான் இருக்கிறோம். இந்த நுகர்வைத்தான் C_0 குறிக்கிறது. உயிர்வாழக் குறைந்தபட்ச நுகர்வு எவ்வளவோ, அது நாளுக்கு நாள் மாறுவதில்லை. ஆகவே, C_0 என்பது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையாக மாறுக் காரணியாக உள்ளது (constant). அடுத்து, Y என்பது, வருமானத்தைக் குறிக்கிறது. வருமானத்தில் எத்தனைச் சதவீதம் நுகர்வுக்காகச் செலவிடப்படுகிறது என்பதை 'b' காட்டுகிறது. இதை இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் (Marginal propensity to cons me) என்று கூறுகிறோம். 75 சதவீதம் நுகர்வுக்காகச் செலவிடப்பட்டால், b யின் மதிப்பு ·75Y ஆகும். இதை மற்றொரு முறையிலும் விளக்கலாம். வருமானம் ஒரு சிறு அளவு மாறும்போது, அதை $\triangle Y$ என்ற குறியீட்டால் உணர்த்துகிறோம் இங்கு $\triangle$(delta) என்ற குறியீடு ஒரு சிறு அதிகரிப்பைக் குறிக்கிறது. வருமானம் ஒரு சிறு அளவு அதிகரிக்கும்போது, நுகர்வும் ஒரு சிறு அளவு உயரவேண்டும். இதை $\triangle C$ என்ற குறியீட்டால் குறிக்கிறோம். இவ்வாறு வருமானம் உயர, நுகர்வும் அதற்கேற்றாற்போல் உயரும். இந்தச் சார்பைத்தான் $\triangle C/\triangle Y$ என்று குறிக்கிறோம். 'b' என்னும் குறியீடும் $\triangle C/\triangle Y$ யைத்தான் குறிக்கிறது. உதாரணமாக,

வருமானம் ரூ. 100-லிருந்து ரூ. 110 ஆக உயர்வதாகக் கொள்வோம். நுகர்வுக்காகச் செலவிடப்படும் தொகை வருமானத்தில் 75 சதவீதம் என்று கொள்வோம். நாம் முன்னர்க், கூறியவாறு வருமானம் ரூ. 10 அதிகரித்தால், நுகர்வு ரூ. 7.50 அளவுக்கு அதிகரிக்கிறது. இதைப் பின்வரும் சமன்பாட்டிலிருந்து அறியலாம்.

$$C = C_0 + bY$$

$$C + \triangle C = C_0 + b(Y + \triangle Y)$$

$$C + \triangle C = C_0 + bY + b\triangle Y$$

$$\triangle C = b\triangle Y$$

$\dfrac{\triangle C}{\triangle Y} = b$ அல்லது இறுதி நிலை நுகர்ச்சி நாட்டம் ஆகும்.

இறுதி நிலை நுகர்ச்சி நாட்டத்தை 0·75 Y என்று வைத்துக் கொண்டால்,

$$C = C_0 + 0{\cdot}75\,Y.$$

நுகர்வுச் செலவு 100 பில்லியன் டாலர்களாக இருக்கும் போது,

$$100 = C_0 + 0{\cdot}75 \times 100$$

$C_0 = 25$ பில்லியன் டாலர் என்று கொள்வோம். எனவே,

$$C = 25 + 0{\cdot}75\,d.$$

எனவே, 100 பில்லியன் டாலர் வருமானம் இருக்கும்போது அப் பொருளாதார அமைப்பில் எந்த விதமான சேமிப்பும் இல்லை.

இப் பொருளாதாரத்தில் 20 பில்லியன் டாலர்கள் முதலீட்டைச் செலுத்தினால், வருமானம் எப்படி மாறுதல் அடையும் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

$$Y = C + I$$

$$Y = C_0 + bY + I$$

$$Y - bY = C_0 + I$$

$$Y(1 - b) = C_0 + I$$

$$Y = \frac{C_0 + I}{(1-b)}$$

$$Y = \frac{25+20}{1-(0{\cdot}75)} = \frac{45}{0{\cdot}25}$$

$$= \frac{45}{\frac{1}{4}} = \frac{45 \times 4}{1} = \underline{180}$$

தேசிய வருமானம் 100 பில்லியன் டாலர்களாக இருக்கும் போது, சேமிப்பு இல்லை என்று கூறினோம். அப்பொழுது 20 பில்லியன் டாலர்களை முதலீடாகச் செலுத்தினால் வருமானம் 100 பில்லியன் டாலரிலிருந்து 120 பில்லியன் டாலர்களாக மாறாமல் 180 பில்லியன் டாலர்களாக அதிகரிக்கிறது. இந்த நிலையில் சேமிப்பும், முதலீடும் சமமாக இருப்பதையும் நாம் சரிபார்க்கலாம்.

$$S = Y - C$$

$$S = Y - (C_0 + bY)$$

$$S = Y - C_0 - bY.$$

$S = 180 - 25 - 135 = 20$ பில்லியன் டாலர்கள்.

$$S = I$$

$$20 = 20$$

இவ்வாறு 20 பில்லியன் டாலர்கள் 80 பில்லியன் டாலர்களாக மாறியதைப்பற்றி நாம் ஆராயவேண்டும். இதன் பொருள் என்னவென்றால், 1$ முதலீடு 4$ வருமானத்தை உண்டாக்குகிறது. புரிந்துகொள்ள சுலபமாக இருக்கும் வகையில் நாம் ரூபாயை எடுத்துக் கொள்வோம்.

ஒரு ரூபாய் முதலீடு செய்யும்போது, அது கூலியாகவோ, அன்றி மூலதனப் பொருள்களுக்குக் கொடுக்கப்படும் விலையாகவோ மற்றொருவரை அடைகிறது. அவர் அதிலிருந்து, 75 பைசாவை நுகர்வுப் பொருள்களுக்காகச் செலவிடுகிறார். அவ்வாறு செலவிடும்போது, அது நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி நிறுவனத்தைச் சென்று அடைகிறது. அது இந்த 75 பைசா வருமானத்தில், ·75ஐ அதாவது 56 பைசாவை நுகர்வுக்காகச் செலவிடுகிறது. இது வருமானமாக இன்னொருவரை சென்றடையும்போது, அவர் அதில் 42 பைசாவை நுகர்வுக்காகச் செலவிடுகிறார். இவ்வாறு வருமானம் அதிகரித்துக்கொண்டே சென்று 1 ரூபாய் முதலீடானது 4 ரூபாய் வருமானத்தைக் கொடுக்கிறது. இது பெருக்கியின் (multiplier action) விளைவாக ஏற்படுகிறது.

ரூ. 1 + 75 np + 56 np + 42 np + ...இவ்வாறு வருமானம் அதிகரித்துக்கொண்டே செல்லும்போது, இவற்றின் கூட்டுத்தொகை ரூபா 4-க்குச் சமமாகிறது. இந்தப் பெருக்கியின் வேலையை நாம் படம் மூலமாகவும் விளக்கமுடியும்.



படம் 8

இப்பொழுது இதையே நாம் குறியீட்டெண்களால் குறிப்போம். இந்த 1 ரூ. முதலீட்டுச் செலவானது வருமானமாக மாற்றப்படும்போது, அதன் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்திற்கு ஏற்றவாறு செலவு செய்யப்படுகிறது. எனவே, b என்ற அளவே செலவாகி அது வருமானம் ஆகிறது. அந்த b யின் இறுதிநிலை நாட்டம் $b \times b = b^2$ வருமானம் ஆகிறது. எனவே 1 ரூ. முதலீட்டுச் செலவானது,

$$1, b, b^2, b^3 \ldots\ldots\ldots\ldots b^t.$$

எனமாறி b^t மிகச் சிறிய அளவாகப் போகும்வரை தொடர்ந்து சென்றுகொண்டே இருக்கும். t மிக அதிகமாகும் போது, b^t மிகவும் சிறியதாகிவிடும்.

ஒரு டாலர் முதலீட்டுச் செலவானது, முதல் நாளில் $Y_1 = Y_0 + 1$ என மாறுதல் அடையும். பின்னர்,

Y_2 என்பது இரண்டாவது நாளில்,

$Y_2 = Y_0 + 1 + b$ என மாறுகிறது.

$Y_3 = Y_0 + 1 + b + b^2$

t என்ற காலம் வரை செல்லும்போது,

$Y^t = Y_0 + 1 + b + b^2 + b^3 \ldots\ldots\ldots\ldots + b^{t-1}$

இதைச் சுருக்கும்போது,

$$Y^t = Y_0 + \frac{1 - b^t}{1 - b}$$

t அதிகரிக்க, b^t மிகவும் சிறிதாகி 0 (zero) ஆகிவிடும்.

$$Y^t \text{ என்பது } = Y_0 + \frac{1}{1 - b}$$

$$Y^t - Y_0 = \frac{1}{1 - b}$$

முன்னர்க் கொடுத்த உதாரணத்தின்படி

$$\frac{1}{1 - \cdot 75} = \frac{1}{\cdot 25} = \frac{1}{\frac{1}{4}}$$

$$= \frac{1 \times 4}{1} = 4$$

எனவே, b என்பது 0·75 ஆக இருக்கும்போது, பெருக்கி (multiplier) என்பது 4 ஆக மாறி விடுகிறது. b = 0 ஆகும் போது, பெருக்கி 1 ஆக மாறி விடுகிறது. b = 0·50 ஆக இருக்கும்போது பெருக்கி 2 ஆக இருக்கும். இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் அதிகரிக்க அதிகரிக்க, பெருக்கியும் அதிகமாவதைக் காண்கிறோம்.

நாம் இதுவரை விளக்கிவந்த வருமான நிர்ணயத்தை எளிமையாக வரைபடம்மூலம் விளக்கம் செய்யமுடியும்.

அடுத்த பக்கத்தில் காட்டியுள்ள 45° கோட்டின் முக்கியத்துவம் யாதெனில், இக் கோட்டின் ஒவ்வொரு புள்ளியும், சேமிப்பும், மூலதனமும் சமமாயுள்ள ஒரு சமநிலையைக் குறிக்கிறது. C_0 25 பில்லியன் டாலர்களாக இருக்கும்போது, சேமிப்பு என்பதே

இல்லை. 100 பில்லியன் டாலர் வருமானமும், நுகர்வுக்குச் செல விடப்படுகிறது. இதைத்தான் R என்ற புள்ளி குறிக்கிறது. 20 பில்லியன் டாலர் மூலதனத்தைச் செலுத்தும்போது, வருமான



படம் 9

சாதாரண எளிய பேரியல் பொருளாதார மாதிரியில் வருமானம் நிர்ணயம் செய்யப்படுதல் (உண்மை மதிப்புகளில்)

மானது பெருக்கியின் காரணமாக 180 பில்லியன் டாலராக அதிகரிக்கிறது. இதை S என்ற புள்ளி குறிக்கிறது. 20 பில்லியன் டாலர் மூலதனம், 60 பில்லியன் டாலர் அளவுக்கு நுகர்வை அதிகரிக்கிறது.

பெருக்கியில் அடங்கியுள்ள சில எடுகோள்கள் அவற்றின் குறை பாடுகள்

1. **இறுதி நிலை நுகர்ச்சி நாட்டம்** (Marginal propensity to consume) **மாறாமல் இருக்கிறது.**

2. **மூலதனம் செலுத்தப்படும்போது, அது பெருக்கியின் விளைவாக வருமானத்தைப் பன்மடங்கு அதிகரிக்கிறது. இவ்வாறு செய்யும்போது இரண்டிற்கும் கால இடைவெளி** (Time lag) **இல்லை. காலதாமதம் இன்றி வருமானம் பெருக்கப்படுகிறது.**

3. தூண்டப்பட்ட முதலீடு (Induced investment) அங்கு இல்லை.

நாம் முதல் எடுகோளை எடுத்துக்கொள்வோம். இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் (MPC) மாருமல் இருப்பது கடினம். வருமானம் அதிகரிக்கும்போது, அது நாட்டின் வருமானப் பகிர்வு முறையை மாற்றி (Distribution of income) அமைக்கலாம். பணக்காரர்களின் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் குறைவாக இருக்கும். ஆனுல் ஏழைகளோ, தம் வருமானத்தின் பெரும் பகுதியை நுகர்வுக்கே செலவிடுவதால் இறுதி நிலை நுகர்வு நாட்டம் அதிகம். வருமானப் பகிர்வானது. ஏழைகளுக்குச் சாதகமாக இருந்தால், நாட்டின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் முன்னர் இருந்ததைவிட, இப்பொழுது அதிகமாக இருக்கும். ஆனுல் இவ்வாறு இறுதிநிலை நுகர்வு நாட்டம் மாறுபட வாய்ப்புண்டு என்பதை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

அதைப் போல, ஒரு குறிப்பிட்ட முதலீடு (Autonomous investment) செலுத்தப்படும்போது, அது வருமானத்தைத் தோற்றுவிக்க சிலகாலம் பிடிக்கிறது. அஃது ஒருவருக்கு வருமானமாக மாறிப் பின்னர்ச் செலவாக மாறி, இன்னெருவரை வருமானமாக அடைந்து, நாட்டின் வருமானத்தை அதிகப்படுத்த சில காலம் பிடிக்கிறது. இந்தக் காலப்போக்கின் அளவை (time lag) நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.

இவ்வாறே தூண்டப்பட்ட மூலதனம் அச் சமூகத்தில் இல்லை எனக் கொள்கிறேம். ஆனுல், நடைமுறையில் இது சாத்தியமில்லை. வருமானம் அதிகரிக்கும்போது, சேமிப்புத் தொகையும் அதிகரிக்கிறது. ஆகையால், தூண்டப்பட்ட மூலதனம் (Induced investment) அங்கு ஏற்படுகிறது. இவ்வாறு தற்செயல் மூலதனம் (Autonomous investment) வருமானத்தின் மூலமாக, மேலும் மூலதனத்தைத் தூண்டுகிறது என்பதை நாம் கணக்கில் கொள்வதில்லை.

ஆனுல் மேற்கூறிய குறைபாடுகள் இருந்தபோதிலும், பெருக்கியின் முக்கியத்துவத்தை நாம் ஒதுக்கிவிட முடியாது. வருமானம் இவ்வாறு பன்மடங்காக அதிகரிப்பதன் காரணம் என்ன என்பதை பெருக்கியின் வேலையைக்கொண்டே நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

பொருளாதாரத்தில் நுகர்வு நாட்டத்தின் முக்கியத்துவம்

இறுதிநிலை நுகர்வு நாட்டம் பல அரிய உண்மைகளை நயக்கு

எடுத்துக் கூறுகிறது. சராசரி நுகர்வு நாட்டத்தை நாம் APC (Average propensity to consume) என்று கூறுகிறோம்.

$$\frac{\text{மொத்த நுகர்வுச் செலவு}}{\text{மொத்த மக்களின் எண்ணிக்கை}} = \text{சராசரி நுகர்வு நாட்டம்}$$

இந்தச் சராசரி நுகர்வு நாட்டமானது, தொழில் துணிவோர்களுக்கு எவ்வளவு முதலீடு, நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியிலும், எவ்வளவு முதலீடு மூலதனப் பொருள்களின் உற்பத்தியிலும் செலவிட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. c/y என்பது எவ்வளவு முதலீடு நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியிலும் S/y என்பது எவ்வளவு மூலதனம். மூலதனப் பொருள்களின் உற்பத்தியிலும் ஈடுபடுத்தப்படவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

அதைப்போல, இறுதிநிலை நுகர்வு நாட்டமானது, எவ்வளவு மூலதனம் தொடர்ந்து இருந்தால், வருமானம் நிலையாக இருக்கும் என்பதைக் காட்டுகிறது. வருமானம் ரூ. 30, இறுதிநிலை நுகர்வு நாட்டம் ·6 என்றால் இறுதிநிலை சேமிப்பு வீதம் ரூ. 12 ஆகும். இந்த ரூ. 12 சேமிப்பும், முதலீடாக மாற்றப்பட்டால்தான், வருமானம் அதே அளவில் நிலைக்க வாய்ப்புண்டு. எனவே, திட்டமிடப்பட்ட முதலீடு எவ்வளவு இருக்கவேண்டும் என்பதை இஃது உணர்த்துகிறது.

அதைப்போல, இறுதிநிலை நுகர்வு நாட்டம் நேர்முகமாக (positive) இருக்கிறது என்றும், அஃது என்றும் எதிர்மறையாக (negative) இருப்பதில்லை என்ற கூற்று, நமக்குப் பொருளாதாரத்தில் மிகவும் பயன்படுகிறது. அது — (minus) ஆக இருந்தால் வருமானம் அதிகரிக்கும்போது, நுகர்வு கீழ்நோக்கிச் செல்லும். அப்பொழுது சாதாரண காலங்களில்கூட. பொருளாதார மந்தம் (depression) ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் உண்மையில் MPC ஆனது — (minus) ஆக இருப்பதில்லை. அதுவுமன்றி, மற்றோர் உண்மை யாதெனில், அது 1க்குக் குறைவாக உள்ளது. இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஒன்றுக்குச் சமமாக இருக்கிறது என்று கொள்வோம். அப்பொழுது வருமான அதிகரிப்பு முழுவதும், நுகர்விற்காகச் செலவிடப்படும். விலைவாசிகள் மிகவும் ஏறும். முழுவேலை உள்ள பொருளாதாரத்தில் இது மிதமிஞ்சிய பண வீக்கத்தை ஏற்படுத்தும். அதே சமயத்தில் சேமிப்பு 0 (zero) வாக இருப்பதால், வருமானத்தை நிலைநிறுத்த தற்செயலான முதலீடு(Autonomous investment) அதிகரிக்க வேண்டும். இது சாத்தியமில்லை. இது பண வீக்கத்தைத்தான்

அதிகப்படுத்தும். ஆகவே, இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஒன்றற்குக் குறைவாக இருக்கிறது என்ற உண்மை, பொருளாதாரங்கள், வியா பாரச்சூழலில் அமிழ்ந்து போகாமல் கரையேற உதவி புரிகின்றன என்பதை அறிவுறுத்துகிறது.

மற்றோர் உண்மை யாதெனில், வளர்ந்த நாடுகளில் நுகர்வு குறைவாகவும்,சேமிப்பு அதிகமாகவும் உள்ளன. வியாபாரச் சுழற்சி இந்த நாடுகளில் ஏன் அடிக்கடி காணப்படுகிறது என்பதை இஃது அறுவுறுத்துகிறது. சேமிப்பு அதிகரிக்க அதிகரிக்க, திட்டமிடப்பட்ட முதலீடும் (intended investment) அந்த அளவிற்கு அதிகரிக்க வேண்டும். இல்லையெனில், வருமானம் குறைந்துவிடும். வருமானத் திற்கும்,நுகர்வுக்கும் உள்ள இடைவெளி நாளுக்கு நாள் அதிகரிப்ப தால், அதை நிரப்ப, மூலதனம் முன் வராதபோது, அங்குச் சுழற்சிகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. வளர்வீத, வருமான வரி, ஆதரவைப் பெறுவதற்குக் காரணம்,அதிக வருமான வாய்ப்பு உள்ள வர்களிடமிருந்து வரிமூலம் பணத்தை எடுத்துக்குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குக் கொடுப்பதன்மூலம் நுகர்வை அதிகப்படுத்த முடியும் என்பதால்தான். இதனுல் நாட்டு வருமானத்திற்கும், நுகர்வுக்குமுள்ள இடைவெளி ஓரளவு குறுகுகிறது. ஆகவே, இப் பேருண்மைகளை விளக்கும் இச் சமன்பாடுகளின் முக்கியத்து வத்தை நாம் அலட்சியப்படுத்த முடியாது.

நுகர்வுச் செலவைப் பாதிக்கும் காரணிகள்

மொத்த நுகர்வு என்பது, செலவுக்குரிய வருமானத்தைச் சார்ந்திருக்கிறது என்பது, ஜே. எம். கீன்ஸ் அவர்களுடைய புரட்சி கரமான பொதுவேலைக் கோட்பாட்டிலிருந்து கிடைத்த உண்மை ஆகும். இப் பகுதியில், நுகர்ச்சி செலவைப் பாதிக்கும் காரணிகளைப் பற்றிச் சிறிது ஆராய வேண்டும்.

இதைப்பற்றிப் பல கருதுகோள்கள் (hypothesis) இருக்கின்றன. சில விதமான சார்பு மாறிகளை நாம் முன்னுல் எழுதிய பகுதியில் கவனித்தோமில்லை. எடுத்துக்காட்டாக, வட்டிவீதம் (i) அதிகரிப்பது நுகர்ச்சிச் செலவைக் குறைக்கச் செய்யும். சேமிப்பு அதிகரிக்கும். இதைத் தனியாக ஓர் அதிகாரத்தில் நாம் பேச வேண்டியிருப்பதால், இதைப்பற்றிய விவாதத்தைச் சிறிது ஒத்தி வைப்போம். இதைப்போல, பொதுவிலைவாசிகள் குறைவதால் செல்வத்தினுடைய மதிப்பு அதிகரித்து, மக்களிடம் நுகர்ச்சிச் செலவு அதிகரிக்கும் என்று சொல்லப்படுகிறது. இதையும் நாம் பின்னர்க் கவனிப்போம்.

ஜே. எம். கீன்ஸ் அவர்கள், இறுதிநிலை நாட்டம் குறைந்த வருமானத்தையுடைய மக்களிடம் அதிகம் என்றும், அதிக வருமானமுடைய பெருஞ்செல்வர்களிடையே குறைந்திருக்கும் என்று கூறி, மொத்தத் தேவையை அதிகரிப்பதற்காக, வருமானத்தைக் குறைந்த வருமான மக்களுக்குச் சாதகமாகப் பகிர்ந்து அளிக்கவேண்டும் என்ற கொள்கையைப் பிரகடனப் படுத்தினர். ஆனல், அமெரிக்காவில் நடத்திய புள்ளி விவர விசாரணைகளில் இஃது உண்மையாகப் புலப்படவில்லை. அதனல், பல பொருளாதார அறிஞர்கள் வருமானத்தைத் திருத்தி ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதை ஒரு சிறந்த கொள்கையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

டுஸன் பெர்ரியின் ஒப்புமை வருமானக் கருதுகோள் (Duesen Berrys Relative Income Hypothesis)

5,000$ வருமானம் உள்ள அமெரிக்க நீக்ரோக் குடும்பம், அதே வருமானம் உள்ள வெள்ளையர் குடும்பத்தைவிட அதிகமாகச் சேமிக்கிறது. நீக்ரோக் குடும்பம் குறைந்தவாரம் உள்ள சாதாரண வீடுகளில் வசிக்கிருர்கள். அவர்களுக்கு வாழ்க்கைத் தரத்தை (Standard of living) சிறந்த முறையில் தம் தகுதிக்கு ஏற்ப, காக்கவேண்டிய கட்டாயமில்லை. ஆனல், வெள்ளையர்களுக்கு அந்தக் கட்டாயம் இருக்கிறது.

எனவே, நுகர்ச்சிச் செலவில் ஒரே வருமானப் பிரிவைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறுவிதமான, நுகர்ச்சிச் செலவைச் செய்கிருர்கள். ஒரு நல்ல தரமான வாழ்க்கையை நடத்திப் பழக்கப்பட்டவர்கள், தங்கள் வருமானம் குறையும்போது, நுகர்வுச் செலவுகளைக் குறைக்காமல், சேமிப்பைக் குறைத்துக் கொண்டு தங்கள் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாத்துக் கொள்கிருர்கள்.

டோபின் (Tobin) என்பவர், வெள்ளையர்கள் சேமிப்புப் பழக்கத்திற்கும், நீக்ரோக்களின் சேமிப்புப் பழக்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளைத் தன் நுகர்ச்சிச் சார்பு கருதுகோளில் விளக்கம் செய்து இருக்கிருர். நீக்ரோவும், வெள்ளை அமெரிக்கரும் ஒரே வருமானத்தைப் பெற்றலும், வெள்ளையர்கள் தங்கள் செல்வத்தின் காரணமாகவும் மற்ற பாதுகாப்புகளின் காரணமாகவும் நீக்ரோக்களைவிடக் குறைவாகவே சேமிக்கிருர்கள். புதுவிதமான, உற்பத்திப் பொருள்கள் T. V. ஸெட், முதலியவைகள் சேமிப்பைக் குறைத்து, நுகர்வுச் செலவை அதிகப்படுத்துகின்றன.

டாக்டர் ஃப்ரீட்மேன் (Dr. Friedman) அவர்கள், நிரந்தர வருமான கருதுகோள் (Permanent income hypothesis) ஒன்றை

உருவாக்கினர். இதன்படி அவர் வாதிடுவது என்னவென்றால், குடும்ப நுகர்வுச் செலவை முக்கியமாக, நிர்ணயம் செய்யும் மாறி, நிரந்தர வருமானமே (permanent income) ஆகும். பின்னல் வரக் கூடிய எதிர்பார்க்கும் வருவாயின் தற்போதைய மதிப்பீடுதான் நுகர்ச்சிச் செலவை முடிவு செய்கிறது. திடுமென ஏற்படும் வருமானங்கள் நிலையில்லாதவையாக இருந்தால், இவை ஓரளவுக்குத்தான் நுகர்ச்சிச் செலவுகளை அதிகரிக்கும். இவைபோன்ற பல கருதுகோள்கள் இருந்தபோதும், நாம் பேரியல் பொருளாதாரத்தை எளிமைப் படுத்துவதற்காக நுகர்ச்சி என்பது நடைமுறையில் இருக்கும் செலவுக்குரிய வருமானத்தைப் பொறுத்திருக்கிறது என்று கொண்டு நம் கோட்பாடுகளை ஆராய்வோம்.

6. அரசாங்கமும் வருமான அளவும்
(Government and the Level of Income)

இந்த அதிகாரத்தில், அரசாங்கத்துறை செலவுகளும். வரியும் வருமானத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பார்ப்போம். தனியார் நிறுவனங்களின் சேமிப்பும், வெளிநாட்டுத் துறையும் இங்கு இல்லை. இந் நிலையில் வருமானமானது, நுகர்வு, தனியார் மூலதனம், அரசாங்க முதலீடு இவற்றைப் பொறுத்திருக்கிறது. அஃதாவது,

$$Y = C+I+G$$

இங்கு C நுகர்வையும், I தனியார்துறை மூலதனத்தையும், G அரசாங்கத்துறை மூலதனத்தையும் குறிக்கின்றன. இதை இன்னொரு வகையிலும் விளக்கலாம்.

$$Y = C+S+T$$

இங்கு S மக்களின் சேமிப்பையும், T அரசாங்கம் விதிக்கும் வரியையும் குறிக்கின்றன.

அரசாங்கத்துறை வருமானத்தை எவ்வாறு பாதிக்கிறது? அரசாங்கம் 50 பில்லியன் டாலர் வரியை விதிக்கிறது என்றுகொள்வோம். இந்த 50 பில்லியன் டாலர்கள் முழுவதும், நுகர்விற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்தோ, அன்றிச் சேமிப்பிற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்தோ, கொடுக்கப்படுவதில்லை. நாம் முன்னரே கூறியவாறு நுகர்வு வருமானத்தில் 0·75 ஆக உள்ளது. ஆகவே, $0{\cdot}75 \times 50 = 37{\cdot}5$ பில்லியன் டாலர்கள் நுகர்வுக்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்தும், மீதமுள்ள 12·5 பில்லியன் டாலர்கள் சேமிப்பிலிருந்தும் கொடுக்கப்படுகின்றன. ஆனால், தனியார்த் துறையின் மூலதனமும் 20 பில்லியன் டாலர்களாக உள்ளபோது, சேமிப்பு 20 பில்லியன் டாலர்களாக இருக்கவேண்டும்.

அரசாங்கத்துறை, 20 பில்லியன் டாலர்களைச் செலவு செய்யும் போது, பெருக்கியின் விளைவாக வருமானம் முன்னர்க் கூறிய 180 பில்லியன் டாலர்களிலிருந்து 260 பில்லியன் டாலர்களாக உயரவேண்டும். அரசாங்கமானது, இந்த 20 பில்லியன் டாலர் மூலதனத்திற்காக வரி விதிக்காமல் பணம் அச்சடித்து, அதை உபயோகித்தால் வருமானம் 260 பில்லியன் டாலருக்கு நிச்சயமாக உயருகிறது. ஆனால், அது வரி விதிக்கும்போது மக்களின் நுகர்வும் சேமிப்பும் பாதிக்கப்படுவதால், வருமானம் 200 பில்லியன் டாலராக மட்டுமே உயருகிறது. 20 பில்லியன் டாலர்கள் மட்டுமே வரி விதிக்கப்படும்போது, அது வருமானத்தை ஏன் 60 பில்லியன் டாலருக்குக் குறைக்கிறது என்பதை நாம் காணவேண்டும்.

20 பில்லியன் டாலர் வரி விதிப்பானது, நுகர்வை 15 பில்லியன் டாலருக்குக் குறைக்கிறது ($20 \times 0{\cdot}75 = 15$ பில்லியன் டாலர்). சேமிப்பை 5 பில்லியன் டாலர் அளவுக்கு குறைக்கிறது, பெருக்கியின் அளவு 4 ஆக இருப்பதால், வருமானமானது $15 \times 4 = 60$ பில்லியன் டாலர் அளவுக்குக் குறைகிறது. ஆகையால், வரியானது நுகர்வின் வழியாக வருமானத்தைக் குறைக்கிறது. மொத்த வருமானம் 260 பில்லியன் டாலராக இல்லாமல் 200 பில்லியன் டாலராகக் குறைகிறது.

இந்தப் புதிய 200 பில்லியன் டாலர் வருமான நிலையில் நுகர்வுச் செலவு 180 பில்லியன் டாலராகவும், சேமிப்பு 20 பில்லியன் டாலராகவும் இருப்பதைப் பார்க்கிறோம்.

இதை வரைபடம் மூலமாகவும் விளக்கலாம். அடுத்த பக்கத்திலுள்ள வரை படத்தில் $C_1 + I_1 + G_1$ கோடானது, 45° கோட்டை R என்ற புள்ளியில் வெட்டுகிறது. அந் நிலையில் வருமானமானது, 260 பில்லியன் டாலர். ஏனெனில். 20 பில்லியன் டாலர் மூலதனமானது வரிவிதிப்பினால் திரட்டப் படவில்லை. அப்படியே வரி விதிப்பினால் திரட்டப்பட்டது என்று கொண்டபோது, இது வரி விதிப்புக்கு முன்னால் உள்ள சூழ்நிலையாகும். ஆகவே இங்கு வருமானம் 4 மடங்காக அதிகரித்துள்ளது. ஆனால், அந்த 20 பில்லியன் டாலர் மூலதனம், இப்பொழுது வரியாக மாற்றப்படும்போது, அது நுகர்வை 20 பில்லியன் டாலரான C_1 நிலையிலிருந்து 15 பில்லியன் டாலரான C_2 நிலைக்கு குறைக்கிறது. ஆகையால் $C_1 + I_1 + G_1$ கோடானது கீழே தள்ளப்பட்டு $C_2 + I_1 + G_1$ நிலையை அடைகிறது. அது 45° கோட்டை R_1 புள்ளியில் வெட்டுகிறது. அந் நிலையில் வருமானம் 200 பில்லியன் டாலர்

கள்தான். நுகர்வு 15 பில்லியன் டாலர்களாகக் குறைக்கப்



படம் 10

படுவதால், அது வருமானத்தைப் பெருக்கியின் காரணமாக 4 மடங்கு குறைக்கிறது. $(15 \times 4 = 60)$

இவ்விளக்கத்தை, இப்பொழுது நாம் சமன்பாடுகளின் மூலமாக விளக்குவோம்.

$$Y = C + \overline{I} + \overline{G}$$

I க்கும் G க்கும் மேலேயுள்ள கோடு அவை நிலைத்த தன்மையைப் பெற்றிருப்பதை நமக்குக் காட்டுகின்றன. நுகர்ச்சிச் சார்பு சாம்யம்,

$$C = C_0 + b\,(Y - T)$$

$$C = C_0 + bY - bT$$

$$Y = C_0 + bY - bT + \overline{I} + \overline{G}$$

$$Y - bY = C_0 - bT + \overline{I} + \overline{G}$$

$$Y\,(1 - b) = C_0 + bT + \overline{I} + \overline{G}$$

$$Y = \frac{C_0 - bT + \overline{I} + \overline{G}}{1 - b}$$

இங்கு,

$$b = 0{\cdot}75$$
$$\bar{T} = 20$$
$$\bar{G} = 20$$
$$\bar{I} = 20$$
$$C_0 = 25$$
$$Y = \frac{25 - (\cdot75 \times 20) + 20 + 20}{1 - \cdot75}$$
$$= \frac{25 - 15 + 20 + 20}{\frac{1}{4}}$$

= 200 பில்லியன் டாலர்கள்.

இந்த 200 பில்லியன் டாலர் சமநிலை வருமானத்தின் தத்துவம் என்ன? நாம் முன்னரே பார்த்த எளிமையான பொருளாதார அமைப்பில் முதலீடும் சேமிப்பும் சமமாக இருந்தன.

இப்பொழுது சமநிலை ஏற்பட மற்றொரு நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. அதாவது,

$$I + G = S + T$$

முதலீட்டையும் அரசாங்கச் செலவையும் கூட்டினால், அது சேமிப்பு, வரிகள் ஆகியவற்றின் கூட்டுத் தொகைக்குச் சமமாக இருக்கவேண்டும்.

G, I, C_0, T இவற்றின் மாறுதல் எப்படி வருமானத்தைப் பாதிக்கிறது என்பதைப் பெருக்கியின் மூலமாகவும், மாறுபடும் சிறுசிறு வருமானத்தைக் கூட்டுவதன்மூலமாகவும் கண்டுபிடித்தோம். இதைச் சுலபமான வழியிலும் செய்ய முடியும்.

$\triangle I$ என்பதை, முதலீட்டில் ஏற்படும் சிறிய மாறுதல் என்று வைத்துக் கொண்டால், அதற்கு ஏற்றாற்போல், மாறுகிற வருமானத்தை $\triangle Y$ என்று குறிப்பிடலாம்.

$$Y + \triangle Y = \frac{-b\bar{T} + C_0 + \bar{I} + \bar{G} + \triangle I}{1 - b}$$

இதை $\triangle Y = \dfrac{\triangle I}{1 - b}$ என்று Yயை இரு பக்கமும் கழித்துவிட்டு நாம் எழுத முடியும்.

முதலீட்டு மாறுதல் ΔI அரசாங்கச் செலவு ΔG மற்றும் ΔC சமமாக இருந்தால்,

$$\Delta Y = \frac{\Delta I}{1-b} = \frac{\Delta C_0}{1-b} = \frac{\Delta G}{1-b}$$

போன்றவைகள் சமம்,

$$\Delta I = \Delta C_0 = \Delta G$$

வரிவிதிப்பால்,

$$\Delta Y = \frac{-b\Delta T}{1-b}$$

வரிகள் செலவிடும் வருமானத்தைப் (Disposable income) பாதிப்பதன்மூலம், நுகர்வையும் பாதிக்கின்றது.

$$\Delta Y = \frac{\Delta C_0}{1-b}$$

$$\Delta C_0 = b\Delta T$$

$$\Delta Y = \frac{-b\Delta T}{1-b}$$

20 பில்லியன் அரசாங்கச் செலவு, வருமானத்தைக் கீழ்க்கண்டவாறு மாற்றும்.

$$\Delta Y = \frac{20}{1-0{\cdot}75} = 80$$

வரிகள் 20 பில்லியன் போடுவது, நுகர்ச்சியை $20 \times 0.75 = 15$ பில்லியன் டாலர்களாகக் குறைத்து விடுகிறது. எனவே, இதனால் வருமானம் கீழ்க்கண்டவாறு குறையும்.

$$\Delta Y = \frac{-0{\cdot}75 \times 20}{1-{\cdot}75} = -60$$

இவ்வாறு வருமானத்தைக் குறைக்கும் வரியின் பெருக்கியைக் கீழே காண்போம்.

'h' என்ற எழுத்து இறுதிநிலை வரிவிதிப்பைக் (Marginal rate of Taxation) குறிப்பதாகக் கொள்வோம்.

$$C = C_0 + byd$$

$$C = C_0 + b(Y - T_0 - hY)$$

$$= C_0 + bY - bT_0 - bhY$$

$$Y = C_0 + bY - bT_0 - bhY + \overline{I} + \overline{G}$$

$$Y - bY + bhY = C_0 - bT_0 + \overline{I} + \overline{G}$$

$$Y(1 - b + bh) = C_0 - bT_0 + \overline{I} + \overline{G}$$

$$Y = \frac{C_0 - bT_0 + \overline{I} + \overline{G}}{1 - b + bh}$$

$$Y = \frac{C_0 - bT_0 + \overline{I} + \overline{G}}{1 - b(1 - h)}$$

இங்கு T_0 என்பது ஏற்கெனவே, உள்ள வரித்தொகையைக் குறிக்கிறது. h என்ற எழுத்து, இறுதிநிலை வரி விதிப்பைக் குறிப்பதால் 1—h என்பது, வரிக்குப் பின்னர்க் கிடைக்கப்பெறும் வருமானத்தின் அளவைக் குறிக்கிறது என்பதைக் கீழ்வரும் பட்டியல் மூலம் அறியலாம்.

பட்டியல் VII

இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் (MPC)	இறுதிநிலை வரி விதிப்பு (Marginal Rate of Taxation	மொத்த பயனுள்ள நுகர்ச்சி நாட்டம் (Effective MPC)	பெருக்கியின் அளவு (Multiplies)
0.8	0.0	0.8	5.00
0.8	0.1	0.72	3.57
0.8	0.2	0.64	2.78
0.8	0.3	0.56	2.28

எனவே, இந்த வரி விதிப்பின் காரணமாக நாம் கூறிய உதாரணத்தில் அரசாங்கச் செலவு 20 பில்லியன் டாலர்களும், அதனுல் ஏற்பட்ட 20 பில்லியன் வரி விதிப்பும், வருமானத்தை 80 — 60 = 20 பில்லியன் டாலர்தான் அதிகப்படுத்தின. இந்த

மாறுபட்ட வருமானம், அரசாங்கச் செலவிற்கும், வரிக்கும் சமமாக இருக்கின்றன. இதைச் சரிசம பட்ஜெட் கோட்பாடு (Balanced budget theorem) என்று கூறுவார்கள். அல்லது 'பெருக்கி ஒன்று கோட்பாடு, (Unit multiplier theorem) என்றும் கூறுவார்கள். எனவே, அரசாங்கச் செலவினுல் ஏற்பட்ட பெருக்கியையும், வரி விதிப்பினுல் ஏற்பட்ட பெருக்கியையும் கூட்டும்போது சாம்ய முறையில் பெருக்கி ஒன்று கோட்பாட்டை அடைகிறோம்.

$$\frac{\triangle Y}{\triangle G} + \frac{\triangle Y}{\triangle T} = \frac{1}{1-b} + \frac{-b}{1-b} = \frac{1-b}{1-b} = 1$$

இந்தக் கோட்பாடு நிதித் துறையில் நமக்குச் சில முக்கியமான அறிவுரைகளைக் கூறுவதைப் பார்க்கிறோம்.

முதலில் அரசாங்கமானது, மூலதனத்திற்காகச் செலவிடும் போது, அந்த அளவிற்குப் பட்ஜெட்டில் துண்டு விழுகிறது. நிதிப் பற்றுக்குறை ஏற்படுகிறது என்று நினைக்கிறோம். ஆனுல், இஃது உண்மையன்று; ஏனெனில், இம் மூலதனச் செலவின் விளைவாகப், பன்மடங்காக அதிகரிக்கும் வருமானமானது, மக்களின் வரி கொடுக்கும் திறமையை (capacity to pay taxas) அதிகப்படுத்து கிறது. அதைப்போல், வரிவிதிப்பை அதிகரிப்பதன்மூலம் நாம் பட்ஜெட்டைச் சம்மாக்கலாம்; என்று (Balancing the budget) நினைக்கிறோம். ஆனுல், அது உண்மையன்று. வரி விதிப்பை அதிகரிப்ப தனுல் செலவிடப்படும் வருமானம் (Disposable income)குறைகிறது. நாம் முன்னரே கூறியவாறு இறுதி நிலை நுகர்வு நாட்டத்தை இது குறைத்து வருமானம் பெருகும் அளவைக் கட்டுப்படுத்துகிறது. ஆகையால், நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு மக்களிடையே வரி கொடுக்கும் திறன் அதிகரிப்பதில்லை. நிதித் துறையில் கொள்கை களை வகுக்கும்போது இந்த உண்மைகள் நமக்கு மிகவும் உதவி புரிகின்றன.

இந்த பெருக்கி ஒன்று கோட்பாட்டினுல் (Unit multiplier) சமூகமானது வணிகச் சூழல்களிலிருந்து காப்பாற்றப்படுகிறது. இத் தன்மையை நாம் தனக்குத்தானே நிலைப்படுத்திக்கொள்ளும் திறமை வாய்ந்த பண்பு' (Automatic or Built - in Stabilizers) என்று குறிப்பிடுகிறோம். பெருக்கியின் அளவு 4 மடங்காக இல்லா மல், 1 மடங்காகவே இருப்பதால் வியாபாரப் பூரிப்பு (Economic prosperity) காலத்தில், இது வருமானத்தைக் கட்டுப் படுத்திப் பணவீக்கம் ஏற்படாமல் (Inflation) தடுக்க உதவுகிறது. ஆனுல் இதன் மறுபுறத்தையும் நாம் காணவேண்டும். பொருளா

தார மந்த காலத்தில் (Economic depression) வரி விதிப்பினுல், திரட்டப்படும் பணத்தை முதலீடு செய்தால், பொருளாதாரத்தை மேல் நோக்கி இழுக்க இஃது உதவாது. அந்தச் சமயத்தில் பணத்தின் அளவை அதிகரித்துத்தான் (Autonomous investment) பொருளாதார நடவடிக்கைகளை மந்த நிலையிலிருந்து மேலுக்குக் கொண்டுவர முடியும்.

அதைப்போல், மற்ருேர் உண்மையையும் நாம் இதிலிருந்து அறிகிருேம். மந்த நிலையில், பொருளாதாரம் இருக்கும்போது, வரி விதிப்பைக் குறைப்பதனுல் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் அதிகரிக்க முடியும் எனறு சிலர் வாதிக்கின்றனர். இஃது உண்மையன்று. வரி விதிப்பதற்கு முன்னரே, வேலையின்மை காரணமாகவும். பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவும் அவர்களின் வரி கொடுக்கும் திறன் குறைந்து விடுகிறது. ஆகையால், நாம் வரியைக் குறைப்பதனுல், இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் அதிகரிப்பதில்லை. அப்படியே குறைத்தாலும், அதிக அளவில் வரியைக் குறைத்தால் அன்றி, நாம் இறுதிநிலை நுகர்வை அதிகப்படுத்த முடியாது. ஆனுல் இவ்வாறு செய்வதனுல், நமக்கு மற்ருெரு தொல்லை ஏற்படுகிறது. ஒரு முறை வரியைக் குறைத்த பின்னர், அதை அதிகப்படுத்துவது மிகவும் கடினமாகிவிடும். ஆகையால் நிதித் துறையில் இந்த பெருக்கி ஒன்று கோட்பாட்டின் முக்கியத்துவத்தை நாம் உணராவிடில், அதனுல் ஏற்படும் விளைவுகளைச் சமாளிப்பது கடினமாகிவிடும்.

7. முதலீட்டுச் செலவுகள்
(Investment Expenditure)

முதலீடு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில், புதுமையான நிலைத்த முதலீட்டுப் பொருள்களுக்கு (New fixed capital goods) (உதாரணம் - வீடு, ஆலை இயந்திரம்) அல்லது கூடுதல் இருப்புச் சரக்குகளுக்கு (உதாரணம் - கச்சாப்பொருள்கள், விற்பனை ஆகாத நுகர்வுப் பொருள்கள்) செலவாகும் தொகை ஆகும். மேலே கூறிய இலக்கணத்தில் மொத்த முதலீடு என்பதுதான் அடங்கும். இருக்கிற முதலீட்டுப் பொருள்களைக் குறைக்காமல் இருப்பைப்பாது காக்க சில புதுப்பொருள்கள் தேவைப்படுகின்றன. அஃதாவது ஏற்கெனவே உள்ள இயந்திரங்கள் சில பழையனவாகி, உபயோக மில்லாமல் போய்விடும். அதற்குப் பதிலாகப் புது இயந்திரங்களைப் புகுத்தவேண்டும். இதைத்தான் தேய்மான ஈட்டுச்செலவு (depreciation) என்று குறிப்பிடுகிறோம். மற்ற செலவுகள் புது முதலீட்டை உண்டாக்கத் தேவைப்படுகின்றன.

மொத்த முதலீடு = நிகர முதலீடு + தேய்மானச் செலவு.

உலக யுத்தங்கள் நடக்கும்போது, நிகர முதலீடு இல்லாமல்போய் விடலாம். முதலீட்டு இருப்பும் குறையத் தொடங்கும். போதுமான தேய்மானச் செலவிற்கு வசதி இல்லாததால் இந் நிலை ஏற்படலாம்.

இங்கே, நாம் சிறிது எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சாதாரண வழக்கில் முதலீடு என்ற சொல், பத்திரங்கள் (bonds) வாங்குவதைக் குறிப்பிடும். உதாரணமாக, பிரிட்டிஷ் லேலெண்ட் கம்பெனியில், ஒருவன் பத்திரம் வாங்கினால், அந்தக் கம்பெனியில் முதலீடு செய்திருக்கிறான் என்று நாம் பொருள்படக் கூறுகிறோம். இதுபோன்ற பொருளில், பொருளாதாரத்தில் முதலீடு என்ற சொல்லை நாம் பயன்படுத்தவில்லை. முதலீடு, தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் ஏற்படலாம். 1967-ல் நடந்த மொத்த

முதலீட்டில் இங்கிலாந்தில் 48% தனியார்த் துறையிலும், 52% பொதுத்துறையிலும் நடந்ததாகக் கணக்குத் தெரிகிறது. தனியார் முதலீடு இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதால், பொருளாதார மந்தங்கள் ஏற்படும்போது முதலீடு வளர்வதில்லை. ஆனால், அரசாங்க முதலீடுகளில் இது போன்ற தடைகள் இல்லாததால், தனியார் முதலீடு குறையும் சமயங்களில் இம் முதலீடுகள் அதை நிவர்த்திக்கப் பயன்படுகின்றன.

முதலீடும் வட்டி வீதமும்

முதலீட்டுச் செலவுகள், இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதால், தொழில் துணிவோர்கள், முதலீட்டிலிருந்து வரக்கூடிய வருவாய் (yield) முதலீட்டுச் செலவை விட (investment cost) அதிகமாக இருக்கவேண்டும் என்று எதிர் பார்ப்பார்கள். முதலீட்டுப் பொருள்களின் வருவாயை ஆராய்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. முதலாவதாக, முதலீட்டுப் பொருள்கள் உறுதிப் பொருள்களாக இருப்பதால், பல காலங்களுக்கு நாம் வருவாயைக் கணக்கிடவேண்டி இருக்கும். எனவே, முதலீட்டுப் பொருள்களின் தற்போதைய மதிப்பு × வருடக் காலத்தைவிடக் குறைவாகவே இருக்கும். வருங்காலம் நிச்சயமற்ற நிலையைப் பெற்றிருப்பதால், முதலீட்டுப் பொருளிலிருந்து வரும் வருவாய் நம்முடைய எதிர்பார்க்கும் திறமையைப் பொறுத்திருக்கிறது. முதலீட்டுப் பொருளிலிருந்து வரும் வருவாய் பல காலங்களுக்குப் பரவி இருப்பதை நாம் இங்கு ஆய்வு செய்வோம்.

முதலீட்டுத் திட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் முறைகள்

நாம் முதலில் (1) தற்போது முதலீட்டின் மதிப்பையும் (2) கழிவு செய்த வருமான வீதம் (Discounted Rate of Return) ஆகிய இரண்டையும் கணக்கிட வேண்டும்.

1. தற்போதைய முதலீட்டுச் சொத்துகளின் மதிப்புகள்

உதாரணமாக, எனக்கு ரூ. 133·1 மூன்று வருடங்களுக்குப் பிறகு கிடைக்கும் என்றால், வட்டிவீதம் வருடத்திற்கு 10% ஆக இருக்கும்போது, அந்த முதலீட்டுச் சொத்தின் தற்போதைய மதிப்பென்ன? இதற்கான பதில் பின்னோக்கி வேலை செய்வதன் மூலம் கண்டுபிடிக்க முடியும்.

இரண்டாவது வருட முடிவில் அதன் மதிப்பு $= \dfrac{133 \cdot 1}{1 \cdot 10} = 121$ ரூ.

முதல் வருட முடிவில் அதன் மதிப்பு $= \dfrac{133}{(1 \cdot 10)^2} = 110$ ரூ.

$$\text{அதன் தற்போதைய மதிப்பு} = \frac{133}{(1\cdot10)^3} = 100 \text{ ரூ.}$$

பொதுவாக Pn என்பதை n வருடத்தில் அடையும் திரட்டப்பட்ட பணமாகவும், iயை வட்டி வீதமாகவும், Vயை முதலீட்டு ஆஸ்தியின் தற்போதைய மதிப்பாகவும் வைத்தால் நாம்,

$$V = \frac{Pn}{(1+i)^n}$$

என்று எழுதலாம்.

நாம் மற்றொரு மாதிரியை எடுத்துக்கொள்வோம். ஓர் இயந்திரம் இரண்டு வருட உறுதித் தன்மையைப் பெற்றிருக்கிறது. அது வருடத்திற்கு 121 ரூபாய் வருவாய் ஈட்டும் தன்மையைப் பெற்றிருக்கிறது. அதன் தற்போதைய செலவு ரூ. 200/-. மற்றும் நடப்பு வட்டிவீதம் 10%. இது போன்ற நிலையில், அந்த இயந்திரத்தில் முதலீடு செய்வது லாபகரமானதா ?

$$V = \frac{121}{1\cdot1} + \frac{121}{(1\cdot1)^2}$$

$$= 110 + 100$$

$$= 210 \text{ ரூபாய்}$$

இயந்திரத்தின் மதிப்பு (V) அதன் செலவைவிட அதிகமாக இருப்பதால் முதலீடு இலாபகரமானது. இதைப் பொதுவாக $V > C$ Rs. 210/- > 200/- என்று கூறலாம்.

$$V = \frac{A_1}{1+i} + \frac{A_2}{1+1} \cdots\cdots\cdots \frac{An}{(1+i)^n}$$

வட்டிவீதத்தைக் கண்டுபிடித்தல்

ஓர் இயந்திரம் இரண்டு வருட உறுதியையுடையது. அதன் செலவு ரூ. 110. அஃது ஒவ்வொரு வருடமும் 72 ரூபாய் வருவாய் ஈட்டினால், அந்த இயந்திரத்தின்மூலம் எதிர்பார்க்கப்படும் வருவாய் வீதம் என்ன ?

$$110 = \frac{72}{1+r} + \frac{72}{(1+r)^2}$$

$$110\,(1+r)^2 = 72\,(1+r) + 72$$

$$110 + 220r + 110r^2 = 72 + 72r + 72$$

$$110r^2 + 148r - 34 = 0$$

20 percent

கடன் வாங்கும் செலவு 20%க்குக் குறைவாக இருந்தால்தான் இந்த முதலீட்டை ஆரம்பிப்பது இலாபம் கொடுக்கும்.

முதலீட்டின் இறுதிநிலைத் திறன் (Marginal Efficiency of Capital)

ஒரு நிறுவனம் வைத்திருக்கும் இயந்திரங்கள் அதிகரிக்கும் போது, அஃது எதிர்பார்க்கும் வருவாய் வீதம் எப்படி மாறும் என்பதைப் பார்க்கவேண்டும். குறுங்காலத்தில் (short-run) அவ்வியந்திரங்களை ஒரு மாறும் காரணியாகத்தான் நிலை பெற்ற காரணிகளுடன் பயன்படுத்த முடியும். எனவே, இறுதிநிலை உற்பத்தி நாளடைவில் குறையத்தான் செய்யும். எனவே, எதிர் பார்க்கும் வருவாய் வீதம் குறையத்தான் செய்யும். ஒரு நிறுவனம் முதலீட்டை அதிகப்படுத்துவது என்றால், அதன் சொத்துகளின் பெரும்பகுதி எதிர்காலத்தில் கிடைக்கும் வருமான வீதத்தைப் பொறுத்திருக்கிறது. எதிர்காலத்தில் தொழில் துணிவோர்கள் எடுக்கும் விலை உற்பத்தி முடிவுகள் தவறிவிட்டால், ஆபத்துகள் அதிகரிக்கக் காரணங்களிருக்கின்றன. எனவே, வருங்காலத்தில் ஏற்படும் ஒவ்வொரு முதலீட்டு அலகிலிருந்தும் வரும் வருவாய் வீதம் குறையத் தொடங்கும். இதைத்தான் கீன்ஸ் அவர்கள், முதலீட்டின் இறுதிநிலைத் திறன் என்ற கலைச் சொல்லால் குறிப்பிட்டார்கள். நாம் இதை MEI (Marginal Efficiency of Investment) என்று குறிப்பிடுவோம்.

தொழில் முழுவதையும் எடுத்துக் கொண்டால், முதலீடு அதிகமாக அதிகமாக, முதலீட்டு இறுதிநிலைத் திறன் குறையக் காரணங்கள் இருக்கின்றன. முதலில் அதிக உற்பத்தி விலைவாசிகளைக் குறைத்து, வருவாய் வீதத்தைக் குறைத்துவிடும். இரண்டாவதாக, முதலீடு அதிகமானால், உற்பத்திக் காரணிகளுக்குத் தேவை அதிகமாகி, காரணிகளின் விலை அதிகரிக்கச் செய்கிறது. எதிர்காலத்தில் குறைந்த வருவாய் வீதமும், முதலீட்டு அளிப்பு விலை அதிகரிக்க, எதிர்பார்க்கும் இலாபவீதம் குறையத்தான்செய்யும். எனவே, உற்பத்தி அதிகரிக்க முதலீட்டின் இறுதி நிலைத் திறன் குறைந்து விடுகிறது. இதைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்குகிறது.

பட்டியல் VIII

முதலீட்டு அளிப்பு விலை (p)	வருடாந்திர வருமானம் (y)	முதலீட்டு இறுதி நிலைத் திறன் (e)
$ 10,000	$ 1,000	10%
$ 10,000	$ 800	8%
$ 20,000	$ 1,000	5%

முதலீட்டின் செலவுகள்

முதலீட்டின் அளவை நிர்ணயம் செய்ய தனி நிறுவனங்களின் முடிவுகளை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். ஒரு நிறுவனம் முதலீட்டை அதிகப் படுத்த வேண்டுமென்றால், அதன் இறுதி நிலைத் திறன் அந்த இயந்திரத்தின் விலையைக் காட்டிலும் அதிகமாக இருக்கவேண்டும். அதன் விலை மார்க்கெட்டில் இருக்கும் வட்டிவீதத்தைப் பொறுத்திருக்கிறது. இதைக் கீழ்க் கண்ட வரைபடம் மூலம் விளக்கம் செய்யலாம்.

முதலீட்டின் அளவு மேற்கண்ட வரைபடத்தில் முதலீட்டின் இறுதிநிலைத் திறனும், வட்டிவீதமும் வெட்டிக்கொள்ளும் இடத்தில் நிர்ணயம்செய்யப் படுகிறது. MEI வரைகோடு கீழ்நோக்கிச் செல்கிறது. வட்டி வீதத்திற்கும் முதலீட்டிற்கும் உள்ள உறவானது எதிர்மறை உறவாகும் (inverse relation). மேலே யுள்ள வரைபடத்தில், பல வித வட்டி வீதங்களில் முதலீட்டின் அளவு எவ்வளவு என்பது தெளிவாகத் தெரிகிறது. அதிகமான வட்டிவீதம் இருக்கும்போது முதலீடு குறைந்து போய் விடுகிறது. நாம் மேலேயுள்ள வரைபடத்திலிருந்து, முதலீட்டுத் தேவையின் பட்டியலைப் போடமுடியும். அதிலிருந்து முதலீட்டுத் தேவைக் கோட்டையும் வரைய முடியும்.



படம் 11

முதலீடு - வட்டிவீதம் உறவுகள் பற்றிச் சில விமர்சனங்கள்

கீன்ஸ், முதலீட்டு அளவானது நீண்டகால வட்டியையும், முதலீட்டு இறுதிநிலைத் திறனையும் பொறுத்திருக்கிறது என்று கூறினர். வட்டியும் முதலீட்டு இறுதிநிலைத் திறனும் சமமாகும் வரை முதலீடு தொடர்ந்து நடக்கும் என்று நம்பினர். ஆனல், நடைமுறையைக் கவனிக்கும்போது இதை ஒத்துக்கொள்ள முடிய வில்லை. வியபாரச் சுழற்சி ஏற்படும்போது, கடைசிக் கட்டங்களில் வட்டி வீதம், பயனுள்ளதாகத் தெரியவில்லை. பொருளாதார மந்தங்கள் ஏற்படும்போது குறைந்த வட்டிவீதம் முதலீட்டளவை அதிகப்படுத்தப் பயன்படுவதில்லை. பொருளாதார மந்தக் காலங் களில் தேங்கிப்போய் விற்பனை ஆகாமல் பொருள்கள் இருக்கும் போது குறைந்த வட்டியால் தொழில் துணிவோர்களின் மனப்பான் மையை மாற்ற முடிவதில்லை. அதைப்போலவே வட்டிவீதத்தை அதிகப்படுத்தி முதலீட்டைக் குறைப்பது என்பது பணவீக்கத்தின் போது பயனில்லாமல் போய்விடுகிறது. ராட்கிளிஃப் அறிக்கை (Radcliffe Report) 1959-ல் வெளியான பின்னர், பொருளாதார வல்லுநர்களுக்கு வட்டிவீதத்தின் மீதும்,அது முதலீட்டை நிர்ணயம் செய்வதில் முக்கிய காரணியாக இருப்பதிலும் ஐயம் ஏற்பட்டது. கீன்ஸின் முறையில் மூன்று விதமான முக்கிய விமர்சனங்கள் தோன்றின.

முதலாவதாக, வட்டி வீதத்திற்கு ஏற்றாற்போல் முதலீட்டின் அளவு மாறுபடும், அஃதாவது முதலீட்டு இறுதிநிலைத் திறன் வளை கோடும் வட்டிவீதமும் நெகிழ்வுடையதாக இருக்கின்றன. ஆனல், இந்த முடிவுகள் தவறானது என்பதை நிரூபிக்க முகாந்தரங்கள் இருக்கின்றன.

இரண்டாவதாக, முதலீட்டளவை நடப்பு வட்டி வீதத்தோடு ஒப்பிடுவதுதான் நலன் பயக்கும். அப்பொழுதுகூட மற்ற மாறிகள் நிலைபெற்று இருக்கவேண்டும். முதலீட்டு இறுதி நிலைத் திறன் வருங்கால எதிர்ப்பார்ப்புகளைப் பொறுத்திருப்பதால், அவ் வளைகோட்டின் நிலையைச் சரியாக முடிவு செய்ய முடிவதில்லை. கடைசியாக வட்டிவீதம்தான் ஒரு நிறுவனத்தின் உண்மையான செலவு என்று சொல்வதற்கில்லை.

முதலீடு, பெரும்பாலும் வட்டிவீதத்தைப் பொறுத்திருப்ப தில்லை என்று கூறினேம். இதற்கான காரணங்களை நாம் ஆராய வேண்டும். வருங்காலத்தில், மிகமிக அதிக லாபத்தைக் கொடுக்கக்கூடிய நிறுவனங்களும், மிகமிகக் குறைந்த வருமானத் தைக் கொடுக்கக்கூடிய நிறுவனங்களும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது இந்த இரண்டிற்கும், இடைப்பட்ட நிலையில் வருமானத்தைக் கொடுக்கக்கூடிய நிறுவனங்களைப்

பொறுத்தவரை வட்டிவீதம் எந்த விதத்திலும் மூலதனத்தைப் பாதிப்பதில்லை. இதைப் பொருளாதார ரீதியில் விளக்குவது கடினமானாலும், இது தொழில் முனைவோரின் உளவியலைச் சார்ந்திருப்பதால், இஃது ஓர் ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மையாக இருக்கிறதை நாம் பார்க்கிறோம்.

வட்டிவீதத்தை, மூலதனம் ஏன் பொறுத்திருக்கவில்லை என்பதற்கு மேலும் சில காரணங்களை நாம் கூறமுடியும். கீழேயுள்ள படத்தில் RR^1 என்ற கோடானது, எதிர் காலத்தில் மூலதன ஈடுபாட்டில் கிடைக்கக் கூடிய வருமானத்தைக் காட்டுகிறது. ஆனால் தொழிலில் காணப் படும் நிச்சயமற்ற தன்மைக்காக (unceraintv) நாம் 10% வருமானத்தைக் குறைத்து II^1 என்ற கோட்டைப் பெறுவோம்.



படம் 12

இப்பொழுது வட்டிவீதம் or என்றால், IB வரையில்தான் மூலதனத்திலிருந்து கிடைக்கும் வருமானம் வட்டிவீதத்தை விட அதிகமாக இருக்கிறது. ஆகவே, மேலும் மூலதனத்தை அதிகரித்தால், அதிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் IBC ஆக மாறிவிடுகிறது. ஆனால், அதே வட்டிவீதம் D-க்கு குறைகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது தொழில் துணிவோர்கள் தங்கள் மூலதனத்தை DI^{11} என்ற கோட்டின் பாதையில் அதிகரிக்க விரும்புவார்கள். ஆகவே, BD என்ற பகுதி மூலதன நெகிழ்ச்சியற்ற தன்மையைக் காட்டுகிறது. இந்தப் பகுதியில், மூலதனம் எந்தவிதத்திலும் வட்டிவீதத்தால் பாதிக்கப்படுவதில்லை.

அதேபோல் நிறுவனங்களும், மூலதனத்திற்கு வெளி உலகையே நம்பி இருப்பதில்லை. அவை தங்கள் சேமிப்பையும் உபயோகிக்கின்றன. படம் 13-ல், வட்டிவீத அதிகரிப்பினால், மூலதன அளிப்புக்கோடு $SRTS^1$-லிருந்து $UVWU^1$ ஆக மாறுகிறது. ஆனால், II^1 மூலதனச் செறிவாக இருக்கும்போது. நிறுவனங்கள் தங்கள் சேமிப்பையே உபயோகப்படுத்துகின்றன. வட்டிவீதம் QRக்கு அதிகமானாலோ, அல்லது QTக்குக் குறைந்தாலோதான் நிறுவனங்களின் மூலதன அளவு

பாதிக்கப்படுகிறது. RT என்ற பகுதியில் மூலதனச் செறிவு இருக்கும்வரை வட்டிவீதத்தினுல், அது நெகிழ்ச்சி அடைவதில்லை.

முதலீட்டுச் செலவைப் பாதிக்கும் சில காரணிகள்

முதலீட்டுத் தேவைச் சார்பை I = I (i) என்று குறிப்பிடுவது முதலீடு வட்டி வீதத்தைப் பொறுத்திருக்கிறது என்பதையே குறிக்கும். ஆனுல், இந்தக் கருத்தின் விமர்சனங்களை நாம் முன்னுல் பார்த்தோம். ஆனுல் கீன்ஸின் அமைப்பில், வருங்காலத்தை எதிர்பாக்கும் செயல்களும் முதலீட்டு இறுதிநிலைத் திறனும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.



படம் 13

புள்ளியில் ரீதியாகப் பார்க்கும்போது, முதலீட்டு அளவானது, இலாபத்தைப் பொறுத்திருக்கிறது. ஏனென்முல் இலாபம் பொதுவாகக் கம்பெனிகளின் ஈட்டுத் தொகையிலிருந்து ஒரு பங்காகக் கொடுக்கப்படுகின்றது. அதிகமான இலாபம் தொழில் துணிவோர்களின் உளவியலை மாற்றி (psychology) நம்பிக்கையூட்டும் எதிர்காலத்தை உண்டாக்கிவிடுகிறது. இலாபமும், வருமானமும் தொடர்புடையதாய் இருப்பதால் முதலீட்டுத் தேவையைக் கீழ்க் கண்டவாறும் குறிப்பிடலாம். அஃதாவது I = I (i, Y) முதலீட்டுச் செலவு, வட்டியோடும், வருமானத்தோடும் மேற்கண்ட சமன்பாட்டில் பொறுத்தப்பட்டிருக்கிறது. முதலீடு வட்டியையும், வருமானத்தையும் சார்ந்திருக்கிறது. இந்தச் சமன்பாட்டில் முதலீட்டு வட்டியோடு எதிர்மறை உறவையும் வருமானத்தோடு நேர்முக உறவையும் பெற்றிருக்கிறது. இதை வரைபடம் மூலம் நாம் விவரித்துக் காட்ட முடியும்.

வட்டி வீதம் i_0 ஆக இருக்கும்போது, முதலீடு I_0 ஆக இருக்கிறது. வருமானம் Y_1 ஆக உயரும்போது முதலீடு I_1 ஆகவும், வருமானம் Y_2 ஆக உயரும்போது, முதலீடு I_2 ஆகவும் மாறுகிறது. மேலே கொடுக்கப்பட்ட படத்தில் முதலீட்டுத் தேவையின் பட்டியலே கொடுக்கப்பட்டிருக்

கிறது. எல்லா மதிப்புகளும், உண்மையான மதிப்புகளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.



படம் 14

இதைத் தவிர மற்றொரு விதமான முதலீட்டு சமன்பாடும் இருக்கிறது.

$$I = I\ (i, \triangle Y)$$

இந்தச் சமன்பாட்டில் Y என்ற வருமானத்திற்குப் பதிலாக △Y என்ற வருமான அளவின் சிறிய மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன்படி, முதலீடு ஒரே நிலைபெற்ற அளவு உற்பத்தியைப் பொறுத்தது அன்று என்றும், முதலீடு அதிகமாக உற்பத்தி மாறுதலும் ஏற்படவேண்டும் என்றும் தெரிய வருகிறது. இக் கருதுகோளின் அடிப்படையில்தான் வேக வளர்ச்சி விதி (Accelaration Principle) ஏற்பட்டது. எனவே, நுகர்ச்சித் தேவை அதிகரித்து, அதன் மூலமாக முதலீடு அதிகமாகலாம். இதைத்தான் தூண்டப்பட்ட முதலீடு (Induced Investment) என்று கூறுவார்கள். நுகர்ச்சி விதம் மாற்றப்படுவதால் முதலீட்டுத் தன்மை அதிகரிக்கிறது.

நாம் கீன்ஸின் முதலீட்டுப் பெருக்கியை முன்னதாகப் பார்த்தோம். முதலீடு மாறுவதால் வருவாய், நுகர்வு ஆகியவற்றில் ஏற்படும் மாறுதல்களைப் பார்த்தோம். முதலீட்டில் ஏற்படும் சிறிய மாறுதல் வருவாயையும், வேலைகளையும் பெருக்கக்கூடிய

தன்மையைப் பெற்றிருக்கிறது. அதுபோலவே, நுகர்ச்சியும், முதலீடும் சார்புப்படுத்தப்பட்டிருக்கிறது. வேக வளர்ச்சி வீதம் என்று சொல்லப்படும் இக் கருத்து நுகர்ச்சி வீதத்தில் ஏற்படும் மாறுதல், முதலீட்டை எப்படி அதிகப்படுத்துகிறது என்பதை விவரிக்கிறது. இந்தக் கருத்து 1914 ஆம் ஆண்டுகளுக்கு முன்னமேயே கூறப்பட்டு வந்தது. ஆனால் கீன்ஸ், தன்னுடைய நூலான பொதுக் கோட்பாட்டில் இதைப்பற்றி எதுவும் கூறவில்லை. மாறாக, உளவியலை அடிப்படையாகக்கொண்ட முதலீட்டு இறுதி நிலைத் திறனையும், முதலீட்டுத் திறனுக்கும், முதலீட்டுப் பெருக்கிக்கும்தான் தன் கோட்பாடுகளில் முக்கியத்துவம் கொடுத்தார்.

முதலீட்டு இறுதிநிலைத் திறன் ஒரு தொழிற்சாலையில் அதிகமாக இருக்க வேண்டுமானால், அத் தொழிற்சாலையில் லாபம் (yield) அதிகமாக இருக்கவேண்டும். அல்லது மூலதனத்தை உபயோகிக்கும் திறன் (Utilization of Capacity) அதிகமாக இருக்கவேண்டும். முதலீட்டு இறுதிநிலைத்திறன் எத்தனையோ விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. அரசாங்கத்தின் வரிவிதிப்பு அதிகமாக இருக்கிறது என்று வைப்போம். அப்பொழுது முதலீட்டு இறுதிநிலைத் திறன் குறையும். அரசாங்கம் முதியோர் பென்ஷன், வேலையில்லோருக்கு நிதி ஆகியவற்றை வழங்கும்போது, அவர்கள் குறைந்த கூலிக்கு வேலைக்கு வருவதில்லை. ஆகவே, அது மூலதனச் செறிவைப் பாதிக்கிறது.

Endogeneous	Exogeneous
(1) வருமானம், வருமானம் அதிகரிக்கும் அல்லது தாழும் தன்மை.	(1) புதிய கண்டுபிடிப்புகள்.
(2) நுகர்ச்சிச் தேவை.	(2) மக்கள்தொகை வளர்ச்சி.
(3) ஏற்கனவே புழக்கத்தில் இருக்கும் மூலதனத்தின் அளவு.	(3) இயற்கைச் செல்வங்களின் வளர்ச்சி.
(4) பணக்கூலி வீதம்.	(4) நுகர்வோரின் உளவியல்.
(5) உற்பத்தியில் மூலப் பொருள்களின் விலை (factor prices)	(5) அரசாங்கப் பண நிதிக் கொள்கைகள்.
(6) வெளிநாட்டு அங்காடி நடவடிக்கை.	(6) சட்ட பாதுகாப்பு.
(7) ஆபத்தும், நிச்சயமற்ற தன்மையும்.	(7) தொழிலாளிகளின் தொழிற் சங்க நடவடிக்கைகள்.
	(8) சமுதாய நிறுவனங்கள், (sociological institutions)
	(9) போர், புரட்சி etc.
	(10) தட்பவெட்பச் சூழ்நிலை.

மூலதன இறுதிநிலைத் திறன் மேற்கூறிய பல விஷயங்களைப் பொறுத்திருக்கிறது என்று நாம் கூறலாம். அதேபோல், மூலதனப் பொருள்களின் அளவு (Capital Accumulation) அதிகரிக்க, அதிகரிக்க மூலதனத்தை அதிகரிக்கும் வாய்ப்புக் குறைந்துவிடும். இதை ஒரு வரைபடம் மூலம் விளக்கலாம்.



படம் 15

இங்கு வருடம் 1-ல் வட்டிவீதம் or, அப்பொழுது r_1A அளவுக்கு மூலதனம் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனல், அதற்குப் பின்னர், r_1 வட்டிவீதத்திற்கும் குறைந்த அளவு வருமானத்தைக் கொடுக்கக்கூடிய தொழிற்சாலைகளே இருப்பதால், மூலதன அளவுக்கோடு I_2 ஆகக் கீழே இறங்குகிறது.

8. பணத் தேவையும் வட்டி வீதமும்

நாம் முந்திய அதிகாரத்தில், ஒரு சொத்தின் அங்காடி மதிப்பிற்கும் அதனுடைய வருவாய் அல்லது வட்டி வீதத்திற்கும் உள்ள உறவுமுறைகளைப் பார்த்தோம். இதிலிருந்து, வட்டிவீதம் என்பது வருவாய் அளிக்கும் பல சொத்துகளின் அளிப்பையும், தேவையையும் பொறுத்தது என்ற முடிவு செய்யத் தோன்றுகிறது. ஆனால், இந்தப் பிரச்சனையை வேறு விதமாகவும் பார்க்க முடியும். வருவாய் கொடுக்கும் பல சொத்துகளின் அளிப்பும், தேவையும் சமநிலையில் இருக்கவேண்டுமென்றால், பண அளிப்பும் பணத் தேவையும் சமநிலையில் இருக்கவேண்டும். அஃதாவது வட்டி என்ற வருமானம் தராத ரொக்கத்தை (Liquid assets) மக்கள் வைத்திருப்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. பணத்தை வங்கிகளில் போடுவது அல்லது ரொக்கமாகச் சேர்த்து வைப்பது முதலிய நடவடிக்கைகளைச் சொத்துள்ளவர்களால் செய்யமுடியும். ரொக்கத் தேவைக்குமேல் உள்ளதை வங்கியில் போட்டு, வட்டியை சம்பாதிக்க முடியும். இதற்குமேல் பண அளிப்பு இருக்குமானல், வட்டிவீதம் குறைய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, வட்டி வீதத்தைப் பத்திரங்களுக்குள்ள (bonds) தேவை அளிப்புப் பிரச்சனையாகக் கொள்ளாமல், அதைப் பணத்திற்குள்ள தேவை அளிப்புப் பிரச்சனையாக அணுக முடியும். எனவே, நாம் பணத்திற்குள்ள தேவையையும், அளிப்பையும்பற்றி விரிவாக இனி விவாதிக்க இருக்கிறோம்.

நாம் முதலில், எந்த விதமான ஆபத்தும் இல்லாத ஒரு பொருளாதாரத்தை எடுத்துக்கொள்வோம். அங்கே கொடுத்த கடன்களை வட்டியோடு பெற எந்தவிதமான தடைகளும் இல்லை. அங்கே பத்திரங்கள் (bills) வைத்திருப்பவர்களுக்கு எந்த விதமான முதலீட்டு இழப்பும் (Capital loss) இல்லை. அங்கே எதிர்பார்க்கும் முதலீட்டு வருவாயும் நிச்சயமாக வரக்கூடியது என்று வைத்துக் கொள்வோம். அதுபோன்ற நிலையில் வங்கியின் கடன் கொடுக்கும்

வீதமான i, பத்திர வீதம் i_b மற்றும் இறுதிநிலை முதலீட்டின் வருவாய் r ஆகிய மூன்றும் சமமாக இருக்கும்.

$$\text{அதாவது } i_1 = i_b = r.$$

பத்திர வீதம் 5% ஆகவும், முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வருவாய் 7% ஆகவும், வங்கியின் கடன் வீதம் 10% ஆகவும் இருந்தால், வங்கியின் கடன்களுக்கு எவ்விதமான தேவையும் இருக்க முடியாது. பத்திரத்தை வைத்திருப்பவர்கள், அதை விற்றுவிட்டு நடைமுறையில் முதலீட்டுக்காக வாங்கும் கடன்களுக்குத் தங்கள் பணத்தை வட்டிக்குவிட முயல்வார்கள். இதனால், பத்திரங்களின் விலை குறைந்து, பத்திர வீதங்கள் அதிகரிக்கும். பாங்குகள், தங்கள் வியாபாரத்தை இழக்காமல் இருப்பதற்காக வட்டி வீதங்களைக் குறைக்கின்றன. இதுபோல, வங்கியின் வட்டிவீதமும், பத்திரத்தின் வருமான வீதமும் முதலீட்டு வருவாய் வீதத்தைவிடக் குறைவாக இருந்தால், தொழில் துணிவோர்கள், புதிதாக இயந்திரங்களையும் மற்ற சாதனங்களையும் வாங்குவார்கள். இதனால், இறுதிநிலை முதலீட்டு வருவாய் குறைந்து, பத்திரங்கள் வீதமும் வங்கியின் வீதமும் அதிகரிக்கும். இவ்வாறு கடைசியாக, இவ் வீதங்கள் எல்லாம் அங்காடி நடவடிக்கைகளால் சமமாக்கப்படும்.

ஆனால், நடைமுறையில் பத்திரங்களின் வருமான வீதமும், வங்கியின் வட்டி வீதமும், இறுதிநிலை முதலீட்டின், வருமான வீதமும். வேறுபட்டிருப்பதைப் பார்க்கிறோம். இதிலிருந்து தெரிவது என்னவென்றால், பல்வேறு தரப்பட்ட சொத்துகளுக்கு, பல்வேறுவிதமான ஆபத்துகள் இருக்கின்றன. முதலீட்டுத் துறையில், அதிக லாப வாய்ப்புகள் எங்கிருக்கின்றன என்ற உண்மை பொதுவாக அனைவர்க்கும் தெரியா நிலைமை அங்காடியில் இருக்கலாம். ஒரு பாங்கு அரசாங்கப் பத்திரத்தை வாங்கும்போது அதிகமான ஆபத்துகள் இல்லை. ஆனால், ஒரு வியாபாரத்திற்குக் கடன் கொடுக்கும்போது பாங்கிற்கு நிறைய ஆபத்துகள் இருக்கின்றன. அதுபோலவே, பாங்கு நீண்டகாலப் பத்திரங்களை வாங்கும்போது, அது தன்னை அதிக ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்ளுகிறது. குறைந்த காலப் பத்திரங்களில் ஆபத்துகள் அதிகமில்லை. அதுபோலவே ஒரு புதிய இயந்திரத்தில் முதலிடுவது ஆபத்தான செய்கையாகும். அது நீண்ட காலத்திய வரவுகளை நம்பி இருப்பதால், நம் எதிர் பார்ப்புகள் சரியில்லாமல் போய்விடின் பெரிய இழப்புகள் ஏற்பட வாய்ப்பிருக்கின்றன. எனவே, சிலர் குறுங்காலப் பத்திரங்களைப் பெரிதும் விரும்புகிறார்கள். எனவே, பலவிதமான ஆபத்துகளும் சிக்கல்களும் நிறைந்த கடன்நிதி வசதிகளையும், அதன் அளிப்

பையும், தேவையையும், பணத்தின் அளிப்பாகவும், தேவையாகவும் கொண்டு, வட்டி வீதம் நிர்ணயம்பற்றி நாம் ஆராயலாம்.

பணத்தின் தேவையையும் அளிப்பையும் பற்றி ஆராய்வதற்கு முன் பணத்தைப்பற்றி அனைவரும் ஒத்துக்கொண்ட பண இலக்கணத்தை நாம் இங்குப் பயன்படுத்துவோம். பணம் என்பது செலாவணி மற்றும், வங்கி வைப்புகளின் கூட்டுத்தொகையே ஆகும்.

பணத்தின் தேவை

வட்டிக்கு விடாமல் பணத்தை ரொக்கமாக வைத்துக்கொள்ள பல காரணங்கள் இருக்கவேண்டும். கீன்ஸ், இதற்கு மூன்று வித மான காரணங்களைக் கூறுகிறார். இல்லத் துறையினர்க்கு (House hold sector) பொதுவாக வருமானம் வாராந்திரத் தொகையாகவோ அல்லது மாதக் கணக்கிலோ பட்டுவாடா செய்யப்படுகிறது. உணவு, உல்லாசம், பிரயாணம் முதலியவற்றுக்குத் தினப்படி செலவு செய்யவேண்டி இருக்கிறது. வருமானத்தின் பெரும்பகுதி வாரம் அல்லது மாதம் முழுமைக்கும் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இது போன்றவற்றைப் பேரத்திற்கான பணத் தேவை (Transactions Demand for Money) என்று அவர் கூறுகிறார்.

Y ரூபாய் மாத வருமானம் வாங்கும் ஒருவருக்கு, ஒவ்வொரு மாதம் முதல் தேதியில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர், தன் நுகர்வுச் செலவுகளை ஒவ்வொரு மாதமும் C என்ற ரூபாய் அளவுக்குச் சீரான அளவில் செலவிட்டால், அவருடைய வங்கியில் சராசரியாகத் தன்னுடைய மாதச் செலவில் பாதியை அல்லது C/2 ரூபாயை மீதமாக வைத்திருப்பார். அவருடைய வருமானம் $\triangle Y$ ஆக மாறினால், அவர் நுகர்வுச் செலவு $b\triangle Y$ ஆகும். இங்கு b என்பது, இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஆகும். தற்போது அவருடைய பாங்குக் கணக்கில் இருக்கும் பணம் $(C + b\triangle Y)/2$. விலைவாசிகள் இரண்டு மடங்காகப் பெருகினால் தன் கணக்கில் இருக்கும் மீதத்தை இரட்டிப்பாக மாற்ற வேண்டும். நாம் முதற்படியாக, பேரத்திற்கான பணத் தேவை, பண வருமானத்தின் அளவைச் சார்ந்திருக்கிறது என்று கூறலாம்.

எச்சரிக்கையான பணத் தேவை (Precautionary motive)

வாழ்க்கையில் நிலையில்லாத் தன்மையினால் பணத்தேவை அவசியமாகிறது. எடுத்துக்காட்டாக, வேலையின்மை, உடல்

நலமின்மை காரணமாக, திடுமென பணம் தேவைப்படலாம். இத் தேவையானது ஒரு தனி நபரின் புறநோக்கத்தையும், வருமானத் தையும் பொறுத்திருக்கிறது. மேலும் அது, குறுகிய காலத்தில் ஒரு நபர் திரட்டும் கடன் நிதியையும் சார்ந்திருக்கிறது. மேலும் ஒரு சமுதாயத்தின் நிலையில்லாத் தன்மையால், பணத் தேவைக் கோடானது நிலை பெயர்ந்து மேல்நோக்கிச் செல்லலாம். ஒரு நிதி நெருக்கடியோ அல்லது நாடுகளுக்கு மத்தியில் போர் (war) ஏற்பட்டால், எச்சரிக்கைக்கான பணத்தேவை அதிகமாகிறது. சாதாரண காலங்களில், பேரத்திற்கான பணத்தேவையைப் போல், எச்சரிக்கைக்கான பணத் தேவையானது ஒரு நாட்டின் வருமான அளவைப் பொறுத்திருக்கிறது.

இந்த இரண்டு தேவைகளையும், சேர்த்து அவற்றிற்கான மொத்தப் பணத்தேவையைக் கீன்ஸ் அவர்கள், M_1 என்று குறிப் பிட்டார். இதில் சேர்த்து வைக்கப்படும் பணம் அல்லது ரொக்கம் வருமானத்தைப் பொறுத்திருக்கிறது. இதைக் கீழ்க்கண்டவாறு சாம்யமாகக் கூறலாம்.

$$M_1 = f(Y)$$

இந்த M_1 ஆனது Y யோடு நேரிடை வீதத்தில் உறவு பெற்றி ருப்பதால், அதைக் கீழ்க்கண்டவாறு வரைபடம் மூலம் விளக்கம் செய்ய முடியும்.



படம் 16

நாம் இனி, பணத் தேவையை வட்டி வீதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். பணத்தை ரொக்கமாக வைத்திருப்பதால், அதற்கு எவ்விதமான வருவாயும் கிடைப்பதில்லை. மேலும் பண

வீக்கத்தின்போது, இந்த ரொக்கத்தின் மதிப்பும் குறைந்து விடுகிறது. நகைகளும் (Jwellery) நல்ல கலைப் பொருள்களும் நமக்கு மனத்தில் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. அதுபோல வீட்டில் நாம் வசிக்கமுடியும் அல்லது வாடகைக்கு விடமுடியும். பங்குகள் (Shares) நமக்கு இலாப ஈவுத் தொகையை ஈட்டிக் கொடுக்கின்றன. பத்திரங்கள் ஒரு குறிப்பிட்ட வட்டிவீதத்தை நமக்குக் கொடுக்கின்றன. இவற்றையெல்லாம் எளிதாக்க நாம் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு வட்டிவீதம் என்ற வருவாயைப் பெறுகிறோம் என்றுகொள்வோம். எனவே, பணத்தை ரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்பும் மக்கள் அதன் செலவைப்பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். வட்டி வீதம் அதிகமாக, அதிகமாக, ரொக்கப் பண விருப்பத்தின் செலவு அதிகரிக்கிறது. ஆனால், எச்சரிக்கைக்காகவும், பேரங்களுக்காகவும் வைத்திருக்கும் ரொக்கம் பெரும்பாலும் வசதிக்காக வைக்கப்பட்டிருக்கிறது. வட்டிவீதம் அளவுக்குறி அதிகமாகும் போது, ஆடம்பரத் தேவைகளுக்காக வைத்திருக்கும் பணம் குறையும். இதை வரைபடத்தில் காட்டி இருக்கிறோம்.



எச்சரிக்கைக்காகவும் பேரங்களுக்காகவும் தேவைப்படும் ரொக்கம்

படம் 17

மேலேயுள்ள படத்தில் R என்ற புள்ளி வரை வட்டிவீதத்தின் அளவு பேரத்திற்குத் தேவையான ரொக்கத்தைப் பாதிப்பதில்லை. ஆனால், அதற்குப் பின்னர், வட்டிவீதம் R-க்கும் மேலே அதிகரிக்கும் போது, M_1 குறைகிறது. அஃதாவது பேரங்களுக்குத் தேவைப்படும் பணத்தைக் குறைத்து, வட்டி லாபத்தைப் பெற மக்கள் விரும்புவார்கள். ஆகவேதான், அஃது உட்புறமாக வளைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

உலக இலாப நோக்கம் (Speculative Demand for Money)

உலக இலாப நோக்கத்திற்காக, பணத்தை ரொக்கமாக மக்கள் விரும்புகிறார்கள் என்று கீன்ஸ் கூறினார். குறிப்பிட்ட ஒரு நாளில் பத்திரங்கள் சில விலை அதிகமாகின்றன. சில பத்திரங்களின் விலைகள் குறைந்து போகின்றன. சில சமயங்களில் எல்லாட்

பத்திரங்களின் விலைகளும் ஏறுமுகமாகவும் அல்லது இறங்கு முகமாகவும் சென்று கொண்டிருக்கின்றன. நம்முடைய விளக்கத்தை எளிமையாக்க, நாம் தேதியிடாத அரசாங்கப் பத்திரங்களை எடுத்துக் கொள்வோம். இவ் வரசாங்கப் பத்திரங்கள் நிலைபெற்ற வட்டியைக் கொடுக்கின்றன.

மக்கள் பத்திரங்களின் விலை அதிகமாகப் போகிறது என்று நினைத்தால், அவர்கள் பத்திரங்களை வாங்குவார்கள். அவர்கள் ஊகம் சரியாக இருந்தால், அவர்கள் தங்கள் முதலுக்கு மேலாக இலாபங்கள் அடைவார்கள். இதைப் போலவே, பத்திரங்களின் விலைகள் குறையப் போகிறது என்று நினைத்தால், அவர்கள் பத்திரங்களை விற்று முதல் இழப்பைத் (Capital loss) தவிர்க்க நினைப்பார்கள். எனவே, பத்திரங்களின் விலை குறையும் போது, அதை விற்கவும், பத்திரங்களின் விலை அதிகமாகும் போது, அதை வாங்கவும் மக்கள் முடிவு செய்கிறார்கள்.

பத்திரங்களின் விலைகளும், வட்டிவீதமும் எதிர் மறையான உறவைப் பெற்றிருக்கின்றன. 100 ரூபாய்க்கு யுத்தக்கடன் $3\frac{1}{2}\%$ வட்டியில் வாங்கி இருந்து, தற்போதைய வட்டிவீதம் $2\frac{1}{2}\%$ ஆகக் குறைந்தால், பங்கு மார்க்கெட்டில் அப் பத்திரத்தின் விலை ரூபாய்

$$(3\tfrac{1}{2}/2\tfrac{1}{2}) \times 100 = \frac{7}{2} \times \frac{2}{5} \times \frac{100}{} = 140$$ ரூபாயாக மாறிவிடும்.

(20 printed above 100)

எனவே, பத்திரத்தின் வருங்கால மதிப்பை ஊகம் செய்யும்போது, மக்கள் வருங்கால வட்டிவீதத்தையும் ஊகம் செய்கிறார்கள் என்று தான் பொருள். எனவே, நாம் நம் கருத்தைத் திருத்தமாக வேறு முறையில் கூறலாம். வட்டிவீதம் குறையும்போது, பத்திரங்களின் விலை அதிகமாவதால் மக்கள் பணத்தை ரொக்கமாக வைத்துக் கொள்ள விரும்புவார்கள். வட்டிவீதம் அதிகமாகும் போது, பத்திரக்களின் விலை குறைவதால், மக்கள் பணத்தை ரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்பமாட்டார்கள். எனவே, மக்களின் ஊகலாபத்திற்கான ரொக்க விருப்பம் வட்டி வீதத்தைச் சார்ந்திருக்கிறது. நாம் இதை $M_2 = f(i)$ என்று சாம்யம் மூலம் குறிப்பிடலாம். இவ் வுறவை வரைபடம் 18 மூலமும் விளக்கம் செய்ய முடியும்.

ஊக நடவடிக்கைகள் நடக்கும்போது, பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மைகள் இருக்கின்றன. ஊகம் செய்பவர்களின் நடவடிக்கைகளைப் பாதிக்கும், முக்கியமான காரணம் நடப்புவட்டி வீதத்தில் ஏற்படும் மாறுதல்களாகும்.

வட்டிவீதங்கள் மாறுபட்டாலும், அவை ஒரேயடியாகக் கீழ் நோக்கிச் சென்று பூஜ்யமாகிவிடும் என்று கீன்ஸ் கூறவில்லை. அதாவது ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தில், ரொக்க விருப்பத்



படம் 18

தன்மையானது, பரிபூரண நெகிழ்ச்சியைப் பெற்றிருக்கிறது, இதற்குமேல் வட்டிவீதம் குறைவதில்லை. இதைத்தான் நீர்மைப் பொறி (Liquidity trap) என்று கூறுவார்கள். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

பணத்தைப் பத்திரமாக (bond) மாற்றும்போதும், விற்று ரொக்கமாக மாற்றும்போதும் பல செலவுகளும், இடர்ப்பாடுகளும் நேரிடுகின்றன. எனவே, இந்த இழப்புகளைச் சமாளிக்க குறைந்தது 2% வருவாய் தேவைப்படும். செல்வந்தர்கள் வட்டி குறையக் குறையப் பணத்தை ரொக்கமாக வைத்துக்கொள்வதையே விரும்புவர். எனவே, இது போன்ற குறைந்த வட்டி ஒரு நிலைக்கு மேல் குறைந்து செல்ல முடியாது. இந்தக் குறைந்த வட்டிவீதத்தை RL_2 காட்டுகிறது. அரசாங்கம், இதுபோன்ற ரொக்கத்தைக் கண்டிப்பாக வரிவசூல் செய்தால் அன்றி 'O' வட்டிவீதம் ஏற்படுவதற்கில்லை. எனவே, வட்டிவீதம் குறைந்து நீர்மைப் பொறியை அடையும்போது பணத்தேவையானது கணக்கிட முடியாத தேவை நெகிழ்ச்சியைப் பெறுகிறது.

பணவீக்கத்தின்போதும் பொருளாதார மந்தத்தின்போதும் பணத் தேவை

பண வீக்கத்தின்போது, எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறுமுகமாக ஏறும். பணவீக்கத்தின்போது, வியாபாரிகளும்

மக்களும் பொருள்களைச் சேர்க்க விரும்புகிறார்கள். பொருள்கள், பண்டங்கள், கச்சாப் பொருள்கள் எல்லாம் சேர்க்கப்படுகின்றன. பொருளாதார மந்தம் ஏற்படும்போது, பொது விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு அதிகரிக்கிறது. அப்போது மக்கள் பணத்தை ரொக்கமாகச் சேர்க்க விருப்பப்படுவார்கள். இதுபோன்ற ஊகங்களைக் கீன்ஸ் கருத்தில் கொள்ளவில்லை. கீன்ஸ், வட்டிவீதத்திற்கும் பத்திரங்களின் மதிப்புக்கும் உள்ள உறவை மாத்திரம் மையமாக வைத்துத் தன் ரொக்க விருப்பத் தேவையை விளக்கி இருக்கிறார்.

நாம் முடிவாகப் பணத்தேவையை $Md = Ms = M_1 + M_2 = KY + L(i)$ என்று பண மார்க்கெட்டின் சமநிலையைப் பற்றிச் சொல்லலாம். இங்கே, முக்கியமாகச் சொல்ல வேண்டியது M_1 வருமானத்தையும், M_2 வட்டியையும் சார்ந்திருப்பது ஆகும்.

இந்த ரொக்க விருப்பத்தில் ஊக லாப நோக்கத்தைப் புகுத்தியவர் கீன்ஸ் ஆவர். இதனால் பேரியல் பொருளாதாரத்தில் பல முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. மேலும், கீன்ஸின் நீர்மைத் தன்மைப் பொறி, தொன்மைப் பொருளாதாரிகளின் கோட்பாடுகளை எதிர்க்கும் ஓர் ஆயுதமாகவும் பயன்பட்டது. இதை நாம் பின்னர் விவாதிக்கலாம்,

9. பண அளிப்பு
(Money Supply)

பணத்தின் தேவையைப்பற்றி அறிந்த நாம், பணத்தின் அளிப்பைப்பற்றி இங்கு விவாதிப்போம். பணம் என்பது, பொதுவாகக் கடனைத் தீர்க்க எவ்வித ஐயப்பாடும் இன்றி, மக்களால் ஒத்துக்கொள்ளப்படும் ஒரு கருவியேயாகும். நாம் பணம் என்பதை இங்கு ஒரு சிறப்புப் பொருளில் பயன்படுத்துகிறோம். ஒரு குழந்தை கடைக்குப் போய்ச் சில பைசாக்கள் விலையுள்ள ஓர் இனிப்பை வாங்கினால், அக் குழந்தை அந்தச் சில பைசா அளவுக்குக் கடன் பெறுகிறது என்று பொருளாகும். அப் பைசாக்களைக் கடைக்காரரிடம் செலுத்துவதன்மூலம் கடன் அடைக்கப்படுகிறது. இது போன்ற எந்த விதமான பணப்பேரத்தையும் நாம் கடன் (debts) என்றுச் சொல்லலாம். இந்தப் பண இலக்கணத்தை நாம் பயன் படுத்தினால் (அ) காசுகளையும், (ஆ) பண நோட்டுகளையும், (இ) பாங்கு வைப்புகளையும் பணம் என்று குறிப்பிடவேண்டும். காசுகளும், பணமும் புழக்கத்தில் உள்ள பணத்தின் ஒரு சிறு பகுதியேயாகும். பொதுமக்களின் நலன்களுக்காகக் கிறிஸ்துமஸ் முதலிய பண்டிகைக் காலங்களில் இஃது அதிகமாக்கப்படுகிறது. எனவே, ஒரு பொருளாதார அமைப்பில் பாங்கு வைப்புகளை மாற்றுவதன்மூலம் பண அளிப்பை மாற்ற முடியும் என்று தெரிகிறது.

நாம் இங்குப் பொதுவாக ஒரு வளர்ந்த பொருளாதார நிலையை அடைந்த பிரட்டனில் (Britain) எப்படிப் பண அளிப்பு இருக்கிறது என்பதோடு இந்த அதிகாரத்தில் நிறுத்திக் கொள்வோம்.

வங்கி வைப்புகளை உற்பத்தி செய்தல்

இங்கிலாந்தில் கூட்டுப் பங்கு வங்கிகள் (Joint Stock Banks) வணிக முறையில் செயல்படுகின்றன. தம் பங்குதாரர்களுக்கு

இலாபத்தைக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் அவை இயங்கமுடியும். இந்த வங்கிகள் வைப்பாளிகள் (Depositors) பணத்தைப் பெற்று, அதை அடிப்படையாகக்கொண்டு மற்றவர்களுக்கு அதிக வட்டிவீதத்தில் கடன் கொடுத்து லாபம் பெறுகின்றன. இந்த வங்கிகளிலிருந்து தனிப்பட்ட மனிதர்கள், கம்பெனிகள், பணச்சந்தை, மற்றும் அரசாங்கம் ஆகியயாவும் வட்டிக்குக் கடன் உறுதியைப் பெறுகின்றன.

இந்த வங்கிகள் கடன் கொடுப்பதற்குக் காரணம், பொது மக்கள் இந்த வங்கியில் வைக்கும் ரொக்கமாகும். இப் பொது மக்கள் வைக்கும் ரொக்கத்தின் ஒரு சிறு பகுதியையே அவர்கள் திருப்பிப் பெறுகிறார்கள். மற்றவற்றைக் காசோலைகள் மூலமாகத் (cheques) தங்கள் வைப்புகளைக் கடன் ஈவோர்களுக்கு மாற்றி விடுகிறார்கள். காசோலைகள் பொதுவாகப் பணமாக ஒத்துக் கொள்ளப்படுவதால், வங்கியின் வைப்புகளே பணமாக மாறி விடுகின்றன.

இது போன்ற மாற்றங்களும், பணப் பரிவர்த்தனைகளும் நடக்கும்போது, ரொக்கம் புழக்கப்படுத்தப்படுவதில்லை. மாறாகக் காசோலை மூலமாகக் கடன் ஈவோர்களுக்குக் கடனாளிகள் கடனை மாற்றம் செய்ய நேரிடுகிறது. ரொக்கம் கைமாறாமல் இருக்கும் போது வங்கிகளினால் பணத்தை உற்பத்தி செய்ய முடிகிறது. எனவே, கடனைக் கொடுக்கக் காசோலைமூலம் வங்கிப் பணத்தை உற்பத்தி செய்யும் நிலையில் இருக்கிறது.

கடன் உற்பத்தி முறை

உதாரணமாக, எனக்கு ஒரு வங்கிக் கணக்கு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். என் வீட்டின் சொந்தக்காரருக்கும், அதே வங்கியின் கிளையில் வங்கிக் கணக்கு இருக்கிறது. நான் என் மாத வாரத்தை (rent) காசோலைமூலம் கொடுக்க, அஃது என் கணக்கிலிருந்து குறைக்கப்பட்டு, என் வீட்டின் சொந்தக்காரரின் கணக்கில் அதிகப்படுத்தப்படுகிறது. இங்கு எந்தவிதமான ரொக்கப் பேரங்களும் நடக்கவில்லை. மேலும், நான் என் கட்டட நிதிச் சங்கத்திற்கும், தவணைமுறைத் திட்டத்தில் வாங்கிய நுகர்வுப் பொருள்களுக்கும், மற்றவற்றுக்கும் தொகையைக் காசோலைமூலம்தான் செலுத்தப்போகிறேன். ஏதாவது அன்றாடப் பேரங்களுக்காகக் கொஞ்சம் ரொக்கம் தேவைப்படலாம். இந்த ரொக்கம் மிகவும் சிறிய அளவாகவும், காசோலைமூலம் செலுத்தப்படும் பேரங்கள் அதிகமாகவும் இருப்பதால், ஒரு வணிக வங்கிக்குக் கடன்களை உற்பத்தி செய்ய முடிகிறது. வங்கித் தொழில் செய்பவர்கள்

தங்கள் நீண்டகால அனுபவத்தினுல், மொத்த வைப்புகளில் 10% வீதம்தான் ரொக்கப் பேரங்களுக்காக இங்கிலாந்தில் தேவைப் படுகிறது என்று கணக்கிட்டார்கள். அஃதாவது £ 1 ரொக்கம் வங்கிக்கு வந்தால், அதை £ 10 வங்கி வைப்புகளாகக் காசோலை முறைமூலம் செய்ய முடியும் என்று கண்டுபிடித்து, வங்கி வைப்பு களை உற்பத்தி செய்தார்கள்.

ஒருவர் வங்கியில் முன் கடன் பெறும்போது, வங்கி அவருக்கு ரொக்கத்தை எடுத்துக் கொடுப்பதில்லை. வங்கி, அவருடைய நிதி நிலை, சொத்துகள் ஆகியவற்றைக்கொண்டு அவருக்கு அளிக்க வேண்டிய கடன் நிதியைப்பற்றி முடிவு செய்கிறது. இக் கடனை ரொக்கமாகக் கொடுக்காமல், அந்தக் கடன் பெறுவோரை காசோலைமூலம் பிறருக்குப் பணத்தைச் செலுத்த வங்கி ஆணை இடுகிறது. இதுபோலக் கொடுக்கப்படும் காசோலைகளே பணமாக ஒத்துக்கொள்ளப்படுவதால், கடன் பெறுவோர் முழுக்கடன் நிதி வசதியையும் தடை இல்லாமல் பயன்படுத்த முடிகிறது. ஆனல். நடைமுறையில் பல பெரிய வங்கிகள் இருப்பதைப் பார்க்கிறோம். இந்த வங்கிகளில் எழுப்பப்படும் கடன்கள் மற்ற வங்கிகளில் செலுத்தப்படலாம். எனவே, ஒரு வங்கியின் காசோலை மற்ற வங்கிக்கும் வரமுடியும். இதுபோல, வங்கிகள் காசோலைகள்மூலம் ஒன்றுக்கொன்று கடன்பெறும் நிலை ஏற்படலாம். இதுபோன்ற சமயங்களில் ரொக்கத்திற்குத் தேவை ஏற்படலாம். இதைத் தவிர்க்க காசோலை அல்லது செக்குத் தீர்வகம் (clearing house) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்குப் பல பாங்குகளின் பிரதிநிதிகள் கூடி, தங்களுக்குள்ள காசோலைக் கடன்களைத் தீர்த்துக்கொண்டு, ரொக்கத்திற்கு உள்ள தேவைகளைக் குறைத்துவிடுகிறார்கள்.

இங்கிலாந்தின் மைய வங்கியான இங்கிலாந்து பாங்கு (Bank of England), சட்டப்படி ஒவ்வொரு வணிக வங்கியும் தன்னுடைய மொத்த வைப்புகளில் 8%ஐ ரொக்க நிதி வீதமாக வைத்துக் கொள்ளவேண்டுமென்றும் இதில் 4 சதவீதத்தைக் கையில் உள்ள ரொக்கமாகவும், மற்ற 4 சதவீதத்தை மைய வங்கியில் உள்ள வணிக வங்கிகளில் ரொக்கமாகவும் வைத்துக்கொள்ளவேண்டும். இதிலிருந்து தெரிவது என்னவெனில், இந்த ஒதுக்கப்பட்ட சட்ட ரீதியான ரொக்க நிதிவீதம்தான் ஒரு நாட்டின் பண அளிப்பை முடிவு செய்கிறது. மக்கள் ரொக்கத்தை வணிக வங்கிகளிடம் அதிகப்படுத்த மொத்த வைப்புகள் அதிகமாகிப் பணப்புழக்கமும் அதிகமாகும். இது குறையும்போதும் மொத்த வைப்புகள் குறைந்து பணப்புழக்கமும் குறையும். மேலும் மையவங்கி, இந்த ரொக்கநிதி வீதத்தை மாற்றுவதன்மூலம் மொத்த வங்கி

வைப்புகளை அதிகப்படுத்தவோ, குறைக்கவோ முடியும். எடுத்துக் காட்டாக, ரொக்க நிதி வீதம் 8% இருக்கும்போது வங்கி £1 ரொக்கத்தை £12½ வைப்புகளாக மாற்றமுடியும். ரொக்க நிதி வீதம் 20% ஆக அதிகரிக்கப் பட்டால் $\left(\frac{100}{20} = 5\right)$ மொத்த வைப்புகள் 5 பங்குதான் அதிகரிக்க முடியும். ரொக்க நிதி வீதம் 5% ஆக குறைக்கப்பட்டால், மொத்த வைப்புகள் 20 பங்காக அதிகரிக்கும்.

இதை ஒரு வணிக வங்கியின் இருப்புநிலைமூலம் குறிப்பிட முடியும். இதில் இடப்பக்கத்தில் பொறுப்புகளும், வலப் பக்கத்தில் சொத்துகளும் குறிப்பிடப்பெற்றிருக்கின்றன. நாம் கொடுக்கப்போகும் கணக்கில் பங்குதாரர்களின் மூலதனத்தை விடுத்து மீதி இருப்பதைக் கவனிப்போம்.

பட்டியல் IX

வணிக வங்கியின் இருப்புநிலை
(மில்லியன் £ கள்)

பொறுப்புகள்		சொத்துகள்	
வைப்புகள்		ரொக்க நிதி வீதம் மையவங்கியில் இருப்பதும் கையில் இருப்பதும்	£ 400
வைப்புக் கணக்கு	£ 500		
நடைமுறைக் கணக்கு	£ 4,500		
	£ 5,000	கடன்கள்	£ 4,600
			£ 5,000

ரொக்க நிதி வீதம் : வைப்புகள் = 1 : 8

நாம் மேலே குறிப்பிட்ட இருப்பு நிலையிலிருந்து வங்கிகள் எப்படிக் கடனை உற்பத்தி செய்கின்றன என்பது தெரியவரும். சொத்துகள் கணக்கில் காட்டப்பட்டிருக்கும் £ 400 மில்லியன் £ 5,000 மில்லியன்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அஃதாவது 8% வீதம் ரொக்கநிதி வீதம் ஒவ்வொரு £ யும் 12½ பவுண்ட் வைப்பு களாக மாற்றும் சக்தியைப் பாங்குகளுக்குக் கொடுத்திருக்கிறது. இந்தக் கடன்கள் மூலம் வங்கியின் பொறுப்புகள் நீர்மையற்ற வீடு, நிலம் முதலியவற்றை ஈடாக வைத்து, நீர்மையுள்ள வைப்புகளாக அவற்றை வட்டிக்கு விட்டு வங்கிகள் இலாபம் ஈட்டுகின்றன.

பட்டியல் X

வங்கிச் சொத்துகளின் இயல்பும் பங்கீடும்

	கடனின் காலம்	சொத்து	கடன் பெறுவோர்	வட்டி வீதம்	
நீர்மைத் தன்மை	—	ரொக்கம்	—	—	O
↑	1-14 நாட்கள்	அழைப்புக் கடன்கள்	தீர்வை அகங்கள்	6%	
	இரண்டு மாதம் (சில சமயம் ஒழுங்கான தவணைகளில்)	கழிவு செய்யட்பட்ட உண்டியல்கள்	அரசாங்கம் தனியார்த் துறை	$6\frac{3}{4}$% (பொது கஜானு உண்டியல்கள்) $8\frac{1}{2}$% (வணிக உண்டியல்)	
அதிகரிக்கிறது	எந்தச் சமயத்திலும் விற்கும் ஆனல் முதல் இழப்பு ஏற்படக் கூடியவை	முதலீடுகள்	அரசாங்கம்	9%	அதிகரிக்கிறது
	பொதுவாக 6 மாதங்கள் ஆனல் இன்னும் அதிகக் காலம் இருபபது	கடன்கள்	தனி மனிதர்கள், வணிகம், தொழில்	8 - 10%	↓
O	—	வங்கிக் கட்டடம்	—	—	இலாபத் தன்மை

இந்தக் கடன்களைக் கால அடிப்படையில் பலவிதமாகப் பகுத்து, அவற்றின் நீர்மைத் தன்மையையும், இலாபம் ஈட்டும் வீதத்தையும் பிரித்து முன் பக்கத்திலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

முன் பக்கத்திலுள்ள அட்டவணையைப் பார்க்கும்போது, ஒரு வங்கியின் நீர்மைத் தன்மையும், இலாபம் ஈட்டும் தன்மையும் எதிர் மறையான உறவைப் பெற்றிருப்பது புலனாகும். இலாபத்திற்காக வைப்புகளை உற்பத்தி செய்வதில் பல ஆபத்துகள் இருப்பதைப் பார்க்கிறோம். முதலில் கொடுக்கப்பட்ட கடன் பணம், திருப்பிச் செலுத்த முடியாதபடி போய்விடலாம். அல்லது உற்பத்தி செய்யப் பட்ட வைப்புகள் அனைத்தும் ரொக்கத் தேவையாக ஏற்பட்டு வங்கி முறியும் நிலைமைக்குத் தொல்லைகள் ஏற்படமுடியும். எனவே, வங்கியின் கடன் கொள்கைகளுக்குப் பல கடுமையான வரை யறைகள் இருக்கின்றன. ஒரு வங்கி, வணிகர் நீர்மைத் தன்மை யையும் மற்றும் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு வங்கி வைப்புகளை உற்பத்தி செய்யவேண்டும். நீர்மைத் தன்மைக்கும், இலாபத் தன்மைக்கும் ஓர் ஒப்பந்தத்தைக் கொண்டுவந்து, வங்கி இலாபம் பெறுவதோடு பாதுகாப்பாகவும் செயல்படும் முறை யையும் உருவாக்கவேண்டும். கையில் இருக்கும் ரொக்கத்திற்கு எந்தவிதமான வட்டிவீதமும் இல்லை. இதை வருமானமில்லாச் சொத்து என்று கூறலாம். ஒன்று அல்லது 14 நாட்களுக்கு உட்பட்ட அழைப்புக் கடன்களுக்கு வட்டி வீதம் குறைவு. காலம் அதிகமாக, அதிகமாக, அஃதாவது நீர்மைத்தன்மைக் குறையக் குறைய வட்டி வீதம் அதிகரிப்பது அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கிறது. மைய வங்கிகளின் வட்டிவீதம் அழைப்புக் கடன்களின் வட்டி வீதத்தைவிட அதிகமிருப்பதைப் பார்க்கிறோம்.

வங்கிகள் தங்களுக்கு வேண்டிய அலுவலகக் கட்டடங்களைக் கட்டிக்கொள்ளும்போதும், நாற்காலிகளை வாங்கும்போதும், அரசாங்கக் கஜானா உண்டியல்களை வாங்கும்போதும் இக் காசோலை முறையைப் பின்பற்றி வைப்புகளை உற்பத்தி செய்து பணமாக்கு கிறது. நாம் இந்தக் கடன்களை அல்லது சொத்துகளை ஒரு பிரமிட் (Pyramid) போல் படமிட்டுக் காட்டமுடியும்.

பண அளிப்பைக் கட்டுப்படுத்துதல்

இங்கிலாந்தின் மைய வங்கி என்று சொல்லப்படும் இங்கிலாந்து வங்கிதான், அரசாங்கத்திற்காக, வணிக வங்கிகளின் கொள்கை களையும், மற்ற நிதி நிறுவனங்களையும் கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்யும் பொறுப்பை ஏற்று இருக்கிறது. ராட்கிளிஃப் அறிக்

கையின் வார்த்தைகளில் சொல்லப்போனால், இங்கிலாந்தின் மைய வங்கியானது, பொதுத்துறையையும், தனியார்த் துறையையும் இணைக்கும் 'அங்காடி நடத்துநர்' (Market Operator) ஆகத் திகழ்



படம் 19

கிறது. நாம் எளிமைக்காக இங்கிலாந்தின் மைய வங்கியை எல்லாப் பொறுப்பையும் உடைய அதிகாரம் பெற்ற வங்கியாகக் கொள்வோம்.

அரசாங்கத்திற்காகப் பல பணிகளை இங்கிலாந்தின் மைய வங்கி செய்கிறது. அரசாங்கத்தின் பன்னாட்டு வாணிபத்திலும், வெளிச் செலாவணியைக் கட்டுப்படுத்துவதிலும், தேசியக் கடனை நிர்வாகம் செய்வதிலும் இஃது அரசாங்கத்திற்குப் பெரிதும் உதவுகிறது. அரசாங்கத்தின் பணக் கொள்கைகளை நிறைவேற்றும் ஒரு கருவியாக இது பயன்படுகிறது. இந்த மைய வங்கி, பண அளிப்பை எப்படி மாற்றும் என்பதை இங்குக் கவனிப்போம்.

வெளிச்சந்தை நடவடிக்கைகள் (Open Market Operations)

இங்கிலாந்தின் மைய வங்கி, பணநோட்டுகளை வெளியிடும் அதிகாரம் பெற்றிருப்பதால், ரொக்கத்தின் அளிப்பே அதன் கொள்கைளைப் பொறுத்திருப்பது தெரியவரும். இந்த ரொக்கம், மற்ற விதமான வைப்புப் பணங்களை வணிகவங்கிகள் (Commercial Banks) உற்பத்தி செய்வதற்கு அடிப்படையாக இருப்பதால் இதன் முக்கியத்துவம் தெரியவரும். வெளிச்சந்தை நடவடிக்கைகள் மூலம் மையவங்கி, இந்த வணிக வங்கிகளின் ரொக்க இருப்பு நிலையை மாற்றிப் பண அளிப்பை மாற்றி அமைக்கமுடியும். ரொக்கக் காப்பு நிதியிலிருந்து (Cash Reserve Ratio) ரொக்கம்

குறையும்போது மொத்த உற்பத்தி செய்யப்பட்ட வங்கி வைப்புகள் குறையும். அதைப்போலவே, ரொக்க்க் காப்புநிதி அதிகமாகும் போது, வங்கி வைப்புகள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுப் பண ஆளிப்பு அதிகரிக்கும்.

சுலபமாக ரொக்கம் பெறுவதற்கான வழி என்னவென்றால், ஒருவருக்கு விருப்பிய பொருளை அவருக்கு விற்பதேயாகும். இந்த முறையை ஒரு மைய வங்கி பின்பற்றுகிறது. மையவங்கி, பணஅளிப்பைக் குறைக்க விரும்பினால், அரசாங்கப் பத்திரங்களையும் (Government Securities), கருவூல உண்டியல்களையும் (Treasury Bills) நல்ல கவர்ச்சிகரமான விலைகளில் விற்கலாம். எனவே, பங்கு மார்க்கெட்டில், வாராந்திர ஏலத்தில் அல்லது விற்பனையில் அரசாங்கப் பத்திரங்களையும் உண்டியல்களையும் விற்றால், வணிக வங்கிகள் அதை வாங்குவதற்காகக் காசோலைகள் மூலம் தங்களுடைய மைய வங்கியின் கணக்கிலிருந்து பணத்தைக் கொடுக்கும். இதனால், வணிக வங்கிகளின் ரொக்கக் கணக்கு மைய வங்கியில் குறைந்து, அதன் விளைவால் வணிக வங்கிகளின் மொத்த ரொக்கப் பாதுகாப்பு வீதம் குறைந்துவிடுகிறது. இதைச் சரிக்கட்ட வணிக வங்கிகள் தங்கள் வங்கி வைப்புகளைக் குறைத்துக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டு, அதனால் பண அளிப்பும் குறைந்துவிடுகிறது. இதைத்தான் வெளிச் சந்தை நடவடிக்கைகள் என்று குறிப்பிடுகிறோம். இதைப்போலவே மைய வங்கி தன் வாராந்திரக் கஜானா உண்டியல்களையும், அரசாங்கப் பத்திரங்களையும் விற்பதைக் கட்டுப்படுத்தும்போது, இதற்கு மாறான விளைவுகள் ஏற்படும்.

1959-ல் வெளியான ராட்கிளிஃப் அறிக்கை (Radcliff Report) யின்படி வெளிச்சந்தை நடவடிக்கைகளால் ரொக்க அமைப்பை மாற்றி, வங்கி வைப்புகளை மாற்றுவதில் சில சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. ரொக்கத்தின் அடிப்படையில் மட்டும் வங்கிகள் தங்கள் வைப்புகளை உற்பத்தி செய்வதில்லை என்று தெரியவந்தது. கஜானா உண்டியல்களை நீர்மைச் சொத்துகளாகக் கொண்டு, அவற்றின் அடிப்படையிலும் வங்கி வைப்புகளை வணிக வங்கிகள் அதிகப்படுத்தின. இங்கிலாந்தின் மைய வங்கி, கஜானா உண்டியல்களைச் சமர்ப்பிக்கும்போதெல்லாம் ரொக்கத்தை உடனே பட்டுவாடா செய்ததால், அது நீர்மைத் தன்மையுடைய சொத்தாக மாறி விட்டது. இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலை ஏற்படக் காரணம் மைய வங்கியின் விசித்திரமான சில பணிகளே யாகும். மைய வங்கி வணிக வங்கிகளுக்கெல்லாம் கடைசியாகக் கடன்கொடுத்து உதவி புரியும் செயலைச் செய்யவேண்டி இருக்கிறது. எனவே, பண நெரிசலையும், வங்கி முறிவுகளையும் தடுக்க,

அஃது உடனே கஜானு உண்டியல்களைச் சமர்ப்பிக்கும்போது, ரொக்கத்தை அளிக்கவேண்டி இருக்கிறது. மேலும், நாட்டின் பணக்கொள்கைகளையும், பொருளாதார நடவடிக்கைகளையும் செயல்படுத்துவதில் மைய வங்கி முக்கியத்துவம் பெறுகின்றது. அடிக்கடி வட்டி வீதங்களை மாற்றுவதனுல் தொழில் துணிவோர்களின் எதிர்பார்ப்புகள் பாதிக்கப்பட்டு, அதனுல் முதலீடு செய்வதில் தடைகள் ஏற்படலாம். வட்டிவீதம் அதிகரிப்பதை நிறுத்த, சிறப்பு முறைகளில் நேரிடையாக உண்டியல்களையும் குறுங்கால அரசாங்கப் பத்திரங்களையும் வாங்கச் சில பிரத்தியேகமான வாங்கும் தரகர்களுக்கு உதவியும் அளிக்கவேண்டி இருக்கிறது.

இதுபோன்ற முறைகளில் மைய வங்கி, நாட்டின் பணஅளிப்பை மாற்றி அமைக்கும் முறையில் இருக்கிறது. ரொக்கத்தின் அடிப்படையில் உண்டாக்கப்பட்ட வங்கி வைப்புகள், நாளடைவில் நீர்மைச் சொத்துகளின் அடிப்படையில் மாற ஆரம்பித்ததை ராட்கிளிஃப் அறிக்கைமூலம் அறிந்தோம்.

நாம் இதுவரை, நீர்மைத் தன்மை அடிப்படையில் பணஅளிப்பைப் பார்த்தோம். ஆனுல், உண்மையில் பணஅளிப்பை மாத்திரம் வைத்துக்கொண்டு இதைச் சொல்வதற்கில்லை. ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்புப் பத்திரம் முதலியவற்றை உடனே பணமாக்கிக் கொள்ளமுடியும். மேலும், நீர்மைத்தன்மை என்பது பொருளாதாரம் வளர வளர மாறிக்கொண்டுவரும் தன்மையை உடையது.

நாம் மேலே கூறிய முறைகளில் பொதுவாக, இங்கிலாந்து நாட்டில் எப்படிப் பணஅளிப்பு இருக்கிறது என்பதைப்பற்றியதே ஆகும். இதுபோன்றே பல ஜனநாயக நாடுகளில் சில பல மாறுதல்களுடன் வணிக வங்கிகள் பணியாற்றுகின்றன. ரொக்கப் பாதுகாப்பு வீதம் நாட்டுக்கு நாடு மாறுபடுகிறது. மேலும் மைய வங்கி, தன்னுடைய வட்டிவீதம்மூலம் (Bank Rate) நாட்டின் வட்டி வீதங்களை மாற்றி அமைக்கமுடியும். பொதுவாக, மைய வங்கி வட்டிவீதம், வணிக வங்கியின் வட்டிவீதத்தைவிட அதிகமாக இருக்கும். இப்படி அதிக வீதம் இருப்பதற்குக் காரணம், மைய வங்கி தன்னை நெருங்தும் கடன்காரர்கள் எல்லாவிதமான கடன் வசதிகளையும் பார்த்துவிட்டுக் கடைசியாக வரக்கூடியவர்களாக இருக்கவேண்டும் என்று கருதுவதே ஆகும்.

10. உற்பத்தி பண மார்க்கெட்டுகளின் பொதுச்சமன்பாடு
(General Equilibrium of the product and Money Markets)

தொன்மைப் பொருளாதாரிகளின் (Classical economists) வட்டி வீதக் கோட்பாடு எந்தவிதமான நிர்ணயமும் இல்லா ஒரு கோட்பாடு என்று கீன்ஸ் (Keynes) கடுமையாக விமர்சனம் செய்தார். தொன்மைப் பொருளாதாரிகளின் கோட்பாட்டின்படி வட்டிவீதம், முதலீட்டுத் தேவைக்கோடு, சேமிப்பு அளிப்புக்கோடு ஆகிய இரண்டும் ஊடறுக்கும் இடத்தில் நிர்ணயம் செய்யப்படுகின்றன. அஃதாவது முதலீட்டையும், சேமிப்பையும் சமநிலைக்குக் கொண்டுவரும் கருவியாக வட்டிவீதம் செயலாற்றுகிறது. இதை நாம் முன் கூறிய அதிகாரங்களில் பார்த்தோம். இக் கோட்பாடு எவ்விதமான முடிவையும் கொடுப்பதற்கில்லை. காரணம், சேமிப்புப் பட்டியல் உண்மையான வருமான அளவைப் பொறுத்திருக்கிறது. இவ் வருமானம் மாறிப் பெயர்ச்சி (shift) ஆகும்போது, உண்மையான வட்டிவீதம் எவ்வளவு என்று சொல்வதற்கில்லை. வருமான அளவு எவ்வளவு என்று தெரிந்தால், வட்டி வீதத்தைப் பற்றி நாம் எண்ண முடியும். நாம் வருமானம் எவ்வளவு என்றும் சொல்வதற்கில்லை. காரணம், நமக்கு வட்டிவீதம் எவ்வளவு என்றும் தெரியாது. குறைந்த வட்டிவீதம் முதலீட்டை அதிகமாக்கி, அதன்மூலம் பெருக்கி (multiplier) வழியாக உண்மை வருமானம் அதிகரிக்கக் காரணங்கள் பல இருக்கின்றன. எனவே, தொன்மைப் பொருளாதாரிகளின் வட்டிவீதக் கோட்பாடு நிர்ணயமான தீர்வைக் கொடுக்கவில்லை. இங்கு, முதலீடு எவ்வளவு என்று அறிய வட்டிவீதம் தெரியவேண்டும். ஆனால், வட்டி வீதமானது சேமிப்பையும், முதலீட்டையும் சமமாக்கும் கருவியாக இருப்பதால், வருமானத்தோடு சேமிப்பு வழியாகத் தொடர்பு கொண்டுள்ளது. ஏனெனில், வருமானம் எவ்வளவென்று அறிந்தால்

தான் சேமிப்பு எவ்வளவு என்று கூறமுடியும். ஆனால், வருமான மானது முதலீட்டின் அளவைப் பொறுத்துக் குறையவோ, அதிகரிக்கவோ செய்வதால், முதலீட்டின் தொகை தெரியாமல் வருமானத்தை நிர்ணயிப்பது கடினம். அந்த முதலீடானது வட்டியைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, இந்த இரண்டையுமே அறிய முடியாத நிலையில் நாம் உள்ளோம். அவற்றின் தொடர்பை நாம் கீழ்க்கண்டவாறு காட்டலாம்.



படம் 20

ஆகவே கீன்ஸ், இந்த ஒன்றையொன்று துரத்தும் நிர்ணயமற்ற சார்புகளைக்கொண்டு கொள்கை வகுப்பது தவறு என்று கூறினர்.

ஆனால், கீன்ஸ் கொடுத்த வட்டிக் கோட்பாடும் இந்த நிர்ணய மற்ற தன்மையை உள்ளடக்கியுள்ளது. கீன்ஸின் வட்டிக் கோட்பாடு என்பது, வட்டிப் பணத்தின் அளிப்புப் பட்டியலும் பணத்தின் தேவைப் பட்டியலும் ஊடறுக்கும் இடத்தில் ஏற்படு கிறது. பணத்தின் அளிப்பு, அரசாங்கத்தின் பணக் கொள்கை களையும் மைய வங்கியின் நடவடிக்கைகளையும் பொறுத்திருக்கிறது. இவ்விதமான ஆய்வும் நிர்ணயமற்ற தீர்வைத்தான் தர முடியும். பணத்தின் தேவைப்பட்டியல், பணத்தின் நீர்மை விருப்பப் பட்டியலைப் பொறுத்திருக்கிறது. இப்போது வருமானங்களில் மாறுதல் ஏற்படும்போது, நீர்மை விருப்பப் பட்டியலும் (Liquidity Preference Function) மேலோ அல்லது கீழோ, பெயர்ந்து செல்ல முடியும். நாம் இங்கே, மொத்த நீர்மை விருப்பப் பட்டியலை, அஃதாவது நடவடிக்கை, எச்சரிக்கை ஆகியவற்றிற்கான தேவை

களையும் ஊக லாபத்திற்கான ரொக்க விருப்பத்தையும் மொத்த மாகக் கருத்தில் கொண்டு, பணத்தின் தேவையைப்பற்றிச் சொல் கிறோம். ஊக லாபத்திற்கான பணத்தேவை, வருமானத்தைச் சார்ந்திராமல் வட்டிவீதத்தைப் பொறுத்திருந்தாலும், மற்ற பணத் தேவைகள் வருமானத்தைச் சார்ந்திருக்கின்றன. பணத் தேவையில் எவ்வளவு பணத் தேவை வருமானத்தைச் சார்ந்திருக் கிறது என்பதை வருமானத்தைப்பற்றி ஒன்றும் அறியாமல் சொல்வதற்கில்லை. எனவே, கீன்ஸ் அவர்களின் வட்டிக் கோட்பாடு, தொன்மைப் பொருளாதாரிகளின் வட்டிக் கோட்பாட்டைப் போன்றே எவ்வித நிலையான தீர்வையும் கொடுக்கவில்லை.

இந்த இரண்டு விதக்கோட்பாடுகளும், வட்டிவீதம் எப்படி இரண்டு மார்க்கெட்டுகளில் உருவாக்கம் பெறுகின்றன என்பதையே நமக்குக் காட்டுகின்றன. தொன்மைப் பொருளா தாரிகளின் வட்டிக் கோட்பாடு உற்பத்தி மார்க்கெட்டில் வட்டிக்கும் வருமானத்திற்கும் உள்ள உறவைக் காட்டுகிறது. கீன்ஸின் கோட்பாடு, பண மார்க்கெட்டில் வட்டிக்கும் வருமானத் திற்கும் உள்ள சார்பை எடுத்துக் காட்டுகிறது.

பண மார்க்கெட்டையும், உற்பத்தி மார்க்கெட்டையும் ஒரு பொதுச் சமன்பாட்டிற்கு (General equilibrium) கொண்டுவந்து வட்டியையும், வருமானத்தையும் நிர்ணயம் செய்யமுடியும். 'திரு. கீன்ஸும் தொன்மைப் பொருளாதாரமும்' என்ற கட்டுரை யில் ஜே. ஆர். ஹிக்ஸ் (J. R. Hicks), ஒரு பொதுச் சமன்பாட்டு மாதிரியை (General equilibrium model) வெளியிட்டார். நாம் இனி, ஜே. ஆர். ஹிக்ஸ் அவர்களின் பொருளாதார மாதிரியை இந்த அதிகாரத்தில் கவனிப்போம்.

நாம் இந்தப் பொதுச் சமன்பாட்டுச் சமநிலையைச் சிறிது எளிமையாக்க, அரசாங்கத் துறையும், வெளிநாட்டுத் துறையும் இல்லாத எளிய பேரியல் மாதிரியை எடுத்துக்கொள்வோம். இந்த எளிய பொருளாதார அமைப்பில் உற்பத்தி மார்க்கெட்டில் சமநிலை ஏற்படக் கீழ்க்கண்ட நிலைகள் ஏற்படவேண்டும்.

$$S = Y - C(Y)$$

மேலே கொடுக்கப்பட்டுள்ள சமன்பாட்டில் சேமிப்பு என்பது, நாட்டு நிகர ஆக்கத்திலிருந்து மொத்த நுகர்வைக் கழிக்கும்போது கிடைக்கிறது. C (Y) என்பது நுகர்ச்சிச் சார்பை எடுத்துக் காட்டு கிறது. இதிலிருந்து நமக்குக் கிடைப்பது சேமிப்புச் சார்பாகும். கீழே முதலீட்டுத் தேவைப்பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

$$I = I(i)$$

முதலீட்டுத் தேவையானது வட்டிவீதத்தைச் சார்ந்திருப்பதையே மேலே குறிப்பிட்டிருக்கிற சமன்பாடு எடுத்துக் காட்டுகிறது.

சாதாரண எளிய பொருளாதார அமைப்பில் திட்டமிட்ட சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்க வேண்டும்.

$S = I$ (சமநிலை ஏற்பட வேண்டிய நிபந்தனை)

எனவே, இங்கு $I(i) = Y - C(Y)$ என்ற சமன்பாடு ஏற்பட்டால்தான் சமநிலை ஏற்படும்.

இந்தச் சமநிலை ஏற்படும்போது, பல்வேறு விதமான வட்டி வீதங்களுக்கு இணையான வருமானமும் கிடைக்கும். இங்கே உள்ள ஒவ்வொரு நிலையிலும் சேமிப்பும், முதலீடும் சமமாக இருக்கும். இதுபோன்ற நிலையில் வெவ்வேறு வித வட்டி வீதத்திற்கும் வருமான அளவிற்கும் உள்ள உறவை 'I S சார்பு' என்று கூறுவார்கள். I S சார்பு என்பது, உற்பத்தி மார்க்கெட்டில் வட்டிவீதமும், வருமானமும் என்ன உறவைப் பெற்றிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது. வட்டி வீதமும் வருமானமும் இங்கே எதிர்மறை உறவைப் பெற்றிருக்கின்றன.

இனி, பண மார்க்கெட் சமநிலையைப்பற்றி ஆராய்வோம். பணத் தேவையானது, கீன்ஸ் கோட்பாடுபோல் அமைந்திருப்பதாக வைத்துக் கொள்வோம். இங்கே ஊக லாபத்திற்காகத் தேவைப்படும் பணம் வட்டிவீதத்தையும், நடவடிக்கைகளுக்காகவும் எச்சரிக்கைக்காகவும் தேவைப்படும் பணம் வருமானத்தையும் சார்ந்திருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

$$mS = m_1 + m_2$$

$$m_1 = Ky$$

$$m_2 = L(i)$$

$$\therefore \quad mS = KY + L(i)$$

m_1 க்குத் தேவைப்படும் பணம் (எச்சரிக்கைக்காகவும் நடவடிக்கைப் பேரங்களுக்காகவும் தேவைப்படும் பணம்) வருமானத்தில் ஒரு வீத அளவைச் சார்ந்திருக்கிறது என்பதையே $M_1 = KY$ என்பது எடுத்துக் காட்டுகிறது. M_2 அல்லது ஊக லாபத்திற்காகச் சொத்துகளின் தேவைக்கு ஏற்படும் தேவை வட்டிவீதத்தைச் சார்ந்திருப்பதை

$M_2 = X(i)$ என்ற சமன்பாடு காட்டுகிறது. எனவே, பண மார்க்கெட் சமநிலையில் இருக்க வேண்டுமென்றால்,

$mS = KY + L(i)$ ஆக இருக்கவேண்டிய நிபந்தனை இருக்கிறது.

இங்கு, வருமானத்திற்கும் வட்டிவீதத்திற்கும் உள்ள உறவை LM சார்பு என்று கூறுகிறோம். அஃதாவது LM சார்பு எனப்படுவது வட்டிவீதத்திற்கும் வருமானத்திற்கும் பண மார்க்

IS, LM சார்புகளை வரைபடம்மூலம் கண்டுபிடித்தல் உற்பத்தி மார்க்கெட்டில் சமநிலை (எல்லாம் உண்மையான மதிப்பில்)



படம் 21

கெட்டில் உள்ள உறவுகள் ஆகும். இந்த உறவு ஒரு நேர்வீத உறவாக இருக்கிறது.

இந்த இரண்டு மார்க்கெட்டிலும் சமநிலேக்குரிய நிபந்தனே இரண்டு மாறிகளைப் பொறுத்திருக்கின்றது. எனவே, இந்த இரண்டு சமன்பாடுகளையும் தீர்த்து ஒரு முடிவான தீர்ப்பைக் கண்டுபிடிப்பது எளிதானது. எனவே, சமநிலையில் உள்ள வட்டி வீதமும் வருமானமும் நமக்குத் தெளிவாகத் தெரியும்.

மேலே 4 படங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதல் படத்தில் முதலீட்டுத் தேவை கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலீட்டுத் தேவையை வட்டிக்கும் முதலீட்டுத் தேவைக்கும் உள்ள உறவாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த உறவு எதிர் மறையாக இருக்கின்றது. அதனால், தேவைக்கோடு கீழ் நோக்கிச் செல்கிறது. இந்தப் படத்திலிருந்து வெவ்வேறு வட்டிவீதங்களுக்கு எவ்வளவு முதலீடு என்று கண்டு பிடித்துவிட முடியும். i_1 வட்டிக்கு I_1 முதலீடும் i_2 வட்டிக்கு I_2 என்ற முதலீடும் இருப்பதைக் காணலாம். படம் இரண்டில் 45° கோடு வரையப்பட்டிருக்கிறது. இதன் செறிவு 1 ஆகும் (slope = 1). இஃது இரண்டு அச்சுகளையும் சமமாகப் பிரிக்கிறது. எனவே, $I_1 = S_1$ சேமிப்பும் $I_2 = S_2$ சேமிப்பும், சமமாக இருக்க வேண்டியதைக் காட்டுகிறது. சேமிப்பி லிருந்து வருமானத்தை மூன்றுவது வரைபடம் காட்டுகிறது. S_1 சேமிப்பிற்கு Y_1 வருமானமும், S_2 சேமிப்பிற்கு Y_2 வருமானமும் தேவைப்படுகிறது. வரைபடம் 4-ல் வட்டி வீதம் i_1-ல் எவ்வளவு வருமானம் இருக்கும் என்று காட்டு கிறது. i_1-க்கு Y_1 வருமானமும் i_2-க்கு வருமானம் ஆக Y_2 இருக்கிறது. இந்தப் புள்ளிகளையெல்லாம் இணைக்க I S என்ற வரைகோடு கிடைக்கிறது. இந்த I S என்ற வரை கோட்டின் நியமப் பாதையில் உள்ள ஒவ்வொரு புள்ளி யிலும் சேமிப்பும், முதலீடும் சமமாக இருக்கின்றன. I S கீழ்நோக்கிச் செல்லக் காரணம் வட்டிவீதம் அதிகமாகும் போது வருமானம் குறைகிறது. குறைந்த வட்டி இருக்கும் போது, வருமானம் அதிகரிக்கிறது. இனி, நாம் பண மார்க் கெட்டில் ஏற்படும் சமநிலையைப்பற்றி வரைபடம் மூலம் விளக்கம் கொடுப்போம்.

படம் 22-ல் கொடுக்கப்பட்ட நான்கு வரைபடங்களின்மூலம் LM என்ற வரைகோட்டை வரையும்முறை எடுத்துச்சொல்லப் பட்டிருக்கிறது. முதல் படத்தில் ஊக லாபத் தேவைக்கு வேண்டிய பணஅளவு கொடுக்கப்பட்டிருக்கிறது. i_1 வட்டிக்கு $(m_2)_1$ பணத்தேவையையும் i_2 என்ற குறைந்த வட்டிக்கு $(m_2)_2$ என்ற அதிகமான பணமும் ரொக்கமாகத் தேவைப்

பண மார்க்கெட்டில் சமநிலை (எல்லாம் உண்மை மதிப்பில்)



படம் 22

படுகின்றன. வரைபடம் இரண்டில், $mS = m_1 + m_2$ ஆக இருப்பதால் $(m_2)_1$ க்குத் தேவையான $(m_1)_1$ கணக்கிடப் பயன் படுகிறது. அதுபோலவே, $(m_2)_2$க்கு ஈடான $(m_1)_2$ பணத் தேவை ரொக்கமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. படம் 3-ல் $(m_1)_1$ ரொக்கத்திற்கும் $(m_2)_2$ ரொக்கத்திற்கும் இணையான Y_1 Y_2 என்ற வருமானங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வரைபடம் 4-ல் i_1 வட்டிக்கு இணையான Y_1 வருமானமும் i_2விற்கு இணையான Y_2 வருமானமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த LM என்ற வரைகோட்டின் நியமப்பாதையில் உள்ள ஒவ்வொரு புள்ளியிலும் பண மார்க்கெட்டின் சமநிலை இருக்கிறது. வட்டி அதிகமாக இருக்கும்போது, வருமானம் அதிகமாகவும், வட்டி குறைவாக இருக்கும்போது, வருமானம் குறைவாகவும் இருக்கிறது. அஃதாவது இங்கு வட்டியும் வருமானமும் நேர்விதமான உறவைப் பெற்றிருப்பதால் LM கோடு மேல்நோக்கி செல்கிறது. இந்த LM வரைகோடு கீன்ஸின் வட்டிவீத முறையைப் பண மார்க்கெட்டில் எடுத்துக் காட்டுகிறது.

நாம் முன்னர்க் குறிப்பிட்டபடி, இந்த IS வரைகோட்டையும், LM வரைகோட்டையும் பட்டியல் முறையில் இணைத்துப் பார்க்கும் போதுதான், சமநிலை வட்டிவீதம் உருவாகும். இச் சமநிலை வட்டி வீதம் முழுதும் தீர்மானம் செய்யப்பட்ட வட்டிவீதம் ஆகும். அஃதாவது, ஒரு வட்டிவீதம்தான் உற்பத்தி மார்க்கெட்டில் உள்ள வட்டிவீதத்திற்கும், வருமானத்திற்கும், பணமார்க்கெட்டில் இருக்கும் வட்டிவீத வருமானத்திற்கும் சமமாக இருக்கமுடியும் என்கிறது. இதைத்தான் பொதுச் சமன்பாடு என்று கூறுகிறோம். இதைக் கீழ்க்கண்ட வரைபடத்தில் காட்டி இருக்கிறோம்.



படம் 23

மேலே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் பணமார்க்கெட்டும், உற்பத்தி மார்க்கெட்டும் in என்ற வட்டிவீதத்தில் yn என்ற வருமானத்தில் சமநிலையில் இருப்பதைக் காண்கிறோம். இச் சமநிலையைத்தான் பொதுச் சமநிலை என்று நாம் கூறுகின்றோம்.

I S, LM தொடர்புகள் பெயர்ந்து எழுதல்

I S, LM வரைகோடுகள் மேல்பெயர்ச்சியோ அல்லது கீழ்ப் பெயர்ச்சியோ செய்யும். நாட்டின் சேமிப்புக் குறைந்து நுகர்வு அதிகமாகும்போது IS வரைகோடு மேல்நோக்கிப்பெயர்ந்து எழும். இதுபோன்ற நிலை நுகர்வோர்களுக்கு ஒரு புதுவகையான நுகர்வுப் பொருளை மார்க்கெட்டில் நுழைக்கும்போது ஏற்படும். நுகர் வோர்கள், தங்கள் சேமிப்பைக் குறைத்தாவது அந்தப் பொருளை வாங்க முயல்வார்கள். அதுபோல T. V. செட்டுகள் முதலிய புதுப்பொருள்கள் வரும்போது, I S வரைகோடு மேல் நோக்கிப் பெயர்ச்சி செய்யும். சமுதாயத்தின் சேமிப்புச் செல்வமாக மாற்ற மடையும்போது, சேமிப்புக்கோடு கீழ்நோக்கிச் சென்று இதனால் I S வளைகோடு கீழ்ப்பெயர்ச்சி செய்யும் நிலையும் ஏற்படும். முதலீட்டு வளைகோடு வலப்பக்கமாக மேல் நோக்கி எழுந்தால், I S கோடும் மேல் நோக்கிப் பெயர்ச்சி செய்யும். புது வீடு கட்டும் திட்டங் களும் புதுமைப் பொருள்களும் மார்க்கெட்டில் நுழையும்போது, I S கோடு மேலே வலப்பக்கமாகப் பெயர்ந்து எழும். சுருங்கக் கூறினால், முதலீட்டுக் கோடு மேல் நோக்கி வலப்பக்கம் பெயர்ந்து எழும்போது, I S வரைகோடும் மேல் நோக்கி எழும். புதுமைகள் (innovation) வருங்காலத்தில் அதிகமான லாபத்தை எதிர் பார்த்தல், மக்கள் தொகை அதிகரிப்பால் வீடுகட்டுவது அதிகரித்தல் இவைபோன்றவற்றால் I S கோடு மேல் நோக்கி எழும்.

அரசாங்கத்தின் பணக் கொள்கை, பணம் பட்டுவாடா செய்யும் காலங்களில் மாறுதல், எதிர்பார்ப்புகளில் மாறுதல் இவை ஏற்பட்டால் LM கோடுகளில் பெயர்ச்சி ஏற்படும். வெளிச் சந்தை நடவடிக்கைகளால் மையப்பாங்கு அரசாங்கப் பத்திரங்களை வாங்கும்போது, LM கோடு மேல்நோக்கி, வலப்பக்கமாகப் பெயர்ந்து எழும். எதிர் பார்ப்புகள் மாறும்போது, ஊக லாப நோக்கத்திற்கான, ரொக்க விருப்பம் மாறுதல் அடையும். முதலீடு செய்பவர்கள் குறைந்த வட்டிவீதத்திற்குப் பழக்கப் பட்டிருந்தால், முதல் இழப்புக்கு (Capital loss) பயம் இல்லாமல் போகிறது. எனவே, m_2 பட்டியல் இடப்பக்கமாகப் பெயர்ந்து எழுகிறது. எனவே, LM கோடு மேல்நோக்கிப் பெயர்ச்சி செய்கிறது.

IS வளைகோடும், LM வளைகோடும் பெயர்ச்சி செய்யும்போது, வருமானமும், வட்டி வீதமும் மாறுதல் அடையும். நுகர்ச்சி அல்லது முதலீட்டுச் சார்புகள் மாறுதல் அடையும்போது அல்லது அரசாங்கச் செலவோ, அல்லது வரிக் கொள்கைகளோ மாறுதல் அடையும்போது ஏற்படும் வருமான வட்டிவீத மாறுதல்களை

உண்மையான தொல்லைகள் (Real disturbances) என்று குறிப்பிடுகிறோம். மாறாகப் பண அளிப்பின் மாறுதல் காரணமாகவோ அல்லது ரொக்க விருப்ப மாறுதல் காரணமாகவோ ஏற்படும் வருமான வட்டி வீத மாறுதல்களைப் பணத் தொல்லைகள் (Monetary disturbances) என்று குறிப்பிடுகிறோம்.

இதைக் கீழ்க்கண்ட வரைபடங்கள் மூலம் செம்மையாகக் காட்ட முடியும்.



படம் 24

மேலே குறிப்பிட்டுள்ள படத்தில், உண்மையான பணத் தொல்லைகள்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறோம். IS_0 வளைகோடு மேல்நோக்கிப் பெயர்ந்து எழுந்திருக்கிறது. இதனால் வருமானம் OYo விலிருந்து OY, ஆக அதிகரிக்கிறது. வட்டி வீதம் i_0, i_1 அளவு அதிகரித்திருக்கிறது. இதுபோலவே IS கோடு கீழ்நோக்கிப் பெயர்ந்து செல்லும்போது வருமானம் குறைவதோடல்லாமல் வட்டிவீதமும் குறையச் செய்கிறது. பொதுவாக I S வளைகோடு பெயர்ந்து மாற்றம் செய்வதையே நாம் அரசாங்க வருமானக் கொள்கைகள் என்கிறோம். இக் கொள்கையால் முழுமையாகப் பாதிக்கப்படுவது உற்பத்தி மார்க்கெட் ஆகும்.

இனிப் பணக் கொள்கைகள் காரணமாக மாறுதல் அடையும் LM வரைகோடுகளின் பெயர்ச்சிகளைப்பற்றி ஆராய்வோம். கீழ்க்கண்ட வரைபடத்தில் LM கோடு கீழ்நோக்கி வலப்பக்கமாகப் பெயர்ந்து இருப்பதைக் காணலாம்.

LM_0 கோடு கீழ் நோக்கிப் பெயர்ந்து, அதன் காரணமாக வருமானம் Y_0 விலிருந்து Y_1 ஆக அதிகரித்திருக்கிறது. வட்டி



படம் 25

வீதம் i_0 விலிருந்து i_1 ஆகக் குறைந்திருக்கிறது. LM கோடுகள் பெயர்ச்சி அடைவதையே பணக் கொள்கை (Monetary policy) என்று கூறுகிறோம்.

இப் பணத்தொல்லைகளால் ஏற்படும் மாறுதல்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். முதலாவது, பண அளிப்பின் மாறுதலால் ஏற்படுவது. இரண்டாவது, ஊக லாபத்திற்காக ரொக்க விருப்ப மாறுதலால் ஏற்படக் கூடியது. நாம் முன்னதைப் பண அளிப்பின் தொல்லைகள் (Money Supply Disturbances) என்றும், பின்னதை நீர்மைத் தன்மைத் தொல்லைகள் (Liquidity Disturbances) என்றும் கூறலாம். நீர்மைத் தன்மைத் தொல்லைகள் பணத்தின் வேகத்தினால் (Velocity of money) ஏற்படுகிறது.

11. பணத்தேவையும் பொருளாதாரத்தை நிலைப்படுத்தும் கொள்கையும்

பணக்கொள்கைகள் (Monetary policy) எந்தச் சமயத்தில் பொருளாதாரத்தை நிலைப்படுத்தப் பயன்படும்? எப்போது அவை பயனற்றுப் போகும் தன்மைகளைப் பெற்றிருக்கின்றன? எப்போது பணநிதிக் கொள்கைகளை (Monetary and fiscal policies) இணைத்துப் பயன்தரக்கூடிய முறைகளைச் செய்யமுடியும்? இவற்றை விரிவாக ஆராய நாம் கீன்ஸ் மாதிரியையும் (Keynesian model), தொன்மைப் பொருளாதாரிகளின் மாதிரியையும் (Classical model), அதற்கிடையான ஓர் இடைநிலை மாதிரியையும் (intermediate) ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ள பணமார்க்கெட் சமநிலை வரைபடத்தில் சில மாறுதல்களை நாம் செய்திருக்கிறோம்.

படம் 26-ல் உள்ள வரைபடத்தில் oik என்ற வட்டிவீதத்திற்குக் கீழ் வட்டிவீதம் குறைவதற்கில்லை. வட்டிவீதம் உதாரணமாக 2 சதவீதம் அடையும்போது வட்டி இழப்பு மிகக் குறைவாகப் போகிறது. ஆனால், முதல் இழப்பு மிக அதிகமாக ஏற்படக்கூடிய நிலையில் இருப்பதால், ரொக்கத்தைப் பயன்படுத்தி வட்டிக்கு விடாமல் நீர்மைத் தன்மையாகவே வைத்திருப்பார்கள். இந்த வட்டிவீதத்தில் ரொக்க விருப்பத் தன்மையின் (Demand for liquid money) நெகிழ்ச்சி எல்லையில்லாமல் போய்விடுகிறது. வட்டிவீதம் ic ஆக இருக்கும்போது, ஊகலாபத்திற்கான ரொக்கத் தேவை 'o' (Demand for speculative purposes) ஆக மாறிவிடுகிறது. ic, 6% ஆகும்போது, இந்த நிலை ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். வட்டிவீதம் 6% ஆக இருக்கும்போது வட்டி இழப்பு அதிகமாகிறது. எனவே, மக்கள் பணத்தை ரொக்கமாக வைத்திராமல் வட்டிக்கு விடுவார்கள். வட்டிவீதம் அதிகமானாலும் முதல் இழப்பு (Capital loss) அதிகமாக இருப்பதற்கில்லை. எனவே, ஊகலாபத்திற்கான ரொக்கத் தேவை பூஜ்ய

மாகிவிடுகிறது. இந்த ic வட்டிவீதத்திற்கும் ik வட்டிவீதத்திற்கும் இடையே இடைநிலை மட்டம் ஒன்று இருக்கிறது.



படம் 26

இங்கு வட்டிவீதமும், m_2வும் எதிர்மறையான உறவைப் பெற்றிருக்கின்றன. இதற்கு ஏற்றாற்போல் படம் நான்கில் LM வரைகோடு மாற்றம் செய்யப்படுகிறது. ik வட்டிவீதத்தில்

LM நெகிழ்ச்சி அளவில்லாமலும் (படுக்கை அச்சிற்கு இணையாகச் செல்லும் இப்பகுதி இத் தன்மையைக் குறிக்கிறது.) ic வட்டிவீதத்தில் LM நெகிழ்ச்சி பூஜ்யமாகவும் (ஆகையால் தான் அந்தப் பகுதியில் LM கோடு செங்குத்தாக உள்ளது) இடைமட்டத்தில் வருமானத்திற்கும் வட்டிவீதத்திற்கும் நேர் வீதச் சார்பு உடையதாகவும் இருக்கிறது. பண அளிப்பை △mS அதிகரிக்கும்போது LM கோடு படம் நான்கில் உள்ளபடி பெயர்ந்து எழுகிறது. இந்தப் பெயர்ச்சியில் ik வட்டிவீதத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. ic வட்டி வீதத்தில் நேர் செங்குத்தாய் இருக்கும். LMoக்கு இணையாக LMக்கு வலப் பக்கத்தில் பெயர்ந்து இருக்கிறது. நடுநிலை மட்டத்தில் கீழ் நோக்கி வலப்பக்கமாக LM பெயர்ந்து இருக்கிறது.

இவ்விதமான இடவேறு பெயர்ச்சியினால் பணக்கொள்கைகள் எந்த இடத்தில் எப்படிப் பயன்படும் என்பதை வரையிட்டுப்



படம் 27

பகுத்துக்கூற முடியும். கீன்ஸின் பொறி என்று சொல்லப்படும் இடத்தில் பணக்கொள்கையால் எந்தவிதப் பலனும் இல்லை. வருமானமும் வட்டிவீதமும் மாறாமல் நிலைபெற்று இருக்கின்றன.

இதை முன் பக்கத்தில் இருக்கும் வரைபடம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு கீன்ஸ் பொறி மட்டத்தில் பணக் கொள்கை பயன் அளிக்காமல் இருக்கக் காரணம், இந்த நிலையில் வட்டி வீதம் ஏற்கெனவே 2% இருப்பதால், பணத்தின் அளிப்பை அதிகரிக்கும்போது, அது வட்டிவீதத்தைக் (ik) குறைக்கப் பயன்படுவதில்லை. வட்டி 2%க்கும் கீழே குறைய வாய்ப்பில்லை. இந்த நிலையில் நீர்மைத் தன்மையின் விருப்பம் அதிகமாக இருப்பதால் முதலீடுகள் அதிகரிக்க வாய்ப்பில்லை. முதலீடுகள் அதிகரிக்காதபோது வருமானம் (Y_0) அதிகரிக்காது. ஆகவே, இந்தக் கீன்ஸ் பொறி நிலையில் சமுதாயம் இருக்கும்போது பணக்கொள்கையை உபயோகிப்பதால் எந்த விதமான லாபமும் இல்லை.

அடுத்துத் தொன்மைப் பொருளாதாரிகளின் மட்டத்திற்குச் செல்வோம். இங்குப் பணத்தின் அளிப்பை அதிகரிக்கும்போது அது வட்டிவீதத்தை i_1-லிருந்து i_2க்குக் குறைத்து, முதலீட்டைப் பெருக்கி வருமானத்தை Y_1-லிருந்து Y_2க்கு அதிகரிக்கிறது. ஆகவே, வருமானம் Y_1-லிருந்து Y_2க்கு அதிகரிக்கிறது. இம் மட்டத்தில் பொருளாதாரம் இருக்கும்போது பணக்கொள்கையை உபயோகிப்பதால் அதிக லாபம் கிடைக்கிறது.

நடுத்தரப்பட்ட நிலையில் பண அதிகரிப்பால் வட்டிவீதம் குறைந்து, முதலீடு பெருகி, வருமானம் அதிகரிக்கிறது. ஆனால், இந்த வருமான அதிகரிப்பு Y_2, Y_1 தொன்மைப் பொருளாதாரிகள் மட்டத்தில் காணப்பட்ட வருமான அதிகரிப்பை (Y_4, Y_3) விடக் குறைவாக இருக்கிறது. பணக்கொள்கை இந்த நடுத்தர மட்டத்தில் ஓரளவிற்கே நன்மை பயக்கிறது.

இனி நிதிநிலைக் கொள்கைகள் (Fiscal policy) பணச்சம நிலைகளை எப்படிப் பாதிக்கின்றன என்பதைப் பார்ப்போம். நாம் முன்னர் வரைந்ததைப்போல LM வரைகோட்டை வரைவோம்.

படம் 28-ல் கொடுக்கப்பட்ட வரைபடத்தில் அரசாங்கச் செலவுகள், பணச் சமநிலையை எப்படி பாதிக்கின்றன என்பதைக் கவனிப்போம். இப் பணச் சமநிலையில் io க்குக்கீழ் வட்டி வீதம் குறைவதற்கில்லை. எனவே, LM கோட்டின் தேவை நெகிழ்ச்சி கணக்கிட முடியாத நிறைவைப் பெற்றிருக்கிறது. இங்கு முதலில் இருந்த வருமானம் Yo வட்டிவீதம் io. இந்நிலையில் ISo அரசாங்கச் செலவின் காரணமாக வலப்பக்கம் மேல் நோக்கிப் பெயர்ந்து இருக்கிறது. இதனால், வருமானம்

Yo விலிருந்து Y¹க்கு அதிகமாகி இருக்கிறது. வட்டிவீதம் அதிகமாகி io வில் இருக்கிறது. இந்த அரசாங்கச் செலவுகள்



படம் 23

வரி விதிப்பினுல் திரட்டப்பட்ட பணமன்று. மேலும் நாம் நிலேபெற்ற பண அளிப்பை எடுகோளாக வைத்திருப்பதால், மேற்படி அரசாங்கச் செலவைப் பொதுக் கடன்கள் மூலம்தான் அரசாங்கம் எழுப்பி இருக்கிறது. அரசாங்கச் செலவின் முழு அளவுக்குப் பெருக்கியும் வேலே செய்திருக்கிறது. எனவே, வருமானம் Yo விலிருந்து Y_1-க்கு அதிகரிக்கிறது. இடைநிலே மட்டத்தில் அரசாங்கச் செலவுகள் வருமானத்தை Y_2-விருந்து Y_3 ஆக உயர்த்துகிறது. ஆனுல், இங்கு அரசாங்கச் செலவுகள் கீன்ஸ் பொறி மட்டத்தில் ஏற்பட்ட அளவுக்கு வருமானத்தை அதிகரிக்கவில்லே. வருமானம் ஓரளவுக்குத்தான் அதிகமாகிறது. வட்டிவீதம் இந்த இடைநிலே மட்டத்தில் அதிகமாவதால் முதலீடு அதிகமாக வளர்வதற்கில்லே.

தொன்மைப் பொருளாதாரிகளின் மட்டத்தில் அரசாங்கச் செலவுகள் எவ்வளவு அதிகரித்தபோதிலும் வருமானம் அதிகரிக்கவில்லே. வருமானம் OY_4 அளவில் வளராமல் நிலேயாக நிற்பதைப் பார்க்கிறேம். ஆனுல், இங்கு அரசாங்கச் செலவுகளினுல் IS_2 கோடானது மேலே பெயர்ந்து OS_2+G ஆக மாறியுள்ளது. இதன் விளேவாக வட்டிவீதம் i_3-விருந்து

i_4-க்கு அதிகரிக்கிறது. இப்படி அதிகமாகும் வட்டிவீதம் இடைநிலை மட்டத்தில் ஏற்பட்ட உயர்வைவிட அதிகமானது. ஆகையால், இந்த நிலையில் நிதியியல் கொள்கை வருமானத்தை அதிகரிக்க எந்தவிதத்திலும் உதவி புரிவதில்லை.

எனவே, நாம் கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வரமுடியும். பணக் கொள்கை, கீன்ஸ் பொறியில் எந்தவிதமான வருமான ஏற்றத்தையும் கொடுக்கவில்லை. அரசாங்கச் செலவுகள் கீன்ஸ் பொறி மட்டத்தில் வருமானத்தை அதிகப்படுத்தி நல்ல விளைவுகளை ஏற்படுத்துகின்றது. தொன்மைப் பொருளாதாரிகளின் மட்டத்தில் பணக்கொள்கை நல்ல விளைவுகளை ஏற்படுத்துகிறது. வருமானம் அதிகரிக்கிறது. ஆனால், நிதிக் கொள்கை தொன்மைப்பொருளாதாரிகளின் மட்டத்தில் வட்டிவீதத்தை உயர்த்துகிறதே ஒழிய வருமானத்தை உயர்த்தப் பயன்படவில்லை. வருமானம் அரசாங்கச் செலவு அதிகரித்தாலும் நிலையாக மாறுமல் இருக்கிறது. ஆனால், இடைப்பட்ட மட்டத்தில், பணக்கொள்கைகளும் அரசாங்கச் செலவுக் கொள்கைகளும் பலன் கொடுக்கின்றன.

பணக்கொள்கையும் வட்டி நெகிழ்வற்ற முதலீட்டுத் தேவையும்

வட்டி நெகிழ்வற்ற முதலீடு (interest inelastic) இருக்கும்போது IS வளைகோடு செங்குத்துக் கோடாகப் போய்விடுகிறது. இதை கீழ்க்கண்ட படத்தின்மூலம் காணலாம்.



படம் 29

வட்டி நெகிழ்வற்ற முதலீட்டுத் தேவை

பணக்கொள்கை காரணமாக LM_0 வளைகோடு கீழே பெயர்ந்து வலப்பக்கமாக LM_1 ஆக மாறிவிடுகிறது. LM

பட்டியல் நெகிழ்ந்து பெயர்ந்து வருவதால் வட்டிவீதம் குறைகிறது. ஆனால் அதற்கு ஏற்றாற்போல் முதலீடு அதிகரிப்பதில்லை. ஏனெனில் எல்லா வட்டிவீதக் குறைப்பும் முதலீட்டை அதிகரிப்பதில்லை.

வட்டிவீதம், பண அளிப்பினாலும் பணத்தேவையாலும் நிர்ணயம் ஆகிறது. பணத்தின் அளிப்பின் அளவை அரசாங்கம் மாற்றமுடியும். அல்லது கடன்களின் விலையை அஃதாவது வட்டி வீதத்தை அதிகரிக்கவேண்டும். குறுங்கால வட்டிவீதத்தின் மாறுதல்களைக் கீழ்க்கண்ட முறையில் அமுல்படுத்தலாம்.

(i) மையவங்கியின் வட்டிவீத்தை மாற்றுவது;

(ii) கருவூல உண்டியல்களை வாங்குவது அல்லது விற்பது.

மைய வங்கியின் வட்டிவீதம் மாறுபாடு அடையும்போது அது குறுங்காலக் கடன்களைப் பாதிக்கச்செய்யும். உதாரணமாக அழைப்புக் கடன்கள், கழிவுசெய்யப்பட்ட உண்டியல்கள், நுகர்வோர்களுக்குக் கொடுக்கப்படும் தவணைக் கடன்கள் ஆகியவை பாதிக்கப்படும். ஆனால், இதுபோன்ற குறுங்காலக் கடன்களில் ஏற்படும் வட்டிவீதம், முதலீட்டைப் பாதிக்குமா என்பது சந்தேகத்துக்குரியதே. குறுங்கால வட்டிக் கொள்கைகள் செலவைத் தவிர்ப்பதற்கும் பயன்படுவதில்லை. இதனால் தேசியக் கடன்களின் வட்டிவீதம் பாதிக்கப்படுகிறது. இஃது அயல்நாட்டுச் செலுத்து இருப்பு (Balance of payment) நிலையையும் பாதிக்கிறது. நடப்புக் கணக்கில் வெளிநாட்டிலிருந்து வாங்கும் கடன்களுக்கு வட்டிவீதம் அதிகரித்துவிடுகிறது. குறுங்காலக் கடன்களின் (Short-term loans) வட்டிவீதங்கள் எவ்வளவு தூரம் நீண்டகால வட்டி வீதங்களை மாற்றி அமைக்கும் என்பதே சர்ச்சைக்குரியதாய் இருக்கிறது. நீண்டகால வட்டிவீதங்கள் மொத்தத் தேவைகளை (Aggregate demand) பாதித்தாலும், அக் கொள்கையிலும் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன.

(i) பொருளாதார மந்தக் காலங்களில் வட்டிவீதத்தைக் குறைப்பது என்பது முடியாததாகப் போய்விடலாம்.

(ii) அதிகமான வட்டிவீதம், தேசியக்கடன் சுமையை அதிகப்படுத்தி மைய வங்கியினால் நிர்வாகம் செய்ய முடியாத நிலைக்குப் போய்விடலாம்.

(iii) நீண்ட கால வட்டிவீதம் சில சமயங்களில் மொத்தத் தேவைகளை அதிகப்படுத்த முடிவதில்லை. நாம் மேலே குறிப்பிட்டபடி பணக்கொள்கைகளுக்குச் சில கண்டிப்பான வரையறைகள் இருக்கின்றன.

அரசாங்கச் செலவுக் கொள்கைகள் (Fiscal Policy)

இங்கே நாம் அரசாங்கச் செலவுகளும், வரிக்கொள்கைகளும் எப்படிப் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். சிலவிதமான மாறுதல்கள் தானே இயங்கும் தன்மைகளைப் பெற்றிருக்கின்றன. சில கொள்கைகளை அரசாங்கம் முன் நின்று இந்தத் தானாக இயங்கும் கொள்கைகளின் வேகத்தை அதிகப்படுத்தவேண்டும்.

முழு வேலை உற்பத்தியை அடைந்த பொருளாதார அமைப்பில் பணவீக்கத்தைத் தடுக்க தனியார்த்துறை மற்றும் அரசாங்கச் செலவுகள் தானாகவே குறைந்து முழுத்தேவையும் குறைய வேண்டும். வேலையின்மை இருக்கும் பொருளாதார மந்தத்தின் போது மொத்தத் தேவை அதிகரிக்க, அரசாங்கச் செலவுகளும் தனியார் செலவுகளும் அதிகரிக்கவேண்டும். அரசாங்கத்தைச் சார்ந்திராமல் வணிகச்சுழற்சிகளை எதிர்த்துத் தானாகவே இயங்கும் தன்மை பொருளாதார அமைப்பில் இருக்கின்றன. வருமானம் குறையும்போதோ அல்லது அதிகரிக்கும்போதோ, தானே சரி செய்யும் பண உண்மைச் சக்திகள் சில இயங்கி நுகர்வு, முதலீடு, வெளிநாட்டு வர்த்தகம் இவற்றைச் சரிசெய்து சமநிலையில் பொருளாதாரத்தைக் கொண்டுவர முயல்கின்றன. இதுபோல அரசாங்கத்துறையிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அரசாங்க வருமானமும் செலவுகளும் பொருளாதார தளர்ச்சிகளைச் சரிப் படுத்தும் நிலைப்படுத்திகளாகத் திகழ்கின்றன.

வருமானம் அதிகமாகும்போது வருமானவரி அதிகமாக வளர்ச்சியடைந்து நல்ல தொகையை அளிக்கிறது. பணவீக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பையும் தடுக்கிறது. வேலையின்மை பாதுகாப்புத் தொகை (unemployment insurance) வேலையின்மை இருக்கும்போது அதிகரித்து மொத்தத் தேவையை அதிகரிக்கிறது. அதுபோலவே முழுவேலை வரும்போது பாதுகாப்புத் தொகை குறைந்து பணவீக்கத்தைத் தடுக்க உதவுகிறது. வேளாண்மைப் பொருள்களின் விலைகளைப் பாதுகாக்க (Agricultural Price Support) கொடுக்கப்படும் நிதியும் இப்படியே பயன்படுகிறது. இதனால் விவசாயம் செய்பவர்களின் வருமானம் பாதுகாக்கப்பட்டு அவர்கள் முழு வேலையில் இருக்க இது பயன்படுகிறது.

ஆனால், அரசாங்கம்தான் நடவடிக்கைகள் எடுத்து முதலீட்டு நுகர்வுச் செலவுகளை மாற்றி அமைக்கமுடியும். வரிகளை மாற்று வதன் மூலமாகவும், நுகர்வோர்களின் நுகர்சசிக்குரிய வருமானத்தை மாற்றமுடியும். அரசாங்கச் செலவுகள் பெருகித்

தற்போது பிரிட்டனில் 40% இருக்கிறது. தேசியச் செலவில் 40% வீதம் என்பது ஒரு கணிசமான பகுதியாகும். இப்படி அரசாங்கம் செலவுகளை அதிகரித்து முழுத்தேவையை அதிகப்படுத்த முடியும்.

பற்றுக்குறை நிதிவசதிகள் (Deficit financing)

பற்றுக்குறை நிதிவசதிகள் அரசாங்கம் கடன் வாங்கும்போது ஏற்படுகிறது. வரிகள் மூலம் வரும் வருமானம் போதாமல் கடன் நிதியையும் பெறும்நிலை அரசுக்கு ஏற்படும். அரசாங்கங்கள் தன் வரவு செலவுக் கணக்குகளைச் சமப்படுத்தாமல் கடன் வாங்கினல், தொழில் துணிவோர்களின் முதலீட்டு உளவியல் (psychology) மாறுபடும் என்று முன்காலங்களில் சொல்வதுண்டு. ஆனால், தற்காலத்தில் இதுபோன்ற பயங்களுக்கு ஏதும் ஆதாரமில்லை. அரசாங்கம் முழுத்தேவையை அதிகப்படுத்திப் பொருளாதார நடவடிக்கைகளை உச்சநிலைக்குக் கொண்டுவர முயல்கிறது என்பதே தனித்தொழில் துணிவோர்களை ஊக்குவிக்கும் ஒரு சக்தியாக இருக்கும். முழுத்தேவையை அதிகப்படுத்த அரசாங்கம் செல விட்டுக் கொண்டிருந்தால், தேசியக் கடன்கள் (National Debt) அதிகரித்துப் போகிறது. யுத்த நெருக்கடியின்போது அரசாங்கத்திற்குத் துப்பாக்கிகளும் தோட்டாக்களும் உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. இவற்றை உற்பத்தி செய்யவேண்டுமானால், யுத்த உற்பத்திக்கான பொருள்களுக்கான நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியைக் குறைக்கவேண்டி இருக்கிறது. இதை அரசாங்கம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விட்டுத், தேசீயக் கடன்களுக்கு யுத்த நெருக்கடியில் உதவும்படி கேட்டுக்கொள்கிறது. எனவே, பொதுமக்கள் சேமிக்கவேண்டி இருக்கிறது. இந்தச் சேமிப்பின் காரணமாக நுகர்வு குறைந்துபோகிறது. எனவே, தொழில் அதிபர்கள் நுகர்வுப் பொருளின் உற்பத்தியைக் குறைக்க வேண்டி இருக்கிறது. அரசாங்கம் காகித நோட்டுகளை அடித்துப் புழக்கத்தில் இருக்கும் செலாவணியை அதிகரித்து, எல்லாப் பொருள்களின் விலையையும் அதிகரிக்கச் செய்யலாம். இதனல் நுகர்வோர்கள் தாங்கள் முன்னர் வாங்கிய பொருள்களை வாங்க முடியாமல் போய்விடும். எனவே, தேசியக் கடன் உள்நாட்டுக் கடனாக இருக்கும்போது, அது நாட்டிற்கு ஒரு பெரிய செலவை உண்டாக்கி விடுவதில்லை. ஆனால், வெளிநாடுகள் கடன் கொடுக்கும்போது பிரச்சனைகள் ஏற்படுகின்றன. நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களின்மேல் வெளிநாட்டினருக்கு உரிமை ஏற்பட்டுவிடுகிறது. ஆனால், உள்நாட்டுக் கடனிலும் சில தொல்லைகள் இருக்கின்றன. உற்பத்திச் சாதனங்கள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படாமல் தேவையில்லாத உற்பத்திகள் ஏற்படலாம். இதைப்பற்றிப் பின்னல் பார்ப்போம்.

12. வேலைவாய்ப்புகளின் அளவுகள்

நாம் இதுவரை பேசி வந்த கருத்துகளின்படி மார்க்கெட், (a) பண மார்க்கெட் என்றும் (b) உற்பத்தி மார்க்கெட் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டவற்றைப் பார்த்தோம். ஆனால், இவை மாத்திரம் போதுமானவையன்று. நாம் இப்போது உற்பத்திக் காரணிகளின் மார்க்கெட்டை இவற்றுடன் சேர்க்கவேண்டும் (Factor market). அப்போதுதான் வேலையின் அளவை நிர்ணயம் செய்யமுடியும். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் உற்பத்திச் சார்பு என்று ஒன்று இருக்கிறது. அஃதாவது உற்பத்திக் காரணிகளுக்கும் உற்பத்திக்கும் உள்ள உறவை விளக்குவதே உற்பத்திச் சார்பு (Production function) என்று சொல்லப்படுகிறது. நாம் பொருளாதாரத்தின் கூட்டு மொத்த உற்பத்திச்சார்பை எடுத்துக்கொள்ள வேண்டும். அதைப்போன்ற உற்பத்திச்சார்புச் சமன்பாட்டைக் கீழ்க்கண்டபடி நாம் எழுத முடியும்.

$$Y = X\ (N.\ K^*)$$

இதில் N என்பது வேலையின் அளவையும், K என்பது முதலீட்டுப் பொருள்களின் இருப்பையும் காட்டுகின்றன. இதுபோன்ற குறுங்கால ஆய்வில் K* என்பது, முதல் நிலை பெற்றிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. எனவே, உற்பத்தி எவ்வளவு என்று நாம் கண்டுபிடிக்க முடியும். ஆனால், நடைமுறையில் நாம் நினைப்பதைப்போல, இஃது அவ்வளவு எளிதான காரியமன்று. I S, L M வளைகோடுகள் ஊடறுக்கும் இடத்தில் உற்பத்தி மார்க்கெட்டும் பண மார்க்கெட்டும் உடன் நிகழ்வான சமநிலையை அடைகின்றன. ஆனால், இந்த இடத்தில் ஏற்படும் வருமானம் 'உழைப்புக் காரணிகள்' அனைத்தையும் நடப்பில் இயங்கும் ஊதிய வீதத்தில் வேலை கொடுக்கமுடியாத நிலையில் இருக்கும். அஃதாவது, பண மார்க்கெட்டும் உற்பத்தி மார்க்கெட்டும் சமநிலையில் இருந்தாலும், உழைப்பு மார்க்.

கெட்டுச் சமநிலை பெறுமல் போய்விடலாம். இது கீழ்க்கண்ட வரைபடத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

பண மார்க்கெட்டும் உற்பத்தி மார்க்கெட்டும் Yo என்ற வருமானத்தில் சமநிலையில் இருக்கின்றன. Y* அளவு வருமானம் அதிகரித்தால்தான் எல்லா உழைப்புக் காரணிகளையும் பயன்படுத்த முடியும். எனவே, Yo என்ற வருமானத்தில் உழைப்பின் அளிப்பு உபரியாக இருந்து வேலையின்மை ஏற்பட்டு இருக்கிறது. நடப்புக் கூலி வீதத்தில் இக் காரணிகளை வேலைக்கு வைத்துக் கொள்ள முடிவதில்லை. இங்கே உண்மையான கூலி வீதம் குறைந்தால்தான் வேலைக்கான வாய்ப்பை அதிகப்படுத்தி அதிக நபர்களை வேலைக்கு அமர்த்த முடியும்.



படம் 30

உழைப்பின் அளிப்பு, அதிக சிக்கல் நிறைந்த ஒரு பிரச்சனை. ஆனால், நாம் இங்கு தொன்மைப் பொருளாதாரிகளைப்போல உழைப்பின் தேவையும் அளிப்பும் உண்மையான கூலிவீதத்தைப் பொறுத்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். பொது விலைகள் இரட்டிப்பு அதிகமாகி, அதைப்போலப் பண ஊதியமும் இரட்டிப்பானுல், யாருக்கும் எந்த விதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. பகுத்தறிவு உலகத்தில் இதை எல்லாரும் புரிந்து கொள்ளமுடியும். ஆனுல், இதுபோன்ற சூழ்நிலையில் தனக்கு நன்மை ஏற்படுகிறது என்று நினைக்கும் ஒரு தனி நபர், பண மாயையினுல் (Money illusion) சிக்குண்டு இருக்கிறுர் என்று கொள்ளவேண்டும். பண மாயை இல்லாத பகுத்தறிவுச் சமுதாயத்தில், உழைப்பின் அளிப்பு உண்மையான கூலிவீதத்தைப் பொறுத்திருக்கிறது எனலாம். இதைக் கீழ்க்கண்டவாறு எழுத முடியும்.

$$N_s = S\ (w/p)$$

இந்த உழைப்பின் தேவைச் சார்பையும் உழைப்பின் அளிப்புச் சார்பையும் நாம் அடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிற வரைபடத்தில் காட்ட முடியும்.

தொன்மைப் பொருளாதாரிகளின் மாதிரி

உழைப்பின் தேவைக்கோடு எதிர்மறையான செறிவைப் (Negative slope) பெற்றிருக்கிறது. குறைந்து செல் விளைவு விதியினால் உழைப்பின் தேவை எதிர்மறையான உறவைப் பெற்றிருக்கிறது. உழைப்பின் அளிப்புக்கோடு மேல்நோக்கிச் செல்கிறது. அதிகமான வேலை நபர்களைச் சேர்க்கவேண்டுமானால், அதிக உண்மையான கூலியைக் கொடுக்கவேண்டும் என்பதே ஆகும்.



படம் 31

(w/p)o கூலியில் ONo உழைப்பைத்தான் வணிக நிறுவனங்கள் வேலையில் அமர்த்திக்கொள்ள முடியும். ஆனால், வேலையின் அளிப்பு, அந்தக் கூலி வீதத்தில் N_1 ஆக இருக்கிறது. அஃதாவது உழைப்பு உபரியாக இருக்கிறது. எனவே, பல வேலை ஆட்கள் தம் இச்சையாக வேலை செய்ய விரும்பினாலும் வேலையற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, முழு வேலை ஏற்பட உண்மையான கூலி வீதம் (w/p)* ஆகக் குறைந்தாக வேண்டியிருக்கிறது. வேலை இல்லாத நிலையில், இருக்கிற வேலையைப் போட்டியிட்டுக் கொண்டு தனி ஆட்கள் முயற்சி செய்வதால் கூலிவீதம் குறையும். விலைவாசி அளவுகள் மாறாமல் இருந்தால், குறைந்த பணக்கூலி மூலம் உண்மையான கூலியைக் குறைக்க முடியும். ஆனால், விலைகளும் கூலியும் ஒரே வீதத்தில் குறைந்தால் உண்மையான கூலி மாறுவதற்கில்லை. தொன்மைப் பொருளாதாரிகள், உண்மைக் கூலிகளை, பணக் கூலிகளைக் குறைப்பதன்மூலம் கொண்டு வர முடியும் என்று நினைத்தார்கள். ஆனால், கீன்ஸ் இதை நம்பத் தயாராக இல்லை. அவர், தொன்மைப் பொருளாதாரிகளிடமிருந்து எப்படி மாறுபடுகிறார் என்பதை இங்குக் கவனிப்போம்.

நிறுவனக் கோட்பாடுகள் கூறுவதைப்போல பணக் கூலி குறையும்போது இறுதிநிலை உற்பத்திச் செலவுகள் குறைந்து, அவற்றின் மூலமாக உற்பத்தியும் வேலையும் அதிகரிக்கலாம். ஆனால், இப்படி அதிகரிக்கும் உற்பத்தி, மார்க்கெட்டில் வாங்கப் படுமா என்பது ஒரு பெரிய கேள்விக் குறியாகப் போய்விடும். இறுதிநிலை நுகர்ச்சிநாட்டம் ஒன்றுக்குக் குறைவாக இருப்பதால், உற்பத்தியில் ஒரு பகுதிதான் நுகர்வோர்களால் வாங்கப்படும். மீதம் திட்டமிடப்பட்ட முதலீடாகத்தான் இருக்க முடியும். அப்போதுதான் இந்த வேலை அளவையும். முதலீட்டு அளவையும் பொருளாதாரம் தாங்கி இருக்க முடியும். இதுபோன்ற ஒரு மார்க் கெட்டில் விலைகள் குறைந்து IS, LM சமன்பாட்டை முறியடிக்கும் சக்திகளை உருவாக்கிப் புதிய சமநிலை ஏற்படுமா? இவற்றை இனி நாம் கவனிக்கவேண்டும்.

இவற்றைத் தெரிந்துகொள்ள நமக்கு வணிக நிறுவனங்களின் கோட்பாடுகள் சில தெரியவேண்டும். ஒரு நிறுவனம் நிறைவுப் போட்டி இருக்கும் காரணி மார்க்கெட்டில் இறுதிநிலை உற்பத்தியின் மதிப்புக்கும் (Value of marginal product), (அஃதாவது இறுதிநிலை உற்பத்தியின் விலையால் பெருக்கி வரும் தொகைக்கும்) காரணியின் விலைக்கும் சமம் ஏற்படும்வரை தொடர்ந்து வேலையாட்களைப் பணியில் அமர்த்த முடியும். நிறைவுப் போட்டி இருக்கும் மார்க் கெட்டில் இலாபத்தை உச்ச நிலைக்குக் கொண்டுவரக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஈடேறவேண்டும்.

$$W = PX_n$$

$$W/p = X_n$$

இங்கு W என்பது, பணக்கூலி வீதத்தையும் X_n என்பது, இறுதிநிலை உற்பத்தியையும் W/p என்பது, உண்மையான கூலி வீதத்தையும் காட்டுகின்றன. எனவே, நாம் உழைப்பின் தேவையைக் கீழ்க்கண்டவாறு எழுதலாம்.

$$Nd = D\ (W/p)$$

அஃதாவது உழைப்பின் தேவை உண்மையானகூலி வீதத்தைப் பொறுத்திருக்கிறது. குறைந்து செல்விளைவு விதியின்படி உழைப்பின் இறுதிநிலை உற்பத்தி குறைந்து கொண்டு போவதால், அதிகமான ஆட்களைக் குறைந்த கூலி வீதத்தில்தான் வைத்துக் கொள்ள முடியும்.

திட்டமிடப்பட்ட முதலீடு (Intended investment) தவறுமே யானால், முதலீடும் உற்பத்தியும் குறைந்துபோகும். திட்டமிடப்

படாத சரக்கு இருப்புகள் குவியத் தொடங்கும். எனவே, வேலையும் உற்பத்தியும் குறைந்துபோய் பழைய நிலையே உண்டாகிவிடும். இதைக் கீழ்க்கண்ட வரைபடத்தில் காணலாம்.

(C + I) நுகர்ச்சிச் செலவுகள் + முதலீட்டுச் செலவுகள். நமது 45° கோட்டை Y° என்ற வருமானத்தில் வெட்டுகிறது. எனவே, C + I என்பது, நாட்டின் மொத்த தேவையாகும். இஃது ஓர் எளிமையான பேரியல் பொருளாதார அமைப்பாகும். நாம் முன்னர்க் கூறியிருப்பதுபோல இந்த



வருமானம் (உண்மை மதிப்புகளில்)

படம் 32

45° கோடானது சேமிப்பையும் முதலீட்டையும் சமமாக்கும் நிபந்தனைக் கோடு; அஃதாவது இந்த 45° கோட்டின் நியமப் பார்தையில் உள்ள ஒவ்வொரு புள்ளியும் இரண்டு வரை கோட்டின் அச்சுகளையும் சமமாகப் பிரிக்கின்றன. ஓர் எளிய பொருளாதாரத்தில் சமநிலை ஏற்பட I = S ஆக, அஃதாவது முதலீடும் சேமிப்பும் சமமாக இருக்கவேண்டும். Y* என்பது முழு வேலைக்குரிய வருமானம் ஆகும். Y° முழு வேலை வருமானத்தைவிடக் குறைவாக இருப்பதால், உழைப்பு அளிப்பு மிகுதியாக இருக்கிறது. அதற்காகப் பண ஊதியத்தைக் குறைத்து உற்பத்தியை அதிகரித்து உற்பத்தி ΔY ஆக மாறுகிறது என்று வைத்துக்கொள்வோம். இந்த ΔY = Y* − Y° சமம் என்போம். இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் ஒன்றுக்குக்

குறைவாக இருப்பதால், ΔC தான் நுகர்ச்சி செய்யப்படுகிறது. மீதமுள்ள உற்பத்தி, திட்டமிடப்படாத இருப்புச் சரக்குகளாக (I_u) மாறிவிடும். அல்லது திட்டமிடப்பட்டுள்ள முதலீடாக மாறவேண்டும். இது தவறும்போது வருமானம் Y^*-லிருந்து Y^oக்கு குறைந்துபோய் பழைய நிலை மறுபடியும் உருவாகிறது.

ஆனால், தொன்மைப் பொருளாதாரிகளுக்கு (Classical economists) இது நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத கருதுகோளாகும். போட்டியுள்ள மார்க்கெட் பொருளாதாரத்தில் கூலிமீதும் விலைகள்மீதும் அழுத்தம் ஏற்பட்டுப் பணஅளிப்பின் உண்மை மதிப்பு மாறுபடும். இதனால் வட்டிவீதம் குறைந்து, முதலீட்டு அளவு அதிகரித்து வருமானமும் வேலை அளவும் அதிகரிக்கும். கீழேயுள்ள வரைபடத்தில் விலைவாசிகள் குறைவதனால் ஏற்படும் விளைவு, தொன்மைப் பொருளாதாரிகளின் மாதிரியில் (Classical model) எப்படி இருக்கும் என்பது காட்டப்பட்டிருக்கிறது.



படம் 33

IS வளைகோடும், LM வளைகோடும் Yo என்ற வருமானத்தில் ஊடறுக்கின்றன. அப்போது வட்டிவீதம் io ஆக இருக்கிறது. கூலியும் விலைகளும் சரிவதால் பண அளிப்பின் மதிப்பு (value of the supply of money) அதிகரித்து, LM வளைகோடு கீழ்நோக்கி வலப்பக்கத்தில் பெயர்ந்து எழுகிறது. எனவே,

வட்டிவீதம் குறைந்து திட்டமிடப்பட்ட முதலீட்டுச் செலவும் வருமானமும் அதிகரிக்கின்றன. எனவே, புதுச்சமநிலை Y* வருமானத்திற்கு மாறிவிடுகிறது. Y* முழுவேலை வருமானமாக இருப்பதால், வேலையின்மை தானாகவே தீர்வு காணும் தன்மையைப் பெற்றிருக்கிறது என்று தொன்மைப் பொருளாதாரிகள் வாதமிட்டார்கள்.

இவ்விதமான வாதத்திற்குக் கீன்ஸைப் பின்பற்றும் பொருளாதாரவாதிகள் சரியான பதில் வைத்திருக்கிறார்கள். ரொக்க விருப்பக் கோட்பாட்டின்மூலம், மேலே சொல்லப்பட்ட வாதத்திற்குத் தகுந்த பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. சரிந்த விலைகளும் வீழ்ந்த கூலியும் பணத்தின் உண்மையான மதிப்பை அதிகப்படுத்துகிறது என்பது உண்மைதான். இதனால், LM கோடு பிறழ்ந்தபோதிலும், அது கீன்ஸின் பொறியில் (Keynesian trap) ஏற்படுவதால் வட்டிவீதம் மாறுவதற்கில்லை. பண அளிப்பு அதிகமாவது, பேரத்திற்கான பணத்தேவையாகப் பயன்படும். செல்வத்தை வைத்திருப்பவர் இதை ரொக்கமாக வைத்திருப்பார்கள். இந்த ரொக்கத்தை இவர்கள் ஈவு லாபம் சம்பாதித்துத் தரக்கூடிய பத்திரங்களை வாங்கப் பயன்படுத்துவதில்லை. இதை நாம்கீழ்க்கண்ட வரைபடம் மூலம் விளக்க முடியும்.



படம் 34

பொதுவான விலைச் சரிவுகளினால் ஏற்படும் விளைவுகள்
(கீன்ஸின் பொருளாதார மாதிரியில்)

நீர்மைப் பொறிமட்டத்தில் IS-ம் LM-ம் ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்கின்றன. எனவே, வேலையில்லாச் சமநிலை Y°

வருமானத்தில் ஏற்பட்டிருக்கிறது. பண அளிப்பின் உண்மை மதிப்பு மாறுபட்டபோதிலும் LM_0, LM-க்கு நீர்மைப் பொறியில் ஏற்பட்டிருக்கும் வட்டிவீதத்தில் பெயர்ச்சி செய்வதால் வட்டிவீதம் மாறவில்லை. எனவே, வருமானம் மாருமல் Y^oவில் இருக்கிறது.

எனவே, தாளுகவே வேலையின்மையை நீக்கிக் கொள்ளும் தன்மை விலைவாசிகள் வீழ்வதனுல் ஏற்படப்போவதில்லை. மேலும் கீன்ஸ், பணக்கூலியைக் குறைப்பது என்பது முடியாத காரியமாகும் என்று கூறுகிருர். தொழிற் சங்கங்கள், வேலையின்மை இருந்த பொழுதும் பணக்கூலியைக் குறைத்துக் கொள்ள சம்மதம் கொடுப்பதில்லை. பணக்கூலி ஒட்டிக்கொள்ளும் (sticky) தன்மையைப் பெற்றிருப்பதால் கீழ்முகமாகக் கூலியை மாற்றுவதற்கில்லை.

கீன்ஸ், தொன்மைப் பொருளாதாரிகளின் உழைப்பு அளிப்புச் சார்பை மாற்றி அமைத்தார். அமைப்பின் அளிப்பு உண்மையான கூலியைச் சார்ந்திருக்கிறது என்ற நிலையை மாற்றிக் கீன்ஸ், உழைப்பின் அளிப்பு பணக்கூலியைச் சார்ந்திருக்கிறது என்று மாற்றி அமைத்தார். உழைப்பு என்ற காரணி, பண மாயையினுல் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கீன்ஸ் நம்பினுர். இதை கீழ்க்கண்ட வரைபடம் மூலம் விளக்கம் செய்யலாம்.

உழைப்பு மார்க்கெட்
(கீன்ஸ் பொருளாதார மாதிரியில்)



படம் 35

Wo என்பது, வரலாறு ரீதியாக அமைந்த பணக்கூலி ஆகும். இந்தக் கூலியின் O முதல் N* வரை உழைப்பை அளிக்கத் தயாராய் இருக்கிருர்கள். Po என்பது, மார்க்கெட்டில் இருக்கும் விலையாகும். மேலும் இந்தப் பணக்கூலியைக்

குறைக்கமுடியாது. எனவே, உழைப்பு அளிப்புக்கோடு படுக்கைக் கோடாக இருக்கிறது. N*-க்குப் பின்னர், அதிகக் கூலி கொடுத்தால்தான் வேலைக்கு ஆள் அமர்த்த முடியும். எனவே, அளிப்புக்கோடு N*-க்குப் பின்னர் மேல்நோக்கிச் செல்கிறது. உழைப்பின் தேவைக்கோடு No என்ற இடத்தில் அளிப்புக் கோட்டை ஊடறுப்பதால், O No உழைப்பைத்தான் வேலையில் ஈடுபடுத்த முடியும். N* என்ற இடத்தில் முழு வேலையிருப்ப தால், No, N* தூரத்திற்கு வேலையின்மை ஏற்பட்டு விடுகிறது. இந்த வேலையின்மை இடைவெளியைப் போக்கப் பணக் கூலியைக் குறைக்க முடியாது. ஆனால், மொத்தத் தேவை அதிகரித்து, அதன் காரணமாக விலைகள் Poவிலிருந்து P_1 ஆக உயரும்போது, உழைப்பு அளிப்புக்கோடு பெயர்ந்து Wo/p_1 ஆகிக் கீழே இறங்குவதைப் பார்க்கலாம். பணமாயையினால், விலை அதிகமாகி உண்மையான கூலி குறைந்தபோதிலும், தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்கிறார்கள்.

முடிவாக இந்த அதிகாரத்தில் கீன்ஸின் கோட்பாடுகளைக் கீழ்க்கண்டபடி சமன்பாடுகளில் சுருக்கமாகத் தொகுத்துக் கூற முடியும். விலைவாசிகள் நிலையாக இருக்கும்போது உற்பத்தி மார்க்கெட்டில்,

$$\text{சமன்பாடு } I(i) = Y - C(Y)$$

அதுபோலப் பண மார்க்கெட்டில் சமன்பாடு,

$$M/p = Ky + L(i)$$

இதிலிருந்து நாம் வருமானம், நுகர்ச்சி, முதலீடு, சேமிப்பு, வட்டிவீதம், நடவடிக்கைகளான ரொக்கத் தேவை, ஊகலாபத் திற்கான ரொக்க விருப்பம் ஆகியவற்றைக் கண்டுபிடித்துவிட முடியும். வருமானம் தெரிந்தபின்னர், முதல் இருப்பு (Capital stock) நிலையாக இருக்கும்போது உற்பத்திச் சார்பை

$$y = X(N_1 K^*) \text{ என்று எழுதலாம்.}$$

இதிலிருந்து வேலை வாய்ப்பை முடிவு செய்துவிட முடியும். உழைப்பின் தேவையும் அளிப்பும்பற்றி நாம் முன்னமேயே குறிப்பிட்டு இருக்கிறோம்.

கீன்ஸின் நீர்மைப் பொறியானது (Liquidity trap), சிறந்த வாதமாகக் காணப்பட்டாலும், அதற்குச் சரியான பதில்களும் இருக்கத்தான் செய்கின்றன. பணக் கூலியைக் குறைத்தால் அதன் மூலம் விலைவாசிகள் குறைந்து LM கோடு கீழ்நோக்கிப் பெயர்ந்து

வருமானம் அதிகரிக்கும் என்று தொன்மைப் பொருளாதாரிகள் வாதித்தார்கள். இதை கீன்ஸ் மறுக்கும்போது, தன் நீர்மைப் பொறி விளக்கத்தைப் பயன்படுத்தினர். நீர்மைப்பொறி வட்டி வீதத்தில் LM பெயர்ந்தால், வருமானம் அதிகரிக்க முடியாது என்பதை நாம் முன்னமேயே பார்த்தோம்.

இதற்கு ஏ.சி. பிக்கு (A.C. Pigou) என்பவர், வேறு ஒரு பதிலை விஞ்ஞான ரீதியில் கொடுத்தார். இதைத்தான் பிக்கு விளைவு (Pigou effect) என்று கூறுகிறார்கள். விலைவாசிகள் குறையும்போது நீர்மைச் சொத்துகளின் (Liquid assets) மதிப்பு அதிகரிக்கும். எனவே, பொது மக்கள் தங்கள் நடப்புச் சேமிப்பைக் குறைத்து விட்டு நுகர்ச்சியை அதிகரிப்பார்கள். I S கோடு வலப்பக்கமாகப் பெயர்ந்து வருமானத்தை அதிகரிக்கும். ஊதியத்தைக் குறைத்து அதன்மூலம் பொது விலைகளைக் குறைப்பதனுலும் முழுவேலை வருமானத்தை அடையக் கோட்பாட்டு ரீதியாக வழி இருக்கிறது என்பதை நிரூபித்தார் ஏ. சி. பிக்கு. இவரது இந்த விளக்கம் நல்ல அறிவியல் அடிப்படையில் இருந்தாலும், இதை அரசாங்க நிதிக் கொள்கையாக அமுல்படுத்துவதில் தொல்லைகள் இருக்கின்றன.

கீன்ஸின் பொருளாதார மாதிரிகளை முன்னுல் குறிப்பிட்டோம். தொன்மைப் பொருளாதாரிகளின் பொருளாதார மாதிரியில் உழைப்பு மார்க்கெட்டின் சமன்பாட்டில் வேலையின் அளவு நிர்ணயம் செய்யப்படுகிறது. வேலையின் அளவு தெரிந்திருப்பதால், உற்பத்திச் சார்பு சமன்பாட்டின்மூலம் வருமானம் கண்டுபிடிக்க முடிகிறது. வருமானம் தெரிந்திருப்பதால், உற்பத்தி மார்க்கெட்டுச் சமன்பாடும் பணமார்க்கெட்டுச் சமன்பாடும் கண்டுபிடிக்க முடியும். இதில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றுல், வட்டி வீதம் பண அளிப்பைச் சார்ந்திருக்கவில்லை. பண அளிப்பின் முக்கிய வேலை பொது விலைகளை நிர்ணயம் செய்வதே ஆகும்.

13. பொது விலைகளின் மட்டம்
(The General Price Level)

வேலை, உற்பத்தியைப் பொறுத்திருக்கிறது. உற்பத்தியைப் பொருள்களின் அளவுமூலம்தான் கூறமுடியும். அரிசி உற்பத்தி இவ்வளவு டன்கள் என்றும், கார்கள் உற்பத்தி இவ்வளவு ஆயிரம் என்றும் உண்மையான பொருள்மூலம் தான் உற்பத்தியைக் காட்டமுடியும். ஆனால், இதைப் பணத்தின்மூலம் எளிதாகக் கூற முடியும். தேசிய உற்பத்தியை அதன் விலைகளால் பெருக்கும் போது உற்பத்தியின் பண அளவு கிடைக்கின்றது. நாம் உண்மை யான உற்பத்தியைக் கணக்கிடுவதற்காக விலைகள் மாறாமல் இருக்கின்றன என்ற ஓர் எடுகோளை வைத்துக்கொண்டு இது வரை விளக்கம் செய்து வந்தோம். நாம் இனி, உண்மையான நிலையைக் கருத்தில் கொண்டு இந்த எடுகோளை மாற்றவேண்டும். நாம் சிற்றியல் பொருளாதாரத்தில் இணையான விலைகள்பற்றியும், அவற்றின் மாறுதல்கள்பற்றியும் படித்திருப்போம். ஆனால், சிற்றியல் பொருளாதாரத்தில் ஏன் எல்லாப் பொருள்களின் விலை களும் ஏறவோ அல்லது இறங்கவோ செய்கின்றன என்பதற்கு விளக்கமில்லை. பொது விலைகளின் மட்டம் அதிகரித்தால், கொடுக் கப்பட்ட பணம் குறைந்த அளவிற்குத்தான் பொருள்களை வாங்க முடியும். பணத்தின் மதிப்டக் குறைந்து போகிறது விலைகள் குறையும்போது பணத்தின் மதிடபு அதிகரிக்கச் செய்கிறது. இது போன்ற விலை மாற்றங்களை அளக்க குறியீட்டெண்கள் (index numbers) பயன்படுத்தப்படுகின்றன.

விலை மட்டங்களை ஆராய நாம் சில பொருளாதார மாறிகளின் உறவுகளைக் கவனிக்கவேண்டும்.

1. பண இருப்புகள் (Money Stock)

அரசாங்கத்தின் பணக்கொள்கைகளாலும் பாங்குகளின் கடன் உற்பத்திகளாலும் பணத்தின் அளிப்பு நிர்ணயம் செய்யப்படு

கிறது. இது பலவிதமான நோக்கங்களாலும் வங்கிகள், நிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோரின் நடவடிக்கைகளால் தேவைக்கு வைத்துக்கொள்ளப்படுகிறது. பண இருப்பின் அளிப்பும் அதன் தேவையும் சமமாக இருக்க வேண்டும். இதைச் சமன்பாட்டின் மூலம் எழுதலாம்.

$$Ms = Md$$

2. பண ஓட்டம் (Money Flow)

நாம் காலத்தைக் கருத்தில் கொண்டு ஒரு மாதத்திற்கு அல்லது சில மாதங்களுக்கு என்ற கணக்கை ஆரம்பிக்கும்போது, பண ஓட்டத்தைக் கணக்கில் கொள்ளவேண்டும். இது பண இருப்பு (Money stock) என்ற கணக்கிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பண இருப்பு எவ்வளவு என்று நாம் கூற முடியும். பண இருப்பு மாதக் கணக்கில் M ஆக இருப்பதாக வைத்துக்கொள்வோம். பண இருப்பு மாறுமல் ஒரே அளவாக இருக்கிறது என்றுதான் இதற்குப் பொருள். மொத்தப் பண வருவாயும் மொத்தப் பணச் செலவிற்குச் சமமாய் இருக்க வேண்டும். நான் இரண்டு ரூபாய்க்குப் புத்தகம் வாங்கியிருந்தால், என் பணச் செலவு 2 ரூபாய் ஆகும். அப் புத்தகக் கடைக்கு வருவாய் ரூபாய் இரண்டு ஆகும். இது போன்ற நடவடிக்கைகள் அந்தப் பொருளாதாரத்தில் ஒரு மாதத்திற்கு 'T' என்று வைத்துக் கொண்டால் சராசரி விலை 'P' ரூபாயில்.

மொத்த வருவாய் = மொத்த செலவு = PT.

இதிலிருந்து நமக்கு ஒன்று தெளிவாகத் தெரிகிறது. இந்த நடவடிக்கைகளும் மொத்தச் செலவுகளும் பண இருப்பிலிருந்து தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனல், இந்தப் பண இருப்பு நிலையாக இல்லாமல் கைமாறும்போது அதன் சுழற்சிவேகம் (velocity) அதிகரிக்கும். எனவே, கொடுக்கப்பட்ட நிலையான பண இருப்பு, இந்த நடவடிக்கைகளின் மதிப்பு முழுமைக்கும் நிதியாகப் பயன்படுத்தி இருப்பதால், அந்தப் பணம் பலர் கையில் மாற்றப் பட்டிருக்கிறது. எனவே, இதை ஒரு சராசரி கணக்காக மாற்றினுல், $\frac{PT}{M} = V$ அஃதாவது PT என்பது 12 கோடி ரூபாய் இருந்து பண இருப்பு 3 கோடி ரூபாயாக இருந்தால், $\frac{PT}{M} = 4$ என்பது பணச் சுழற்சியின் வேகமாகும். இதை இனிமேல் 'V' என்று குறிப்பிடுவோம்.

மொத்தப் பணத்தேவையும் பொதுவிலைகளும்

ஒரு குறிப்பிட்ட காலத்தில் இருக்கும் உற்பத்தி, அவற்றின் ஓட்டங்களுக்கு வழங்கப்படும் பணச் செலவின் ஓட்டங்களை (flow) மொத்தப் பணத்தேவை (Aggregate Monetary Demand) என்று கூறுகிறோம். எனவே, இக் குறிப்பிட்ட காலத்தில் பொது விலைகள், பொருள்களின் அளிப்பையும் அப் பொருள்களுக்காக வழங்கப்படும் பணச் செலவுகளையும் பொறுத்திருக்கிறது. எனவே, செலவிடும் சக்தி பல காரணிகளைப் பொறுத்திருக்கிறது. இது, பணச் சுழற்சியின் வேகம், மார்க்கெட்டில் பலவிதமான பேரங்களுக்குத் தேவைப்படும் பண அளவு, பண இருப்புநிலை ஆகியவற்றின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. மொத்தப் பணத் தேவைக்கும் பொது விலைகளுக்கும் உள்ள தொடர்பை விளக்கப் பல கோட்பாடுகள் இருக்கின்றன. பலவிதமான மொத்தப் பணத் தேவைக் கேற்ப விலைகளும் மாறுபடுகின்றனவா என்பதை நாம் கவனிக்க வேண்டும். நாம் தொன்மைப் பொருளாதாரிகளின் பணக்கோட்பாட்டை முதலில் எடுத்துக்கொள்வோம்.

பண அளவுக் கோட்பாடு (The Quantity Theory of Money)

பண அளிப்பு அதிகரிக்கும்போது பல சமயங்களில் பொது விலைகள் அதிகரித்திருக்கின்றன. 16வது நூற்றாண்டில் நாணயத்தின் மதிப்பைத் தரமிழக்கச் செய்தபோது (Debased Currency) பண அளிப்பு அதிகரித்து விலைவாசிகள் ஏறச் செய்தன. இது போலவே, 19வது நூற்றாண்டில் தங்கச் சுரங்கங்களில் பல புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டு, தங்கத்தின் இருப்பு அதிகரிக்கப் பண அளிப்பு அதிகரிக்கச் செய்தது. இதன் காரணமாக விலைகள் அதிகரித்தன. நிதி நெருக்கடிகள் அதிகரிக்கும்போது, பண நோட்டுகளை அச்சடித்துப் பண அளிப்பை அதிகரிக்கும்போது விலைவாசிகள் அதிகரிக்கின்றன. இதிலிருந்து பண அளிப்புக்கும் பொது விலைகளின் மட்டங்களுக்கும் இருக்கும் உறவு தெரியவருகிறது. இந்த எளிய உறவிலிருந்து பிறந்தது பண அளவுக் கோட்பாடாகும். இக் கோட்பாடு, பொது விலைகளின் மாற்றத்தைப் பண இருப்பின் (money stock) மாற்றங்கள் மூலம் விளக்கம் செய்கிறது. பண இருப்பு அதிகரிக்கும்போது விலைகள் அதிகரிக்கும். குறையும் போது, பொது விலைகள் குறையும். புழக்கத்தில் இருக்கும் பண இருப்புக்கும் பொது விலைக்கும் உள்ள உறவு, நேர் வீதத்தில் இருக்கிறது என்று இக் கோட்பாடு கூறுகிறது. பண இருப்பு இரட்டிப்பு ஆகும்போது விலைவாசிகளும் இருமடங்காக உயரும்.

மேலே நாம் குறிபிட்ட பண அளவுக் கோட்பாடு செம்மை றதாக இருக்கிறது. இதில் பல குறைபாடுகள் இருக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் கொடுக்கப்பட்ட பண அளவானது, பலப்பல நடவடிக்கைகளுக்குப் பட்டுவாடா செய்யப் பயன்படுத்தப் படுகிறது. இதனால், பணப் புழகத்தின் வேகம் (Velocity of money) மாறுதல் அடைகிறது. அதுபோல, கொடுக்கப்பட்ட காலத்தில் அளிக்கப்படும் பொருள், சேவைகள், ஆகியவற்றின் அளிப்பும் மாறுதல் அடையலாம். இவற்றைப் போக்க ஃபிஷர் (Fisher) சமன்பாடு முற்படுகிறது.

இதன்படி P = MV/T. இங்கு, Tயும் Vயும் மாறிலியாக (constant) இருக்கின்றன. V என்பது, பணத்தின் வேகத்தையும், T என்பது நடவடிக்கைகளின் பேரங்களையும் குறிக்கின்றன. இச் சமன்பாட்டை வேறு வடிவில் MU = PT என்று திருப்பி எழுதலாம். இந்தச் சமன்பாட்டின் இரண்டு பக்கங்களும் நம் இலக்கணப்படி சமமாகத்தான் இருக்கவேண்டும். இவை மொத்தச் செலவு = மொத்த வருவாய் என்பதையே காட்டுகின்றன. P என்ற விலைமட்டம் M என்ற பண இருப்போடு நேர்வீதத்தில் பொருந்தி இருக்கவேண்டுமானால், Vஉம் Tஉம் மாறிலியாக (constant) இருக்கவேண்டும். இந்த எடுகோள் முறையற்றது. குறுங்காலத்தில் Vஉம், Tஉம் மாறத்தான் செய்கின்றன. நீண்டகாலத்தை எடுத்துக்கொண்டால், அஃதாவது 25 வருடம் போன்ற ஒரு நீண்ட பகுதியை எடுத்துக் கொண்டால் சராசரியாக Vஉம் Tஉம் மாறாமல் இருப்பதைப் பார்க்கலாம்.

இதுபோன்ற சமயங்களில் M-ல் ஏற்படும் மாறுதல் வரலாற்று ரீதியான விலைவாசிகளின் மாற்றத்தை விளக்கப் பயன்படும். இந்தக் கோட்பாடு, ஏன் 'V' மாறிலியாக அமையவேண்டும் என்ற வினவுக்குப்பதில் ஏதும் கொடுக்கவில்லை. தேவை அதிகரிக்கும்போது ஏற்படும் அதிக உற்பத்தியை இக் கோட்பாடு மனத்தில் கொள்ளவில்லை. முழு உற்பத்தியை அடையும்வரை, பணத்தின் அளிப்பு அதிகரிப்பு, உற்பத்தியைப் பெருக்கத்தான் உபயோகப்படுமே ஒழிய, அது விலையை அதிகப்படுத்த வேண்டிய காரணமில்லை. அதைப்போல, இங்கு எது காரணம், எது விளைவு என்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலை ஏற்படுகிறது. ஒரு முறை விலைவாசிகள் அதிகரித்தால், அது பண அளிப்பு அதிகரிப்பைத் தூண்டுகிறது. இப்பொழுது ஏற்படும் பண அளிப்பு அதிகரிப்பு, விலைவாசிகளின் ஏற்றத்தின் விளைவாக ஏற்பட்ட விளைவே (result) ஒழிய, அது விலைவாசி உயர்வுக்குக் காரணமன்று. எந்த நிலையில் எது காரணமாகவும், எது விளைவாகவும் உள்ளது என்பதை நாம் கூறமுடியாத நிலையில் உள்ளோம்.

கேம்பிரிட்ஜ் சமன்பாடு (The Cambridge Equation)

பண அளவுக் கோட்பாட்டைச் செம்மைப்படுத்த 1920-ல் இச் சமன்பாடு கொண்டுவரப்பட்டது. இது மக்கள் தன்னகத்தே வைத்துக்கொள்ளும் பணத்திற்கும் வருமான அளவிற்கும் உள்ள சார்பை விளக்கம் செய்கிறது. நாம் முன்னர்க் குறிப்பிட்ட சமன் பாட்டில் T என்பது நடவடிக்கைகளின் அளவைக் குறிப்பிட்டுக் காட்டியது. இந்த T-ல் கச்சாப் பொருள்கள், உழைப்பு, இடை நிலைப் பொருள்கள் (intermediate goods), இருப்புகள், பங்குகள், இறுதிப் பொருள்கள் ஆகியன அடங்கும். எனவே, P என்பது, எல்லாப் பொருள்களின் விலைகளையும் குறிக்கச் செய்கிறது. இதைக் கேம்பிரிட்ஜ் சமன்பாடு தவிர்த்து இறுதிப் பொருள்களின் நடவடிக்கைகளை மாத்திரம் நடைமுறையில் கொண்டுவருகிறது. இந்த இறுதிப் பொருளில் (final goods) நுகர்ச்சிப் பொருள்களும், முதலீட்டுப் பொருள்களும் அடங்கும். இந்த இறுதிப் பொருள்களை நாம் 'O' என்று குறிப்பிடுவோம். P^1 என்பது இப் பொருள்களின் விலையையும், V^1 என்பது பணத்தின் வேக வீதத்தையும் குறிப்பிடு கின்றன. எனவே,

$$MV^1 = P^1O.$$

P^1O என்பது பணமூலமான தேசிய வருமானம் என்பது இங்குத் தெளிவாகும். V^1 என்பது இறுதிப் பொருள்களை வாங்குவதற்குப் புழக்கத்தில் உள்ள பணத்தின் வேகம் என்று நாம் முன்னர்க் குறிப் பிட்டோம். எனவே, V^1 என்பது பணச் சுழற்சியில் வருமான வேகம் (income velocity) எனக் குறிப்பிடலாம். பணம் 5 தடவை இறுதி உற்பத்தியை வாங்கப் பயன்படுத்தப்பட்டதென்றால், மக்கள் தம்மகத்தே வைத்துக்கொள்ளும் பணம் வருமானத்தில் $\frac{1}{5}$ பாகம் ஆகும். எனவே, இச் சமன்பாட்டை,

$$M = KY$$

எனவும் எழுதலாம். இங்கே, K என்பது வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கத்திற்காக வைத்துக்கொள்ளும் பின்னம் (fraction) ஆகும். எனவே, K என்பது I/C ஆகும். இந்தக் கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில், பணத்தின் வேக வீதத்தின் முக்கியத்துவம் மாற்றப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக, மக்களின் ரொக்க விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் கோட்பாட்டிலும் அதிகமான M நேரிடையாக மொத்தத் தேவையைப் பாதிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பண அளிப்பைக் காட்டிலும், ரொக்கத்தின் தேவைக்கும் விருப்பத் திற்கும் முக்கியத்துவம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

கேம்பிரிட்ஜ் கோட்பாடும் பல கடுமையான விமர்சனங்களுக் குள்ளாகி இருக்கிறது. $MV^1 = P^1O$ அல்லது $M = KY$ என்ற எந்த வடிவத்தில் எழுதினாலும், இது சொன்னதையே வேறுவித வார்த்தைகளில் திருப்பிச் சொல்லும் ஒரு கருத்தாகவே இருக்கிறது. Y என்பதை இக் கோட்பாட்டில் நுழைத்து இருப்பதால், பண வருமானத்தின் மாறுதல் விலைமட்டத்தின் மாறுதலையும் மொத்த உற்பத்தியின் மாறுதலையும் பொறுத்திருக்கிறது. இக் கோட் பாட்டில் விலைகளின் மாறுதல் M அல்லது பண அளவின் மாறுதலைப் பொறுத்திருக்கிறது. இங்கே நாம் V^1 ஐயும் (Kஐயும்) O வையும் மாறிலிகளாகக் கருதுகிறோம். பணத்தைப் பரிவர்த்தனை செய்யும் சாதனமாகக் (Medium of exchange) கொண்டால்தான் K^1 மாறிலியாக இருக்க முடியும். பணத்தை நீர்மைச் சொத்தாகக் கருதி ஊக லாபப் பேரங்களுக்குப் பயன்படுத்தினால் K மாறித்தான் தீரவேண்டும். O உம் மாறுதல் அடையும். முழு வேலை உள்ள சமுதாயத்தில்தான் மொத்த உற்பத்தி அல்லது ‘O’ நிலைபெற்று இருக்க முடியும். பண அளவின்மூலமாக பண வருமான அளவை மதிப்பிடுவதும் பொருளற்றதாக இருக்கிறது. நுகர்ச்சி நாட்டம் மாறுவதனாலும், தொழில் துணிவோர்களின் எதிர்பார்ப்புகள் அதிகமாகும்போதும், மொத்த வருமானம் அதிகரிக்கும். எனவே, பண அளவு, அதிகமாகவே, வருமானம் அதிகரிக்கப் பல வாய்ப் புகள் இருக்கின்றன.

பண அளவுக் கோட்பாடும் கேம்பிரிட்ஜ் சமன்பாடும் பணம் பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தைக் குறிப்பிடுகின்றன. பொருளாதாரத்தில் பணம் நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் இணைக்கும் ஒரு சங்கிலியாக மாறிவிட்டது. கீன்ஸ் ஊக வாணிகத்திற்கான விருப்பத்தினால் பணம் தேவைப்படுகிறது என்று கூறினார். இதனால், பண அளிப்பு அதிகமாகும்போது அது நேரிடையாக மொத்தப் பணத் தேவையைப் பாதிப்பதில்லை. அந்தப் பண அளிப்பு ரொக்க விருப்பங்கள்மூலம் வட்டி வீதத்தை மாற்றி அதன்மூலம் முதலீட்டில் விளைவு ஏற்படுத்தி வருமான அளவை மாற்றும்.

ஆனால், சமீபகாலத்தில் இந்தக் கீன்ஸின் வாதத்திற்கு மறுப் புகள் ஏற்பட்டு இருக்கின்றன. பேராசிரியர் மில்டன் ஃபிரிட்மென் (Milton Friedman), ஹேரி ஜான்சன் (Hary Johnson) என்ற இரு வரும் கீன்ஸின் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பண அளிப்பு அதிக மாகும்போது, அது முழுவதும் ரொக்கத் தேவையாக மாறுவதில்லை. மாறாக, அதில் ஒரு பகுதி மார்க்கெட்டில் இருக்கும் பொருள் களுக்குத் தேவையை உண்டாக்கி விலைகளைப் பாதிக்கச் செய்

கின்றன. எனவே, இந்தக் கோட்பாட்டை அனுபவ ரீதியாக ஆராய்ந்து (Empirical research) பார்க்கவேண்டும்.

கீன்ஸும் பொது விலைகளும்

தொன்மைப் பொருளாதாரிகளின் வேலைக் கோட்பாடும், பண அளவுக் கோட்பாடும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. தொன்மைப் பொருளாதாரிகள் எப்போதும் முழு வேலையில் இயங்கும் (full employment) ஒரு பொருளாதாரத்தைப்பற்றியே நினைத்து வந்தார்கள். எனவே, அவர்கள் தங்கள் கவனத்தைத் தனிப்பட்ட நிறுவனம், தனிப்பட்ட நுகர்வோன், தனிப்பட்ட தொழில் துணிவோன் முதலிய சிற்றியல் பொருளாதாரப் பிரச்சனைகளிலேயே ஆழ்ந்திருந்தார்கள். பொது விலைகளை விளக்குவதற்குப் பண அளவுக் கோட்பாட்டைப் பயன்படுத்தினார்கள். ஆனால் கீன்ஸ், விலைகளைத் தன் பொதுக் கோட்பாட்டின் (General theory) உள்ளடக்கமாக மாற்றிவிட்டார். பொருளாதார நடவடிக்கைகளின் பலப்பல கட்டங்களில் விலைகள் சேர்ந்து நிர்ணயம் செய்யப்படுகின்றன. இங்கே முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், விலைகள் பொருளாதார நடவடிக்கைகளின் பலப்பல கட்டங்களில் பலவிதமாக மாறும் தன்மையே யாகும். பண இருப்பானது, ரொக்க விருப்பத்தின்மூலமாக வட்டி வீதத்தை நிர்ணயம் செய்யப் பயன்படுகிறது. இதை நாம் சிறிது விரிவாக ஆராய்தல் வேண்டும். முழு வேலை இருக்கும்போது, இருக்கக்கூடிய வட்டி வீதத்தையும் விலை மட்டங்களையும் நாம் முதலில் எடுத்துக்கொள்வோம்.

IS கோடும் LM கோடும் முழு வேலை வருமானத்தில் ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளும்போது, பண மார்க்கெட்டு, உழைப்பு மார்க்கெட்டு, மற்றும் உற்பத்தி மார்க்கெட்டு ஆகியன சமநிலையில் இருக்கின்றன. இதைக் கீழ்க்கண்டவாறு வரைபடம் 36 மூலம் விளக்கம் செய்யலாம்.

IS வளைகோடும், LM வளைகோடும் முழுவேலை வருமானத்தில் ஊடறுக்கும்போது ஏற்படும் வட்டிவீதத்திற்கு இயற்கையான வட்டிவீதம் (Natural rate of interest) என்று பெயர். IS கோடும் LMo கோடும் Y* என்ற முழுவேலை வருமானத்தில் சந்திக்கின்றன. OY* என்பது, முழுவேலை வருமானம் ஆகும். oi_0 என்பது இயற்கையான வட்டிவீதம் ஆகும். Y* என்ற வருமானத்தில் இயற்கையான வட்டிவீதமும், மார்க்கெட் வட்டிவீதமும் ஒன்றாக இருக்கின்றன.

இதுபோன்ற சமயத்தில், பண அளிப்பு அதிகமாகிறது என்று வைத்துக்கொள்வோம். இதனால் LM வளைகோடு கீழ்நோக்கி வலப்பக்கமாகப் பெயர்ந்து செல்கிறது. இதை LM_1 வளைகோடு மூலம் காட்டியிருக்கிறோம். இங்கே மார்க்கெட் வட்டிவீதம் oi_1 என்று கீழ்நோக்கிக் குறைகிறது. இக் குறைந்த மார்க்கெட் வட்டி



முழு வேலை பொதுச் சமனபாடு
(உண்மை மதிப்புகளில்)

படம் 36

வீதத்தில், பொதுச் சமநிலை பாதிக்கப்படுகிறது. வட்டிவீதம் குறைவாக இருப்பதால், முதலீடு தூண்டிவிடப்பட்டு அதிகரிக்கிறது. எனவே, உற்பத்திப் பொருள்களுக்குத் தேவை அதிகரிக்கிறது. Y^*Y_1க்கு மொத்தப் பணத்தேவை அதிகரிக்கிறது. எனவே, பொது விலைகள் அதிகரித்துப் பணத்தின் உண்மை மதிப்பு $MS = M/P$ குறையத் தொடங்குகிறது. பணத்தின் உண்மை மதிப்புக் குறைவதால், பணத்தின் தேவை அதிகரிக்கிறது. இதனால், LM_1 கோடு மறுபடியும் பெயர்ந்து, LM_0க்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே, கீன்ஸின் முழு வேலைக்கான கோட்பாடும் தொன்மைப் பொருளாதாரிகளின் விலைவாசிகள் கோட்பாடும் ஒத்து இருந்தபோதிலும், கீன்ஸின் கோட்பாட்டில் ஊக லாபத்திற்கான ரொக்க விருப்பமும் சேர்க்கப்பட்டிருப்பது ஒரு சிறப்பான இயல்பாகும்.

நாம் மொத்த அளிப்புக் கோட்டையும் (Aggregate supply curve) மொத்தத்தேவைக் கோட்டையும் போட்டுச் சராசரி விலைகளைப் பொருளாதார நடவடிக்கைகளின் பல கட்டங்களில் எப்படி

மாறுகிறது என்பதை வரைபடம்மூலம் விளக்கமுடியும். மொத்தச் செலவை, மொத்த உற்பத்தியால் வகுத்தால் சராசரி விலைமட்டம் தெரியவரும்.



படம் 37

Z என்பது, மொத்த அளிப்புக் கோடாகும். D_1 D_2 D_3 D_4 மொத்தத் தேவைக்கோடுகள் ஆகும். Z என்ற மொத்த அளிப்புக் கோட்டின் நியமப்பாதையில் உள்ள ஒவ்வொரு புள்ளியும் கொடுக்கப்பட்ட மொத்த உற்பத்தியைச் செய்வதற்குத் தொழில் துணிவோர்களால் மிகக் குறைந்த அளவுக்கு எதிர்பார்க்கும் வரவைக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, ON_1 உற்பத்தி செய்யக் குறைந்தது CC_1 செலவாகிறது. எனவே, சராசரி விலைகள்,

$$\frac{\text{மொத்தச் செலவு}}{\text{மொத்த உற்பத்தி}} = \frac{C_1 N_1}{O N_1}$$

மொத்த உற்பத்தி ON_2க்கு அதிகரிக்கும்போது, உற்பத்தி அதிகரித்தாலும், சராசரி விலைகள் மாறுமல் இருக்கின்றன. ஏனென்றல், மொத்த அளிப்புக் கோட்டின் செறிவு அதுவரை சமமாக இருக்கின்றது. ON_2க்குப் பின்னர், மொத்தச் செலவுகள் அதிகரித்து விலைகளும், ஏறுமுகமாகச் செல்கின்றன. ON_4 உற்பத்தி முழு அளவை அடைந்து நிலைபெற்றுவிடுகிறது. எனவே, ON_4க்கு மேல் விலைவாசிகள் வெகுவேகமாக அதிகரிக்கும்.

இதுபோன்ற வரைபடத்தில், முழுவேலைக்கு முன்னால் அதிகரிக்கும் மொத்தத் தேவையைப்பற்றியும் முழு வேலைக்குப் பின்னால் அதிகரிக்கும் மொத்தத் தேவையைப்பற்றியும் பிரித்து விலைவாசிகளைப் பல பொருளாதாரக் கட்டங்களாகப் பாகுபடுத்திப் பார்க்க முடிகிறது. இது கீன்ஸின் பொருளாதாரத்தில் ஒரு சிறந்த அம்சமாகும். தொன்மைப் பொருளாதாரிகள் முழுவேலை எடுகோளை எப்போதும் வைத்துக் கொண்டிருந்ததனால் பொருளாதார மந்தங்களைப்பற்றியோ அல்லது முழுவேலைக்கு முன்னால் ஏற்படும் வேலையில்லாச் சமநிலையைப் பற்றியோ விளக்கங்கள் கூறினார்களில்லை. இதனால், கீன்ஸின் கோட்பாடு எல்லாவிதச் சமநிலைகளையும் விளக்கும் ஒரு பொதுக் கோட்பாடாக மாறிவிடுகிறது. ஆனால், இக் கோட்பாட்டிலும் சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. பணவீக்கத்திற்குக் காரணம் மொத்தத் தேவையானது, முழுவேலை உற்பத்தியைக் காட்டிலும் அதிகரித்துச் செல்வதே என்று கீன்ஸ் கோட்பாடுகள்மூலம் நாம் ஊகிக்கமுடியும். ஆனால், பண வீக்கம்



படம் 38

(inflation) மொத்தச் செலவு அதிகரிப்பதன்மூலமாகவும், ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. பெரிய தொழிற் சங்கங்கள் (Trade Unions) தங்களுடைய வலிமையால் கூலியையும் சம்பளத்தையும் உயர்த்தி அதற்கு ஈடாக உற்பத்தியை அதிகரிக்காமல் இருந்தால் செலவுகள் அதிகரித்துப் பணவீக்கம் ஏற்படக் காரணங்கள் இருக்கின்றன.

இதைக் மேற்கண்ட வரைபடத்தில் காட்டி இருக்கிறோம்.

OZ = அளிப்புக்கோடு

OZ^1 = செலவு ஏற்றத்தினால் பெயர்ச்சி செய்யப்பட்ட அளிப்புக்கோடு

D = மொத்தத் தேவை

உற்பத்தி ON-லிருந்து ON^1 ஆகக் குறைந்திருக்கிறது.

விலை ஏற்றம் $\frac{AN}{ON}$-லிருந்து $\frac{BN_1}{ON_1}$ ஆக அதிகரித்திருக்கிறது.

தொழிற்சங்கங்கள் தங்களுடைய சர்வாதீனப் பலத்தினால் கூலியை அதிகம் பெற்றுவிடுகின்றன. உற்பத்தி அதற்கு ஏற்றவாறு அதிகரிப்பதற்கில்லை. இதனால், மொத்த அளிப்புக் கோடானது, OZ-லிருந்து OZ^1க்குப் பெயர்ந்து இருப்பதை வரைபடம் 38 ல் காட்டியிருக்கிறோம். இதனால் உற்பத்தி ON-லிருந்து ON^1ஆகக் குறைந்திருக்கிறது. விலை முதலில்,

$\frac{ON}{AN}$ ஆக இருந்தது. பின்னர் $\frac{ON^1}{BN}$ ஆக உயர்ந்திருக்கிறது.

மொத்தச் செலவு அதிகரிப்பதன்மூலம், பண வீக்கம் ஏற்படும் என்பதை இப் படம் விளக்குகிறது. இதுபோன்ற ஆய்வினால் நாம் வேறு சில முடிவுகளுக்கு வரவேண்டியிருக்கிறது. முழுவேலை ஏற்படுவதற்கு முன்னமேயே பணவீக்கம் ஏற்படும் நிலை மொத்த அளிப்புக்கோடு பெயர்ச்சியினால் ஏற்பட்டிருக்கிறது. எனவே, விலை ஏற்றத்தைத் தேவைப் பக்கமாகவும், அளிப்பு வழியாகவும் ஆராய வேண்டும். இதுபற்றி விளக்கமாக நாம் பணவீக்கம் என்ற அதிகாரத்தில் பார்ப்போம்.

14. கீன்ஸும் தொன்மைப் பொருளாதாரிகளும் ஓர் ஒப்பீடு

நாம் இந்த அத்தியாயத்தில் தொன்மைப் பொருளாதாரிகளின் கூற்றுகளைக் கீன்ஸின் கூற்றுகளுடன் சமன்பாடுகளின் வாயிலாக ஒப்பிட்டு இருவரும் எந்த அளவிற்கு மாறுபட்டிருந்தனர் என்பதை ஆராய்வோம். கீன்ஸால் வழங்கப்பட்ட கருத்துகள், பெரும்பாலும் தொன்மைப் பொருளாதாரிகளின் கூற்றுகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்றும், பொருளாதாரத்திற்கு அவர் ஆற்றிய தொண்டு அந்த அளவிற்குப் போற்றக் கூடிய ஒன்று அல்லவென்றும் பலர் வாதிடுகின்றனர். இக் கண்ணோட்டம் எந்த அளவிற்கு உண்மை செறிந்தது என்பதை நாம் ஆராய்வோம்.

தொன்மைப் பொருளாதாரிகளின் கூற்றுகள்	கீன்ஸின் கூற்றுகள்
1. $M = lPY$	$M = lPY + L(i)$
2. $y = y(N)$	$y = y(N)$
3. $\frac{dy}{dN} = \frac{W}{P}$	$\frac{dy}{dN} = \frac{W}{P}$
4. $N = N\left(\frac{W}{P}\right)$	$W = Wo$
5. $S = S(i)$	$S = S(Y)$
6. $I = I(i)$	$I = I(r)$
7. $S = I$	$S = I$

தொன்மைப் பொருளாதாரிகளின் கருத்துகளும், கீன்ஸின் கருத்துகளும் சமன்பாடுகள் வாயிலாகக் முன் பக்கத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

இதே கருத்துகளை நாம் வரைபடம் மூலமாகவும் விளக்கலாம்.



படம் 39

தொன்மைப் பொருளாதாரிகளின் கூற்றுகள்

நாம் தொன்மைப் பொருளாதாரிகளின் முதற் சமன்பாட்டை எடுத்துக்கொள்வோம். M = lPY, இங்கு வருமானம் Y ஆனது, முழுவேலை வருமானமாக (full employment income) இருப்பதால் அது மாறுபடுவதற்குக் காரணமில்லை. ஆகவே, அஃது ஒரு மாறு (constant) எண்ணிக்கை ஆகும். l என்பது பேரங்களுக்காக



படம் 40

கீன்ஸின் கூற்றுகள்

வைத்திருக்கப்படும் பணத்தின் அளவாகும். வருமானம் மாறாமல் இருப்பதால், l-ன் அளவு மாறாமலுள்ளது. ஆகவே, M அதிகரித்தால், அஃதாவது பண அளிப்பு அதிகரித்தால், அது Pஐ விலைவாசியை அதிகரிக்கிறது. ஆகவே, இரண்டு பக்கங்களும் எப்போதும் சம நிலையில் உள்ளன. தொன்மைப் பொருளாதாரிகளின் பண அளவுக் கோட்பாட்டை நாம் முன்னரே கண்டோம். அவர்கள் பொருளாதாரமானது, எப்பொழுதும் முழுவேலைப் பகுதியில் இயங்கிக் கொண்டிருப்பதால், பண அளிப்பின் அதிகரிப்பு, உண்மை உற்பத்தியை (real output) அதிகரிக்கிறது. அது விலையைத்தான் அதிகரிக்கும் என்று கூறினர்.

இரண்டாவது சமன்பாடு y = y (N) உற்பத்திச் சார்பைக் (Production function) குறிக்கிறது. நாட்டு வருமானமானது, வேலை வாய்ப்பைப் பொறுத்திருக்கிறது. இங்கு வருமானமும் முழு வேலை வாய்ப்பு வருமானம்; வேலையும் முழுவேலை அளவாகும்.

மூன்ருவது சமன்பாடான $\frac{dy}{dN} = \frac{W}{P}$ என்பது இலாப உச்சத்தின் அளவைக் (Profit maximization) குறிக்கிறது. அஃதாவது உழைப்பின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (Marginal Physical Productivity of Labour) உண்மை ஊதியத்திற்குச் சமமாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் உற்பத்திக் காரணிகளிடமிருந்து பெறப்படும் பயன்பாடு உச்சமானதாக இருக்கமுடியும்.

நான்காவது சமன்பாடு, உழைப்பின் அளிப்பைக் குறிக்கிறது. உழைப்பின் அளிப்பு உண்மை ஊதியத்தைப் பொறுத்திருக்கிறது.

ஐந்தாவது, ஆருவது சமன்பாடுகளான S = S (i) I = I (i) என்பன சேமிப்பும் மூலதனமும் வட்டிவீதத்தைப் பொறுத்திருக்கின்றன என்பதைக் குறிக்கிறது.

ஏழாவது சமன்பாடு, ஓர் ஒற்றுமைச் சமன்பாட்டைச் சமநிலை ஏற்படவேண்டிய நிபந்தனையைக் குறிக்கிறது (I = I). ஒரு பொருளாதாரம் சமநிலையில் இருக்கவேண்டுமாஞல், சேமிப்பும் முதலீடும் சமநிலையில் இருக்கவேண்டும்.

இனி, கீன்ஸின் கூற்றுகளை ஆராய்வோம். முதல் சமன்பாடு M = lPY + L (i) ஆகும். இங்கு அவர், ஊகலாப நோக்கத் திற்கான பண ஒதுக்கீட்டைப் பேரங்களுக்காகத் தேவைப்படும் பண அளவோடு சேர்த்திருக்கிருர். பேரங்களுக்காகத் தேவைப்படும் பணம், வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியாகும். ஆஞல், மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை ஊகலாபத்திஞல் கிடைக்கப்பெறும் பயனை அனுபவிக்க ஒதுக்கீடு செய்கின்றனர். வட்டிவீதம் அதிகரிக்கும்போது, பத்திரங்களின் விலை குறைகிறது. அப்பொழுது பத்திரங்களை வாங்கி, வட்டிவீதம் குறையும்போது, அஃதாவது, பத்திரங்களின் விலை அதிகரிக்கும்போது விற்று இலாபம் அடைகின்றனர். ஆஞல், ஊக இலாப நோக்கத்தைத் தொன்மைப் பொருளாதாரிகள் தங்கள் சமன்பாட்டில் சேர்க்கவில்லை.

இரண்டாவது, மூன்ருவது சமன்பாடுகள், தொன்மைப் பொருளாதாரிகளின் சமன்பாட்டிலிருந்து எவ்விதத்திலும் மாறுபட்டிருக்கவில்லை.

ஆஞல், நான்காவது சமன்பாடான உழைப்பின் அளிப்பு, தொன்மைப் பொருளாதாரிகளைப் பொறுத்தவரை உண்மைக் கூலியைப் பொறுத்திருக்கிறது. ஆஞல், கீன்ஸின் கருத்து

யாதெனில், கூலியை ஓரளவிற்குமேல் குறைக்க முடியாது. சக்தி வாய்ந்த தொழிற்சங்கங்கள் இருக்கும் இக் காலத்தில் ஊதியத்தைக் குறைப்பது என்பது முடியாத காரியமாகும். ஆகையால், அவர் வேலை வாய்ப்பை அதிகரிக்க பண மாயையை (money illusion) உபயோகிக்கவேண்டும் என்று கூறினர். ஆகையால் அவரைப் பொறுத்தவரை உழைப்பின் அளிப்பு உண்மைக் கூலியைப் பொறுத்தது அன்று. அது பண மாயையால் சிக்குண்டு பணக் கூலியையே பொறுத்திருக்கிறது. இங்குப் பணக் கூலி அதிகரிப்புக் குறைவாகவும், பொருள்களின் விலை அதிகரிப்பு அதிகமாகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் உண்மைக் கூலி குறைக்கப் பட்டு வேலையின் அளவை அதிகரிக்க முடியும்.

ஐந்தாவது சமன்பாடான சேமிப்பு, வட்டியைப் பொறுத் திராமல் வருமானத்தைப் பொறுத்திருக்கிறது. இது மிகவும் உண்மை செறிந்த கோட்பாடாகும். நமக்குச் சேமிக்கும் ஆவல் இருந்தாலும் வருமானம் அதிகமாக இருந்தால்தான் சேமிக்க முடியும். வட்டி வீதம் அதிகமாக இருக்கிறது என்ற ஒரே காரணத் திற்காகச் சேமிக்கும் சக்தி நமக்கு வந்து விடாது. மேலும், சேமிப்பு என்பது, நமக்கு வயதான காலத்தில் பயன்படவும் பிள்ளைகளின் படிப்புக்கும் எதிர்காலத்திற்கும் உபயோகப்பட வேண்டும் என்பதற்காகவும்தான் செய்யப்படுகிறது. இந்த நோக்கங்கள் வட்டியை அடிப்படையாகக்கொண்டு பிறப்பதில்லை. ஆகவே, தொன்மைப் பொருளாதாரிகளின் கூற்று ஒப்புக் கொள்ளும் படியாக இல்லை. கீன்ஸின் கருத்து இங்கு முற்றிலும் பொருந்து வதாக உள்ளது.

ஆறுவது சமன்பாடான மூலதனம் வட்டி வீதத்தைவிட முதலீட்டு இறுதிநிலைத் திறனைத்தான் (Marginal Efficiency of Capital) பொறுத்திருக்கிறது. எதிர்பார்க்கப்படும் இலாபம் (expected yield) அம் மூலதனத்தை வாங்க ஆகும் செலவைவிட (Supply Price of Capital) அதிகமாக இருந்தால் நாம் அதில் முதலீடு செய்யலாம். ஆனல், இங்கு நாம் வட்டிவீதத்தை முற்றிலும் ஒதுக்கிவிடும் நிலையில் இல்லை. நம் கையில் 10,000 ரூபாய் இருக்கின்றன என்றுல், அதை வட்டிக்கு விட்டுக் கிடைக்கப்பெறும் வருமானம் வருடத்திற்கு 2,000 என்று கொள்வோம். ஆனல், அதையே ஓர் இயந்திரம் வாங்க உபயோகித்து அவ் வியந்திரத் திலிருந்து வருடத்திற்குக் கிடைக்கப்பெறும் லாபம் 3,000 என்று கொள்வோம். இதிலிருந்து தெரிவது என்னவென்றுல், வட்டிக்கு விட்டுக் கிடைக்கும் லாபத்திலிருந்து, இயந்திரத்தை வாங்குவதனல் கிடைக்கும் லாபம் அதிகமாக இருக்கிறது. இங்கு வட்டிவீதம்

லாபத்தை ஒப்பிட்டுப் பார்க்க உதவியாக உள்ளது. வட்டிவீதம் இன்றி, மூலதனத்திலிருந்து கிடைக்கப்பெறும் லாபம் அதிகமா, குறைவா என்று நாம் உறுதியாகக் கூற இயலாது. ஆகவே, வட்டி வீதம், முக்கியப் பணியை ஆற்றினாலும், மூலதனம், முதலீட்டுத் திறனைத்தான் அதிகம் பொறுத்திருக்கிறது. கீன்ஸின் கருத்து யாதெனில், வட்டிவீதமும் முதலீட்டு இறுதி நிலைத்திறனும் சமமாகும்வரை, முதலீடு செய்யப்படும் என்பதாகும். அப்பொழுதுதான் நாம் அந்த உற்பத்திக் காரணியிடமிருந்து உச்ச இலாபத்தை (Maximum profit) அடைகிறோம்.

ஏழாவது ஓர் ஒற்றுமைச் சமன்பாடு ஆகும். இது தொன்மைப் பொருளாதாரிகளின் கூற்றிலிருந்து மாறுபட்டதன்று.

நாம் மேற்கூறிய எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கும் போது, சமன்பாடுகளின் ஒப்புமையில் கீன்ஸ் அதிகம் மாறுபட்டு இல்லாதபோதும், அவர் எடுத்துக் கூறியுள்ள கருத்துகள் உபயோக முள்ளவையாகும். அவர் பொருளாதாரம் எப்பொழும் முழு வேலைக்குக் கீழேதான் வேலை செய்கிறது என்ற உண்மையை எடுத்துக் கொண்டு, பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்ந்தார். இல்லாத முழுவேலையைக் கற்பனை செய்துகொண்டு, பிரச்சனைகளை அணுகியதால், தொன்மைப் பொருளாதாரிகள், தற்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சனைகளைத் தீர்க்கும் வழிவகைகளைச் சிந்தித்துப் பார்த்தார்கள் அல்லர். ஆகவே, அவர்களின் கோட்பாடுகள், தற்கால பிரச்சனைகளைத் தீர்க்க எந்த வகையிலும் உதவி புரியவில்லை.

ஆனால், கீன்ஸ் பொருளாதாரத்தில் காணப்படும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு உண்மை உலகுக்குப் பொருந்தும் கோட்பாடுகளை வகுத்தார். ஆகையால் அவரது தொண்டு, அதிக அளவிற்குப் போற்றக்கூடிய ஒன்றில்லை என்று பலர் கருதுகிறார்களானாலும், அவர்களுடைய கொள்கைகள், நவீனகாலப் பிரச்சனைகளைத் தீர்க்க உபயோகப்படுகின்றன என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது.

15. பன்னாட்டு வாணிபமும் வருமான அளவும்

(International Trade and the Level of Income)

நாம் இதுவரை ஓர் எளிமையான பொருளாதாரத்தையும் அதன் சமநிலையையும் பார்த்தோம்.

Y = C + I என்ற பொருளாதார அமைப்பில் S = I என்பது சமநிலைக்கு ஒரு கண்டிப்பான நிபந்தனைஆகும். இது போல, அரசாங்கச் செலவை இந்தப் பேரியல் அமைப்பில் சேர்த்தால், Y = C + I + G என்றாகும். இங்கு S + T = I + G என்பது சமநிலை ஏற்படுவதற்கு வேண்டிய ஒரு நிபந்தனையாகும். இங்கு I + G என்ற முதலீட்டு அரசாங்கச் செலவுகளை ஈடு செய்யும் செலவுகள் என்றும் (Compensatory) expenditure), S + T என்பதைக் கசிவுகள் (Leakeges) என்றும் சொல்வார்கள். நாம் பன்னாட்டு வாணிபத்தையும் எடுத்துக் கொண்டால், Y = C + I+G + (X — M) என்று குறிப்பிடும் போது நாம் முழுப் பொருளாதாரப் பேரியல் மாதிரியைக் கணக்கில் கொள்கிறோம். இங்கு வருமானம் என்பது நுகர்ச்சிச் செலவு, முதலீட்டுச் செலவு, அரசாங்கச் செலவு மற்றும் ஏற்று மதியிலிருந்து இறக்குமதியைக் கழித்த மீதம் ஆகிய எல்லா வற்றையும் சேர்ப்பதன்மூலம் கிடைக்கிறது. இங்கே சமநிலை ஏற்பட ஈடு செய்யும் செலவுகளுக்கும், கசிவுகளுக்கும் கீழ்க் கண்ட உறவு ஏற்படவேண்டும்.

$$I + G + X = S + T + M$$

எனவே, ஏற்றுமதி என்பது முதலீடு, அரசாங்கச் செலவுகள் போன்று ஈடுகட்டும் செலவாகும். இதன்மூலம் வருமானம் அதிகரிக்கும். இறக்குமதி என்பது, சேமிப்பு, வரி

முதலிய கசிவுத் தன்மையைப் பெற்றிருக்கிறது. இதைப் பற்றி இங்கு விவரமாகக் கவனிக்கவேண்டும்.

வெளிநாட்டு வியாபாரத்தையும், எடுத்துக்கொண்ட பின்னர், சமநிலை வருமானம், கீழ்க்கண்டவற்றைப் பொறுத்திருக்கிறது.

$$Y = C + I + G + (X - M) \text{ மேலும், } M = Ma + mY.$$

இங்கு Ma என்பது வருமானம் 0 (zero) வாக அல்லது Yo ஆக இருக்கும்போது செய்யப்படும் இறக்குமதியைக் குறிக்கிறது. இதை ஒரு மாறு எண்ணிக்கையாகக் கொள்வோம். 'm' என்பது இறுதிநிலை இறக்குமதி நாட்டத்தைக் குறிக்கிறது. அஃதாவது வருமானம் $\triangle Y$ அதிகரித்தால், அதில் எத்தனைச் சதவிகிதம் இறக்குமதிக்குப் பயன்படுத்தப்படும் என்பதைக் குறிக்கிறது. ஆகவே, இப்பொழுது நாம் வெளிநாட்டுப் பெருக்கியின் அளவைக் கணக்கிடுவோம்.

$$Y = C+I+G+(X - M)$$

$$Y = Ca+C(Y - T) + I+G+X - (Ma+mY)$$

$$Y - CY+mY = Ca - CT+I+G+X - Ma$$

$$Y(1 - C+m) = Ca - CT+I+G+X - Ma$$

$$Y = \frac{Ca - CT+I+G+X - Ma}{1 - C+m}$$

$$Y = \frac{1}{1 - C+m} \times \underbrace{(Ca - CT+I+G+X - Ma)}$$

இதில் ஏதேனும் ஒரு காரணி $\triangle$ (Delta) அளவுக்கு அதிகரித்தால் வருமானமானது $\triangle$ factor $\times \frac{1}{1- C+m}$ என்ற வீதத்தில் அதிகரிக்கும். நாம் மேற்கூறியனவற்றுக்குச் சில அளவுகள் கொடுத்துப் பெருக்கியின் அளவைக் கண்டுபிடிப்போம்.

இறுதிநிலை நுகர்வு நாட்டம் $= \frac{8}{10}$

இறுதிநிலை இறக்குமதி நாட்டம் $= \frac{1}{10}$

$\triangle X$ = 18 லட்சம்.

$$Y = \frac{1}{1 - \frac{8}{10} + \frac{1}{10}} \times 18,$$

$$= \frac{10 - 8 + 1}{10} = \frac{3}{10} = \frac{10}{3} = 3.3$$

$$= 3.3 \times 18 = 59.4 \text{ லட்ச ரூபாய்.}$$

வெளிநாட்டு வியாபாரம் இல்லாதபோது, பெருக்கியின் அளவு 5 ஆகும். ஏனெனில் $\frac{1}{1 - b} = \frac{1}{- .8} = \frac{1}{.2} = \frac{10}{2} = 5.$ ஆனால் இறக்குமதியின் காரணமாகப் பெருக்கியின் அளவு 3.3க்குக் குறைந்து விடுகிறது. ஏற்றுமதியின் அளவு 18 லட்ச ரூபாய் என்று கொண்டால், இறக்குமதி இல்லாதபோது வருமானம் $18 \times 5 = 90$ லட்சம் ரூபாய்க்கு அதிகரிக்கிறது. ஆனால், இறக்குமதியின் காரணமாக வருமானம் 59.4 லட்சம் ரூபாய்க்குத்தான் அதிகரிக்கிறது. மிஞ்சியுள்ள 30.6 லட்சம் ரூபாய் வெளிநாட்டு வருமானப் பெருக்கத்திற்கு நாம் அளித்து விடுகிறோம்.

இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், வெளிநாட்டு வியாபாரத்தினால் வருமானத்தின் அளவு பாதிக்கப்படுகிறது. இறுதிநிலை இறக்குமதி நாட்டம் அதிகரிக்க அதிகரிக்க, நம் நாட்டு வருமான அதிகரிப்பின் அளவு குறைகிறது. ஆகவேதான், இறக்குமதியை ஒரு கசிவாகக் கருதுகிறோம்.

வெளிநாட்டு வியாபாரத்தில் தொழிற்காப்பின் (Protection)- சார்பாகக் கூறப்படும் வாதங்களில் இது மிக முக்கியமானதாகும். நாம் எவ்வளவுக்கெவ்வளவு வெளிநாட்டுப் பொருட்களைத் தருவிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த நாட்டின் வருமானத்தைப் பெருக்கி, அந்த நாட்டில் வேலை வாய்ப்பு அதிகரிக்க உதவி புரிகிறோம். அந்த அளவிற்கு, நம் நாட்டு வருமானமும், நம் நாட்டிற்குக் கிடைக்கப்பெறும் வேலை வாய்ப்பும் குறைகிறது. ஆகவேதான் முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகள் (developing countries) இறக்குமதியின் அளவைக் குறைக்க விரும்புகின்றன.

அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையும் வருமான மாறுதல்களும்

(Balance of payments, Adjustment through Income Changes)

பொன் நாணயத் திட்டத்தில் (Gold Standard) அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையில் பற்றுக்குறை ஏற்பட்டால், அதைத்

தவிர்க்கத் தானுக இயங்கும் முறைகள் அங்குக் காணப்படு கின்றன. பற்ருக்குறை ஏற்பட்டிருக்கும் நாட்டிலிருந்து உபரி நாட்டிற்குத் தங்கம் அனுப்பப்படுகிறது. எனவே, உபரி நாட்டில் மையப்பாங்கு, தன் நாணயச் செலாவணியை அதிகப்படுத்து கிறது. பற்ருக்குறை நாட்டில் உள்ள மையப்பாங்கு, நாணயச் செலாவணியைக் குறைக்கவேண்டி இருக்கிறது. பற்ருக்குறை நாட்டில் விலைவாசிகள் சரியும். உபரி நாட்டில் விலைவாசிகள் உயரும். இந்த விலைவாசிகளின் மாறுதல்களுக்குத் தொன்மைப் பொருளாதாரிகள் மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். விலைவாசிகளின் குறைவினுல் உபரி நாட்டுக்கும், பற்ருக்குறை நாட்டுக்கும் உள்ள வர்த்தகப் பேரங்கள் மாறிப் பற்ருக்குறை நாடு ஏற்றுமதிகளைப் பெருக்கித் தன் பற்ருக்குறையை நீக்கும் நடை முறையில் குறைந்த பணக் கூலியை ஒத்துக்கொள்ளத் தொழிலாளர்கள் சம்மதிக்கவில்லை. பண ஊதியத்தில் வெட்டு ஏற்படுவதைக் காட்டிலும், அவர்கள் வேலையின்மையை விரும் பினர். எனவே, ஏற்றுமதி இறக்குமதி விலைகள் மாறுவது என்பது காரியபூர்வமாக ஆகக் கூடியதன்று.

அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை சமநிலை ஏற்பட வேண்டு மென்ருல், இரண்டுவிதமான கருவிகளைப் பயன்படுத்தவேண்டும். 1. அயல்நாட்டுப் பரிவர்த்தனை வீதத்தை (foreign exchange rate) மாற்றி அமைக்கவேண்டும்; அல்லது 2. கீன்ஸின் முறையைப் பின்பற்றித் தொடர்பான வருமானத்தை (relative income) மாற்றி அமைக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டை எடுத்துக்கொள்வோம். ஏற்றுமதி வரவு, உள்நாட்டின் வருமானத்தைப் பெருக்குவதோடல்லாமல், முதலீட்டுச் செலவு போன்று வரவை அதிகரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இறக்கு மதிக்குச் செலுத்தும் பணம், மற்ற நாடுகளின் வருமானத்தைப் பெருக்கி இங்கிலாந்து நாட்டின் வருமானத்தைக் குறைக்கிறது. எனவே, இறக்குமதிச் செலவானது, சேமிப்பைப்போன்று கசிவுத் தன்மையைப் பெற்றிருக்கிறது. ஏற்றுமதியானது வருமானத்தை அதிகரிப்பதுபோல, இறக்குமதி வருமானத்தைக் குறைக்கச் செய் கிறது. இறக்குமதி வருமானத்தோடு தொடர்புபடுத்தப்பட் டிருப்பதால், வருமானத்தில் ஏற்படும் மாறுதல்களும் இறக்குமதி களைப் பாதிக்கும். இங்கே இந்த உறவை நாம் சிறிது உன்னிப் பாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை வருமானத்தைப் பாதிப்பதைப்போல, வருமானம் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலையைப் பாதிக்கும். இந்த இரு முறை உறவுகளின் விவரத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் கவனிக்கப்போகிரேம்.

அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலைக்கும் நாட்டு வருமானத்திற்கும் உள்ள உறவைக் கவனிக்க நாம் எளிமையான மாதிரி ஒன்றை எடுத்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதனால் சேமிப்பு, முதலீடு, அரசாங்கச் செலவுகள் ஆகியவற்றினால் வருமானத்தின்மீது ஏற்படும் விளைவுகளை விலக்கி அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையை மாத்திரம் தனிமைப்படுத்தி ஆராய முடியும். இதற்காகக் கீழ்க்கண்ட எடுகோள்களை (Assumptions) நாம் வைத்துக்கொள்ளவேண்டி இருக்கிறது.

1. A என்ற நாட்டின் பன்னாட்டு வாணிபம் உலக வர்த்தகத்தின் மொத்த வாணிபத்தில் ஒரு சிறு பகுதியாக இருக்கிறது.

2. A என்ற நாடு முழுவேலை உற்பத்திக்குக் குறைவாகவே உற்பத்தி செய்கிறது என்று வைத்துக்கொள்வோம்.

3. முழுவேலைவரைக்கும், அதிகமான பொருளாதார நடவடிக்கைகளால், விலைவாசிகளின் மட்டம் பாதிக்கப்படுவதில்லை.

4. வெளிநாட்டுப் பரிவர்த்தனைவீதம் மாறாமல் நிலைபெற்று இருக்கிறது.

5. அங்கே அரசாங்கச் செலவுகளோ அல்லது முதலீட்டுச் செலவுகளோ, வரிகளோ இல்லை என்று வைத்துக்கொள்வோம்.

6. எல்லாவற்றையும் மில்லியன் £ களில் குறிப்பிடுவோம்.

7. வருமானம் £ 1000-ல் சமநிலையில் இருக்கிறது.

8. எல்லா வருமானமும் நுகர்ச்சிக்குச் (c) செலவு செய்யப்படுகிறது. அங்கே சேமிப்பில்லை. நுகர்ச்சி உள்நாட்டுப் பொருள்களாகவோ (cd) அல்லது இறக்குமதிப் பொருள்களாகவோ இருக்கலாம் (M). எனவே, Y = (cd) + M எல்லா இறக்குமதிகளும் இல்லத்துறைக்காக நடைபெறுகின்றன.

9. M = mY. Y என்ற வருமானத்தில் m என்ற ஒரு பின்னம் (fraction) இறக்குமதிக்குச் செலவிட்டதாகும். இதை இறக்குமதி நாட்டம் (Propensity to import) என்று குறிப்பிடவேண்டும். cd என்பது உள்நாட்டுப் பொருள்களில் செலவிடும் நுகர்ச்சி நாட்டம் ஆகும்.

10. m என்பது 0·2 என்று வைத்துக்கொள்வோம். எல்லா வருமானத்திற்கும் m = 0·2. ஆக இருப்பதால் சராசரி இறுதிநிலை

இறக்குமதி நாட்டமும் ஒன்றாகவே இருக்கின்றது. உள்நாட்டுப் பொருள்களின் நுகர்ச்சி நாட்டம் cd = 0·8 ஆகும்.

11. ஏற்றுமதியின் அளவீடு வருமானத்தைச் சார்ந்திருக்கவில்லை.

12. ஏற்றுமதியின் அளவு, வருமானத்திடமிருந்து சுதந்திரம் பெற்ற ஒரு மாறியாக இருக்கிறது.

இப்போதுள்ள வருமானத்தை, வருமான வட்ட ஓட்ட முறையில் கீழ்க்கண்டவாறு காட்டமுடியும்.



படம் 41

$$Y = Cd + X$$
$$= CdY + X.$$
$$\therefore Y(1-Cd) = X.$$
$$Y = \frac{X}{1-Cd}.$$
$$m = 1 - Cd.$$
$$Y = \frac{X}{m}$$

நாம் இனிமேல் சாதகநிலை கொடுப்பல் நிலையால் ஏற்படும் புதிய சமநிலை வருமானம் எவ்வளவு என்று கணக்கிடவேண்டும்.

நாம் ஏற்றுமதி 200-லிருந்து 400ஆக அதிகரிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இதனால் அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையில் மேலும் 200 சாதகமாகி இருக்கின்றன. இதனால் ஆரம்பக் கட்டத்தில் வருமானம் 1,000-லிருந்து 1,200 ஆக அதிகரிக்கிறது. இந்த வருமானம் இத்துடன் நின்றுபோய்விடுவதில்லை. மறுபடியும் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலையில் சமன்பாடு ஏற்படும்வரை வருமானம் அதிகரிக்கச்செய்யும். ஏற்றுமதி வருமானத்தின் மாறுதல் அங்குள்ள வெளிநாட்டு வர்த்தகப் பெருக்கியைப் பொறுத்திருக்கிறது (1/m).

$$\text{ஆகையால் } \Delta Y = \frac{\Delta X}{m} = \frac{200}{0{\cdot}2} = 1000$$

எனவே, புதுச் சமநிலை வருமானம் 2,000 ஆக மாறுகிறது. இறக்குமதி 400 ஆக உயர்கிறது. இதிலிருந்து இரண்டு கருத்துகள் நமக்குத் தெரிகின்றன.



படம் 42

1. அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை வருமானத்தை Y பாதிக்கிறது. 2. Y அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையை, இறக்குமதி, வருமானம்மூலம் பாதிக்கிறது.

இதை படம் 42-ல் வருமான வட்டத்தில் காட்டப்பட்டிருக்கிறது. முன் பக்கத்தில் காட்டியுள்ள படத்தில் Y = Cd + X.

இங்கே Y என்ற வருமானம் உள்நாட்டு நுகர்ச்சிச் செலவையும், ஏற்றுமதியால் வரும் வருமானத்தையும் கூட்டுவதால் கிடைக்கின்றது. ஏற்றுமதி 200 ஆக அதிகரித்ததால் வருமானம் 1,000-லிருந்து 2,000ஆக அதிகரித்திருக்கிறது.

அயல் நாட்டுச் செலுத்து இருப்புநிலை, வருமானம் சமநிலையில் இருக்கும்போது சமமாக இருக்குமா என்ற வினாவிற்கு நாம் பதில் அளிக்கவேண்டும். இதற்கு நாம் எல்லாவிதமான செலவுகளையும், பொருளாதாரக் கசிவுகளையும் சேர்த்து ஆராயவேண்டும்.



படம் 43

நாம் கீழ்க்கண்டவற்றை எடுகோள்களாக (assumptions) வைத்துக்கொள்வோம்.

1. X, I, G, என்பன தன்னிச்சையாக (autonomous) தூண்டப்படாமல் இயங்குகின்றன.

2. cd, M, S, T, இவையாவும் வருமானத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றன. எனவே, இவற்றின் நாட்டங்கள் (propensity)cd, m, s, t ஆகும்.

$$Y = cd + I + G + X$$
$$= cd. Y + I + G + X$$
$$Y - cd. Y = I + G + X$$
$$Y (1-cd) = I + G + X$$
$$Y = \frac{I + G + X}{1 - cd}$$

ஆனால் $cd + s + m + t = 1$

$$Y = \frac{I + G + X}{S + m + T}$$
$$Y (s + m + t) = I + G + X$$

அல்லது

$$S + M + T = I + G + X$$

பேரியல் பொருளாதாரத்தில் உள்ள எல்லாத் துறைகளும் நிறைந்த ஒரு முழு மாதிரியில் வருமானம் சமநிலையில் இருக்க மேற்கண்ட நிபந்தனைகள் கண்டிப்பாகத் தேவைப்படுகின்றன.

$I = G = X$ என்ற ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். இங்கு $I = 120$ ஆகவும், $G = 120$ ஆகவும், $X = 120$ ஆகவும் இருப்பதாக வைத்துக்கொண்டால், மொத்தச் செலவுகள் $I + G + X = 120 + 120 + 120 = 360$ ஆகிறது. அதுபோல் $s = 0{\cdot}05$ ஆகவும் $m = 0{\cdot}2$ ஆகவும், $t = 0{\cdot}15$ ஆகவும் இருந்தால், வருமானம் $Y = \frac{I + G + X}{(s + m + t)}$

$$Y = \frac{360}{0{\cdot}4} = 900$$

இந்த வருமானத்தில் $S = 45$ இது முதலீடு I யைவிடக் குறைவு.

$S = 45 < I \quad 120$

இறக்குமதி $180 >$ ஏற்றுமதி 120

வரிகள் $T\ 135 >$ அரசாங்கச் செலவுகள் 120

இச் சமநிலையில் தனியார் முதலீடு சேமிப்பைவிட அதிகமாகவும் இருக்கிறது. இது அரசாங்க உபரி பட்ஜெட்டினாலும் அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலையில் உள்ள பற்றாக்குறையினாலும் சமன்படுத்தப்படுகிறது.

16. அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலை - கணக்கு

நாம் இதுவரை வெளிநாடுகளுடன் உறவில்லாத ஒரு மூடிய பொருளாதாரத்தைப் பற்றியே பேசி வந்தோம். நாம் இந்த எடுகோளை விடுத்து, ஒரு திறந்த பொருளாதாரத்தை (open economy) பற்றி இங்குக் கவனிக்கவேண்டும். இந்தப் பொருளா தாரத்தில் பன்னாட்டு வாணிபமும், ஏற்றுமதியும் இறக்குமதியும் இருக்கும். இங்கே நாடுகளுக்கிடையே கடன் கொடுப்பதும், கடன் வாங்குவதும் இருக்கும். நாம் முதலில் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலைக் கணக்கைப்பற்றி ஆராய்வோம்.

ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலைக் கணக்கு, சுலபமான சுருக்க வடிவில் கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப் பட்டிருக்கிறது. அதில் அன்றாட நடப்புக் கணக்குகளும் முதலீட்டுக் கணக்குகளும் இடம் பெறும். அதில், உள்நாட்டில் இருப்போர் வெளிநாட்டு மக்களுடன் வைத்திருக்கும் நடவடிக்கைகள்பற்றி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு விவரம் இடம்பெறும். பொதுவாக ஆண்டுக்கு ஒருமுறை இக் கணக்குக் கொடுக்கப்படும். நாம் கீழே யுள்ள அட்டவணையில் இங்கிலாந்து நாட்டின் 1970 வது ஆண்டின் அயல் நாட்டுச் செலுத்து இருப்புநிலைக் கணக்கை அடுத்த பக்கத்தில் கொடுத்திருக்கிறோம்.

நடப்புக் கணக்கு (Current Account)

நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யும் பண்டங் களும் பணிகளும் அதற்கான வெளிநாட்டுச் செலாவணிச் செலவு களும் இதில் இடம்பெறும். இதுபோலவே, வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பண்டங்களும் பணிகளும், அதற்காக நாம் சம்பாதித்த வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கும் இதில் சேர்த்துக் கொள்ளப்படும். நடப்புக் கணக்கில் காட்டியிருக்கும் வர்த்த கத்தை இரண்டு விதமாகப் பிரித்து இருக்கிறோம். (1) புலனாகும்

	1963	1964	1965	1966	1967	1968	1969
அ. நடப்புக் கணக்கு :- (1) புலனாகும்-வர்த்தகம்,	— 80	— 519	— 237	— 73	— 552	— 643	— 141
(2) புலனாகா வர்த்தகம்.	+ 194	+ 124	+ 160	+ 116	+ 240	+ 324	+ 557
நடப்புக் கணக்கில் மீதம்	+ 114	— 395	— 77	+ 43	— 312	— 319	+ 416
ஆ. முதலீடும், இதர முதல் ஓட்டங்களும்.	— 103	— 289	— 308	— 564	— 560	—1010	+ 48
இ. மொத்த நாணய ஓட்டங்களும் அதிகாரப் பூர்வமாக நிதி அளித்தல் நடப்புக் கணக்கில் மீதம்	114	— 395	— 77	+ 43	— 312	— 319	+ 416
முதலீடும் இதர முதல் ஓட்டங்களும்.	— 103	— 289	— 308	— 564	— 560	—1010	+ 48
சமப்படுத்தும்	— 69	— 11	+ 32	— 26	+ 201	— 81	+ 279
மொத்தச் செலாவணி ஓட்டங்கள்.	— 58	— 695	— 353	— 547	— 671	—1410	+ 743
நிதி அளிக்கும் முறைகள். பன்னாட்டுப் பண நிதி.	+ 5	+ 357	+ 489	+ 15	— 339	+ 506	— 30
மற்ற பண நிதிகள்	—	+ 216	÷ 110	+ 294	+ 691	+ 790	— 669
டாலர் துறையிலிருந்து காப்பு நிதிக்கு மாற்றங்கள்.	—	—	—	+ 316	+ 204	—	—
அதிகாரப் பூர்வமான காப்பு நிதிகள்	+ 53	+ 122	+ 246	— 34	+ 115	+ 114	— 44
அதிகாரப் பூர்வமான மொத்த நிதி அளிப்பு	+ 58	+ 695	+ 353	+ 591	+ 671	+1410	— 743

வர்த்தகம் (Visible trade) பண்டங்களையும் பொருள்களையும் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்வதைப் புலனுகும் வர்த்தகம் என்று நாம் குறிப்பிடுகிறேம். பொருள்களும், பண்டங்களும் நாட்டைவிட்டு அரசியல் ரீதியான எல்லைகளைத் தாண்டிச் செல்வதை நாம் கண்களால் பார்க்க முடியும். ஆனல், பணிகளை (Services) நாம் காண்பதில்லை. மற்ற நாட்டு மக்கள் செய்யும் பணிகள் அரசியல் எல்லைகளைத் தாண்டி மற்ற நாடுகளுக்கு வரும்போது, அவற்றை நாம் எளிதாக உணர்வதில்லை. நாம் இவற்றையெல்லாம், புலனுகா வர்த்தகம் (Invisible trade) என்று கூறுகிறேம். வெளிநாடுகளில் அரசாங்கச் செலவுகள், நம் தூதுவர்கள் வெளிநாடுகளில் செய்யும் செலவுகள், கப்பல் பணிகள், ஆகாயவிமானப் பணிகள், தற்காப்புக்காக அன்னிய நாட்டுப் படைகளை வைத்துக்கொள்ளல், பாங்குவரவுகள், வட்டி, இலாபம், ஈவுத்தொகை முதலியவை வெளி நாட்டுக் கம்பெனிகளுக்குச் செல்லும்போது ஏற்படும் வெளி நாட்டுச் செலாவணி, சொந்தக்காரர்கள் வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணம் ஆகிய அனைத்தும் புலனுகா வர்த்தகத்தின் கீழ்வரும். புலனுகும் பண்டங்களின் ஏற்றுமதி, இறக்குமதியைக் கணக்கிட்டு அவற்றைக் கழிக்கக் கிடைக்கும் வித்தியாசம் சாதக வாணிக இருப்புநிலை (Balance of Trade) என்று கூறுவார்கள். இந்தக் கணக்கில், புலனுகா வர்த்தக வருமானத்தைச் சேர்க்கும்போது, கிடைப்பது நடப்புக் கணக்கில் மீதம் (Current Balance) ஆகும். இப் புலனுகும் வர்த்தகம், புலனுகா வர்த்தகம் ஆகிய இரண்டையும் சேர்த்து நடப்புக் கணக்கில் உபரி ஏற்பட்டால் அந்த நாட்டின் தங்கம் மற்றும் வெளி நாட்டுச் செலாவணியின் காப்புநிதி அதிகரிக்கும். இந்த நடப்புக் கணக்கில் பற்றுக்குறை ஏற்பட்டால், தங்கம் மற்றும் வெளி நாட்டுச் செலாவணியின் காப்புநிதி குறையத் தொடங்கும். இந்த உபரியும் பற்றுக்குறையும் ஒவ்வோர் ஆண்டும், நடப்பு வருமானத்தையும், செலவையும் ஒட்டி மாறுதல் அடையும்.

முதலீடும், இதர முதல் ஓட்டங்களும்

நடப்புக் கணக்குகளின் நடவடிக்கைகள் மட்டும் ஒரு நாட்டின் வெளி வர்த்தக உறவில் இருந்தால், அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை சிக்கல் இல்லாமல் சுலபமாக இருக்கும். £ 100 மில்லியன் உபரி என்றல், வெளிநாட்டுக் கடன்காரர்கள். பன்னுட்டு பணநிதிமூலம் குறுங்கால கடன்களை எழுப்பிப் பிரிட்டனுக்குக் கொடுத்து,அதன்மூலம் பிரிட்டனின் வெளிநாட்டுச் செலாவணியின் காப்புநிதி அதிகரிக்கும். £ 100 மில்லியன் பற்றுக்குறை பிரிட்டனின் காப்புநிதியைக் குறைக்கும்.

வெளிநாட்டுச் செலாவணியின் காப்புநிதியை அதிகரிக்க முடியாமல் வேறு சில பிரச்சனைகள் இருக்கின்றன. பிரிட்டனை விட்டு வெளியேறிச் செல்லும் மூலதனங்கள், வெளிநாடுகளுக்குக் கொடுக்கும் கடன்கள், பிரிட்டனுக்கு வரும் கடன்கள் ஆகியவை வெளிநாட்டுச் செலாவணி ஓட்டத்தை வெகுவாகப் பாதிக்கின்றன. இதை நாம் பட்டியல் B, பிரிவில் காட்டி இருக்கிறோம். பட்டியலில் (இ) பகுதியில் இரண்டையும் இணைத்து மொத்தப் பற்றுக் குறையையும், மொத்த உபரியையும் தெளிவாக ஆண்டுக்கு ஆண்டு காட்டி இருக்கிறோம். மொத்தச் செலாவணியின் ஓட்டங்கள் (Total Currency Flow) என்று அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலைக் கணக்கில் காட்டி இருக்கிறோம். நாம் முன்னதாக நடப்புக் கணக்கின் மீதத்தையும் முதலீட்டுக் கணக்கின் மீதத்தையும் முழுமைப்படுத்தி, அடிப்படையான செலுத்து நிலையைக் (Basic Balance of Payment) காட்டி இருக்கிறோம். இதனால் ஒரு நீண்ட கால ஆய்வை இக் கணக்கு நமக்குக் கூறுகிறது என்று சொல்ல முடியும்.

பிரிட்டனின் வெளிநாட்டு மூலதனங்கள் எல்லாம் ஐரோப் பாவில் குறுங்காலக் கடன்கள்மூலம் நிதி அளிக்கப்பட்டவைகளாக இருக்கின்றன. கடைசியாக, அதிகாரப் பூர்வமான முறையில் நிதி அளித்தல் (official financing) என்பது என்ன என்று பார்ப்போம். மொத்தச் செலாவணியில் இழப்புகளை அரசாங்கம், தான் சேர்த்து வைத்திருக்கும் பாதுகாப்பு நிதியிலிருந்தோ, அல்லது பன்னாட்டுப் பணநிதியில் கடன் வாங்கியோ அதைச் சரிகட்ட வேண்டும். இந்த அதிகாரப் பூர்வமான நிதி அளிப்பில் இருக்கும், +, — போன்ற குறிகளை நாம் எச்சரிக்கையோடு பயன்படுத்த வேண்டும். பொதுவாக + என்றால் சாதகமான நிலை என்றும், — என்றால் பாதகமான நிலை என்றும் நாம் நினைக்கிறோம். ஆனால், இந்தக் கணக்கியல் குறிகள், இங்கே வேறு விதமான கருத்தை நமக்குத் தருகின்றன. எடுத்துக்காட்டாக, 1963-ம் வருடக் கணக்கில் அதிகாரப் பூர்வமான மொத்த நிதியில் + 58 என்று காட்டியிருப்பது, பிரிட்டன் தன் செலாவணிக் கடன்களுக்குக் கடன் வாங்கியிருக்கிறது என்று பொருள். இதைப்போல 1969ஆம் வருடம் காணப்படும் — 743 என்பது, பிரிட்டனுக்கு மிகவும் நல்லது. அவ் வருடம் பிரிட்டன் மற்ற நாடுகளிலிருந்து, அந்நியச் செலாவணியைப் பெற்றுத், தன் காப்பு நிதிகளையும் தங்க இருப்பையும் அதிகப் படுத்தி இருக்கின்றது என்பது பொருளாகும். இவ் வதிகாரப் பூர்வமான நிதி அளிப்பை, மொத்தச் செலாவணி ஓட்டங்களுடன் ஒப்பிட்டால், ஒரு நாட்டின் உண்மை நிலையும் வெளிநாட்டின் செலாவணி நிலையும் தெரியும்.

நாம் முன்னர் விளக்கிய பட்டியலிலிருந்து பிரிட்டனின் வெளிநாட்டுக் காப்புநிதி வருடா வருடம் எப்படி மாறுதல் அடைகிறது என்பது தெளிவாகத் தெரியும். 1963ஆம் ஆண்டிலிருந்து 1969ஆம் ஆண்டுவரை இக் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சமநிலையற்ற அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை

குறுங்காலத்தில், சமநிலையற்ற அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை இருப்பதால் பாதகம் விளைவதற்கில்லை. காப்பு நிதியிலிருந்து பணம் பெற்றுக் கடன்களைச் செலுத்தி விடமுடியும். வெளிநாடுகளிலிருந்து கச்சாப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காகக் காப்பு நிதிக் கணக்கிலிருந்து பணத்தை நாம் செலவழிக்க நேரிடும். இந்தக் கச்சாப் பொருள்களிலிருந்து, இறுதிப் பொருள்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளில் விற்கும்போது, இக் காப்பு நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட தொகை மீண்டும் நிறைவு பெற்றுவிடும். காப்பு நிதியில் சேர்த்து வைக்கப்படும் தங்கம், மற்றும் பல வெளிநாட்டுச் செலாவணிகள் ஆகிய அனைத்தும், நடப்புக் கணக்கில் ஏற்படும் குறுங்காலப் பற்றுக் குறைகளைச் சமாளிக்கப் பயன்படுகின்றன.

ஆனால், ஒவ்வொரு வருடமும் அதிகமான செலவால் வெளிநாடுகளின் கடன் பெருகி, நடப்புக் கணக்கில் பற்றுக்குறை ஏற்பட்டால், அப்போதுள்ள நிலைமை கவலைக்குரியதே ஆகும். இது போன்றே வெளிநாடுகளில் அதிகமான முதலை (Capital) கடன் கொடுப்பதன்மூலம், இந்த நிலை ஏற்படலாம். நான் இரண்டாவதாகக் குறிப்பிட்ட கடன்நிதியை எளிதாகக் குறைத்து நிலைமையைச் சரிசெய்து விடலாம். நடப்புக் கணக்கில் அதிகமாகச் செலவழிக்கப்பட்டால் பல தொல்லைகள் ஏற்படும். ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும் அளவுக்குப் பாதகமான விளைவுகள் ஏற்பட்டுவிடும். இப்படி அடிப்படையான சமநிலையற்ற அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை ஏற்பட்டால், மற்ற நாடுகள் கடன் வசதிகள் கொடுக்க மறுக்கும்நிலை ஏற்பட்டுவிடும்.

பன்னாட்டு வாணிபத்தில் விற்கப்படும் பொருள்களை இரண்டு விதமான பாகுபாடுகளுடன் கவனிக்கவேண்டும். ஒன்று, பொருள்களின் உள்நாட்டு விலைகள் ஆகும். இரண்டாவது, உள்நாட்டுச் செலாவணிக்கும் (Domestic currency) வெளிநாட்டுச் செலாவணிக்கும் (Foreign currency) உள்ள பரிவர்த்தனை வீதமாகும். எனவே, உள்நாட்டு விலைகளைக் குறைப்பதன்மூலமாகவே, நாம் பிரச்சனைகளைத் தீர்த்துவிட முடியாது. அல்லது வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதத்தை மாற்றுவதன்மூலம் நாம் முடிவான தீர்வு

காண முடியாது. எனவே, வெளிநாட்டுப் பற்றுக்குறையைத் தீர்க்க வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதம் நிலையாக இருக்க வேண்டுமா (Fixed Exchange Rate); அல்லது மாறக்கூடிய பரிவர்த்தனை வீதம் (Flexible Exchange Rate) வேண்டுமா; அல்லது இவை இரண்டிற்கும் இடைநிலையான ஒரு கொள்கையைப் பின் பற்ற வேண்டுமா என்பதனை நாம் ஆராயவேண்டும்.

சில சமயங்களில் பன்னாட்டு வாணிபம் (International Trade) பண்டமாற்று முறையில் (Barter Arrangement) நடப்பதுண்டு. ஒரு நாட்டின் கார் உற்பத்தியைக் கோதுமை உற்பத்தியோடு பரிவர்த் தனை செய்துகொள்ளலாம். பொதுவாக, பரிவர்த்தனைகள் தனிப் பட்ட வியாபாரிகளால் நடத்தப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். இவர்கள் தாம் ஏற்றுமதியும், இறக்குமதியும் இலாபம் தரக்கூடியதா என்பதை விலைகளால் ஒப்பிட்டு முடிவு செய்யவேண்டும். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு நாணயம் இருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடு களுக்கு டாலர்களும், ஸ்பெயின்தேசத்திற்கு பெஸட்டாவும் (Pesetas), ஃபிரான்ஸ் நாட்டிற்கு ஃபிராங்குகளும் (francs), இங்கி லாந்து நாட்டிற்கு பவுன் ஸ்டெர்லிங்கும் இருக்கின்றன. இந்த வெவ்வேறு நாணயங்கள், பன்னாட்டு வாணிபத்தில் ஒரு முக்கிய வேறுபாட்டை உண்டாக்கியிருக்கின்றன. முதலாவதாக, இறக்கு மதியைப் பட்டுவாடாச் செய்வதற்குப் போதிய வெளிநாட்டு நாணயங்கள் தேவைப்படுகின்றன. இரண்டாவதாக, வெளிநாட்டு நாணயங்களுக்குள் ஒரு பரிவர்த்தனை வீதம் தேவைப்படுகிறது. உதாரணமாக, ஒரு பவுன் ஸ்டெர்லிங் என்ற பிரிட்டனின் நாணயத் திற்கு 2·40 அமெரிக்க டாலரும், 167 பெஸட்டாக்களும், 13.20 ஃபிரான்ஸின் ஃபிராங்குகளும் இணையான பரிவர்த்தனை வீதமாக மாற்றப்படுகின்றன. பொதுவாக, இந்தப் பரிவர்த்தனை வீதங்கள், வெளிநாட்டுப் பரிவர்த்தனை மார்க்கெட்மூலமாக நிர்ணயம் செய்யப்படுகின்றன. இந்த மார்க்கெட் நடவடிக்கைகள் ஓர் இடத்தில் நடக்கக்கூடியவை அல்ல. வெளிநாட்டுச் செலாவணி மார்க்கெட் என்பது ஓர் உலக மார்க்கெட் ஆகும். இங்கே நடைபெறும் பேரங்கள், பாங்குகள் மூலமாகவும் பலவிதமான தரகர்கள் மூலமாகவும் நடைபெறுகின்றன.

நாம் முதலில் ஒரு சுதந்திரமான மார்க்கெட் அமைப்பை (Foreign Exchange Market) எடுத்துக்கொள்வோம். இதில் அரசாங்கம் தலையிடுவதற்கில்லை. இது நிறைவுப் போட்டிக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமையும். ஒவ்வொரு நாணயமும் ஓரியல்பானது (Homogenous). நாணயத்தின் தன்மையைப் பற்றி அதில் ஈடுபட்டிருக்கும் தரகர்களுக்குத் தெரியும். இது போன்ற

மார்க்கெட் அமைப்பில், தேவையும் அளிப்பும் வெளிநாட்டுச் செலாவணியின் பரிவர்த்தனை விலையை முடிவு செய்யும். நாம் உதாரணத்திற்காக, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற இரண்டு நாடுகள் மட்டும் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தை நிர்ணயம் செய்வதாக வைத்துக்கொள்வோம். இப்போது ஸ்டெர்லிங் நாணயத்தின் டாலர் விலை என்ன என்பதை வரைபடம் மூலம் விளக்கம் செய்யமுடியும்.



படம் 44

ஸ்டெர்லிங்கின் தேவைக் கோடு கீழ்நோக்கிச் செல்கிறது. அதிகமான டாலர் விலையில், குறைந்த அளவு ஸ்டெர்லிங் தேவைப் படும். அதுபோல அதிகமான டாலர் விலையில் நிறைந்த அளவிற்கு ஸ்டெர்லிங் அளிக்கப்படும். இந்தத் தேவையும் அளிப்பும் 2·40 டாலர்களில் சமநிலையில் இருக்கின்றன. அஃதாவது ஸ்டெர்லிங் மதிப்பு 2·40 டாலர் என்று சுயேச்சையான மார்க்கெட்டில் முடிவு செய்யப்படுகிறது. இந்தச் சமநிலையான வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதத்தில் அமெரிக்க, பிரிட்டிஷ் நாடு களின் அயல் நாட்டுச் செலுத்து இருப்புநிலைக் கணக்கும் சம நிலையில் அமையும்.

அமெரிக்கா, தன் பிரிட்டிஷ் இறக்குமதியைக் குறைக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இதனால் பிரிட்டனின் பொருள் களுக்கு அமெரிக்காவின் தேவை குறைந்து விடுகிறது. எனவே, பிரிட்டனின் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை பாதகமடையும் ஸ்டெர்லிங்கின் தேவைக்கோடு பெயர்ச்சி அடைந்து கீழ்நோக்கிச் செல்லும்.

தேவைக் கோடு கீழ்நோக்கிப் பெயர்ச்சி செய்திருப்பதால் சில விளைவுகள் ஏற்படுகின்றன. 2·40 டாலர் விலைக்குத் தேவைப் படும் ஸ்டெர்லிங் அளவு OQ_1 அளிக்கப்படும் ஸ்டெர்லிங் அளவு OQ ஆகும். எனவே, Q_1 Q அளவு ஸ்டெர்லிங் துண்டு ஏற்படுகிறது. இதைச் சரிகட்ட ஸ்டெர்லிங்கின் மதிப்பை 2·20 டாலர்களாகக் குறைக்க வேண்டியிருக்கிறது. இந்தப் புதிய வெளி நாட்டுப் பரி வர்த்தனை வீதத்தில் பற்றுக்குறை தவிர்க்கப்பட்டு ஸ்டெர்லிங்



படம் 45

கின் தேவையும், அளிப்பும் சமநிலையில் இருப்பதைக் காண்கிறோம். OQ_{11} என்ற அளவில் தேவையும், அளிப்பும் சமநிலையில் இருக்கின் றன. மேலே நாம் கொடுத்துள்ள விளக்கத்திலிருந்து, வெளிநாட் டுப் பரிவர்த்தனை வீதத்தைச் சுதந்திரமான மார்க்கெட் சக்திகளி னால் மாற்றி அமைத்தால், அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலைக் கணக்கை உபரி அல்லது பற்றுக்குறை இல்லாமல் சமநிலையில் வைத்துக் கொள்ள முடியும் என்பது தெளிவாகிறது. இது போன்ற ஒரு சுமுகமான நிலை இருந்தும் ஏன் நடைமுறையில் பல நாடுகளின் அரசாங்கங்கள் வெளிநாட்டுப் பரிவர்த்தனை மார்க்கெட்டில் தலை யிடுகின்றன என்ற கேள்வி எழுகிறது. இதற்கு நான்கு விதமான காரணங்கள் இருக்கின்றன. பிரிட்டனின் பவுன் ஸ்டெர்லிங் நாணயத்திற்கான தேவையானது, பிரிட்டனின் உற்பத்திப் பொருள்களுக்கும், பணிகளுக்கும் வெளிநாடுகளில் இருக்கும் தேவையைப் பொறுத்திருக்கிறது. மற்றும் புலனாகாத இறக்குமதி களுக்கு அயல் நாடுகளில் இருக்கும் தேவை, எடுத்துக்காட்டாக பிரிட்டனில் விடுமுறைக்காக வந்து செல்லும் வெளி நாட்டவர்கள் புலனாகாத இறக்குமதிக்குத் (Invisible imports) தேவையை அதி கரித்து விடுகிறார்கள். குறுங்கால முதல் அசைவுகளின் (Short-term

Capital Movement) காரணங்களினுலோ அல்லது நீண்டகால முதல் அசைவுகளின் காரணமாகவோ, பவுண் ஸ்டெர்லிங்கின் தேவை அதிகரிக்கக் கூடும். இது போன்ற முதல் அசைவுகளின் காரணமாக வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதம் பாதிக்கப்பட்டால் அஃது ஏற்றுமதி, இறக்குமதியின் நடப்புக் கணக்கின் மதிப்பை மாற்றி விடுகின்றன.

குறுங்கால முதல் அசைவுகள் பொதுவாக ஊக லாபத்தை அடிப்படையாகக் கொண்டவைகளாக அமையலாம். பிரிட்டனின் பொருள்களை இறக்குமதி செய்த அயல் நாட்டினர், பிரிட்டனின் வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதம் குறையப் போகிறது என்றால், தாங்கள் தொகை செலுத்துவதைத் தாமதம்செய்து அதனுல் பலன் அடைய முயல்வர். இறக்குமதி செய்யும் பிரிட்டனின் வர்த்தகர்கள் எவ்வளவு சீக்கிரம் பணத்தைச் செலுத்துவர் என்று துரிதப்படு வார்கள். இதனுல் வர்த்தகத்தில் தொந்தரவு ஏற்படும்.

ஸ்டெர்லிங்கின் தேவைக் கோடு கீழ் நோக்கிப் பெயர்ந்து D_1 க்குச் சென்று அதன் விளைவாக 2·20 டாலர்களுக்குப் புது வீதம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இதுபோன்ற பவுன் ஸ்டெர் லிங்கின் மதிப்பு வீழ்ச்சியானது, ஊக லாப எண்ணத்தைத் தூண்டி விட்டு மறுபடியும் ஸ்டெர்லிங் மதிப்புக் குறையும் என்ற நிலையை ஏற்படுத்தி விடுகிறது. இதனுல், ஸ்டெர்லிங்கின் அளிப்புக் கோடு கீழ்நோக்கி வலப்பக்கமாகப் பெயர்ச்சி செய்து, ஸ்டெர்லிங்கின் மதிப்பை மறுபடியும் குறைக்கும்படிச் செய்துவிடுகிறது.

வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதம் அடிக்கடி மாறிக்கொண்டே இருந்தால், வெளி நாட்டு வர்த்தகமும் முதலீடும் வெகுவாகப் பாதிக்கப்படும். ஏற்றுமதியாளர்கள் தங்கள் தொகையைப் பெறு வதற்கு முன்னுல், வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதம் மாற்றி அமைக்கப்பட்டால் லாபமான ஒரு வியாபாரம் நஷ்டம் அடை வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இதுபோன்ற தொல்லைகளினுல் பல நாடுகள் மார்க்கெட் சக்திகளுக்கேற்ப மாறுகின்ற வெளி நாட்டு வர்த்தக வீதத்தை வைத்துக் கொள்வதில்லை. நாம் இனி, பொன் நாணயத்திட்டத்தின்கீழ் இருந்த நிலையான வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதத்தைப் பற்றிக் கவனிப்போம்.

பொன் நாணயத் திட்டம் (The Gold Standard)

ஒரு நாடு பொன் நாணயத் திட்டத்தின்கீழ்ச் செயல்பட வேண்டுமென்றுல், அது கீழ்க்கண்ட அம்சங்களைப் பெற்றிருக்க வேண்டும். அந்த நாட்டின் நாணயம் தங்கத்தோடு ஒரு நிலையான

விகிதத்தில் (fixed rate) தடையில்லாமல் பரிவர்த்தனை செய்யக் கூடியதாக இருக்கவேண்டும். 1914ஆம் ஆண்டில் பவுன் ஸ்டெர்லிங் என்ற பிரிட்டனின் நாணயம் 113.0016 தான்ய சுத்த தங்கத்திற்கும் அமெரிக்க டாலர் நாணயம் 23·22 தான்ய சுத்தத் தங்கத்திற்கும் பரிவர்த்தனை செய்யக்கூடியதாய் இருந்தது. ஒரு பவுன் ஸ்டெர்லிங் 113 தான்யத் தங்கத்தை வாங்க முடியும். ஆனால் இந்த 113 தான்ய சுத்தத் தங்கத்தை வைத்துக்கொண்டு 4.86 டாலர்களைத்தான் பரிவர்த்தனை செய்துகொள்ள முடியும். எனவே; £ 1 = $ 4·86 என்ற விகிதத்தில் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும். எனவே, ஸ்டெர்லிங்கின் மதிப்பு $ 4·86-லிருந்து மாறுபடுவதில்லை. தங்கத்தை ஏற்றுமதி செய்யவும், இறக்குமதி செய்யவும் ½% அளவுக்கு இப் பரிவர்த்தனை விகிதம் ஏறவோ அல்லது குறையவோ செய்யலாம். இதைத்தான் பொன் பெயர்ச்சி எல்லைகள் (Gold points) என்று கூறுகிறோம். இதைக் கீழ்க்கண்ட வரைபடம் மூலம் பொன் ஏற்றுமதி நிலையையும் (Gold Export Point), இறக்குமதி நிலையையும் (Gold Import Point) தெளிவாக விளக்க முடியும்.



படம் 46

பொன் நாணயத் திட்டத்தின்கீழ் வெளிநாட்டுப் பரிவர்த்தனை விகிதம் நிலையாக இருக்கும். அப்படிச் சிறிது மாறினாலும், அஃது பொன் பெயர்ச்சியின் எல்லைக்குள் இருக்கும். பொன் இறக்குமதி நிலையைக்காட்டிலும், வெளிநாட்டுப் பரிவர்த்தனை விகிதம் அதிகரிப்பதற்கில்லை. அதுபோலவே, பொன் ஏற்றுமதி நிலையைக் காட்டிலும் பரிவர்த்தனை விகிதம் குறையப் போவதில்லை.

பொன் நாணயத் திட்டத்தின்கீழ்ப் பல நன்மைகள் இருந்தன. பொன் எல்லா நாடுகளினாலும் அங்கீகரிக்கப்பட்ட பொருளாக

இருப்பதனுல், பொன் நாணயத் திட்டத்திற்குப் பன்னுட்டு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதங்கள் நிலையாக இருந்ததால், பன்னுட்டு வாணிபமும், முதலீடும் சுமுகமான முறையில் சென்றன. பொன் நாணயத் திட்டத்தின் மற்றோர் உதவி என்னவென்ருல், அஃது அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையில் உள்ள பாதக நிலையைத் தானுகவே மாற்றி அமைக்கும் கருவியைக் கொடுத்ததாகும். பொன் நாணயத் திட்டத்தின்கீழ் நாடுகளை, கடன்பட்ட நாடுகள் (Debtor Countries) என்றும், கடன் அளித்த நாடுகள் (Creditor Countries) என்றும் இரண்டு விதமாகப் பிரிக்கலாம். கடன்பட்ட நாடுகள் தங்கள் கடனைப்பட்டுவாடா செய்யத் தங்கத்தைக் கடன் அளித்த நாட்டிற்கு அனுப்பவேண்டி இருக்கிறது. நடைமுறையில் இருக்கின்ற செலாவணி, தங்கத்தோடு இணைந்திருப்பதால் கடன் கொடுத்தநாட்டில் தங்கம் வந்தபின்னர், அந் நாட்டின் மையப் பாங்குப் பணத்தைப் பொன் மதிப்புக்கு ஏற்றவாறு அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. அதுபோலவே, பொன்னை அனுப்பி வைத்த கடன்பட்ட நாடுகள், பொன் இழப்பினுல் அதற்கு ஏற்ருற்போல் தங்கள் நாணயத்தையும், பண அளிப்பையும் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. பொன் கடன்பட்ட நாட்டிலிருந்து, கடன் அளித்த நாட்டிற்கு மாறுவதால் கடன்பட்ட நாட்டில் பண அளிப்புக் குறைந்து, விலைவாசி வீழ்ச்சியும் கடன் அளித்த நாட்டில் பண அளிப்புப் பெருகுவதால், விலைவாசிகள் அதிகரிக்கவும் செய்கின்றன. இதனுல் வர்த்தகநிலை மாறுபாடு அடைகிறது. கடன் அளித்த நாட்டில் விலைகள் அதிகமாவதால், ஏற்றுமதி குறைகிறது. கடன்பட்ட நாட்டில் விலைவாசிகள் குறைவதால் ஏற்றுமதி அதிகரிக்கிறது. எனவே, பொன் நாணயத் திட்டத்தின்கீழ் அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலையைத் தானுகவே சரி செய்து கொள்ளும் கருவி இயங்குகிறது.

பொன் நாணயத் திட்டத்தின்கீழ் நிலையான வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதத்திற்காக உள்நாட்டில் பொருளாதார நிலை சீர்குலைவு அடைகிறது. மேலும், விலைவாசிகள் அதிகரிப்பதை ஒரு பொருளாதாரம் எப்போதும் சமாளிக்கும் தகுதியைப் பெற்றிருக்கிறது. நிதிக் கொள்கைகள் காரணமாகவும், பணவீக்கத்தைக் குறைக்க முடியும். ஆனல், தங்க இழப்பினுல் பொது விலைவாசிகள் குறையும். நாட்டில் ஒரு பெரிய பொருளாதார மந்தம் ஏற்படப் போதுமான காரணங்கள் இருக்கின்றன. அதுபோன்ற பொருளாதார அமைப்பில், முதலீடு செய்பவர்களின் உளவியல் பாதிக்கப்பட்டு, உற்பத்தி குறைந்து வேலையின்மை ஏற்படக் காரணங்கள் இருக்கின்றன. எனவே, குறைந்துபோன விலை வீதங்களை

வைத்துக் கொண்டு ஒரு நாடு தன் ஏற்றுமதியைப் பெருக்கிவிட முடிவதில்லை. எனவே, பொன் நாணயத் திட்டம் பொருளாதார மந்தத்தை ஏற்படுத்துவதோடல்லாமல் கடன்அடைந்த நாடுகளின் பாதகமான அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலையை மாற்ற முடியாமலும் போய்விடுகிறது. இதனால்தான் சில பொருளாதார அறிஞர்கள், பொன் நாணயத் திட்டம் கடன்பட்ட நாடுகளுக்கு மிகுந்த பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது என்று முடிவு செய்தனர்.

பொன் நாணயத் திட்டத்தின் குறைகளை நீக்கி, ஒரு நிலையான வெளிநாட்டுப் பரிவர்த்தனை வீதத்தை வைக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1944 ஆம் ஆண்டு பிரெட்டன் வுட் (Bretton Woods) என்ற இடத்தில் ஒரு சர்வதேச மாநாடு நடைபெற்றது. அதன் மூலமாகப் பன்னாட்டுப் பணநிதி ஸ்தாபனம் (International Monetary Fund) அமைக்கப்பட்டது. இந்த ஸ்தாபனம் பொன் நாணயத் திட்டத்தின் நன்மைகளையெல்லாம் கொடுத்து, தீமைகளையெல்லாம் அகற்ற ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனம் ஆகும். இதில் பங்கு பெறும் நாடுகள் நிலையான பரிவர்த்தனை வீதத்தைப் பொதுவாக வைத்துக்கொள்ளவேண்டும். பன்னாட்டுப் பணநிதியின் அங்கீகாரத்தோடு நாடுகள் தங்கள் பரிவர்த்தனை வீதத்தை ஓரளவுக்கு மாற்றிக்கொள்ள முடியும். இதைக் கீழ்க்கண்ட வரைபடம் மூலம் விளக்கம் செய்யமுடியும்.



படம் 47

பொதுவாக, ஒரு நாடு தன் இறக்குமதி செலவுகளை, ஏற்றுமதி மூலமாகவோ, அல்லது நீண்டகாலக் கடன்கள் மூலமாகவோ தான் செலுத்த வேண்டும். இங்கிலாந்திற்குக் குறுங்காலக் கடன்கள் தேவைப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். இப்

பன்னாட்டு நிதி பிரிட்டன் நாணயத்தைப் பெற்றுக்கொண்டு தன் இருப்பில் இருக்கும் டாலர்களைக் குறுங்கால நிதியாகக் கொடுத்து உதவும். பிரிட்டனின் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை சரியானதும், பிரிட்டன் இந்த நிதி வசதிகளைத் திருப்பித் தரவேண்டும். மேலும், இந்தப் பன்னாட்டு நிதி ஸ்தாபனம், அங்கத்தினர் நாடுகள் அதிகக் கடன் தொல்லைகள் ஏற்படாவண்ணம் தங்கள் நிதிச் சட்டங்களை வைத்துக்கொண்டிருக்கின்றன. அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலையில் அடிப்படையான பாதகநிலை (Fundamental Disequilibrium) ஏற்பட்டால், நிதி, தன்னுடைய வல்லுநர்களை அனுப்பி அதைத் தீர்க்கும் வழிவகைகளை அங்கத்தினர் நாடுகளுக்குச் சொல்லித் தருகின்றன.

ஆனால், இந்தப் பன்னாட்டு நிதி ஸ்தாபனங்கள் முறிந்துவிடும் நிலைக்குப் போகும் நிலை ஏற்பட்டுவிட்டது. தற்போது, அமெரிக்காவையும். உலகத்தையும் பாதிக்கும் சர்வதேச நிதிப் பிரச்சனைகள் பல ஏற்பட்டுவிட்டன. 1950ஆம் ஆண்டு இருந்த டாலர் பற்றாக் குறை (Dollar shortage) 1960ஆம், 1970ஆம் ஆண்டுகளில் டாலர் உபரிப் பிரச்சனைகளை ஏற்படுத்தி, டாலரின் மதிப்பு விழும்படி செய்துவிட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தங்க இருப்பு 1949-ல் 24 பில்லியன்களாக இருந்தது. 1970-ல் 10 பில்லியன் டாலர்களாகக் குறைந்தது. இதுபோன்ற சர்வதேசப் பற்றாக்குறை அமெரிக்காவில் ஏற்படப் பல காரணங்கள் இருக்கின்றன.

மார்ஷல் திட்டம் (Marshall Plan) போன்ற உதவித் திட்டங்கள், ஜப்பான், ஜெர்மனி, ஹாலந்து, ஃபிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகளில் உற்பத்தித் திறனைப் பெருக்கப் பயன்பட்டது. 1950 ஆம் வருடம் முதல், உற்பத்தி அதிக வேகத்தில் பெருகத் தொடங்கியது. மேலும் அமெரிக்கா, கொரியா, வியட்நாம், நேட்டோ உடன்படிக்கை ஆகியவற்றில் அதிக உதவி செய்ய நேர்ந்தது. மேலும் ஆசியா, தென்அமெரிக்க நாடுகளில் அமெரிக்க முதலீட்டிற்கு அதிக வருவாய் கிடைத்ததால், அமெரிக்க முதலீடு அந்த நாடுகளின் பக்கம் கவர்ந்து இழுக்கப்பட்டது. இதனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தங்க இருப்பு வெகுவாகக் குறைய ஆரம்பித்தது. இது முதலில் கவனிக்கப்படாமல் இருந்தாலும் 1958-ஆம் வருட வாக்கில் இது தெளிவாகப் புலப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அயல்நாட்டு இருப்புநிலை 1958 முதல் சாதகமாக இல்லை. தங்கத்தை ஏற்றுமதி செய்வதன்மூலம் அயல் நாட்டு இருப்புநிலையின் பற்றாக்குறை தவிர்க்கப்பட்டது. எனவே, தங்கம் மேலும் மேலும் குறைந்து ஓர் அபாயகரமான நிலை ஏற்படத் தொடங்கியது.

1933ஆம் ஆண்டிலிருந்து 1958ஆம் ஆண்டுவரை உலகத்தில் ஏற்பட்ட அரசியல் நிலையின்மை காரணமாகவும், ஹிட்லரின் யுத்தக் கொள்கையினாலும் உலகத்தில் உள்ள தங்கம் எல்லாம் அமெரிக்காவிற்கு வந்தது. ஆனால், அந்த நிலைமை தற்போது வெகுவாக மாறிவிட்டது. இதுபோன்ற பாதகமான அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை ஏற்படப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

முதலாவதாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அதிகமாகப் பணவீக்கம் (inflation) ஏற்பட்டது. மற்ற அயல் நாடுகளைக் காட்டிலும், அமெரிக்க உழைப்பிற்கு அதிகமான கூலிகள் கொடுக்கப்பட்டன. இதுபோன்ற அதிகமான கூலிகள், உற்பத்தியைப் பெருக்காவிட்டால் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை பாதகமாக மாறிவிடலாம். 1965ஆம் ஆண்டுக்குப் பின்னர், அமெரிக்காவின் விலைக் குறியீட்டு எண்கள் வெகுவாக அதிகரித்தன. அமெரிக்க எஃகு, உலக நாடுகளின் மற்ற எஃகைவிட வெகுவாக விலையில் அதிகரிக்கத் தொடங்கியது. அதனால்தான் ஜப்பானின் எஃகு, பசிபிக் கடற்கரையை நோக்கி வேகமாக வரத் தொடங்கியது. மேலும் எஃகுத் தொழிலில் ஏற்பட்ட வேலை நிறுத்தம், மற்ற நாடுகள் மெதுவாகத் தங்கள் பொருளை அமெரிக்காவில் ஏற்றுமதி செய்யப் பயன்பட்டன. இங்கிலாந்து, பெல்ஜியம் முதலிய நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு எஃகு வரத் தொடங்கியது. உற்பத்தியில்லாத காரணத்தினால் உழைப்பும், கூலியும் அடக்க விலையை அதிகப்படுத்தின. எனவே, 1965ஆம் ஆண்டிலிருந்து 1970-ல் அமெரிக்காவின் அடிப்படைப் பற்றுக்குறை வெகுவாக அதிகரிக்கத் தொடங்கியது.

இரண்டாவதாக, அமெரிக்காவின் பொருளாதார உதவிகளும் யுத்தக் கொள்கைகளும் பல சிக்கலான பிரச்சனைகளைத் தோற்றுவித்தன. இந்த வெளிநாட்டு உதவிகளையும் யுத்தச் செலவுகளையும் குறைத்துக் கொண்டால், ஒரு பில்லியன் டாலர் அயல் நாட்டுச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளமுடியும். ஆனால் இந்த அயல் நாட்டுச் செலவுகளோடு, பின்னப்பட்ட சில இலாபகரமான அமெரிக்க முதலீடுகளும் இருக்கின்றன. எனவே, ஒரு பில்லியன் டாலர் செலவை முழுமையாக நீக்குவதால், ஒரு பில்லியன் டாலர் அளவுக்குப் பற்றுக்குறை நீங்குவதற்கில்லை. 1965ஆம் ஆண்டிற்குப் பின்னர் வியட்நாம் சண்டை அமெரிக்காவின் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலையில் பற்றுக்குறை ஏற்பட முக்கியமான காரணங்களில் ஒன்றாகப் போய்விட்டது.

மூன்றாவதாக, உலக நாடுகளில் டாலர்மீது இருந்த நம்பிக்கை குறைய ஆரம்பித்துவிட்டது. 1933-55ஆம் ஆண்டுவரை தங்கத்திற்கும் மேலான சிறப்பை டாலர் பெற்று இருந்தது. பன்னாட்டு வாணிபத்தில் கௌரவமான நாணயமாக டாலர் மதிக்கப்பட்டு வந்தது. அமெரிக்காவின் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை சமநிலையில்லாமல் போனபின்னர், உலக மக்களும் நாடுகளும் டாலர்களுக்குப் பதிலாகத் தங்கத்தின்மீது நம்பிக்கை வைத்து, தங்கத்தை ஈடாக அமெரிக்காவிடம் கேட்க ஆரம்பித்தார்கள். நான்காவதாக, வெளிநாடுகளில் அமெரிக்கப் பொருள்கள் பேதப்படுத்தப்பட்டன. வெளிநாடுகளில் டாலர் பற்றாக்குறை இருந்தபோது அமெரிக்க இறக்குமதிக்கு எதிராகப் பலதடைகள் ஏற்படுத்தப்பட்டன. டாலர் வலிமை குன்றி இருக்கும்போதும் இதுபோன்ற வர்த்தகப் பேதங்களை அயல் நாடுகள் பின்பற்றலாயின.

ஐந்தாவதாக, மேற்கு ஐரோப்பா, மற்றும் ஜப்பானில் உற்பத்தி வெகுவாகப் பெருகத் தொடங்கிவிட்டது. உற்பத்தித் திறன் அதிகமானதால் அமெரிக்காவைக் காட்டிலும் மேற்கு ஐரோப்பாவிலும், ஜப்பானிலும் பொருள்களின் விலை மிகக் குறைவாகக் காணப்படுகிறது. எனவே, வெளிநாட்டு மார்க்கெட்டுகளிலும், அமெரிக்காவின் உள்நாட்டிலும், மேற்கு ஐரோப்பா, மற்றும் ஜப்பானியப் பொருள்களுக்குத் தேவை அதிகப்பட்டது. ஆறாவதாக, அமெரிக்க நிறுவனங்கள் வெளிநாடுகளில் அதிகமாக முதலீடுகள் செய்ய ஆரம்பித்துவிட்டன. அமெரிக்க நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் பெருத்த இலாபம் கிடைக்கத் தொடங்கின. ஐரோப்பாவிலும், ஜப்பானிலும், அமெரிக்க முதலீடுகளுக்கு மார்க்கெட் வருடத்திற்கு 10% வீதம் அதிகரிக்கத் தொடங்கின. 1965ஆம் ஆண்டு வாக்கில் இதுபோன்று, வெளிநாடுகளுக்குச் செல்லும் முதலீடுகள் அதிகரிக்கவே, அமெரிக்க ஐக்கிய ரிஸர்வ் பாங்குகள் இந்த முதலீடுகள்மீது கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கின.

1970-ஆம் ஆண்டு முதல் சமநிலை ஏற்படுமா என்ற கேள்விக் குறி இயற்கையாக எழச் செய்கிறது. 1960ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து டாலர், பவுன், ஸ்டெர்லிங் ஆகிய செலாவணிகள் சமநிலையற்று, மதிப்பு வீழ்ச்சி அடையத் தொடங்கின. ஐரோப்பியப் பொது மார்க்கெட் செலாவணிகள் வலிமை பெறத் தொடங்கின. 1965ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட முழுவேலை காரணமாகவும், வியட்நாம் போரின் விபரீத விளைவுகளி

றாலும் அமெரிக்க அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை சமநிலை பெறுமா என்பது சர்ச்சைக்குரியதாகவே தோன்றுகிறது.

இந்த நிலையைச் சமாளிக்கப் பல வழிகளைப் பொருளாதார அறிஞர்கள் எடுத்துச் சொல்வதுண்டு. இதைக் காரியப் பூர்வமாக நடைமுறையில் கொண்டு வருவது ஒரு சிக்கலான செயலாகும். அமெரிக்க உழைப்பாளிகள் தொழில் நுட்பமான (Technical productivity) உற்பத்திகளை அதிகப்படுத்த வேண்டும்.

அமெரிக்கர்கள் சமநிலை பெறத் தாங்கள் விற்கும் முறைகளை வெளிநாடுகளில் மாற்றியமைத்து முன்னேற்றம் காட்ட வேண்டும். அமெரிக்க அரசாங்கங்கள் டாலருக்கு எதிராக நடத்தப்படும் வர்த்தகப் பேதங்களை மற்ற நாடுகளில் குறைக்க முன்வரவேண்டும். ஐரோப்பியப் பொதுச் சந்தையில் இன்னமும் அமெரிக்கப் பொருள்களுக்கு வர்த்தகப் பேதங்கள் (Trade discrimination) காட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அமெரிக்கா மற்ற செல்வம் கொழிக்கும் நாடுகளைப் பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளுக்கு உதவும்படிக் கேட்டு கொள்ளலாம். அமெரிக்கர்கள் வெளிநாடுகளில் சுற்றுலா செய்வதைக் கட்டுப் படுத்தி விதிமுறைகள் கொண்டு வரலாம். வெளிநாடுகளில் செல்லும் அமெரிக்க முதலீடுகள்மீது வரி விதிக்கப்படலாம். அல்லது அவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்தலாம். கடைசியாக ஐரோப்பா, ஜப்பான் போன்ற நாடுகளில் உபரி காரணமாகப் பண வீக்கம் ஏற்பட்டு அமெரிக்காவிற்குச் சாதகமான நிலை ஏற்படலாம்.

ஜனாதிபதி நிக்சன் 15-8-1971-ல் தங்கத்திற்கும் டாலருக்கும் உள்ள மாற்றுரிமையை (convertability) நீக்கினார். இதனால், வெளிச் செலாவணி (foreign exchange) பாங்குகள் தங்களிடம் உள்ள உபரி டாலர்களை ஓர் அவுன்ஸுக்கு 35$ என்ற மாற்றுரிமை வீதத்தில் தங்கமாக மாற்றும் உரிமையை இழந்தன. இதனால் பிரெட்டன் வுட்ஸ் (Bretton woods) ஒப்பந்தம் மீறப்பட்டது. 37 வருடங்களுக்குமேல் ஒத்துக்கொள்ளப்பட்ட மாற்றுரிமையை நீக்கிப் பன்னாட்டு நிதிக்கு (International Monetary Fund) ஒரு பெரிய நெருக்கடியை அமெரிக்க ஜனாதிபதி தோற்றுவித்து விட்டார். மற்ற நாடுகளிடமிருக்கும் மில்லியன் கணக்கான டாலர்களுக்குத் தங்கம் இல்லை என்ற நிலை ஏற்பட்டதால், வெளி நாடுகளில் ஊக லாப நோக்கத்தோடு வெளிச் செலாவணி வர்த்தகங்கள் நடக்கத் தொடங்கின. எனவே, பன்னாட்டு வர்த்தகத்தையும் அந்நியச் செலாவணியையும் சீர்ப்படுத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது.

17. பொருளாதார வளர்ச்சி

நாம் இதுவரை முழுமைப் படுத்திய பொருளாதார மாதிரிகளின் (Aggregate Economic Models) நடவடிக்கைகளைப்பற்றிப் பார்த்து வந்தோம். முழு வேலைக்குத் (full employment) தேவையான உற்பத்தி அளவையும் முதலீட்டையும் கவனித்தோம், உழைப்பு, முதலீடு முதலிய காரணிகளின் உற்பத்தித் திறன், புதுமைத்திறனாலும் (innovation) நுட்பத்திறமையாலும் (Technical skill) நுட்பத் தொழில் வளர்ச்சியாலும் அதிகரிக்கும் தன்மையைப் பெற்றிருக்கின்றன. நாம் முழுவேலை உற்பத்தியையும் பொருளாதார வளர்ச்சியினால் ஏற்படுகின்ற அதிகமான உற்பத்தியையும் பிரித்துத் தெளிவுபடுத்திக் காட்டவேண்டும்.

இதை நாம் உற்பத்திச் சாத்தியக் கோட்டின்மூலம் விளக்கம் செய்யலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் உற்பத்திச் சாத்தியக் கோடு (Production possibility curve) காட்டப்பட்டிருக்கிறது.



படம் 48

உற்பத்திச் சாத்யக்கோட்டின் நியமப் பாதையில் உள்ள ஒவ்வொரு புள்ளியும் திறமையான (efficient) உற்பத்தியைக் காட்டுகின்றன. அஃதாவது ரூபாய்க்குக் கிடைக்கும் இறுதிநிலை உற்பத்தியானது எல்லாக் காரணிகளுக்கும் சமமாகவும் இருக்கும். இதனால் உற்பத்தியாளர்கள் குறைந்த விலையில் கொடுக்கப்பட்ட உற்பத்தியைச் செய்து முடிக்கிறார்கள். எனவே, நாம் இந்த உற்பத்திச் சாத்தியக் கோட்டின் நியமப்பாதையில் புள்ளி ஒவ்வொன்றும், திறமையாகக் காரணிகளைப் பயன்படுத்துவதால் இந்தப்

புள்ளிகளை முழுவேலைப் புள்ளிகள் என்று குறிப்பிடலாம். இதைப் போன்ற முழுவேலையுள்ள ஒரு பொருளாதார அமைப்பில் விவசாயப் பொருளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றால்' இயந்திரப் பொருள்களின் உற்பத்தி குறைந்துவிடும். இயந்திரப் பொருள்களின் உற்பத்தியை அதிகரித்தால், விவசாயப் பொருள் களின் உற்பத்தி குறைந்துவிடும். உற்பத்திச் சாதனங்கள் வேலை யில்லாமல் இருக்கும்போது உற்பத்தி சாத்தியக் கோட்டின் எல்லைகுள்ளேயே (Production possibility frontier) உற்பத்தி இருக்கும். இதைத்தான், நாம் மேற்கண்ட வரைபடத்தில் A என்ற புள்ளிமீது காட்டி இருக்கிறோம். உற்பத்தி A என்ற புள்ளியில் இருக்கும்போது உற்பத்திச் சாதனங்கள் வேலையற்று இருக்கின்றன. உண்மையான உற்பத்தியானது (Actual output) உற்பத்திச் சாத்தியக் கோட்டின் எல்லைக்குள் இருக்கும்போது வேலையின்மை (unemployment) இருக்கின்றது. A என்ற புள்ளியிலிருந்து உற்பத்தியை அதிகப்படுத்தி உற்பத்திச் சாத்தியக் கோட்டின் வரை உற்பத்தியைப் பெருக்கமுடியும். மொத்தத் தேவையை அதிகரித்துக் குறுங்காலத்தில் முழுவேலையை நாம் அடையமுடியும். இதுபோல முழுவேலை உற்பத்தியை நாம் பொருளாதார வளர்ச்சி என்று சொல்வதற்கில்லை. பொருளாதார வளர்ச்சி என்பது, ஒரு நீண்டகாலப் பிரச்சனையாகும். முழுவேலை உற்பத்திச் சாத்தியக் கோடு பெயர்ச்சி செய்வதன்மூலம்தான் பொருளாதார வளர்ச்சி ஏற்படமுடியும். இதை நாம் கீழ்க்கண்ட வரைபடம்மூலம் விளக்கம் செய்யலாம்.



படம் 49

இந்தப் படத்தில் 1வது உற்பத்திச் சாத்தியக்கோடானது முழு உற்பத்தியைக் குறிக்கிறது (Maximum Total output). ஆனால், 2வது 3வது நிலைக்கு பெயர்ச்சி செய்யும்போது அதைப் பொருளாதார வளர்ச்சி என்கிறோம்.

பொருளாதார வளர்ச்சியை எப்படிக் கணக்கிடுவது? வளர்ச்சி என்றால் பொதுவாக ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தியை. அதிகரிப்பதே ஆகும். இதைப் பொதுவாக நாட்டின் மொத்த ஆக்கத்தின்மூலம்தான் சொல்லமுடியும். நாம் இதைச் சொல்லும் போது சில கருத்துகளை மனத்தில் கொள்ளவேண்டும். நாம் குறிப்பிடும் உற்பத்தி உண்மை அளவு உடையதாக இருக்கவேண்டும்.

பொதுவிலைகள் ஏறியிருந்தால், அதற்கேற்றுற்போல் மொத்த உற்பத்தியை மாற்றங்கள் செய்து திருத்தி அமைக்க வேண்டும். சாதாரணமாக, மக்கள் பொருளாதார வளர்ச்சி என்றால் வாழ்க்கைத் தரம் உயர்வது என்று கருதுகிறார்கள். மக்கள் தொகை மாற்றங்கள், நுகர்ச்சியைக் குறைத்துச் சேமிப்பை அதிகரித்து அதன்மூலம் செய்யப்படும் முதலீடு யுத்தத்தளவாடங்களுக்காகச் செய்யப்படும் முதலீடு ஆகிய பலவற்றை நாம் எடுத்துக்கொண்டுதான், எவ்வளவு தூரம் பொருளாதார வளர்ச்சி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன்படும் என்பதை நாம் கணக்கிடமுடியும். எனவே, பொருளாதார வளர்ச்சி என்பது, ஒரு பொருளாதாரம் எவ்வளவு தூரம் தன் உற்பத்திச் சக்திகளைப் பெருக்கி, உற்பத்திச் சாத்தியக் கோட்டை மேல்நோக்கி பெயர்ச்சி செய்யமுடியும் என்பதைச் சார்ந்திருக்கிறது. இதைப் பொதுவாக உண்மையான மொத்த நாட்டு உற்பத்தியில் ஏற்படும் மாறுதல்மூலம் கணக்கிடமுடியும். இன்னும் தெளிவாகச் சொன்னால் உண்மையான தனிநபர் மொத்த உற்பத்தி எப்படி வளர்கிறது என்பதைப் பொருளாதார வளர்ச்சி பொறுத்திருக்கிறது.

பட்டியல் XI

25 வருடங்களில் 30,000 மில்லியன் பவுன் கூட்டு வட்டிவீதத்தில் வளரும் விதம்

வளர்ச்சி விதம்	25 வருடத்தில் வட்டிக் கணக்கு	மொத்த உற்பத்தி 25 வருடத்திற்குப் பின்னர்
$2\frac{1}{2}\%$	$30{,}000 \times (1{\cdot}025)^{25}$	55,620
3%	$30{,}000 \times (1{\cdot}03)^{25}$	62,282
$3\frac{1}{2}\%$	$30{,}000 \times (1{\cdot}35)^{25}$	70,890
4%	$30{,}000 \times (1{\cdot}04)^{25}$	79,980

இனி, பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம். பிரிட்டன், கடந்த பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக $2\frac{1}{2}$ சதவீதப் பொருளாதார வளர்ச்சியில் இருந்து வருகிறது. இதுவே, 3% ஆகவோ அல்லது $3\frac{1}{2}$ சதவீதமாகவோ இருந்தால் வளர்ச்சி வேகத்தினால் நாட்டின் உற்பத்தி மிகமிக அதிகரிக்கும். பொருளாதார வளர்ச்சி கூட்டு வட்டிவீதத்தில்

(Compound rate of interest) வளர்ச்சி செய்கிறது. நாம் பிரிட்டனின் வருமானம் £ 30,000 மில்லியன் பவுன் என்று ஆரம்பித்தால் 25 வருட காலங்களில் பலவிதமான வளர்ச்சி வீதத்தில் எப்படி மாறுகிறது என்பதை முன்பக்கத்தில் உள்ள பட்டியலில் காணலாம்.

3% சதவீதத்தில் பொருளாதார வளர்ச்சி அடைந்தால் பிரிட்டன், தன் உற்பத்தியை 25 வருடத்தில் இரட்டிப்புச் செய்ய முடியும். 4% வீதமாக வளர்ந்தால், வளர்ச்சி 25 வருடங்களில் உற்பத்தியை $2\frac{1}{2}$ பங்கு அதிகரிக்கச் செய்யும். எனவே பொருளாதார வளர்ச்சியில் $\frac{1}{2}$% வீதம்கூட முக்கியமான தன்மையைப் பெற்றிருக்கிறது.

இவ்விதமாகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமான மூன்று காரணங்களை இங்குக் குறிப்பிடுவோம்.

1. இருப்பு நிலையில் இருக்கும் உற்பத்திக் காரணிகளின் உற்பத்தித் திறன் அதிகரித்தல்.
2. உற்பத்திக் காரணிகளின் இருப்பு நிலை அதிகரித்தல்.
3. நுட்பத் தொழிலில் மாறுதல்கள்.



இருப்பில் இருக்கும் காரணிகளின் உற்பத்தித் திறனை எப்படி அதிகரிப்பது? குறுங்காலத்தில் உற்பத்தி முறைகளைச் சிறிது மாற்றம் செய்து உற்பத்தித் திறனை அதிகப்படுத்தலாம். உழைப்பு வேலைப் பிரிப்பின் (Division of labour) மூலமாகவும், பேரளவு உற்பத்தியின் சிக்கனங்கள் (Internal and external economics)

முதலிட்டுச் சாதனங்களைத் தீவிரமாகப் பயன்படுத்துவதன் மூலமாகவும் உற்பத்தியைப் பெருக்கமுடியும். நீண்ட காலத்தில் கல்வி, தொழில் நுணுக்கங்களைப் பெருக்குவதன் மூலமாகவும் உற்பத்தியை அதிகரிக்கமுடியும். தொழிலாளர்களுக்கு நல்ல உணவு கொடுத்து வேலைத்திறனை அதிகரிப்பதன்மூலமும் உற்பத்தியைப் பெருக்கமுடியும்.

இரண்டாவதாக, இருப்பு நிலையில் (inventory) உற்பத்திக் காரணிகள் அதிகரிக்கும். மக்கள் தொகை அதிகரிப்பதனால் உழைப்புக் காரணிகள் அதிகரிக்கும். ஒவ்வொரு தொழிலாளியின் வேலை செய்யும் நேரம் அதிகரித்தால் உழைப்புக் காரணிகள் அதிகமாகும். ஆனால், இது நடைமுறையில் சாத்தியமானதன்று. வாழ்க்கைத் தரம் அதிகரிக்க, மக்கள் பொதுவாக ஓய்வையே விரும்புவார்கள். மேலும் வயதுக் காலத்தில் ஓய்வு பெறுவோர்கள், ஈட்டப்படாத வருமானத்தில் வசிக்கும் நபர்கள், கல்யாணமான பெண்களின் நோக்கங்கள் ஆகியவற்றை உழைப்பின் அளிப்புப் பொறுத்திருக்கிறது.

இயற்கைச் சாதனங்களின் வளர்ச்சிகள் உற்பத்தியை வெகுவாகப் பாதிக்கும். இரும்பு, நிக்கல் ஆகிய சுரங்கங்களின் கண்டுபிடிப்பு, இயற்கை வாயு (gas), கண்டுபிடிப்பு ஆகியவை உற்பத்தியைப் பெருக்க உதவின.

முதல் சாதனங்களை (capital goods) அதிகப்படுத்துவதன் மூலமாகவும் உற்பத்தியைப் பெருக்கமுடியும். இங்கே நாம் முதல் சாதனங்களை அகலப்படுத்தல் (Widening of capital) முதல் சாதனங்களை ஆழப்படுத்தல் (Deepening of capital) ஆகிய இரண்டையும் பாகுபாடு செய்யவேண்டும். 10 மனிதர்கள் ஒரு கிணற்றை வெட்ட 5 மண்வெட்டிகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். வேலையாட்களின் எண்ணிக்கை 20ஆக மாறும்போது முதல் உழைப்பு வீதம் 1 : 2 என்ற வீதத்திலிருந்து 1 : 4 என்று குறைந்து விடுகிறது. 5 மண் வெட்டிகளைக் கூடுதலாக அளிப்பதன்மூலமாகத்தான் வீதத்தை 1 : 2 என்ற வீதத்தில் வைத்துக்கொள்ள முடியும். இதுபோன்று முதல் சாதனங்களை அகலப்படுத்துவதால் மாத்திரம் உற்பத்தித் திறனை அதிகரித்துவிட முடியாது. ஆனால், இது குறைந்து செல் விளைவு விதி (Law of Diminising Returns) ஏற்படாமல் தவிர்க்க உதவும். முதல் உழைப்பு வீதம் அதிகரிப்பதன்மூலம்தான் முதலை ஆழப் படுத்த முடியும். 10 மண்வெட்டிகள் 20 மனிதர்களுக்கு இருக்கும் போது இன்னும் 10 மண்வெட்டிகளை அதிகரித்தால் முதல்

உழைப்பு வீதம் 1:1 என்ற வீதத்தில் அதிகரித்திருக்கிறது. இவ்வாறு முதலை ஆழப்படுத்தும்போது உழைப்புத்திறன் அதிகரித்து உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்புண்டு. நுட்பத் தொழில் மாறுவதால் உற்பத்தி பெருகும். மண்வெட்டிகளினுல் குழி தோண்டுவதைவிடக் குழி தோண்டும் இயந்திரம் (Trench digger) மூலம் 20 மனிதர்களேயும் அவர்கள் பயன்படுத்திய மண்வெட்டிகளேயும் நீக்கிவிட்டு நல்ல முறையில் உற்பத்தியை மாற்றி அமைக்கலாம். 20 மனிதர்களுக்குப் பதிலாகக் குழி தோண்டும் இயந்திரத்தை ஓட்டுவிக்கும் ஒரு மனிதரே போதுமானவர் ஆவர். எனவே, மீதியிருக்கும் 19 மனிதர்கள் வேறு வேலேகளில் ஈடுபடுத்தி உற்பத்தியைப் பெருக்கலாம். கப்பல் கட்டும் தொழில், விவசாயம், தொழில், போக்குவரத்து ஆகிய பல துறைகளில் நுட்பத் தொழில் மாறி உற்பத்தி முறையில் பல மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்னர் இந்த நுட்பத் தொழிலில் மாறுதல்களின் வேகம் அதிகமாகியுள்ளது.

பொருளாதார வளர்ச்சி மிகவும் எளிதான ஒரு காரியமாக நமக்குப் புலப்படும். ஆனுல் இக் கருத்துத் தவருனது. பொருளாதார வளர்ச்சி பெறத் தொழில் நுணுக்க மாறுதல்களே வரவேற்க வேண்டும். கல்வியில் முதலீடு செய்யவேண்டும். நல்லவிதமான உழைப்பு உடையவர்களேத் தருவிக்க வேண்டும் (Importation of foreign know - low). ஆராய்ச்சியையும், தொழில் சாதனங்களேயும் பெருக்க வேண்டும். இதுபோன்ற பலவற்றை எளிதாகச் சொல்லிவிட முடியும். ஆனுல், பொருளாதார வளர்ச்சிக்குப் பலவிதமான தடைகளும் இடர்ப்பாடுகளும் (constraints) இருக்கின்றன. ஒரு பொருளாதாரம் முழு வேலேயில் இயங்கிக் கொண்டிருக்கும்போது, முதலீட்டைப் பெருக்கி வளர்ச்சி அடைய வேண்டுமென்ருல் நுகர்ச்சியைக் குறைத்துக் கொள்ளவேண்டும். ஆலேகளும், இயந்திரங்களும், ரோடுகளும் வேண்டுமென்ருல், நாம் குறைந்த வீடுகளும், கார்களும், துணி துவைக்கும் இயந்திரங்களும்தான் பெறமுடியும். இதை மக்கள் தாங்களாகவே அதிகச் சேமிப்பின்மூலம் தங்கள் நுகர்ச்சியைக் குறைத்துக்கொண்டால் சிக்கல்கள் இல்லாமல் போகமுடியும். மக்கள் அதிகமான வாழ்க்கைத்தரத்தை விரும்பினுல், முதலீட்டைப் பெருக்க அதிகமான வரிகளும், கட்டாயச் சேமிப்பும் அதிக விலேகளும் கொடுத்து மக்கள் துன்பப்பட நேரிடும். இதைக் கீழ்க் கண்ட வரைபடத்தின் மூலம் விளக்கம் செய்யலாம். உற்பத்திச் சாத்தியக் கோட்டின் மூலமாகவே இதை விளக்கம் செய்ய முடியும்.

நாம் கீழே குறிப்பிட்டிருக்கின்ற வரைபடத்தில் A என்ற இடத்தில், பொருளாதாரம் இயங்குகிறது. இங்கே நுகர்ச்சிப் பொருள் உற்பத்தி அதிகம். OD என்பது தேய்மானத்தை ஈடுகட்டும் முதலீட்டுச் செலவு, அஃதாவது இப் பொருளாதாரம் தன் முதல் இருப்பு நிலையைப் பார்த்துக்கொண்டு நல்ல வாழ்க்கைத் தரத்திற்காகப் பொருளாதார வளர்ச்சியை விட்டுவிடுகிறது. என்று பொருள். இதற்கு மாறாக, உற்பத்திச் சாத்தியக்கோட்டில்



படம் 50

B என்ற புள்ளியில் பொருளாதாரம் இயங்கினால், OD என்ற தேய்மானச் செலவிற்குமேல், DI அளவிற்கு முதலீடு செய்து, இப் பொருளாதாரம் வளர முயல்கிறது என்று பொருள். B என்ற புள்ளியை அடையும்போது, நுகர்ச்சிப் பொருள்கள் உற்பத்தி குறைந்து வாழ்க்கைத் தரம் குறைந்திருப்பதையும் படத்தில் பார்க்கலாம். இந்தப் பொருளாதாரம் 7, 8 ஆண்டுகளில் நுகர்ச்சிப் பொருள்கள், முதலீட்டுப் பொருள்கள் ஆகிய இரண்டையும் பெருக்குமளவுக்கு உற்பத்திச் சாத்தியம் பெருகி, உற்பத்தி சாத்தியக்கோடு மேல்நோக்கிப் பெயர்ச்சி செய்கிறது. எனவே, வளர்ச்சி பெருகி வாழ்க்கைத்தரம் பெருக வாய்ப்புகள் இருக்கின்றன.

பொருளாதார வளர்ச்சிக்கு இன்று பல தடைகளும் இடர்ப்பாடுகளும் இருக்கின்றன. ஓய்வு வேண்டும் என்ற விருப்பமும், வயது முதிர்ந்த ஜனத்தொகையும் பெரிய இடர்ப்பாடுகள் ஆகும். ஆராய்ச்சியும், கல்வியும் பெருகாவிட்டால், நுட்பத் தொழில்களில் மாறுதல்களை ஏற்படுத்தமுடியாது போய்விடும். ஆராய்ச்சியும், கல்வியும் சாதாரணமான காரியங்கள் என்று சொல்வதற்கில்லை.

இங்கிலாந்து முதலிய நாடுகள் தங்கள் தொழிற்சாலைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து கச்சாப் பொருள்களை வெகுவாக இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. வளர்ச்சியைப் பெருக்குவதற்காக இறக்குமதியை அதிகரித்தால், குறுகிய காலத்தில் அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை பாதகமாக மாறிவிடுகிறது. ஆனால் இறக்குமதி செய்த கச்சாப் பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தியை ஏற்றுமதி செய்யக் காலம் பிடிக்கிறது. இதனால் வெளிநாட்டுச் செலாவணி மார்க்கெட்டில் ஊக லாப நோக்கத்தோடு பேரங்கள் நடைபெறுவதால் அயல் நாட்டுச் செலுத்து இருப்புநிலை மேலும் பிரச்சனைகளை ஏற்படுத்திச் சிக்கல்களை உண்டாக்கி விடுகிறது. பொருளாதார வளர்ச்சியைப் பெருக்குவதற்காகத் தொழில்களை மாற்றியமைக்க நேரிடுகிறது. இதனால், வேலை செய்பவர்களுக்குத் தொல்லைகள் ஏற்படும். இதையெல்லாம் தவிர்த்து வளர வேண்டும்.

18. வளர்ச்சியுறும் பொருளாதாரத்தின் மாதிரி

(Model of an Expanding Economy)

இந்த அதிகாரத்தில் வளர்ச்சி அடையும் ஒரு பொருளாதாரத்தின் மாதிரியை எளிதாகக் குறிப்பிடவிருக்கிறோம். இங்கே குறிப்பிட்டிருக்கிற மாதிரி (model), டோமர் (Domar) என்ற பொருளாதார அறிஞரின் முறையைப் பின்பற்றியதாக அமையும். இதுபோன்ற அமைப்பு ஒன்றை முன்னதாக ஹேராட் (R.H. Harrod) என்பவர் தந்திருக்கிறார். வருமான வீத வளர்ச்சியைக் கணக்கிட நாம் முதலில் முழுவேலை வருமானத்தோடு இயங்கும் ஒரு பொருளாதார அமைப்பை எடுத்துக்கொள்வோம். இந்த அமைப்பில் அரசாங்கம் இல்லை. வெளிநாட்டு வர்த்தக உறவுகள் இல்லை என்று வைத்துக்கொள்வோம். நாம் முன்னதாகக் குறிப்பிட்ட ஓர் எளிமையான பேரியல் பொருளாதாரம் என்று வைத்துக் கொள்வோம். மேலும் வருமானத்திற்கு ஒரே வீதத்தில் மாறாத ஓர் எளிமையான நுகர்ச்சிச் சார்பையும் (Simple consumption function) எடுத்துக்கொள்வோம். இந்த நுகர்ச்சி பல காலங்களுக்கு மாறாமல் ஒரே வீதத்தில் இருக்கிறது. இதுபோன்ற எடுகோள்களுடன் (assumptions) ஒரு வளரும் பொருளாதாரப் பிரச்சனைகளைப் பற்றி அணுகுவோம்.

நாம் முன்னர்க் குறிப்பிட்டதைப்போல, இதுபோன்ற ஓர் எளிய அமைப்பில்,

$$Y = C + I$$

வருமானம், நுகர்ச்சிச் செலவையும், முதலீட்டுச் செலவையும் சேர்த்து வருவதே ஆகும். இந்த மாதிரியில் (model) சமநிலை வருமானத்தின் இலக்கணம் $Y + C = I$ என்பதே ஆகும். நுகர்ச்சிச் சார்பைக் கீழ்க்கண்ட சமன்பாட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

$$C = bY$$

b என்பது, இங்கு இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்தைக் காட்டுகிறது.

எனவே சேமிப்பு என்ற $S = Y - bY$

$$= Y (1 - b)$$

$$S = (1 - b) Y$$

நாம் வருடம் பூஜ்யத்தில் ஆரம்பிப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது இருக்கும் முழுவேலை வருமான அளவை Y^* என்று குறிப்பிடுவோம். இந்த Y^* என்ற வருமான அளவு கீழ்க்கண்ட சேமிப்பளவுடன் ஒத்துப் போக வேண்டும்.

$S^* = (1 - b), Y^*$ அங்கு முழுவேலை இருக்க I^* என்ற முதலீடு தேவைப்படுகிறது. I^* என்ற முதலீட்டின் விளைவுகளை ஆராய நாம் எளிமையான ஓர் உற்பத்திச் சார்பு (production function) ஒன்றை எடுத்துக் கொள்வோம். இந்தச் சார்புநிலைமூலமாக முதலீட்டின் விளைவுகளை திர்ணயம் செய்ய முடியும். அதைக் கீழ்க்கண்டவாறு எழுத முடியும்.

$Y^* = Sk$, இங்கே S என்பது, முதலின் குணகம் (capital co - efficient) ஆகும். இந்த முதல் குணகம் இருப்பில் இருக்கும் முதலுக்கும் உற்பத்திக்கும் உள்ள சராசரி மதிப்பைக் காட்டும். நாம் இந்த உற்பத்திச் சார்பை மொத்த உற்பத்திச் சார்பு (Aggregate production function) என்று கருத்தில் கொள்ள வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மொத்த முதல் இருப்பு, *1,800* பில்லியன் டாலர்கள் என்றால், S என்பது *0·35* என்று வைத்துக்கொண்டால் அமெரிக்கப் பொருளாதாரம் முழுவேலையில் இருந்தால், $ *630* பில்லியன் டாலர்களை ஓர் ஆண்டிற்கு உற்பத்தி செய்ய முடியும். நாம் குறிப்பிடும் இப் பொருளாதார மாதிரியில் I^* என்பது, 'O' வருடத்தில் உள்ள முதலீடு. I^* என்பது முதல் இருப்பு நிலையை அதிகப்படுத்தி இருப்பதால் $\triangle k = I^*$ என்று குறிப்பிடலாம். k என்பது முதலைக் குறிக்கின்றது.

$\triangle Y^* = S\triangle k$ (இங்கு S முதலின் குணகம் ஆகும்).

$\triangle k = I^* = S^* = (1 - b) Y^*$ (இது சேமிப்பைக் குறிக்கிறது)

$\triangle Y^* = S (1 - b) Y^*$

$$\frac{\triangle Y^*}{Y^*} = S (1 - b)$$

அஃதாவது முழுவேலை வருமானத்திலிருந்து I^* முதலீட்டினுல் ஏற்பட்ட வருமான வளர்ச்சியின் சதவீதம் $S (1 - b)$ ஆகும். 0 வருடத்திலிருந்து 1-வது வருடத்தில் ஏற்பட்ட அதிக வருமானம் எனவும் இதைக் குறிப்பிடலாம்.

இந்தப் பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தை நிர்ணயம் செய்யும் மாறிகள் Sம் bயும் ஆகும். இதைச் சில சுலபமான எடுத்துக் காட்டுகளின் மூலம் விவரிக்க முடியும். கீழ்க்கண்ட பட்டியல்களில் வருமான அளவு (Y) நுகர்ச்சி C, முதலீடு S மற்றும் மொத்தத் தேவை (C + I) ஆகிய அனைத்தையும் பதிவு செய்து இருக்கிறேம். காலத்தை '0' வில் ஆரம்பித்து 6 வரை கொண்டு சென்று இருக்கிறேம். முதலில் உள்ள பட்டியலில் b அல்லது இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் 0.80 ஆகவும் SI அல்லது முதலின் குணகம் 0.25 ஆக இருக்கிறது. $b = 0.80$ ஆகவும் $S = 0.25$ ஆகவும் இருக்கும்போது தேவைப்படும் வருமான வளர்ச்சி.

பட்டியல் XII

Rate of growth S (1 — b) 0·25 (1—0·80) = 5%

காலம்	Y	C	I	C+I
0	100·00	80 00	20·00	100·00
1	105·00	84·00	21·00	105 00
2	110·25	88·20	22·05	110·25
3	115·76	92·61	23·15	115·76
4	121·55	97 24	24·31	121·55
5	127·63	102 10	25·53	127·63
6	134·01	107·21	26·80	134·01

முன் பக்கத்தில் குறிப்பிட்ட பட்டியலில் முதலீடு 20% 0.25 என்ற முதல் குணகத்தால் பெருக்கும்போது கிடைப்பது 0.25× 20=0.05=5%. எனவே, வருடம் மூன்றில் 105 ஆக வருமானம் அதிகரிக்கிறது. இங்கே சிறப்பாகக் கவனிக்க வேண்டிய அம்சம் வளர்ச்சியானது கூட்டுவட்டிபோல் தொடர்ந்து அதிகரிப்பதே ஆகும். நாம் இந்தப் பட்டியலில் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் குறைவதாக வைத்துக்கொண்டால், வளர்ச்சிவீதம் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைக் கவனிப்போம்.

இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் b = 0·80 என்பதிலிருந்து 0.30 ஆகக் குறைந்தால் என்ன நேரிடும்? S என்ற முதலின் குணகம் மாறாமல் முன்னர்க் குறிப்பிட்டபடி 0.25 ஆக இருக்கிறது. இப்போது வருடம் 1-ல் முழுவேலை வருமானம் 12.5 ஆக உயரும்.

$$\frac{\Delta Y^*}{Y^*} = S(1 - b)$$

$$= 0.25\ (1 - 0.50)$$

$$= 0.25 \times 0.50 = .1250 = 12.5\%$$

எனவே, வளர்ச்சி வீதம் 12.50% ஆக உயர்கிறது. இறுதிநிலை நுகர்ச்சி குறைவதால் சமநிலை வருமானம் பெற முதலீடு அதிகமாகி வருமானம் வேகமாக வளர்ச்சி அடைய வேண்டும். இதைக் கீழ்க் கண்ட பட்டியல் மூலம் அறியலாம்.

பட்டியல் XIII

காலம்	Y	C	I	C+I
0	100	50·00	50.00	100·00
1	112·50	56·25	56·25	112·50
2	126·56	63·28	63·28	126·56
3	142·38	71·19	71·19	142·38
4	160·18	80·09	80·09	160·18
5	180·20	90·10	90·10	180·20
6	202·72	101·36	101·36	202·72

இறுதிநிலை நுகர்ச்சி நாட்டமான b குறைவதற்குப் பதிலாக தொழில் நுட்பங்கள் மாறுதல் அடைந்து, அதன் மூலமாக S மாறு படுகிறது என்று வைத்துக்கொண்டால், எப்படிப் பொருளாதார வளர்ச்சி மாறும் என்பதை நாம் கவனிக்கவேண்டும். S = 0.25 ஆக இல்லாமல் S = 0.40 ஆக வளர்ந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம்.

$$\frac{\Delta Y^*}{Y^*} = S\,(1-b)$$

$$= 0.20\,(1 - 0.80)$$

$$= 0.40\,(0.20) = .08 \text{ or } 8\%$$

8%

எனவே, தற்போதைய புதிய வளர்ச்சி 8% ஆகும். இது கீழ்க்கண்டப் பட்டியலில் காட்டப்பட்டிருக்கிறது.

தேவைப்படும் வருமான வளர்ச்சி வீதம்.

b = 0.80   S = 0.40

பட்டியல் XIV

காலம்	Y	C	I	C+I
0	100·00	80·00	20·00	100·00
1	108·00	86·40	21·60	108·00
2	116·64	93·31	23·33	116·64
3	125·97	100·78	25·19	125·97
4	136·05	108·84	27·21	136·05
5	146·93	117·54	29·39	146·93
6	158 68	126·94	31·74	158·68

இறுதிநிலை நுகர்ச்சி வீதத்தைக் குறைக்காமல், முதலின் குணகம் அதிகப்படுவதனுல் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்க முடியும்.

மேலே குறிப்பிட்டுள்ள மூன்று பட்டியல்களில் தெளிவான கருத்து ஒன்று தோன்றுகிறது. இரண்டாவது பட்டியலில் நுகர்ச்சி வீதம் குறைவதால் வளர்ச்சியை அதிகரிக்க முடிகிறது. மூன்றுவது பட்டியலில் நுகர்ச்சி வீதத்தைக் குறைக்காமல் முதலின் குணகத்தை அதிகப்படுத்துவதனுல் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்க முடியும். முதலின் குணகத்தை அதிகப்படுத்துவதும், நுகர்ச்சி வீதத்தைக் குறைத்து முதலீட்டை அதிகப்படுத்துவதும் எளிதான காரியங்கள் என்று சொல்வதற்கில்லை.

முதலின் குணகமும் தனிநபர் வருமானமும்

இறுதிநிலை நுகர்ச்சியும், முதலின் குணகமும் சேர்ந்து பொருளாதார வளர்ச்சியை முடிவு செய்வதாக நாம் காட்டிய பொருளாதார மாதிரிகளில் குறிப்பிட்டிருக்கிறேம், நாம் $Y = Sk$ என்ற ஓர் எளிமையான உற்பத்திச் சார்பையும் பயன்படுத்தி இருக்கிறேம். மக்கள்தொகை வளர்ச்சி, தொழில் நுணுக்க வளர்ச்சி முதலிய சிக்கலான பல பிரச்சனைகளை உட்படுத்தினுல் தான் நாம் மொத்த உற்பத்திச் சார்பைச் சரியாகக் காட்ட முடியும்.

உற்பத்திச் சார்பைத் தெரிந்து கொள்ள நமக்குத் தொழில் நுணுக்க விவரங்கள் பல தெரிய வேண்டும். நம்மிடம் இருக்கும் முதல் இருப்புநிலை, உழைப்பு, தொழில் நுணுக்க முன்னேற்றம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு, மொத்த உற்பத்திச் சார்பைப் பற்றி (Aggregate Production Function) முடிவு செய்யவேண்டும்.

மொத்த உற்பத்திக்கும், உற்பத்திக் காரணிகளுக்குமுள்ள, தொழில் நுணுக்கப் பொறியியல் விவரங்களைப் பற்றிய தகவல்களை எல்லாம் தருவதுதான் உற்பத்திக் கோட்பாட்டின் முக்கிய வேலையாகும். நம்மிடம் சில அளவு உழைப்பும் ஒரு குறிப்பிட்ட அளவு நிலமும், மற்றும் சில இயந்திரங்களும், கச்சாப் பொருள்களும் இருந்தால், எவ்வளவு உற்பத்தி கிடைக்கும் என்பது, நம்மிடம் இருக்கும் தொழில் நுணுக்க முறைகளைப் பொறுத்திருக்கிறது. யாராவது புது கண்டுபிடிப்புகள் செய்தால், அல்லது தொழில் முறைகளை மாற்றியமைத்தால், கொடுக்கப்பட்ட காரணிகளின் உற்பத்தி அதிகமாவது உறுதி. ஒவ்வொரு சமயத்திலும் கொடுக்கப்பட்ட காரணிகளிலிருந்து கிடைக்கக்கூடிய உச்ச வரம்பு உற்பத்தி ஒன்று இருக்கச் செய்கிறது. இதைப் போன்ற உற்பத்திக்கும் உற்பத்திக் காரணிகளுக்கும் உள்ள உறவைத்தான் பொருளாதாரத்தில் உற்பத்திச் சார்பு (Production function) என்ற கலைச் சொல்லால் விவரிக்கப்படுகிறது.

உற்பத்திச் சார்பு என்பது, கொடுக்கப்பட்ட உற்பத்திக் காரணிகளிலிருந்து உச்ச நிலையில் கிடைக்கும் உற்பத்தி என்ன என்பதை விவரிக்கும், தொழில் நுட்பமானது உறவுகள் ஆகும். இது அந்த நாட்டின் தொழில் நுட்ப நிலையைப் பொறுத்திருக்கிறது. இதற்குப் பலவிதமான உதாரணங்களைச் சொல்லமுடியும். ஒரு விவசாய விஞ்ஞானி, ஒரு குறிப்பிட்ட அளவு தானியத்தை உற்பத்தி செய்யத் தேவைப்படும் நிலம். உழைப்பு ஆகியவற்றின் தொகுப்புக் கூட்டமைப்பைப் பல வழிகளில் சொல்லலாம். 100டன் தானியம் விளைவிக்கத் தேவைப்படும் உற்பத்திக் காரணிகளின் தொகுப்பைப் பல விதங்களில் தரமுடியும். 200 டன் தானிய உற்பத்தியைத் தரக்கூடிய நில உழைப்புக் காரணிகளின் கூட்டைப் பல விதங்களில் தரமுடியும். ஒரு பொருளாதார அமைப்பில் பல ஆயிரக் கணக்கான உற்பத்திச் சார்புகள் இருக்கச் செய்கின்றன. நிறுவனங்களின் உற்பத்திச் சார்பும், மொத்தச் செலவும் பல முறைகளில் தொடர்பு உடையனவாகக் காணப்படுகின்றன. நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நிலம், உழைப்பு, முதல் முதலிய காரணிகளின் தேவைகள் உற்பத்திச் சார்பின் தன்மையைப் பொறுத்திருக்கிறது என்பது தெரியவரும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மொத்த உற்பத்திச் சார்பு (The Aggregate American Production Function)

அமெரிக்காவின் மொத்த உற்பத்தி, மொத்த உழைப்பு, மொத்த முதல், மற்றும் தொழில் நுணுக்க அளவு ஆகியவற்றைப் பற்றித் தொகுப்பது மிகவும் சிக்கலான பிரச்சனையாகும்.

இதற்குப் பலவிதமான குறியீட்டு எண்களும் (index numbers) புள்ளி விவரப் பட்டியல்களும் தேவைப்படுகின்றன. 1920ஆம் ஆண்டிலிருந்து இது சம்பந்தமான பல ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. பால் எச் டக்லஸ் (Paul H. Dougles) என்ற சிக்காகோ பல்கலைக் கழகப் பேராசிரியர் (Professor of Chicago Unirversity) அமெரிக்க மொத்த உற்பத்திச் சார்புபற்றி முக்கிய மான புள்ளிவிவர அளவுகளைத் தொகுத்துத் தந்திருகிறார். பின்னர் M I T பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராபர்ட் ஸ்லோ (Robert Slow) என்பவர் தம் ஆராய்ச்சிகளின்மூலம், தொழில் நுணுக்க முன்னேற்றம், அமெரிக்க முதல், உழைப்பு ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்.[1]

[1] P. H. Douglas (Theory of wages, Macmillan, New york) 1934.
'Technical change and the Aggregate production function'. Review of Economic and Statistics. (Vol. 39—1957 p.p. 312—320)

டக்லஸ் (Douglas), ஸோலே (Solov)ஆகியோர், புள்ளிவிவரங்கள் மூலம் நமக்குக் காட்டிய முக்கிய விவரங்கள் என்ன? உழைப்பும், முதலும் உற்பத்திக்குத் தேவைப்படுகின்றன, இதில் முதல் என்ற காரணியையோ, அல்லது உழைப்பையோ முழுமையாக நீக்கி விட்டால், மொத்த உற்பத்தி இல்லாமல் போய்விடும். ஆனால் 1% வீத உழைப்பு அதிகரிக்கப்பட்டால், உற்பத்தி மூன்று பங்காக அதிகரிக்கச் செய்கிறது. இதை நாம் நாட்டு உற்பத்தியின் கணக்கின் மூலமாகவே சொல்லமுடியும். ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியில் நான்கில் மூன்று பாகம் கூலியும், சம்பளமும் ஆகும். மீதமுள்ள ¼ பாகம்தான், பலவிதமான சொத்துகளி லிருந்தும் மற்ற உற்பத்திக் காரணிகளிலிருந்தும் கிடைக்கும் வருமானமாகும். இதிலிருந்து மேலும் சில உண்மைகள் தெரிய வருகின்றன.

1. இந்த நூற்றாண்டில் உழைப்பும், முதலும், தங்கள் உற்பத்தித் திறன்மூலம் உற்பத்தியைத் தொடர்ந்து அதிகமாக்கிக் கொண்டிருக் கின்றன. இப்படி உற்பத்தித்திறன் அதிகரித்ததற்குக் காரணம், தொழில் நுணுக்கமும், திறமையும் ஆகும். இந்த உற்பத்தித் திறனின் வளர்ச்சி 1 முதல் 2 சதவீதம் வரை, வருடத்திற்கு அதிக மாகிறது.

2. உழைப்பின் அளிப்பைக் காட்டிலும் முதலின் வளர்ச்சி அதிகமான வேகத்தில் பெருகி வளர்கிறது. சமுதாயத்தில் சேமிப்புத்திறன் வளர்ந்திருக்கிறது. ஆனால், மனித உழைப்பு நேரம் (Man hours worked) குறைந்தே வளர்கிறது. இதனால் சராசரி கணக்கின் மூலம் ஒவ்வொரு தொழிலாளியிடம் உள்ள இயந்திரங்களும் முதல் சாதனங்களும் அதிகரிக்கின்றன. இதனால் உழைப்பின் உற்பத்தித்திறன் அதிகரித்துக் கூலியும், சம்பளமும் வளர்ச்சி அடைகின்றன.

3. முதல் அதிகரித்துக்கொண்டு செல்வதால் முதலில் இருந்து கிடைக்கும் உற்பத்தி குறைந்துவிடும் என்று நாம் நினைக்கக்கூடும். குறைந்து செல்விளைவுவிதி, முதல் என்ற காரணிக்கு வரும்போது, முதலிலிருந்து கிடைக்கும் உற்பத்தி குறைய வாய்ப்புண்டு. ஆனால் அமெரிக்கப் பொருளாதாரத்தில் இந்த நிலை ஏற்படவில்லை. முதலிலிருந்து கிடைக்கக்கூடிய உற்பத்தி மாறுமல் ஒரே வீதத்தில் நிலைத்திருக்கின்றது. இதற்கு முக்கியக் காரணம் அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் தொழில் நுணுக்க முன்னேற்றமே (Technical Improvement) ஆகும். மொத்த நாட்டு உற்பத்தியில் கூலி, சம்பளத்தின் வீதம் முக்கால் பாகமாகவும்,

மற்றவை ¼ பாகமாகவும் தொடர்ந்து இருப்பது ஒரு வியப்புக்குரிய செய்திதான். தொழிற்சங்கங்கள் பெருகி வரும்போதுகூட இந்த நிலை தொடர்ந்து இருப்பது அமெரிக்கப் பொருளாதாரத்தில் மாறி வரும் தொழில் நுணுக்க வேகத்தைக் காட்டுகிறது, இது போன்று உலக முழுவதும் புள்ளி விவரங்கள் சேர்க்கப்பட்டால், உற்பத்தி பற்றி பல கோட்பாடுகளின் உண்மைகளைச் சோதிக்க உதவும்.

காலாந்தரத் தேக்கம் (Secular Stagnation)

குறிப்பிட்ட காலத்தில் தனி நபர் உண்மை வருமானம் (Real per capita income) அதிகரிப்பதே பொருளாதார வளர்ச்சி ஆகும். தனிநபர் உண்மை வருமானம் வளராமல், குறைந்தாலோ அல்லது நிலைபெற்று இருந்தாலோ அதைத் தேக்கம் என்று சொல்கிறோம். இது போன்ற தேக்கம் ஏற்படக் காரணங்கள் பல உண்டு. முதலாவதாக உற்பத்திச் சாதனங்கள் முழுமையாகப் பயன்படுத்தப் பட்டாலும் உற்பத்தி வேகம், மக்கள் தொகை வேகத்தைவிடக் குறைவாக இருக்கலாம். பொருளாதார வளர்ச்சிக்குரிய தகுதியைப் பெற்றிருந்தாலும் போதிய தேவைகள் இல்லாவிடில் உற்பத்தி குறைந்துவிடும். மக்கள் தொகை வளர்ச்சி அதிகமாக இருப்பதால், அது பொருளாதார வளர்ச்சியைக் குறைத்து விடுகிறது. இரண்டாவதில், தேவை இல்லாத காரணத்தினால், உற்பத்திச் சாதனங்களை முழுமையான அளவுக்குப் பயன் படுத்த முடியாமல் உற்பத்தி வேகம் குறைந்து விடுகிறது. இரண்டிலும் தனி நபர் வருமானம் பாதிக்கப்பட்டுக் குறைவதைப் பார்க்கிறோம். எனவே, முழுவேலை அளவுக்கு உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்துவதோடல்லாமல் உற்பத்திக் கோட்டின் எல்லையையும் மாற்றி அமைக்க வேண்டும்.

இதுபோன்ற பொருளாதார வளர்ச்சி, ஆடம் ஸ்மித் (Adam Smith) காலந் தொட்டே முக்கியமான பிரச்சனையாக இருந்தது. ஆடம் ஸ்மித்[1] அவர்கள் பெருகி வரும் மக்கள் தொகையைப் பொருளாதார வளர்ச்சியோடு ஒப்பிட்டார். பெருகிவரும் பொருளாதார வளர்ச்சிக்கு மக்கள் தொகைப் பெருக்கம் பயன் படுவதாக ஆடம் ஸ்மித் வாதித்தார். பெருகிவரும் மக்கள் தொகை, மார்க்கெட்டு வாய்ப்புகளை அதிகரித்து உழைப்பின் வேலைப்பிரிப்பையும் (Division of Laboar) பெருக்கி அதன்மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதாக அவர் நினைத்தார். உழைப்பு அதிகமாக அதிகமாக, ஒவ்வொரு தொழிலாளியும் தன் தொழில்

* Adam Smith - The wealth of Nations Books I, II and III.
Modern Library - New york, 1937.

நுணுக்கத் தகுதிகளைப் பெருக்கித் தன் தனித்திறமையை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆடம் ஸ்மித் கோட்பாட்டில், பொருளாதார வளர்ச்சிக்கான முதல் தேவையைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆடம் ஸ்மித் உழைப்பிற்கு எப்போதும் அதிகரித்துச் செல்லும் உற்பத்தி விளைவு (Increasing Ruturns) இருப்பதாக வைத்துக்கொண்டார். ஆடம் ஸ்மித்தின் விளக்கம் பொருளாதார வளர்ச்சியின் அளிப்பைப் பற்றிய பகுதியை மாத்திரம் குறிப்பிட்டது. ஆடம் ஸ்மித்திற்குக் குறைந்து செல் விளைவு விதிபற்றித் தெரியவில்லை. ஆடம் ஸ்மித் வருங்காலப் பொருளாதார வளர்ச்சியைப்பற்றி மிகவும் நம்பிக்கை கொண்டவராக இருந்தார். பொருளாதார வளர்ச்சி தடையின்றி வளர்ந்து கொண்டே போகும் தன்மையைப் பெற்றிருப்பதாக நினைத்தார்.

ஸ்மித் அவர்களின் நம்பிக்கை, பின்னர் ராபர்ட் மால்தஸ் (Robert Malthus)[1], டேவிட் ரிக்கார்டோ (David Riccardo) அவர்களால் தகர்த்தெறியப்பட்டது. மால்தஸ், ரிக்கார்டோ ஆகிய இருவரும் பெருகிவரும் மக்கள் தொகையை ஒரு பேராபத்தாகக் கருதினார்கள். ஆடம் ஸ்மித் அவர்களால் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்பட்ட மக்கள் தொகை, ரிக்கார்டோ அவர்களால் ஒரு பெரும் ஆபத்தாகக் கருதப்பட்டது. பெருகிவரும் மக்கள் தொகை, பொருளாதாரத்தில் தேக்க நிலையை உண்டாக்கிவிடும் (Stationery State) என நினைத்தார். இதனால் பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டு எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலை ஏற்படலாம். வளரும் மக்கள் தொகையால் தனிநபர் வருமானம் குறைந்து, தேக்கநிலை பொருளாதாரம் உருவாகும் என்று ரிக்கார்டோ நினைத்தார். மால்தஸ். ரிக்கார்டோ அவர்களின் கருத்துகள் படி முதலாளித்துவம் பொருளாதாரம் இயங்க முடியாத நிலை ஏற்பட்டு முறிந்துபோகும் தன்மையைப் பெற்றிருக்கிறது என்று பலர் நினைத்தனர். மால்தஸ் மக்கள் தொகை பெருக்கல் வீதத்தில் (Geonetic Ratio) ஒவ்வொரு தலைமுறையாகப் பெருகி வருகிறது என்றார். இதற்கு ஏற்றாற்போல் உணவு உற்பத்திப் பெருக வாய்ப்பில்லை. ஏனென்றால் நிலம் நிலைபெற்ற காரணியாக இருக்கிறது. முதல் வளர்ச்சி மூலமாகத்தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். முதல் வளர்ச்சி, இலாபத்தைப் பொறுத்திருக்கிறது. ரிக்கார்டோவின் கோட்பாட்டின்படி இலாபம் குறைந்து செல்ல பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமான காரணம் மக்கள் வளர்ச்சியே ஆகும். உயிரியல்

[1] Economic Doctrins by F.A. Neff.
The worldly Philosophers, Simon Schuster, New York, 1953.

தத்துவப்படி மக்கள் தொகைபெருகி உணவு உற்பத்தி குறையும். இதனால் இலாபம் இல்லாமல் தேக்க நிலைப் பொருளாதார நிலை ஏற்பட்டுவிடும்.

இதுபோல, ரிச்கார்டோவும் வாதிடச் செய்தார். பெருகி வரும் ஜனத்தொகையைப் பாதுகாக்க உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியிருக்கிறது. இதனால் செழிப்பில் நிலமெல்லாம் விவசாயத்திற்காகப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இந்தச் செழிப்பில்லா நிலத்தைப் பயிரிட நிலச் சொந்தக்காரர்களுக்கு, அதிகமான தானிய விலையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் செழிப்பான நிலத்தை வைத்திருக்கும் நிலச் சொந்தக்காரர்கள் எந்தவித உழைப்புமில்லாமல் உபரியை அடையும் நிலை ஏற்படுகிறது. இதைத்தான் நாம் வாரம் என்று குறிப்பிடுகிறோம். ஆனால் தொழில் நடத்தும் ஆலை முதலாளி, பெருகிவரும் உணவு விலையினால் அதிகமான பண ஊதியத்தைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனால், பெருகி வரும் வருமானத்தில் பெரும் பகுதி வாரத்திற்கும், கூலிக்கும் போய்விடுகிறது. இதனால் காலப் போக்கில் இலாபத்தின் பங்கு வருமானத்தில் குறைந்து கொண்டே போய்த் தேக்கமுற்ற பொருளாதார நிலை ஏற்படச் செய்கிறது. இதனால் உழைப்பை அளிப்பவர்கள், பிழைப்புக்குரிய கூலியைத் தான் பெறமுடிகிறது. தொழில் துணிவோர்கள் இலாபத்தை இழக்க நேரிடுகிறது. நிலச் சொந்தக்காரர்கள் செல்வத்தைச் சேர்க்கும் ஓர் இனமாக மாறி விடுகிறார்கள். பொருளாதாரத் தேக்க நிலைக்கு இவர்கள்தான் காரணம். இந்த நிலச் சொந்தக்காரர்கள் தாங்கள் உழைக்காமல் சேர்த்த வாரத்தை முதலீடு செய்தால் வளர்ச்சி அடைய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ரிக்கார்டோவின் கருத்தும்படி நிலச் சொந்தக்காரர்கள் தீயொழுக்கம் உள்ளவர்கள். உற்பத்தி தரும் முதலீட்டில் ஈடுபடுவதற்குப் பதிலாக இவர்கள் உல்லாசமான வாழ்க்கையில் ஈடுபடுகிறார்கள். இதனால் பொருளாதாரம் தேங்கிப்போய் விபரீதமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன என்று ரிக்கார்டோ எழுதினார்.

மேலைநாடுகளில் ரிக்கார்டோவின் கருத்துகள் மெய்யாகவில்லை. மால்தஸ் நினைத்தபடி மக்கள் தொகையும் பெருகவில்லை.[1] தொழில் நுணிக்கத்திலும், நுட்பத்திலும் ஏற்பட்ட முன்னேற்றம்[2]

[1] A. H. Hansen, 'Economic progress and Declining population growth rate'.

[2] American Economic Review 29. 1-15 1939.

குறைந்த செல்விளைவு விதி ஏற்படாமல் தடை செய்தது. இதனுல் தொன்மைப் பொருளாதாரிகளின் பொருளாதார வளர்ச்சி மேலை நாடுகளின் நிலைமைக்கு ஒவ்வாதது என்று நாம் கூற வரவில்லை. மாருகப் பல பின் தங்கிய நாடுகளுக்கு, மால்தஸ், ரிக்கார்டோ ஆகியவர்கள் சொன்ன கருத்துகளின் பின்னுல் பெரும் உண்மை பொதிந்து இருப்பது தெரியவரும். பின்தங்கிய நாடுகள் மக்கள் தொகை பெருகி, உணவு உற்பத்திக்குத் தேவை அதிகமாகிறது. உணவு விலையை அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்த நாடுகளில் ஒரு பெரும் செல்வந்தர்கள் இனம் சுகமான வாழ்க்கையை நடத்தி வருவதையும் நாம் பார்க்கிறேம். இச் செல்வந்தர் இனம், வெளிநாட்டவர்களைப் போலத் தங்களை நினைத்துக்கொண்டு ஆடம்பரமான வாழ்க்கையை நடத்த முயல்கிறர்கள். இதனுல் சமூக அரசியல் சம்பந்தமான கொந்தளிப்புகள் எற்படச் செய்கின்றன. இது போன்ற நாடுகளில் முதலீடு பெருகி உற்பத்தித் திறன் அதிகரித்தால் அன்றி தனிநபர் வருமானம் அதிகரிக்க வாய்ப்பில்லை.

மேலைநாடுகளில் குறைந்த வீத மக்கள் தொகை வளர்ச்சியும், அதிகமான முதலீட்டு உற்பத்தித் திறனும் தேக்கமான பொருளாதார நிலையை உருவாக்கும் நிலையைப் பெற்றிருக்கிறது. A.H. ஹேன்ஸன்[1] (A.H. Hansen) என்பவர் இதை விஞ்ஞான ரீதியாக விளக்கி இருக்கிறர். இதுபோன்ற பொருளாதாரங்களின் முழுத்தேவை (Aggregate demand) குறையக் காரணங்கள் இருக்கின்றன.

பத்தொன்பதாம் நூற்றுண்டிலும், இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் அமெரிக்க வளர்ச்சி நன்கு அமைந்திருந்தது. மக்கள் தொகையும் வேகமாக வளர்ந்தது. உற்பத்தியும் வெகு வேகமாக வளர்ந்தது. இதனுல் தனிநபர் வருவானமும் ஒரு நிலையான வீதத்தில் வளர்ச்சி அடைந்தது. இருபதாவது நூற்றுண்டின் தொடக்கத்திற்குப் பின்னர், பொருளாதார வளர்ச்சி வீதம் குறையத் தொடங்கியது. இதற்கு ஹேன்ஸன் நான்கு விதமான காரணங்களைக் குறிப்பிட்டார்.

1. அமெரிக்காவின் நில எல்லைகள் (Geographic Frontier) குறையத் தொடங்கின. 2. சேமிப்பின் பரிமானம் மிக அதிகமாகத் தொடங்கியது. 3. முதல் சேமிக்கும் (Capital saving) தொழில் நுட்பங்கள் பெருகத் தொடங்கின. 4. முதல்

[1] A. H. Hansen. Economic Progress and Declining population growth rate.

குணகத்தின் திறன் அதிகரிக்கச் செய்தது. இதனால் முதல் பயன் படும் தன்மை குறைய ஆரம்பித்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பரந்த நிலப்பரப்பும் மக்கள் தொகை வளர்ச்சியும், 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் காரணங்களாக அமைந்தன. அதிக மக்கள் தொகையும் புதிய இடங்களில் குடியேறுவதும் ஏராளமான முதலீட்டுச் செலவிற்குத் தேவை ஏற்பட்டது. வீடுகளும், பள்ளிக்கூடங்களும், மருத்துவமனைகளும் புதியனவாக ஏற்பட நேரிட்டது. பலவிதமான ரெயில் பாதைகளும் தேவைப்பட்டன. இதனால் அமெரிக்காவின் நிறைந்த சேமிப்புக்கு வேண்டிய முதலீட்டுச் செலவுகள் உருப்பெற்றன. பின்னர் மக்கள் தொகை வளர்ச்சி குறையத் தொடங்கின. பிறப்பு வீதமும் குறைய ஆரம்பித்தது. அமெரிக்காவில் குடியேற்றம் செய்பவர்கள் மீது, பலவிதமான கட்டுப்பாட்டுச் சட்டங்கள் கொண்டுவரப் பட்டன. அமெரிக்க நில எல்லை மூடப்பட்டுவிட்டது. குறைந்து வளரும் மக்கள்தொகைக்கு ஏற்றாற்போல் வீடுகள். ரெயில் பாதைகள் ஆகிய பொருள்களின் தேவையும் குறைய ஆரம்பித்து விட்டன. இதனால் முதலீட்டுச் செலவுகள் குறைய ஆரம்பித்து விட்டன.

இதுபோன்ற பொருளாதாரத் தேக்கம் ஒன்றை முதலைப் பயன் படுத்தும் தொழில் நுட்பங்களை அதிகரிப்பதன்மூலம் போக்கி இருக்க முடியும். உற்பத்தி முறைகளை மாற்றி அமைப்பதனால் முதலுக்கு உள்ள தேவையை அதிகப்படுத்த முடியும். ஹென்ஸன் அவர்களுக்கு இதில் நம்பிக்கை இல்லை. தொழில் நுட்பம் முதல் குணகத்தை அதிகப்படுத்துமேயன்றி, முதல் தேவையை அதிகப் படுத்துவதற்கில்லை. இதை ஹென்ஸன் சில உதாரணங்கள்மூலம் சொல்லி இருக்கிறார். நுட்பத் தொழிலில் ஏற்படும் முன்னேற்றம் உற்பத்தியைச் செய்யத் தேவையான முதலீட்டைக் குறைத்திருக் கிறது, ஆகாய விமானம், ரெயில் பாதைத் தொழிலை மாற்றி அமைத்திருக்கிறது. ஆகாய விமானத்திற்கு வேண்டிய முதலீடு, ரெயில் பாதையைக் காட்டிலும் குறைவானதே. ஹென்ஸன், கீன்ஸின் (Keynes) வழியைப் பின்பற்றி முழுவேலை உற்பத்தி என்பது, பலவிதமான சமநிலைகளில் ஒன்று என்றும், அமெரிக்காவின் சேமிபபுமூலம் முழுவேலைக்கு வேண்டிய முதலீட்டைச் செய்து உற்பத்தியைப் பெருக்க முடியும் என்றார். ஆனால் சேமி புக் கசிவினால் ஏற்படும் நிலையைப் போக்கப் போதுமான முதலீட்டைச் செய்வதற்குப் போதுமான வசதிகள் இல்லாமல் போய்விடுகிறது. முழுவேலை உற்பத்தியை வணிகச் சுழற்சியின் உச்சக் கட்டத்தில்

அடையமுடியும். ஆனல் காலப் போக்கில் வேலையின்மை அதிகரிக்கத்தான் செய்யும் என்று ஹேன்ஸன் கருதினர்.

ஹேன்ஸனின் கருத்துத் தவருகப் போய்விட்டது. இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்னர், அமெரிக்கப் பொருளாதாரத்தில் மொத்தத் தேவை அதிகரித்து விலைவாசி வீக்கம் ஏற்படச் செய்தது. ஹேன்ஸன் கருத்து, காலத்துக்கு ஒவ்வாததாக மாறி விட்டது என்று பலர் நம்பினர்கள். இருந்தாலும் முதல் வளர்ச்சியானது மக்கள் தொகை வளர்ச்சியைவிட அதிகமாக எப்போதும் நீடித்துக்கொண்டு செல்வதற்கில்லை.[1] தொழில் நுட்பத்தை நீக்கி முதலுக்கும் (K) உழைப்பிற்கும் உள்ள வீதத்தை ஆராய்வோம். N குறைந்த வீதத்தில் சென்ருல் K அல்லது முதல், குறைந்து செல்விளைவு விதிக்கு உட்பட்டிருக்கிறது என்று பொருளாகும். முதலீட்டுத் தேவைக்கோடு இடப் பக்கமாகத் திரும்பும் வட்டிவீதம் குறைவதன்மூலமாகத்தான் இன்னும் முதல் வீதத்தை அதிகப்படுத்த முடியும். எனவே, போதுமான முதலீடு இல்லாத காரணங்களால் முழுத்தேவை குறைந்து தேக்கநிலை ஆரிம்பிக்கத்தொடங்கலாம், தொழில்நுட்பம் பெருகினல் இறுதி நிலை உற்பத்தியை அதிகரிக்க முடியும். மேலும் தொழில் நுட்பம் அதிகரித்தாலும், முதல் இருப்பைப் பயன்படுத்தப் போதிய உழைப்புத் தேவை. மக்கள் தொகை பெருகாவிட்டால் இயந்திரங்களை இயக்கப் போதிய உழைப்புத்தேவை. மக்கள் தொகை பெருகாவிட்டால் இயந்திரங்களை இயக்கப் போதிய மனித உழைப்புக் கிட்டாமல் போய்விடும். இதற்காக உழைப்புச் சேமிக்கக் (Labour saving) கூடிய புதுமைகளை உருவாக்க வேண்டும். இது போன்ற பிரச்சனைகளால் வளர்ச்சி பாதிக்கப்படும்.

பொருளாதார வளர்ச்சி மிகவும் நலம் பயக்கக்கூடியதுதான். பொருளாதார வளர்ச்சியினல் சமூகத்தில் உள்ள தனி மனிதனின் வாழ்க்கைத்தரம் உயரத்தான் செய்கிறது. இருக்கிற வருமானத்தைப் பகிர்ந்து கொள்ளாமல் புதுதாக வருமானத்தை உற்பத்தி செய்து பகிர்ந்து கொள்வது ஒரு நல்ல முறையாகும். இன்றைய தினம் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி ஒரு முக்கியமான கௌரவமான பிரச்சனையாகப் போய்விட்டது. ஆசிய, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா நாடுகளின் வளர்ச்சியை வைத்துக்கொண்டு அமெரிக்க ரஷ்ய நாடுகள் தம் வளதஹையும் வலிமையையும் கணக்கெடுக்கின்றன. இந்த வளர்ச்சி வீதங்கள்

[1] A. Murad: Net investment and industrial progress in K. Kuriharaed. Post keynesian Economics.
Rutgers University Press, N. J. 1954.

மற்ற நாடுகளை அச்சுறுத்தும் சாதனமாகவும் பயன்படும். A, B என்பவை வளர்ச்சி அடைவதாக வைத்துக் கொள்வோம். A அதிகமான வீதத்தில் வளர்ச்சி அடைந்தால் காலப்போக்கில் B-ன் வளர்ச்சி எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அதைவிட அதிகரிக்கத்தான் செய்யும். அதிகமாகப் பொருளாதார வளர்ச்சி அடையும் நாடு தேசியப் பாதுகாப்பிற்கும்[1] பொதுநலத்துறைக்கும், வெளிநாட்டுத்துறைக்கும், மற்ற சாதனங்களைப் பாதிக்காமல் உதவி செய்ய முடியும்.

இந்தியாவும் பொருளாதார வளர்ச்சியும்

நாம் நம் நாட்டில் 5 அல்லது 6 சதவீத வளர்ச்சி அடைய வேண்டும் என்று கருதுகிறோம். அதற்கு நமது உண்மையான மொத்த நாட்டு உற்பத்தியை 5 அல்லது 6 சதவீதத்திற்கு அதிகரிக்க வேண்டும். இது நம்மால் அவ்வளவு எளிதாக ஆகக்கூடிய காரியமன்று. நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சென்ற சில ஆண்டுகளில் எப்படி இருந்தது? நாம் நம்முடைய குறியீடான 5 அல்லது 6 சதவீதத்தை அடைய முடியவில்லை. அதற்கு மாறாக நம் பொருளாதார வளர்ச்சி வீதம் 3 அல்லது 4% வீதமாக கடந்த 20 ஆண்டுகளாக இருந்து வருகிறது. 1950-51 முதல் 1964-65 வரை நமது தேசிய வருமானம் 69 சதவீதம் அதிகரித்தது. அஃதாவது நமது வருமானம் $3\frac{1}{2}$ சதவீதம் கூட்டு வட்டி வீத வட்டியில் வளர்ந்திருக்கிறது.[2] அதே காலத்தில் நமது தனிநபர் வருமானம் 1·8 சதவீதத்தில்தான் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சிவீதம் இப்படி இருக்கும்போது இது சம்பந்தமான உலக வரலாறு எப்படி இருக்கிறது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும்.

பொருளாதார வளர்ச்சி ஏற்படச் சரியான நிலையங்கள் (institutions) தேவைப்படுகின்றன.[2] இந்த நிலையங்கள் தான் பொருளாதார உறவு முறைகளை ஒழுங்குபடுத்துகின்றன. ஒரு சமுதாயத்தில் இருக்கும் முக்கியமான மூன்று பிரச்சனைகளான எதை உற்பத்தி செய்வது, எப்படி உற்பத்தி செய்வது, யாருக்கு உற்பத்திசெய்வது என்பன முதலிய கேள்விகளுக்கு இந்த நிலையங்கள்தான் தீர்வு காண வேண்டும். 18வது நூற்றுண்டிலிருந்து முதல் உலக யுத்தம்வரை வரலாற்றில் ஒரே விதமான நிலைய அமைப்புத்தான் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளை

[1] Fourth five year plan - A Draft outline p.p. 7-8.

[2] Resources and constriaints - Dr. Venkatasamy Seminar or Techniques perspective planning - page 3.

தீர்த்து வந்தது. இதைத்தான் சுதந்திர மார்க்கெட் பொருளாதார அமைப்பு (free market economy) என்று குறிப்பிடுகிறோம். இம் முறையின்கீழ் தானாகவே பொருளாதார வளர்ச்சி இயங்கி வந்தது. கண்ணுக்குப் புலப்படா தேவையும், அளிப்பும், மார்க்கெட் கருவியை இயக்கின. இதுபோன்ற அமைப்பில் தானாகவே வளர்ச்சி தோன்றியது. 1917ஆம் ஆண்டு மத்திய திட்ட அமைப்பு என்ற கம்யுனிஸ முறை அமைப்பு, பொருளாதார வளர்சிக்குப் பயன்படுத்தப்பட்டது. கம்யூனிஸ்ட் நாடுகள், திட்ட முறை மூலமாக முதலீட்டை அதிகப்படுத்தி வளர்ச்சியைப் பெருக்க முயன்றன. கம்யூனிஸத் திட்ட முறையில் அரசாங்கமே உற்பத்திக் காரணிகளைச் சொந்தமாக்கிக் கொண்டு, அரசாங்க விருப்பப்படி உற்பத்திச் சாதனங்கள் இயங்கத் தொடங்கின. கம்யூனிஸ்ட் நாடுகள், தங்கள் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் காரணமாக முதலாளித்துவ நாடுகளைவிட அதிகமாக இருக்கிறது என்று கூறிக்கொள்கிறார்கள். முதலாளித்துவ உற்பத்தி முறையில் நம்பிக்கையுள்ளவர்கள் இதற்கு எதிர் மறையாக வாதிட்டுத் தங்கள் பொருளாதார வளர்ச்சி அதிகம் என்று கூறிக் கொள்கிறார்கள். இது சம்பந்தமாக இறுதியாகக் கூற நம்மிடம் போதிய புள்ளி விவரங்கள் இல்லை. ஆனால், இந்தியா இம் முறைகளையெல்லாம் பின்பற்றாமல், ஜனநாயகம், தனியார்த்துறை, பொருளாதாரம், பொதுத்துறை முதலீடு ஆகிய எல்லாவற்றையும் கலந்து, ஒரு கலப்பு முறைப் பொருளாதாரத்தை (Mixed economy) உருவாக்கி இருக்கிறது. இது கம்யூனிஸ அமைப்பு, மற்றும் முதலாளித்துவ முறை அமைப்பு ஆகியவற்றில் உள்ள குறைகளை நீக்கி அவற்றின் நன்மைகளைக் கலந்து ஒரு புதுமுறையான பொருளாதார உற்பத்தி முறை என்று சொல்லப்படுகிறது. ஆனால் நடைமுறையில் இஃது உண்மையாகத் தெரியவில்லை. நம் பொருளாதார வளர்ச்சி, கம்யூனிஸ்ட் சீனாவைவிடக் குறைவாகவே இருக்கிறது. இதுபோல நம் பொருளாதார வளர்ச்சி மார்க்கெட் அமைப்பைப் பின்பற்றும் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளைவிட மிகவும் குறைவாகவே இருக்கிறது.

முன்னேற்றம் அடைந்த நாடுகளில் பொருளாதார வளர்ச்சி

மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பொருளாதார வளர்ச்சி அடைவதற்கு முன்னதாகவே, நல்ல பொருளாதார, சமூக, அரசியல் நிலைகளைப் பெற்றிருந்தன. 1800ஆம் ஆண்டின் இங்கிலாந்தின் தனி நபர் வருமானம் தற்போதைய நம் தனி நபர் வருமானத்தைவிட அதிகமாக இருந்தது. வளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் மக்கள் தொகைவீதம் குறைவாகவே பெருகியது. அந்தச் சமுதாய அமைப்பில் குறைந்த

கூலி வீதமும், நிறைந்த லாபமும் இருந்தன. முதலாளிகள் தங்கள் இலாபத்தை மறுபடியும் முதலீடு செய்தார்கள். உல்லாசமான வாழ்வு போன்ற, பகட்டான நுகர்ச்சிகளை அவர்கள் செய்யவில்லை. இந்த நன்மைகள் எல்லாம் இருந்தும் அந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மிக அதிகமான வீதத்தில் இருந்ததாகத் தகவல்கள் இல்லை. மிகவும் வளர்ச்சி அடைந்த நாடுகள் தங்கள் வளர்ச்சியை 4 அல்லது 5 சதவீதத்திற்குத்தான் அதிகப்படுத்தின. பிரிட்டன் பெல்ஜியம் முதலிய நாடுகளில் வளர்ச்சி வீதம் 2 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தது.

R. W. கோல்ட்ஸ்மித் என்பவர் 1839– 959, 120 ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 3·6 சதவீதம் என்று கணக்கிட்டிருக்கிறார். பொதுவாக இந்த வளர்ச்சி, கூட்டு வட்டி வீதத்தில் வளர்ச்சி அடைகிறது. இதனால் மொத்த உற்பத்தியானது 19 வருடத்தில் இரட்டிப்பு ஆகும். ஆனால் இந்தக் குறைந்த வீதத்தில் கூட, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மொத்த வருமானம் ஒரு நூற்றாண்டில் (95 வருடங்களில்) 32 மடங்கு பெருகி இருக்கிறது. உண்மையான தனிநபர் வருமானம் இதே காலத்தில் 1·64 சதவீதம்தான் உயர்ந்தது. அஃதாவது தனிநபர் வருமானம் 43 வருடங்களில் இரட்டிப்பு ஆகியது.[1] அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியைக் காட்டிலும் சோவியத் நாட்டின் குறுங்கால வளர்ச்சி சிறிது அதிகமாகவே காணப்படுகிறது. யுத்த காலப் பகுதியை நீக்கிவிட்டுச் சோவியத் யூனியன் வளர்ச்சியை 1828 - 40, 1950 - 58, 1958 - 62 பகுதிகளில் நாம் சிறிது கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். சராசரி வளர்ச்சி 1928 - 40 வரை 4·2%ஆக இருந்தது. 1950 - 58 ஆண்டுகளில் வளர்ச்சி வீதம் 7·8 சதவீதம் வரை உயர்ந்தது. 1958 - 62 ஆண்டுகளில் வளர்ச்சி வீதம் 4·6 சதவீதமாகக் குறையத் தொடங்கியது, நீண்ட காலப் பகுதியில் சோவியத் நாட்டின் வளர்ச்சி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சியைவிட அதிகமாக இருக்குமோ அல்லது குறைவாக இருக்குமோ என்று தெளிவாகச் சொல்வதற்கில்லை.

ஆனால் நாம் இங்கு ஒரு முக்கியமான கருத்தை மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். 1917ஆம் ஆண்டில் ரஷ்யாவை ஒரு பின்தங்கிய நாடு என்று சொல்லிவிட முடியாது. ரஷ்யா தொழில்

[1] R. W. Goldsmith: Historical and comparative rates of production, productivity and price. Joint Economic Committee on Employment, Growth and price levels leaving, page 271.

துறையில் வளர்ச்சி பெற்று விவசாயத்தில் ஓர் உபரி நாடாக அப்போதே இருந்தது.

நம் நாட்டின் வளர்ச்சிக்கு இந்த மேலை நாடுகள் முன்மாதிரி ஏதாவது பயன்படுமா என நாம் ஆராயவேண்டும். நம்மிடம் இருக்கும் ஏழ்மையான நிலையில் 1·8 சதவீத தனிநபர் வருமான வளர்ச்சி மிகவும் குறைந்தது. இந்தத் திட்டகால அனுபவத்தைக் கருத்தில் கொண்டால் நம் வளர்ச்சிக்குள்ள இடர்ப்பாடுகள் (Constrains) என்ன என்று ஆய்ந்து அதை நீக்க முடியும். பொதுவாக நாட்டு வருமானத்தில் 15 அல்லது 20 சதவீதத்தைச் சேமித்து, மேலை நாடுகள் போன்று முதலீடு செய்தால் நாம் பிற்பட்ட நிலையை அகற்ற முடியும் என்று பலர் நினைக்கின்றனர். ஆனல் சமீப காலங்களில் இக் கருத்தைப் பலர் ஒப்புக்கொள்வதில்லை. பொருளாதார முன்னேற்றத்தில் முதலீட்டின் பாகத்தைப் பலர் பெரிது படுத்தியே கூறுகிருர்கள். முன்னேற்றம் என்பது முதலின் சார்பு (function) என்று கொள்வது மிகவும் தவருன கருத்தாகும்.[1]

அதிகமாக முதல் இல்லாமல் பொருளாதார வளர்ச்சியில் பெரும் சாதனைகளை செய்த நாடு ஜப்பான். மேஜி புரட்சிக்குப் பின்னர், 20 ஆண்டுகளில் ஜப்பான் சேமிப்புவீதம் 5% ஆக இருந்தது. ஆனல், இந்த 5 சதவீத சேமிப்பில் வருமானம் வேகமாக வளர்ச்சி அடைந்தது. அதிகமான உற்பத்தியானது மிகத் திறமையான பொருளாதார நிர்வாகத்தால் ஏற்பட்டது. புதுமைகள் (innovations) உற்பத்தி முறைகளை மாற்றி அமைத்து குறைந்த முதலீட்டின் காரணமாக அதிக உற்பத்தியைக் கொடுத்தன. இதுபோன்ற புதுமைகள் உற்பத்தி முறைகளை மாற்றி அமைக்க, திறமை வாய்ந்த, நுட்பத் திறன் கொண்ட உழைப்புச் சக்தி தேவைப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், புதுமைகள்தான் உற்பத்தியைப் பெருக்கின, இது போன்று நம் நாட்டிலும் புதுமைகளை உண்டாக்கும் ஒரு சமூக அமைப்பு உருவாக வேண்டும்.

[1] P. T. Baner and B. S. Yamey. The Economics of under-developed countries, page-127.

19. பேரியல் பொருளாதாரத்தில் இயக்க நிலை

(Macro Economic Dynamics)

நாம் தற்போது இந்த அதிகாரத்தில் இயக்கநிலை (Dynamic) தொடர்பான பொருளாதாரப் பிரச்சனைகளை அசலன நிலையில் (Static State) இருக்கும் பிரச்சனைகளுடன் வேறுபடுத்திக் காட்ட வேண்டும். முதலில் இந்தச் சொற்களின் பொருளை நாம் புரிந்து கொள்வது நல்லது. பொதுவாகப் பொருளாதாரிகள் இயக்க நிலை மாதிரிகளை (Dynamic models) நல்ல மாதிரிகள் என்றும், அசலன நிலை மாதிரிகளை (Static models) கெட்ட மாதிரிகள் என்றும் சொல்ல முயற்சிக்கலாம். இதுபோன்ற வரையறைகள் நமக்கு எந்த விதமான பலன்களையும் கொடுக்கப்போவதில்லை.

இயக்கநிலை மாதிரி (Dynamic model) என்றால் அங்கே காலம் (time) என்பது ஒரு வெளிப்படையான மாறி (variable) ஆகிவிடு கிறது. நாம் பொருளாதார வளர்ச்சியின் காரணிகள் என்ன என்பதை ஆராய்வதாக வைத்துக்கொள்ளுவோம். அப்போது குறிப்பிட்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சி எப்படி இருக் கிறது என்று தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமாகப் போய் விடுகிறது. அதுபோலப் பணவீக்க காலத்தில் விலைமட்டம், இலக் கணப்படி சமநிலை இல்லாத நிலையில் மாறிக்கொண்டே இருக் கிறது. நாம் விலைவாசிகள் 10% அதிகரித்திருக்கிறது என்று கூறினால், அது சுவையில்லாத ஒரு செய்தி ஆகும். இந்த 10% அதிகரிப்பு எப்போது நடந்தது? போன நூற்றாண்டிலா அல்லது போன வருடமா என்பதுபோன்ற காலத்தைப்பற்றிய செய்திகள் மிகவும் தேவைப்படுகின்றன. அதுபோலவே, வணிகச் சுழற்சியின் (Trade cycle) போது ஏற்படும் பொருளாதார நடவடிக்கைகளும் ஓர் இயக்க நிலைப் பிரச்சனையாகும். நாம் இதுவரை பார்த்ததில் பொருளாதார வளர்ச்சி மாதிரிகளையும் பெருக்கியின் (Multiplier)

செயல்படும் முறைகளையும் விளக்கும்போதுதான் இயக்கநிலை முறையில் பிரச்சனைகளை அணுகிறோம். மற்றவைகள் எல்லாம் ஒப்பிடப்பட்ட அசலனநிலை மாதிரிகள் (Comparative Static Model) என்று கூறலாம். இதுபோன்ற மாதிரிகளில் சமன்பாடுகளை (equations) தீர்வு காண்பதன்மூலம் சமநிலையில் மாறிகளின் மதிப்பு நமக்குத் தெரிய வருகிறது. சார்பு நிலைப் பெயர்ச்சிகள் (Shift in the functions) ஏற்படும்போது இச் சமன்பாடுகள். சம நிலையில் புதுத் தீர்வை உண்டாக்கி விடுகின்றன. அரசாங்கச் செலவுகள், பணஅளிப்பின் மாறுதல்கள் ஆகியவை ஏற்படும்போது சார்புநிலைப் பெயர்ச்சிகள் ஏற்படத்தான் செய்யும். இப்படிப் பெயர்ச்சி ஏற்படும்போது, புது சமநிலைக்கு எந்தவிதமாக மாறிகள் (variables) வருகின்றன என்பது சரியாகத் தெரிவதில்லை. ஒரு சம நிலையிலிருந்து, மற்ற சமநிலைக்கு மாறும்போது, மாறிகள் செயல் படும் முறைகளையும் தெரிந்துகொள்ள முடிவதில்லை, இந்தச் சமன் பாடுகளில் (equations) இதுபோல ஏற்படும் செயல் முறைகள் எப்படி இயங்குகின்றன என்பதற்கு விளக்கமும் இல்லை. இந்த மாதிரிகள் எல்லாம் இயக்கநிலை மாதிரிகள் ஆக வேண்டுமென்றால், ஓர் அமைப்புச் சமநிலையில் இல்லாதபோது எப்படி மாறிகள் இயங்கும் என்பதை அவை தெளிவாகக் காட்டவேண்டும்.

பொதுவாக, பணஅளிப்பை அதிகப்படுத்தி வட்டிவீதத்தைக் குறைத்து அதன்மூலம் வருமானத்தை அதிகரிக்கும் பணக் கொள்கை ஒன்றை எடுத்துக்கொள்வோம். இதுபோன்ற பணக் கொள்கைகளோ அல்லது நீதிக் கொள்கைகளோ சமநிலையை மாற்றிப் புதிய சமநிலைக்கு வரும் காலத்திற்குள் என்ன மாறுதல் களைப் பொருளாதார அமைப்பில் ஏற்படுத்துகிறது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். கால மாறுதல்களுக்கு, பல பொரு ளாதார மாறிகள் உட்பட வேண்டிஇருப்பதால், பண அளிப்பு அதிகரிக்கும் கொள்கை வட்டியையும் வருமானத்தையும் வேறு திசையில் மாற்றம் செய்யவும் வாய்ப்பிருக்கிறது. இதிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும். ஒப்பிடப்பட்ட அசலனநிலை மாதிரிகளில், சார்புநிலைகள் பெயர்ச்சி செய்யும்போது, அதன் இயக்கப் பாதைகளைக் கவனிக்காமல், எந்த விதமான விளைவுகளையும் சொல்ல முடியாது. இதைத்தான் பி. ஏ. சாமுவெல்ஸன் (P. A. Samuelson) என்பவர் தன்னுடைய ஒற்றுமைக் கோட் பாட்டில்[1] (Correspondence Principle) கூறி இருக்கிறார்.

[1] P. A. Samuelson, Foundation of Economic analysis. Chap. 9. Harvard University Press Mass 1947. p.p. 276-283.

IS, LM, மாதிரிகளில், இயக்கநிலைமூலம் சரிக்கட்டுதல் (Dynamic Adjustments of IS - LM Models)

நாம் முன்னர்க் கூறிய அதிகாரங்களில் முதலீட்டுத் தேவைச் சமன்பாட்டை $I = I(i)$ என்று குறிப்பிட்டு வந்தோம் என்று வாசகர்களுக்குத் தெரியும். ஆனால், இதைச் சீர்ப்படுத்தி $I = I(i, Y)$ என்று எழுதுவது மிகவும் பொருத்தமுடைய



(உற்பத்தி மார்க்கெட் சமநிலை)
எல்லாம் உண்மை மதிப்புகளில்

படம் 51

தாகும். Y என்ற வருமானத்தைச் சாராமாறியாக (independent variable), இந்த முதலீட்டுத் தேவைச் சமன்பாட்டில்

கொண்டு வந்துவிட்டால் பல மாறுதல்கள் ஏற்படும். இப் புதிய மாறுதலினுல் I S பட்டியல் முழுமையாக மாறுகிறது.

$$I(i, Y) = Y - C(Y)$$

நாம் முதலில் இங்குத் தெரிந்துகொள்ளவேண்டியது என்ன வென்ருல், I S வளைகோடு கீழ்நோக்கிச் செல்வதில்லை. மாருக வட்டிக்கும், வருமானத்திற்கும் நேரிடையான உறவு அமைந்து I S மேல் நோக்கிச் செல்கிறது. இதை வரை படம் 51 மூலம் காட்ட முடியும்.

மேலே உள்ள வரைப்படத்தில் Yo என்ற வருமானம், $I = I(i_0\ Yo)$ என்ற முதலீட்டுச் சமன்பாட்டுடன் தொடர்பு படுத்தப்பட்டிருக்கிறது. இதனுல், வட்டிவீதம் i_0 ஆகவும் வருமானம் Yo ஆகவும் இருக்கின்றன. அதுபோல வருமான அளவு Y_1, $I = I(i_1\ Y_1)$ என்ற முதலீட்டுத் தேவையுடன் பொருத்தப்பட்டிருக்கிறது. இதனுல் வட்டிவீதம் i_1 ஆகவும் மாறி விடுகிறது.

இவ் வரைபடத்தில் நாம் முக்கியமான ஒரு விவரத்தைக் கவனமாக ஆராய வேண்டும். பொதுவாக அசலனநிலை மாதிரி களில் (Static equilibrium) 'மற்ற மாறிகள் மாருமல் இருந்தால்' என்ற எடுகோளை வைத்துக்கொண்டு கோட்பாடுகளை உண்டாக்கி விடுகிறோம். மற்ற மாறிகள் (variables) மாறிவிட்டால், அந்த வரைகோட்டை மேல்நோக்கியோ, அல்லது கீழ்நோக்கியோ பெயர்ச்சிசெய்து கோட்பாடுகளை விளக்கிறேம். இங்கே வருமானம் மாறும்போது முதலீட்டுக்கோடு மேல்பெயர்ச்சி செய் கிறது. இதனுல் உற்பத்தி மார்க்கெட்டில் முன்னுல் இருந்த உறவுகள் வெகுவாக மாறிவிட்டன. இந்தச் சார்புப் பெயர்ச்சி யினுல் உற்பத்தி மார்க்கெட்டில் வட்டிக்கும் வருமானத்திற்கும் உள்ள உறவு நேரிடையான உறவாக மாறிவிட்டது. வட்டி அதிகமாக அதிகமாக, வருமானமும் அதிகரிக்கின்றது. இதனுல் சமநிலைப் பிரச்சனைகளில் பலபுதிய பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன. நாம் முன்னர் I S, L M வளைகோடுகளின் இடப் பெயர்ச்சிகளைப் பயன்படுத்தி உண்மையான தொல்லைகள் (Real disturbance), பணத்தொல்லைகள் (Money disturbance) என்பதைப் பாகுபடுத்திக் காட்டி இருந்தோம். அந்தப்பிரிவு ஜே. எல். ஸ்டெயின் (J. L. Stein[1]) என்பவரால் கொண்டுவரப்பட்டது. உண்மையான தொல்லைகள்

[1] J. L. Stein. A method of identifying disturbances which produce changes in Money National income. Journal of political Economy 68 p. 1–16. Ed. 1960.

ஏற்படும்போது, வட்டிவீதம் அதிகரித்து வருமானமும் அதிகரிக்கும். பணத்தொல்லைகள் ஏற்படும்போது பொதுச் சமன்பாட்டில் வட்டிவீதம் குறைந்து வருமானம் அதிகரிக்கும்.

தற்போது I = I (i, Y) என்று ஆகிவிட்டதால், IS கோடு மேல் நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிட்டது. இதுபோன்ற பொருளாதாரத்தில் I S பெயர்ச்சி செய்தால் கீழ்க்கண்ட நிலை ஏற்படும்.



படம் 52

மேலேயுள்ள வரைபடத்தில் உண்மையான தொல்லை சரியான முறையில் காட்டப்பட்டிருக்கிறது. வட்டிவீதமும் வருமானமும் மேல்நோக்கிச் செல்லும் I S கோட்டுடன் ஒத்துப் போகிறது. பணத்தொல்லை (money disturbance) வரும்போது தான் மேல்நோக்கிச் செல்லும் I S கோடு பிரச்சனைகளை எழுப்புகின்றது. இதைக் கீழ்க்கண்ட வரைபடம் மூலமாக விளக்கம் செய்யலாம்.

இந்தப் பணத்தொல்லை, வரைபடத்தில் LM பெயர்ச்சி செய்து வருமானம் அதிகரித்திருக்கிறது. ஆனால், வட்டிவீதம் i_0-லிருந்து i_1 ஆக உயர்ந்துவிட்டது. இதுபோன்ற சமயத்தில் பணத் தொல்லைகளின் விளைவுகளையும், உண்மையான தொல்லைகளின் இடர்ப்பாடுகளையும் பிரிப்பது முடியாத காரியமாகப் போய் விடுகிறது. நாம் இந்த அதிகாரத்தின் முதலில் குறிப்பிட்டது

போன்று ஒரு சார்புநிலைப் பெயர்ச்சிசெய்து எழும்போது சமநிலை மாறிவிடுகிறது. அந்தச் சமநிலை திரும்பிச் சீர் அடைவதற்கு



படம் 53

முன்னால் பலவிதமான விளைவுகள் ஏற்படமுடியும். இதைத்தான் நாம் முன்னர்க் குறிப்பிட்ட வரைபடங்கள்மூலம் காட்டி இருக்கிறோம்.

நாம் நம் வழக்கம்போல் வரையும் கீழ்நோக்கிச் செல்லும் I S கோட்டை எடுத்துக்கொள்வோம். இயக்கநிலை முறையைப் பின்பற்றிப் பல மாறிகள் காலத்தை இணைத்து எப்படிச் சரிசெய்து கொள்கின்றன என்பதை வரைபடம் ஒன்றின்மூலம் சுலபமாக விளக்க முடியும்.

முதலில் இருந்த சமநிலை வருமானம் Yo அதற்கு ஈடாக இருந்த வட்டி io ஆகும். LM கோடு பெயர்ச்சி செய்திருப்பதனால் அங்குப் பணத்தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. LM வளைகோடு வலப்பக்கமாகக் கீழ்நோக்கிப் பெயர்ச்சி செய்திருக்கிறது. அதை LM_1 என்று காட்டி இருக்கிறோம். நாம் தற்போது இயக்கநிலையாக எப்படி Y_1 i_1 என்ற புதிய நிலைக்கு இப் பொருளாதாரம் சரிக்கட்டிப் போய் இருக்கிறது என்பதைச் சிறிது கவனிக்கவேண்டும். இதுபோன்ற இடங்களில்தான் இயக்கநிலையை (Dynamic approach) நாம் பயன்படுத்த வேண்டும். LM வளைகோடு

பெயர்ச்சி செய்ததால் மார்க்கெட் உடனுக்குடன் பாதிக்கப்படு கிறது என்று வைத்துக்கொள்வோம். இதுபோன்ற எடுகோள்



பொதுச் சமநிலையை இயக்கநிலை மூலம் சரிக்-
கட்டல். (எல்லாம் உண்மையான மதிப்புகளில்)

படம் 54

களுடன், இயக்கநிலையின் பாதையை ஆராய்ந்தால் நாம் உடனே i^1o வட்டிக்குப் போய்விடுவோம். இங்கேயுள்ள Yo என்ற வருமானத்தில் திட்டமிடப்பட்ட முதலீடு அதிகமாக இருப்பதால், வருமானம் அதிகரிக்கச் செய்கிறது. வருமானம் அதிகரிக்க, M_1க்கு உள்ள பணத்தேவை அதிகரித்து வட்டிவீதம் அதிகரிக்கச் செய் கிறது. இதனால் வட்டிவீதம் i_1-க்கும் வருமானம் Y_1-க்கும் போகும்வரை தொடர்ந்து நடவடிக்கைகள் இருந்து வருகின்றன. கடைசியாக $S = I$ என்ற இடத்தில் i_1, Y_1 சமநிலை ஏற்படச் செய்கிறது. I S வளைகோடு மேல்நோக்கிச் செல்லும் கோடாக இருந்தால் என்ன ஏற்படும் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

I S கோடு மேல்நோக்கிச் செல்லும் ஒரு பொதுச் சமநிலையைக் கீழ்க்கண்டவாறு வரைபடம் மூலம் காட்டமுடியும்.

I S கோடு மேல்நோக்கிச் செல்வதைப் பார்க்கிறோம். Yo, io என்ற இடத்தில் சமநிலை முதலில் காணப்பட்டது. LMo கீழ் நோக்கி வலப்புறமாகப் பெயர்ச்சி செய்திருக்கிறது. இயக்க நிலையைப் பயன்படுத்தி, மார்க்கெட் உடனுக்குடன் பாதிக்கப்

பட்டால் வட்டி i'_0 ஆகக் குறையும். அப்போதுள்ள வருமானத்தில் சேமிப்பைக் காட்டிலும் முதலீடு அதிகமாக இருப்பதால், வருமானம் பெருகி வளர்கிறது. நாம் முன்னர்க் குறிப்பிட்டபடி வருமான அதிகரிப்பு வட்டியையும் அதிகப்படுத்தி அதன் மூலம்



பொதுச் சமநிலையை இயக்க நிலைமூலம் சரிக்கட்டல்

படம் 55

முதலீட்டையும் குறைக்கிறது. எனவே, வட்டிவீதம் i_1 வரை அதிகரித்து Y_1 என்ற இடத்தில் புதுச் சமநிலை தோன்றச்செய்கிறது.

இறுதியாக, மேல்நோக்கிச் செல்லும் I S கோட்டுடன், LM கோடு பெயர்ச்சி அடைந்தால் எப்படி இயக்கநிலைமூலமாகப் புதுச் சமநிலையைக் காட்டமுடியும் என்பதை நாம் கவனிக்கவேண்டும். I S கோடு மேல்நோக்கிச் செல்லும்போது, நாம் முன்னர்க் குறிப்பிட்டதுபோல, பணத்தொல்லைகளையும் உண்மையான தொல்லைகளையும் பிரித்து வேறுபடுத்த முடியாது. இப்போது I S கோடு மேல்நோக்கிச் செல்வதோடல்லாமல், அதன் செறிவு (slope) LMo வளை செங்குத்தாக இருப்பதாக வைத்துக் கொள்வோம். LMo வளை கோடு கீழ்நோக்கி LM_1ல் பெயர்ச்சி செய்யும்போது Yo-விருந்து வருமானம் Y_1 ஆகக் குறையத்தான் செய்யும். அதுபோல io-விருந்து வட்டி i_1 ஆகக் குறையும். ஆனால், இந்த முடிவுகள் அர்த்தமற்றவைகளாக நமக்குப் புலப்படுகின்றன. நாம் இயக்கு நிலையின் பாதைகள்மூலம் இதை விவரிக்க வேண்டும். இதை

முதலில் வரைபடம்மூலம் நாம் காட்டவேண்டும். முதலில் இருந்த சமநிலை வருமானம் Yo அதற்கான வட்டிவீதம் io. LMo கீழ்நோக்கி வலப்புறமாகப் பெயர்ந்துள்ளது. மார்க்கெட்டில் உடனுக்குடன் விளைவு ஏற்படும் இயக்கநிலை முறையைப் பின்பற்றினுல் வட்டி io-விருந்து i_1 ஆகக் குறையும். ஆனுல், வருமானம் Y_1க்குப் போய்ச் சேர்வதற்கில்லை. வட்டி குறைந்த பின்னர், முதலீடு அதிகமாகி வருமானம் அதிகரிக்கத்தான்செய்யும். மேலும் அந்த வருமானத்தில்



படம் 56

சேமிப்பைவிட, முதலீடு அதிகமாக இருப்பதால் வருமானம் Yo-விலிருந்து அதிகரித்துச் சென்றுகொண்டிருக்கும். இதைத் தான் நாம் LM_1-ல் அம்புக்குறியிட்டுக் காட்டி இருக்கிறேம். Y_2 என்ற வருமானத்தில் சமநிலைக்கு வேண்டிய நிபந்தனைகள் பூர்த்தி ஆகின்றன. எனவே, Y_2 என்ற இடத்தில் புதுச் சமநிலை ஏற்பட்டுவிடும்.

நாம் இதுகாறும் கூறியவற்றிலிருந்து சமநிலை எப்படிப் பாதிக்கப் படுகிறது என்பதை இயக்கநிலை மூலமாகக் காட்டினேம். மேலும் ஒப்பிடப்பட்ட அசலனநிலை மாதிரிகள் (comparative static models) தவறுன முடிவுகளைத்தரக்கூடும். முதலீட்டுத் தேவைக்கோடு மேல்நோக்கிப் பெயர்ந்து எழுந்ததால், I S கோடு மேல்நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. பின்னுல், பணத்தொல்லையினுல் ஏற்பட்ட

விளைவுகளையும். உண்மையான தொலைவால் ஏற்பட்ட விளைவுகளையும், சம்பந்தப்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுவிட்டது.

I S கோடு LM கோட்டின் செறிவைவிட மிகச்செங்குத்தான கோடாக மாறும்போது, அசலனநிலையை (Static equilibrium) வைத்துக்கொண்டு சமநிலைப் பிரச்சனைகளை அணுகினல் முடிவுகள் தவருகவும் விபரீதமாகவும் மாறிவிடுகின்றன. நாம் இந்த அதிகாரத்தின் மூன்ருவது வரைபடத்தில் காட்டியதைப்போல வருமானம் Y_1-ல் இல்லாமல் Y_2வுக்கு வருவதற்கு நமக்கு இயக்கநிலை முறை (Dynamic method) தெரியவேண்டும். இதனுல்தான் சாம்வெல்ஸன் என்பவர் (Samuelson),[1] ஒற்றுமைப்படுத்தப்படும் அசலன நிலையைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிருர். இம் முறையில் கொடுக்கப்பட்ட மாறிகளுக்குச் சமநிலை மதிப்பைக்கண்டு பிடிக்க முடியும். மேலும் இங்குச் சார்பு முறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சார்பு முறையில் பல மாறிகள் மாருமல் வைக்கப்பட்டிருக்கின்றன. இதைத்தான் ஆங்கிலத்தில் 'Parameters' என்று குறிப்பிடுகிருேம். இந்த பாராமீட்டர்கள் மாறினுல். முடிவுகள் வேறுவிதமாகவும், பொருந்தாததாகவும் இருக்கக்கூடும். இதை நாம் I = I (i) என்பதிலிருந்து I = I (i, Y) என்ருகமாற்றிப் புதிய முறையில் பொதுச் சமன்பாட்டை அணுகி இந்த அதிகாரத்தில் காட்டியிருக்கிருேம்.

[1] P. A. Samuelson: Corresponding principle. Foundation of Economic analysis.

20. வேலையைப்பற்றிய பொதுக்கோட்பாடு[1]

நாம் இதுவரை படித்த பொதுக்கோட்பாடுகளை எல்லாம் முறையாகத் தொகுத்துப் பொருளாதாரத்தில் புதுமைகளைப் புகுத்தியவர் ஜே. எம். கீன்ஸ் (J.M. Keynes) என்ற பொருளாதார அறிஞர் ஆவார். அவர் பேரியல் பொருளாதாரத்தில் வழங்கிய கருத்துகளைச் சுருக்கமாக இங்கே கவனிப்போம். ஜே. எம். கீன்ஸ் தன்னுடைய பொதுக் கோட்பாட்டில் சில மூலகங்களையும் (elements), பொருளாதார அமைப்புகளையும் கொடுக்கப்பட்டதாக[2] கருதி (given) தன் கருத்துகளை எழுதியிருக்கிறார். அவர் மொத்த அளிப்புச் சார்பைக் (Aggregate Supply Function) கொடுக்கப்பட்ட பொருளாதாரத்தின் மூலமாகவே (elements) கருதினார். உழைப்பின் அளவு, உழைப்பின் தரம், நுட்பத்திறன், போட்டியின் தன்மை, நுகர்வோர்களின் விருப்பம், சமுதாய அமைப்பு ஆகியவற்றைக் கொடுக்கப்பட்டதாகவே வைத்துக்கொண்டார்.

கீன்ஸின் பொருளாதார மாதிரியில் சார்ந்த, சார்பில்லாத பல மாறிகள் (Variables) இருக்கின்றன. சார்பில்லா மாறிகள் எல்லாம் சமுதாயத்தில் உள்ள பல பொருளாதாரத் தொகுதிகள் எப்படி இயங்குகின்றன என்பதைக் காட்டுகின்றன. கீன்ஸ் அவற்றை முழுமையாகக் கூறவிட்டாலும் அவற்றை நாம் கீழ்க் கண்டவாறு பிரிக்கலாம்.

1. நுகர்ச்சிச் சார்பு (Consumption Function)
2. முதலீட்டின் இறுதிநிலைத்திறன் (Marginal Efficiency of Capital)
3. ரொக்க விருப்பச் சார்பு (Liquidity Preference Function)

[1] The General Theory, Chapter 18.

[2] Given elements.

4. அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்படும் பணஅளவு

இந்த மாறிகளை எல்லாம் கீன்ஸ் தன் கூலி அலகு (wage unit) மூலமாகக் கூறியிருக்கிறார்.

கீன்ஸின் அமைப்பில் இருக்கும் சார்ந்த மாறிகள் (dependent variables) கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. நாட்டு வருமானம்
2. வேலையின் அளவு
3. வட்டி வீதம்[1]

உண்மையாக எழுதினால், கீன்ஸ் வட்டி வீதத்தைச் சார்பிலா மாறியாகத்தான் தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறார். கீன்ஸின் இந்தக் கருத்துத் தவறானது ஆகும். இதைப்போன்ற தவறுக்குக் காரணம், கீன்ஸ் வட்டிவீதம், ரொக்க விருப்பத்தையும், பண அளவையும் சார்ந்திருப்பதாக நினைத்ததே ஆகும். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால், வட்டிவீதம் நிர்ணயிக்கப்பட வேண்டியதே ஒழிய நிர்ணயம் செய்யும் மாறி அன்று.[2] தேசிய வருமானமும், வட்டிவீதமும் பலவிதமான சார்பு உறவுகளால் நிர்ணயம் செய்யப்படுகின்றன.

நுகர்ச்சிச் சார்பை எடுத்துக்கொண்டால், அஃது மக்களின் உளவியலைப் (Psychology) பொறுத்திருக்கிறது. இறுதிநிலைத் திறன் தொழில் துணிவோர்களின் உள்நோக்கைப் பொறுத்திருக்கிறது. இதைத் தவிர மையவங்கி முதலிய நிறுவனங்கள், அரசாங்கம் ஆகியவை பண அளிடபைப் பற்றி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, கீன்ஸின் அமைப்பில் நிர்ணயம் செய்யும் காரணிகள் 1. கொடுக்கப்பட்டதாகக் கருதி எடுத்துக் கொண்டவை. 2. முன்னே நாம் குறிப்பிட்ட நுகர்ச்சி, முதலீடு, ரொக்க விருப்பம், அரசாங்கப் பணக் கொள்கை முதலியவற்றின் நடவடிக்கைகள். இவை இரண்டும் கீன்ஸின் அமைப்பை நிர்ணயம் செய்கின்றன. கொடுக்கப்பட்டதாக எடுத்துக் கொண்டவை பொதுவாகக் குறுகிய காலங்களில் அதிகமாக மாறுவதற்கில்லை. எனவே, சார்பில்லா மாறிகளினாலும் அவற்றின் நடவடிக்கைகளாலும்தான், கீன்ஸ் அமைப்பு முக்கியமாக நிர்ணயம் செய்யப்படுகிறது. பொருளாதாரப் பிரச்சனைகள் மிகவும் சிக்கலாக இருப்பதால், வேலையையும் வருமானத்தையும் நிர்ணயம் செய்யும்

[1] The general Theory of Employment by Keynes—Page 249.

[2] The rate of interest is determinate-not a determinant.

முக்கிய சில காரணிகளைத்தான் எடுத்துக் கூறமுடியும். இதுதான் பொருளாதாரக் கோட்பாடுகளைப்பற்றிய முக்கியப் பிரச்சனை ஆகும். இக் கோட்பாடுகள்மூலம், நடைமுறையில் கொள்கைகள் வகுக்கச் சில மாறிகளைப்பற்றி ஆராயவேண்டும். எந்தப் பொருளாதார மாறிகளைச் சமூகக் கட்டுப்பாடு செய்து, பொருளாதாரக் குறிக்கோள்களை நிறைவேற்ற முடியும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

வருமானத்தை நிர்ணயம் செய்யும் காரணிகள் கீன்ஸின் பொதுக்கோட்பாட்டில் (General Theory)[1] 18ஆம் அதிகாரத்தில் சுருக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன. வேலை வாய்ப்புகள் ஒரு நாட்டின் வருமானத்தைப் பொறுத்திருக்கின்றன. ஒரு சமுதாயத்தில் அதிகமாக வருமானம் இருக்கும்போது அதிகமான வேலையும், குறைந்த வருமானம் இருக்கும்போது குறைந்த வேலையும் இருக்கும். இந்த வருமானம் நுகர்ச்சிச் செலவையும், முதலீட்டுச் செலவையும், அரசாங்கச் செலவையும், வெளிநாட்டுச் செலவுகளையும் பொறுத்திருக்கிறது என்பதை நாம் முன்னர் விவரித்தோம்.

இதைக் கீழ்க்கண்ட பட்டியல் மூலம் விளக்கம் செய்யலாம்.

$$Y = C + I + G + (X - M)$$

C

- Y
- நுகர்ச்சி நாட்டம்

I

- வட்டி வீதம்
- இறுதிநிலை முதலீட்டுத்திறன்

வட்டிவீதம்

- பண அளிப்பு
- ரொக்க விருப்பம்

இறுதிநிலை முதலீட்டுத்திறன்

- அளிப்பு விலை
- எதிர்பார்க்கும் வருவாய்

இப் பட்டியலில் கீன்ஸின் முக்கியக் கருத்துகள் தெளிவாக்கப் பட்டிருக்கின்றன. இந்த எளிமையான பட்டியலிலிருந்து கீன்ஸின் பொருளாதார மாறிகள் மாறுவதால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நாம் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். நாம் முதலில் வேலையின்மை (unemployment) அதிகமாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். நமக்கு வேலை, தேசிய வருமானத்தைப் பொறுத்திருக்கிறது என்று தெரியும். எனவே, வேலையின்மையைப் போக்க தேசிய வருமானத்தை அதிகரிக்க வேண்டும்.

ஆனால், Y = C+I+G+(X — M). எனவே C, I, G அல்லது (X — M) என்பதை அதிகப்படுத்த வேண்டும். நுகர்ச்சி வருமானத்தையும், நுகர்ச்சி நாட்டத்தையும் பொறுத்திருக்கிறது. வருமானம் என்பது ஒரு சார்புள்ள மாறியாக இருப்பதால், சார்பிலா மாறிகளை மாற்றுவதன்மூலம்தான் 'Y' யை மாற்ற முடியும். நுகர்ச்சி நாட்டத்தை அதிகரிப்பதன்மூலம் 'C' யை அதிகரிக்க முடியும். நுகர்ச்சி நாட்டம் மக்களின் உளவியலைப் பொறுத்திருக்கிறது. நுகர்வோர்களுடைய பழக்கங்களையும் நுகர்ச்சி முறைகளையும் மாற்றுவது சிக்கலான ஒரு பிரச்சனையாகும். நாம் முன்னர்க் குறிப்பிட்டபடி செல்வந்தர்களைவிடக் குறைந்த வருமானம் உடையவர்களிடம் நுகர்ச்சி நாட்டம் அதிகம். எனவே, செல்வந்தர்களிடமிருந்து குறைந்த வருமானமுடைய வர்களுக்குச் சாதகமாக வருமானத்தைச் சீர்ப்படுத்தி அமைத்தால், நுகர்ச்சி நாட்டத்தையும் வருமானத்தையும் அதிகரிக்கமுடியும். இது எவ்வளவு தூரம் அரசியல் ரீதியாக சாத்தியமானது என்று கூறுவதற்கில்லை. வேலை வாய்ப்பை அதிகப்படுத்த, நுகர்ச்சிச் செலவை அதிகரிக்க வேண்டும் என்பது உண்மையானலும், அது போன்ற ஒரு நடவடிக்கைக்குக் கீன்ஸ் ஆவலாக இருந்ததில்லை. முதலீட்டு வளர்ச்சியை அதிகப்படுத்துவதன்மூலமாகச் சமுதாய நன்மைகளை அதிகமாகப் பெறமுடியும் என்று கீன்ஸ் கருதினர். முதலீடு இறுதி நிலைத்திறனையும் வட்டியையும் பொறுத்திருக்கிறது. முதலீட்டின் இறுதிநிலைத்திறன் உயர, அதனுடைய அளிப்பு விலை (Supply prices) குறையவேண்டும். அல்லது முதலீடுகளிலிருந்து எதிர்பார்க்கும் விளைவு (yield) அதிகரிக்கவேண்டும். முதலீடு களின் அளிப்பு விலையைக் குறுங்காலத்தில் குறைப்பது எளிதான காரியமில்லை. எதிர்பார்க்கும் விளைவுகளைச் சாதகமாக ஒரு நிதி அமைச்சரால் மாற்றமுடியும். முதலீட்டுத் திட்டங்களை வரி விதிக்காமல் இருப்பதன்மூலம் அரசாங்கம் முதலீடுகளை அதிகப் படுத்தமுடியும். முதலீட்டிற்குச் சாதகமான ஒரு நிலையை

[1] General Theory Section 11—Chapter 18-Keynes. (See Page 192)

உருவாக்குவது மிகவும் சிக்கலான காரியம் ஆகும். வட்டிவீதங்களை மாற்றியமைக்க முடிந்தாலும் ரொக்க விருப்பம் உளவியலைப் பொறுத்திருக்கிறது. நாம் முன்னர்க் குறிப்பிட்டபடி வட்டி வீதத்திற்கு, முதலீடு நெகிழ்வுற்றதாகவும் இருக்கலாம். அரசாங்கச் செலவு ஒரு நாட்டின் அரசியல் நிலைமையைப் பொறுத்திருக்கிறது. அரசாங்க நுகர்ச்சிக்கோ அல்லது முதலீட்டுக்கோ பணத்தைச் செலவு செய்யமுடியும். முதலீட்டுத்திறனின் நிலையற்ற தன்மையை, அரசாங்கச் செலவுமூலம் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கீன்ஸ் கருதினார். நாம் முன்னமேயே (X — M) என்ற வெளிநாட்டுச் செலவைப்பற்றித் தனியாகச் சொல்லி இருக்கிறோம்.[1]

பணவீக்கம்பற்றிய கோட்பாடு (The Theory of Inflation)

நாம் முன்னர்க் கவனித்த 'பொருளாதார வளர்ச்சி' முதலிய அத்தியாயங்களில் நெடுங்காலப் பிரச்சனைகளைப்பற்றிக் கவனித்தோம். குறுங்காலங்களில் மொத்தத் தேவை குறைந்து எப்படி வேலையின்மை ஏற்படுகிறது என்பதையும் பார்த்தோம். 'பணவீக்கம்' (inflation) என்பதைப்பற்றி நாம் முன்னர்க் குறிப்பிட்டிருந்தோம். ஆனால், அதைப்பற்றி ஆழ்ந்து விரிவாக நாம் எந்த விதமான விளக்கங்களும் தரவில்லை. நாம் இந்த அதிகாரத்தில் பணவீக்கத்திற்கு இலக்கணம் செய்து, பின்னர்ப் பொருளாதார அறிஞர்களின் கோட்பாடுகள் ஆகியவற்றை ஆராய்வோம்.

விலைமாற்றத்தைக் கணக்கிட நாம் பயன்படுத்தும் குறியீட்டெண்கள் அவற்றின் காலப்பகுதிகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டால்தான், நாம் பணவீக்கம்பற்றிச் சரியாகக் கணக்கிட முடியும். மொத்தநாட்டு உற்பத்தியைப் பொதுவிலைக் குறியீட்டெண்களால் அளவுபடுத்தி உண்மையான வருமான வளர்ச்சியைக் கூறினால்தான், பணவீக்கம்பற்றிச் சரியாகக் கூறமுடியும்.[2] நாம் கீழே குறிப்பிட்டிருக்கும் பட்டியலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நுகர்வோர் விலைக் குறியீட்டெண்களையும் (Consumer Price Index) மொத்த விலைக்குறியீட்டெண்களையும் (Wholesale Price Index) மொத்த நாட்டு உற்பத்தியை 1958ஆம் ஆண்டு விலைக்கு உண்மையாகச் சரிப்படுத்தி அந்த எண்ணையும் கொடுத்திருக்கிறோம்.

1 அதிகாரம் 13, அதிகாரம் 14

1 T. Backman & M. R. Gainsburg-Inflation and the Price indexes: Sub Committee on Economic Statistics—Joint Economic Committee July, 1966.

பட்டியல் XV

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் மொத்த விலைக் குறியீட்டெண்கள் —1945, 1968[1]

வருடம்	நுகர்வோர் குறியீட்டெண்கள்	மொத்த விலைக் குறியீட்டெண்கள்	மொத்த நாட்டு வருமானம். (Deflator)
1945	62·7	57·9	59·7
1946	68·0	66·1	66·7
1947	77·8	81·2	74·6
1948	83·8	87·9	79·6
1949	83·0	83·5	79·1
1950	83·8	86·8	80·2
1951	90·5	96·7	85·6
1952	92·5	94·0	87·5
1953	93·2	92·7	88·3
1954	93·6	92·9	89.6
1955	93·3	93·2	90·9
1956	94·7	96·2	94·0
1957	98·0	99·0	97·5
1958	100·7	100·4	100·0
1959	101·5	100·6	101·6
1960	103·1	100·7	103·3
1961	104·2	100·3	104·6
1962	105·4	100·6	105·7
1963	106·7	100·3	107·1
1964	108·1	100·5	108·8
1965	109·9	102·5	110·9
1966	113·1	105·9	113·8
1967	116·3	106·1	117·3
1968	121·2	108·7	121·8

1 Source –Survey of cement business. 4. S. Dept. of Commerce. CPI 1957-59 = 100 NPI 1957-59 = 100 GNP Deflator 1958 = 100.

மேலே உள்ள பட்டியலைக் கவனிக்கும்போது 1964ஆம் ஆண்டிலிருந்து மேலே குறிப்பிட்ட மூன்று குறியீட்டெண்களும் ஒரே முகமாக அதிகரித்திருக்கின்றன. 1958–64 வரை மொத்தக் குறியீட்டு எண்களை வைத்துக்கொண்டு பார்த்தால், பணவீக்கம் ஏற்படவில்லை. நுகர்வோர் குறியீட்டு எண்களை வைத்துப் பார்த்தால் விலைவாசிகள் மிதமாக அதிகரித்திருக்கின்றன. 1958–1964-ல் நுகர்வோர் குறியீட்டெண்கள் 100·7-லிருந்து 108·1 ஆக உயர்ந்திருக்கிறது. மொத்த வருமானக் குறியீட்டெண் 100-லிருந்து 108 ஆக உயர்ந்திருக்கிறது. இதை மிதமான பண வீக்கம் (Creeping Inflation) என்று குறிப்பிடலாம். மொத்த வருமான குறியீட்டெண்களைப் பொருளாதாரிகள் தற்காலத்தில் ஒரு முக்கிய அளவாகப் பயன்படுத்துகிறார்கள்.[1]

இதைத் தவிர, குறியீட்டு எண்களில் எவ்வளவு தூரம் அதிகரித்தால் பணவீக்கம் (inflation) என்று சொல்வது என்ற பிரச்சனை இருக்கிறது. 1965–69-ல் 3·5% வீதத்தில் அதிகரித்த விலைகள் 1958–1964-ல் 1·5% வீதத்தில்தான் அதிகரித்தன. சிலர் 1·5% வீதத்தில் அதிகரிக்கும் விலைகள் நல்லவை என்றும் அது முழு வேலையை நிலைப்படுத்த உதவும் என்றும் கருதினார்கள். சிலர் சாதாரணமாக விலை அதிகரித்தாலே பணவீக்கம் என்று நினைத்தார்கள். இவர்கள் 1958–64-ல் ஏற்பட்ட விலைவாசி உயர்வையே பணவீக்கம் என்றனர். இதுபோன்ற பிரச்சனைகள் இருந்த போதிலும், இவற்றை நாம் பெரிது படுத்தத் தேவையில்லை. பண வீக்கத்தின் அழுத்தத்தை அதன் காரணிகள்மூலம் பலவாறாகப் பிரித்துக் கூறலாம். குறைந்த வீதத்தில் மெதுவாக எழும் விலை வாசிகளை மிதப் பணவீக்கம் (Creeping Inflation) என்றும், மிக அதிகமாக ஏறிப்போகும் விலைவாசிகளை அதிவேகப் பணவீக்கம் என்றும் (Hyper Inflation) குறிப்பிடுவோம். முழுவேலை உற்பத்தியைவிட அதிகமான தேவையால் ஏற்படும் பணவீக்கத்தை அதிதேவைப் பணவீக்கம் (Excess Demand Inflation) என்று குறிப்பிடவேண்டும். பணவீக்கம் ஏற்படும்போது, தொடர்ந்து விலைவாசிகள் பெருகிப் பணத்தின் மதிப்பு வீழ்ந்து போவது நடைமுறையில் காணும் உண்மை ஆகும்.

பணவீக்கத்தைப்பற்றி விளக்கும் சில முக்கியக் கோட்பாடுகளைப்பற்றி, நாம் எடுத்துக் கொள்வோம். பணவீக்கத்தைப்பற்றி ஏராளமான கோட்பாடுகள் உண்டு. பணவீக்கம்பற்றி ஏராளமான இலக்கியங்கள் இருக்கின்றன. பல்வேறு நாடுகளில் ஏற்பட்ட பண

[1] T. Backman & M. R. Gainsburg. Inflation and the Price indexes. Sub Committee on Economic statistics - July 1966.

வீக்க வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, பல கோட்பாடுகள் எழுந்துள்ளன. மேலும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் உள்ள அனுபவம், பின் தங்கிய நாடுகளிலிருந்து வேறுபட்டு இருக்கலாம். வலிவுள்ள தொழிற்சங்கங்கள், மற்றும் மார்க்கெட் அமைப்பு ஆகியவை, விலைவாசிகளைப் பாதிக்கும் காரணிகள் ஆகும். பணவீக்கத்தைத் தேவைமூலம் ஏற்படும் பணவீக்கம், அளிப்பின் மூலம் ஏற்படும் பணவீக்கம் என்று பிரித்து அதனை அணுகுவோம்.

தேவை அதிகரிப்பினுல் ஏற்படும் பணவீக்கம் எப்படித் தோன்றுகிறது? இந்தப் பணவீக்கத்தைப் பற்றிச் சொல்லும்போது, ஏராளமான பணம் குறைந்த உற்பத்திக்குச் செலவிடப்படுகிறது என்று குறிப்பிடப்படும். இதை வரைபடம் மூலம் சுலபமாகக் காட்ட முடியும். கீழே இரண்டு பகுதியாக வரைபடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் படத்தில் வருமானம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இரண்டாவது பகுதியில் மொத்த அளிப்புக் கோட்டில் அவ்வருமான குடும்பக் கோடுகளைக் காட்டிப் பொதுவிலைகளும், உற்பத்தியும் காட்டப்பட்டிருக்கின்றன.



படம் 57

மேலேயுள்ள வரைபடங்களில் Y_1 IS, LM சார்புகள் மூலமாக நிர்ணயம் செய்யப்படுகிறது. இதை Y_1 என்று குறிப்பிடுவோம். இதுபோன்ற வருமானங்கள் வரைபடத்தின் இரண்டாவது பகுதியில் Y_1, Y_2, Y_3, Y_4, Y_5 என்று தரப்பட்டிருக்கின்றன.[1] Y_1 Y_2 பகுதிகளில் விலை ஏற்றம் அதிகமான உற்பத்தி ஏற்றத்தோடு தொடர்புற்று இருக்கிறது. Y_3க்குப் பின்னர், உற்பத்தி உயரவில்லை. இந்த Y_3க்குப் பின்னர், ஏற்படும் விலை ஏற்றத்தைத்தான் கீன்ஸ் அவர்கள், உண்மையான பணவீக்கம்

1 H. G. Johnson 'Monetary Theory and Keynesian Economics' — Pakistan Economic Journal 1958 pp. 56–76.

(True inflation) என்று குறிப்பிட்டார்கள்.[1] of என்பது முழு வேலை உற்பத்தியைக் காட்டுகிறது.



படம் 58

பண அளவுக் கோட்பாடும், கீன்ஸின் கோட்பாடும் அதே முடிவுக்குத்தான் எடுத்துச் செல்கிறது. ஆனால் பணஅளவுக் கோட்பாடு எப்போதும் முழுவேலை இருப்பதாக எடுத்துக்கொண்டு விலை மட்டத்தை விளக்குகிறது. கீன்ஸின் கோட்பாடு முழு வேலைக்கு முன்னால் ஏற்படும் விலைப்பெருக்கம் பற்றியும், முழுவேலை உற்பத்திக்குப் பின்னர், ஏற்படும் விலைவாசிபற்றியும் பிரித்து உண்மையான பணவீக்கத்தைப்பற்றித் தெளிவாகச் சொல்கிறது.

இந்தத் தேவை அதிகரிப்பதனால் ஏற்படும் பணவீக்கத்தை IS, LM சார்புகள்மூலமாக வேறு ஒரு சுருக்கமான முறையில் கூறலாம். இதற்கு IS_0 LM_0 கோடுகள் ஊடறுக்கும் இடத்தில் Y* முழுவேலை வருமானம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். IS_0 கோடு IS_1 க்குப் பெயர்வதாக வைத்துக்கொள்வோம். இதைக் கீழ்க்கண்ட வரைபடத்தின் மூலம் விவரிக்கலாம்.

Y* முழுவேலை வருமானத்தில் P_0 சமநிலை விலைமட்டம், தேவைகள் அதிகரிப்பதினால் IS_0 IS_1 க்குப்பெயர்ந்து மேல் நோக்கி எழுச்சி செய்கிறது. அதிகமான தேவை Y* Y_1 ஆகும். இதனால் விலைவாசிகள் உயரத் தொடங்குகின்றன. இதனால் பண அளிப்பின் உண்மையான மதிப்புக் குறைந்து, LM கோடு மேல்நோக்கி LMP_1 பெயர்ந்து செல்கிறது.

1 General Theory of Employment p. 303.

இதனால் மறுபடியும் பொதுச் சமன்பாடு ஏற்படுகிறது. இப்போது வட்டி வீதம் i_1 ஆக உயர்கிறது$_1$ விலைமட்டம் P_0



படம் 59

விலிருந்து P_1 ஆக உயர்ந்திருப்பதையும் மேலேயுள்ள வரைபடம் காட்டுகிறது.

பணவீக்கம் முடிவில்லாமல் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்றால், பண அளிப்புத் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்க வேண்டும். விலைவாசிகள் அதிகரிக்கும்போது நடவடிக்கைகளுக்காகத் தேவைபடும் ரொக்கம் (m_1) அதிகரிக்கும். பண அளிப்பு நிலையாக இருக்கும்போது, ஊகலாப விருப்பத்திற்காக வைத்திருக்கும் ரொக்கத்தைக் குறைத்துக் கொண்டு, நடவடிக்கைக்கான ரொக்கத்தை அதிகரிக்க வேண்டியிருக்கும். அதிகமான ரொக்கம், நடவடிக்கைகளுக்கு (m_1) தேவைப்படுவதால் பத்திரங்களின் சொந்தக்காரர்கள் அதை விற்று ரொக்கம் பெறுகிறார்கள். இதனால் பத்திரங்களின் விலைகள் சரியத்தொடங்குகின்றன. வட்டி வீதம் அதிகரித்து, ஊக லாபத்திற்காகச் சேர்த்து வைக்கும் ரொக்கம் குறையத் தொடங்குகிறது. இங்கேதான் பணவீக்கத்தைக் குறைக்கும் இடர்ப்பாடுகள் (constraints) இருக்கின்றன. அதிகமான வட்டிவீதம் முதலீட்டுச் செலவுகளைக் குறைத்து, வருமானத்தைக் குறைக்கச் செய்யும். இதனால் நுகர்ச்சிச் செலவுகளும் குறையத் தொடங்குகின்றன. எனவே, பண அளிப்பு நிலையாக இருக்கும் ஓர்

அமைப்பில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் சக்திகள் இருக்கின்றன.

அதிகமான வட்டிவீதம் முதலீட்டைக் குறைக்காமல் போனால் பல பிரச்சனைகள் எழக்கூடும். அதிகமான விலைகளினால் இலாபம் அதிகரித்தால், வட்டிவீதம் எவ்வளவு அதிகரித்தாலும் முதலீட்டுக்குத் தொடர்ந்து நிதி வாங்கப்படும். பணவீக்கம் தொடர்ந்து அதிகரிக்கும். இங்கே பண அளிப்பு நிலைபெற்று இருந்தாலும், பணவீக்கம் அதிகரிக்கும். ஆனால், விலைவாசிகள் ஏறுமுகமாகச் செல்லும்போது, ஒரு கட்டத்தில் பணஅளிப்பு முழுவதும் நடவடிக்கைப் பேரங்களுக்கு முழுமையாகப் பயன்படுத்த முடியும். இதுபோன்ற சமயத்தில், நிதி வசதிகள் இல்லாமல் பணவீக்கம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படும். பணவீக்கம் தானாகவே அடங்குவதற்குமுன்னர், அரசாங்கம் பணஅளிப்பைக் குறைக்கலாம். அல்லது அரசாங்கம் வட்டிவீதத்தை அதிகரிக்கலாம். ஆனால், இது போன்ற அரசாங்கக் கொள்கைகள் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டு பொருளாதாரத்தில் ஒரு பெரு மந்தத்தை ஏற்படுத்தி விடக்கூடாது.

பண வீக்கமும், பிகு (Pigou) வின் விளைவும்

நாம் முன்னர், விலையும் கூலியும் குறைவதனால், பொது மக்களின் சொத்துகளின் மதிப்பு உயரப்பெறுகிறது என்பதைப் பார்த்தோம். பணமதிப்புள்ள சொத்துகளின் உண்மை மதிப்பு அதிகரிக்கிறது. மக்கள் பத்திரங்கள் வாங்குவதையும், ஆஸ்திகள் சேர்ப்பதையும் தவிர்க்கிறார்கள். தங்கள் நடப்பு வருமானத்தில் பெரும் பகுதியை நுகர்ச்சிக்குச் செலவு செய்துவிட்டுச் சிறிய பாகத்தைச் சேமிக்கச் செய்கிறார்கள். எனவே, பொருளாதார மந்த காலத்தில், பிகுவின் விளைவாக நுகர்ச்சிச் செலவு அதிகரித்து வருமானம் அதிகரிக்க வழி இருக்கிறது.

பணவீக்கம் ஏற்படும்போது, இதற்கு எதிர் மாறான விளைவுகள் ஏற்படும். பணவீக்கத்தினால் சொத்துகளின் உண்மை மதிப்புக் குறைந்துவிடும். இந்த மதிப்பு இழப்பை ஈடுகட்ட, தங்கள் வருமானத்தை நுகர்ச்சிச் செலவு செய்வதை நீக்கி, சேமிப்பைப் பெருக்கிப் பத்திரங்கள் வாங்க முயல்வர். இதனால் சேமிப்பு அதிகரித்து மொத்தத் தேவையைக் குறைக்க முயல்கிறது. அதிகமான தேவையால் ஏற்படும் பணவீக்கத்தை நிறுத்தும் வழியைக் கீழ்க்கண்ட வரைபடம் மூலம் விளக்கம் செய்யலாம். இவ் வரைபடத்தின் முழுவேலை வருமானத்தில் LM சார்புக்கோடு Y அச்சுக்கு இணையாக நேர்க்கோடாக மாறிவிட்டது.

பொதுச் சமன்பாடு Y^*i_0வில் ஏற்பட்டிருக்கிறது. இது போன்ற சமயத்தில் மொத்தத் தேவை அதிகரித்தால் வட்டிவீதம்



படம் 60

அதிகரிக்கச் செய்யும். பணஅளிப்பு அதிகரிப்பதனுல் LM கோடு பெயர்ச்சி செய்து Y_1 என்ற இடத்தில் சமநிலையில் இருக்கிறது. Y^*Y_1 என்பது அதிகமான தேவை. விலைவாசிகள் P_1க்கு அதிகரித்துப் பண அளிப்பின் உண்மை மதிப்புக் குறைந்தால் ஒழிய நிலைமை மாறுவதற்கில்லை.

அதிகத் தேவையினுல் ஏற்படும் பணவீக்க இடைவெளி (Excess Demand Inflation and Gap Analysis)

பண அளிப்பை அதிகப்படுத்தினுலன்றி, அதிகத் தேவையினுல் ஏற்படும் பணவீக்கம் தொடர்ந்து நீடிப்பதற்கில்லை. தற்போது ‘ பணவீக்க இடைவெளி ’ பற்றி ஆராய்வோம்.

பணவீக்க இடைவெளிபற்றி ஆராய நாம் முன்னர் குறிப்பிட்ட எளிமையான பேரியல் பொருளாதார அமைப்பை எடுத்துக் கொள்வோம். நாம் கீழே குறிப்பிட்டிருக்கும் வரைபடத்தில் உண்மையான மதிப்புகளை இதுவரை கொடுத்தது போலல்லாமல் பணஅளவு மதிப்பைக் குறிப்பிடப்போகிருேம்.[1]

1 A. Smithies—The Behaviour of money National Income under Inflationary conditions—Quarterly Journal of Economics p. 113 –128.

Y அச்சில் நுகர்ச்சிச் செலவும் அரசாங்கச் செலவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அச்சில் வருமானம் கொடுக்கப் பட்டிருக்கிறது. பண வருமான அளவு O-விலிருந்து P_0Y^* வரை மொத்தத் தேவையானது (Aggregate demand)



படம் 61

(A convergent inflation)
Magnitudes measured not in real terms

அதிகரித்து, அதன்மூலம் விலை ஏற்றம் இல்லாமல் வருமானம் பெருக உதவுகிறது. ஆனால், P_0Y^*க்குப் பின்னர், வருமானம் மாறாமல் விலைவாசிகள் அதிகரிக்கின்றன. இந்தப் பணவீக்க இடைவெளியை எளிமையாகப் புரிந்து கொள்வதற்காக நாம் முழுத் தேவையானது நுகர்ச்சிச் செலவுகளையும் அரசாங்கச் செலவுகளையும் மாத்திரம் கொண்டுள்ளது என்று வைத்துக் கொள்வோம். P_0 என்பது நுகர்ச்சிப் பட்டியலின் வரைகோடு ஆகும். இப் பொருளாதாரம் ஆரம்பக் கட்டத்தில் P_0Y^* என்ற வருமானத்தில் சமநிலையில் இருக்கிறது. அப்பொழுது நுகர்ச்சிச் செலவு P_0C; அரசாங்கச் செலவு P_0G.

P_0Y^* என்ற இடத்தில் முழுவேலை வருமானம் ஏற்பட்டு விட்டது. அரசாங்கம் இதுபோன்ற நிலையில் தனக்கு உண்மை யான சாதனங்கள் (Real resources) அதிகமாகவேண்டும்

என்று விரும்பி G^1 வரை அரசாங்கச் செலவை உயர்த்தினுல், தேவை அதிகமாகிப் பணவீக்க இடைவெளி ஏற்படக் காரணம் உண்டாகிறது. இந்த அதிகமான செலவை 45°க்கு மேல் கொண்டு வந்து காட்டியிருக்கிறேம். இப்போது மொத்தத் தேவை D_0 ஆக உயர்கிறது. இப்படி மொத்தத் தேவை அதிகரித்ததன் காரணமாகப் பணவருமானமும் விலையும் பெருகுகின்றன. புதுச் சமநிலை வருமானம் P_1Y^* ஆக மாறிப் புது விலை மட்டம் P_1 ஆக மாறுகிறது. இதுபோலப் பெருகி வந்த வருமானத்தில் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம்மூலம், பெருக்கி செயலாற்றத் தொடங்குகிறது. இறுதியில் வருமானம் P_eY^* என்ற இடத்தில் சமநிலைப்படுகிறது. நாம் இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றுல், உண்மையான வருமானம் Y^* அளவில்தான் இருக்கிறது. பணவீக்கத்தின் காரணமாக விலைமாறி உயர்ந்துபோய் P_e என்ற விலை அளவுக்குப் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் பெருகிய செலவு மக்களின் நுகர்ச்சிச் செலவைக் குறைத்து அளிக்கப்படுகிறது.

மக்கள், தங்கள் செலவைக் குறைத்துக் கொள்வதனுல் 45° கோட்டின் நியமப்பாதையில் இந்த PC + PG கோடு சந்திக்க முடிகிறது. எனவே, இந்தப் பணவீக்க இடைவெளி E_0-விலிருந்து E_1-க்குக் குறைந்துகொண்டுபோய் P_eY^* என்ற இடத்தில் இடைவெளி இல்லாமல் போய்விடுகிறது. இதைத் தான் குறுகிப்போகும் பணவீக்க இடைவெளி என்று குறிப்பிடு கிறேம். அரசாங்கத்திற்காக நுகர்வோர்கள் தங்கள் செலவைக் குறைத்துக் கொள்வதனுல் இடைவெளி குறுகிக்கொண்டே போய், இறுதியில் இடைவெளியே இல்லாமல் போய்விடுகிறது. இதற்கு மாருக நுகர்வோர்கள் பணவருமானப் பெருக்கத்தைக் கொண்டு, மாயை (illusion) கொள்ளாமல் தங்களுடைய நுகர்ச்சிகளை உண்மையான அளவில் நிலைநிறுத்த, அதற்கு ஏற்றுற்போல் செலவு செய்ய விரும்பினுல் பணவீக்க இடைவெளி குறுகாமல் விரிந்துபோகும் தன்மையைப் பெறும். அதைப்பற்றி இவ்விடம் சிறிது ஆராய்வோம்.

நாம் முன்னர்க் குறிப்பிட்டிருக்கும் வரைபடத்தில் P_0Y^* என்ற இடத்தில் முழுவேலை வருமானம் இருக்கிறது. அங்கே நுகர்ச்சி அளவு P_0C^* ஆகும். P_0Y^* என்ற இடத்தில் உண்மையான வருமானம் மாறவில்லை. அதற்கு மாருக விலை ஏற்றம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த இடத்திலும், நுகர்வோர்கள் P_0C^* என்ற உண்மையான வருமானத்தில் எவ்வளவு நுகர்ச்சியை

அடைந்தார்களோ, அதே நுகர்வை அடைய விரும்பினல் என்ன விளைவுகள் நேரிடும்? இந்தச் சமயத்தில் நுகர்ச்சிக்கும், வருமானத்திற்கும் உள்ள வீதம் $\frac{P_0C^*}{P_0Y^*} = C^*/Y^*$. அஃதாவது, P_0Y^* என்ற வருமானத்தில் 80% அளவு நுகர்ச்சி செய்திருந்தால், விலைகளும் வருமானமும் அதிகரித்திருந்தாலும் அதற்கு ஏற்றாற்போல் 80% அளவுக்கு நுகர்ச்சியை வைத்துக்கொள்ள வேண்டும்.

எனவே, நுகர்ச்சி வரைகோட்டினைத் திருப்பி மாற்றி அமைக்க வேண்டும்.[1] அஃதாவது நுகர்ச்சி வரைகோடு தொடர்பாக இல்லாமல் P_0Y^* வருமானத்திற்குப் பின்னர் திருப்பம் பெறுகிறது (Kinked consumption curve). இதைக் கீழ்க்கண்ட வரைபடம்மூலம் விளக்கம் செய்யலாம். நாம் முன்னைய வரைபடத்தில் குறிப்பிட்டபடி இதில் குறிக்கும் அளவீடுகள் உண்மையானவை (real) அல்ல. மாறுகப் பண அளவீடுகளைத்தான் இங்குக் குறிக்கிறோம்.



படம் 62

[1] The Dynamic of Inflation - Review of Economics & Statistics: p. 53-65—1942.

P_0Y^* முதலில் ஏற்பட்ட சமநிலை வருமானம், அதுவரை மொத்தத் தேவை அதிகரிக்கும்போது, விலைவாசிகளில் மாற்ற மில்லாமல் மொத்த வருமானம் அதிகரிக்கிறது. P_0Y^* மொத்த வருமானம் முழு அளவைப் பெறுகிறது. அதுவரை இருந்த நுகர்ச்சி அளவு P_0C. அப்போது இருந்த அரசாங்கச் செலவு P_0G ஆகும்.

இங்கே மொத்தத் தேவை அதிகரிப்பின் காரணம், அரசாங்கம் தன் செலவுகளை உண்மையான ரீதியில் P_0G-லிருந்து PG^1 ஆக உயர்த்த விரும்புவதே ஆகும். தற்போது ஒரு சிக்கல் தோன்றி இருக்கிறது. நாம் முன்னர் நினைத்ததைப்போல, அதிகமான பண வருமானத்தைப் பெற்று உண்மையான நுகர்ச்சியைக் குறைத்துக் கொள்ளும் மாயையில் நுகர்வோர்கள் இருக்கவில்லை. மாறாக நுகர்ச்சி வீதத்தை மாறாமல் வைத்துக்கொள்ள அவர்கள் விரும்பிய தால், அரசாங்கம் நுகர்ச்சி வீதத்தைக் குறைத்துத் தனக்கு வேண்டிய சாதனங்களைப் பெற வழியில்லை. எனவே, நுகர்ச்சிக் கோடு P_0Y^*க்குமேல் திருப்பமுற்று இருக்கிறது. எனவே, D_0 அளவுக்கு முழுத்தேவை அதிகரித்தால் நுகர்வோர்கள் அதிக அளவு பணம் செலவு செய்து அதே வீதத்தில் நுகர்ச்சி வீதத்தை வைத்துக்கொள்ள நேரிடுகிறது. எனவே, இந்த இடைவெளி பெருகிக் கொண்டேபோய் 45° கோட்டிற்கு அப்பால் போய்விடு கிறது. 45° உள்ள நியமப்பாதையில்தான் சமநிலை ஏற்படும். இந்தப் பணவீக்க அளவு விரிந்துகொண்டே போகிறது.[1] இதை விரிந்து செல் பணவீக்க இடைவெளி (Divergent inflationary process) என்று கூறுவார்கள்.

நாம் இதுவரை விவரித்த பணவீக்க இடைவெளிகளிலிருந்து சில முடிவுகளைக் கூறமுடியும். மேலேயுள்ள இரண்டு வரைபடங்கள் மூலமாக நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், 45° கோட் டிற்கு அருகில் வந்து ஒன்று சேரும்போது, பணவீக்க இடைவெளி மறைந்து விடுகிறது. 45°க்கு அப்பால் செல்லச் செல்ல பணவீக்க இடைவெளி அதிகமாகிறது. P_0Y^* சமநிலை ஏற்படக் காரணம் 45° கோட்டை முழுத்தேவைக் கோடானது சந்திப்பதால்தான். இதிலிருந்து முழுத் தேவைக் கோட்டின் சரிவு (Slope of the aggregate demand curve) ஒன்றுக்கு குறைந்ததாக இருக்க வேண்டும். முழுத்தேவையின் சரிவானது நுகர்ச்சிச் செலவையும், அரசாங்கச் செலவையும் பொறுத்திருக்கிறது. அரசாங்கச் செலவின் செறிவை

[1] F. D. Holyman: Income determination & open inflation. Review of Economics & Statistics—32. p. 150-158—1950.

இறுதிநிலை அரசாங்கச் செலவு நாட்டம் அல்லது g^1 என்று குறிப்பிடுவோம். நுகர்ச்சிக் கோட்டின் செறிவு b^1 இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் ஆகும்.

பணவீக்கம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்றால் அதற்குரிய முக்கிய நிபந்தனை கீழ்க்கண்டவாறு அமையும்.

$$b^1 + g^1 < 1$$

இறுதிநிலை நுகர்ச்சி நாட்டமும் அரசாங்கச் செலவின் நுகர்ச்சி நாட்டமும் ஒன்றுக்குக் குறைவாக இருந்தால்,பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி வைக்க முடியும். மாறாக,

$$b^1 + g^1 \geq 1$$

ஆக இருந்தால் பணவீக்கம் தொடர்ந்து இருக்கும். 45° வரை கோட்டுக்கு மேலாக மொத்தத் தேவையானது சென்றுவிடும்.

இதோடு முதலீட்டை, அஃதாவது இறுதிநிலை முதலீட்டுச் செலவையும் சேர்த்தால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் எல்லையில் வைக்க,

$$b^1 + g^1 + L^1 \times 1$$

ஆக இருக்கவேண்டும். L^1 என்பது இறுதிநிலை முதலீட்டுச் செலவைக் குறிக்கும். $b^1 + g^1 + L^1 > 1$ ஒன்றுக்குமேல் போகும் போது உண்மையான சாதனங்களை இம் மூன்றும் அடைவதற்கு போட்டாப் போட்டிகள் ஏற்பட்டு, விலை பயங்கரமான அளவில் பெருகிப் பணவீக்கம் அதிகமான அளவிற்குப் பெருகும்.

இதுபோன்ற பணவீக்க எல்லைகள் அமைத்து விளக்கம் செய்வதற்குக் காரணம், இப் பொருளாதார அமைப்பு முழு வேலை உற்பத்தியில் முன்னதாகவே இயங்கிக் கொண்டிருக்கிறது. பண அளிப்பை நிலையாக வைத்திருந்தால், தானாகவே பணவீக்கம் கட்டுக்கோப்பிற்கு வரும் வட்டிவீதம் அதிகரிக்கும். இதுபோன்ற சமயங்களில் அரசியலார் திறந்த வெளிச் சந்தை பணக்கொள்கை மூலம் (Open market operative) பணத்தைப் பெருக்கி விடுகிறார்கள்.

ஏன் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்

பணவீக்கத்தினால் வருமானம் சிதறிப்போய் நிலைகுலைந்து தாறுமாறாகப் பகிர்வு செய்தளிக்கப்படுகிறது. நிரந்தர வருமானம் உடையவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எடுத்துக்

காட்டாக சர்க்கார் உதவிப் பணத்தொகைப் பெறுவோர் பண வீக்க காலத்தில் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். விலைவாசி ஏற்றத் திற்கு ஏற்றாற்போல், தங்கள் வருமானத்தை மாற்றியமைத்துக் கொள்ளும் வலிமை உடையவர்கள், பணவீக்கத்தினால் பல நன்மை களைப் பெறுவார்கள். வலுவான தொழிற்சங்கங்கள், இலாபம் சம்பாதிக்கும் வணிகர்கள் பணவீக்கத்தினால் பலன் பெறமுடியும். பணத்தை நிலையான வருமானத்திற்குக் கடன் கொடுத்தவர்கள் கஷ்டம் அடைகின்றனர். கடன் வாங்கியவர் இலாபம் பெறு கின்றனர். கடன் கொடுத்தல், வாங்கல் முதலிய பேரங்கள் வணிக நிலையின்மை ஏற்படுவதால் மந்தப் போக்கைப் பெறு கின்றன. சேமிப்புக் குறைகிறது. இதனால், பணவீக்கத்தின் விளைவு அதிகமாகும் வாய்ப்பிருக்கிறது. பண வட்டிவீதம் அதிகரிக்கிறது: அரசாங்கம், தான் எழுப்பி இருக்கும் தேசியக் கடன்களுக்குத் திருப்பி அளிக்கும் வட்டிவீதப் பளு, பணவீக்கத்தினால் குறைகிறது. தேசிய வருமானம் ஒரு நாட்டிற்கு £ 30,000 மில்லியன் பவுன்களாக இருக்கும்போது, வட்டிச் செலவாக £ 1,000 மில்லியன் ஆண்டுக்குத் தர $\frac{1}{30}$ தேசிய வருமானத்தை வரியாக வசூலிக்கவேண்டும். பண வீக்கத்தினால் பணம் தேசிய வருமானம் £ 40,000 பவுன் மில்லியன் களாக மாறினால் $\frac{1}{40}$ பாகத்தை வரியாக வசூலித்தாலே போது மானது.[1]

நுகர்ச்சிச் செலவினாலோ அல்லது அரசாங்கச் செலவினாலோ அல்லது முதலீட்டுச் செலவினாலோ வரும் பண வீக்கத்தைக் கட்டுப் படுத்தியே ஆகவேண்டும். தொடர்ந்து நீடிக்கும் பணவீக்கம் திறமையின்மையை (inefficiency) வளர்க்கும். விற்போர் மார்க் கெட் உருவெடுத்தால், போட்டியின் தன்மை குன்றிப்போய் திறமையற்ற நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் நிலை ஏற்பட்டுவிடும். தொழில் துணிவோர்கள், உற்பத்திக் காரணிகளைப் பதுக்க ஆரம் பித்துவிடுவார்கள். வேலையாட்கள் ஒழுங்காக வேலை செய்யாத நிலையும் ஏற்படும்.

பணவீக்கம் ஆரம்பகாலக் கட்டத்திலேயே கட்டுப்படுத்தப் படாமல் இருந்தால், மக்கள் பணவீக்க மனப்பான்மை உடையவர் களாக மாறிப்போய் விடுவார்கள். நிலைபெற்ற வருமானத்தைத் தரும் பத்திரங்களுக்குத் தேவை குறைய ஆரம்பிக்கும். சேமிப்பும் குறையும். விலைவாசிகள் மறுபடியும் ஏறுமுகமாகச் செல்லும் போது, அதி தீவிரப் பணவீக்கம் ஏற்பட்டு (Hyper inflation) பணப் பொருளாதார அமைப்பே முறியும்படி போய்விடலாம்.

[1] An introduction to Macro Economics'. By J. Harvey & M. Johnson p. 239.

பன்னாட்டு வாணிபத்தைப் பெரிதும் நம்பியிருக்கும் பிரிட்டன் முதலிய நாடுகளில் பணவீக்கம் பெரிய தொல்லைகளை ஏற்படுத்தும். உள்நாட்டு விலைகள் ஓர் எல்லைக்குமேல் அதிகமாக உயரும்போது, அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலையில் தொல்லைகள் ஏற்படலாம். நுகர்ச்சிப் பொருள் இறக்குமதி அதிகமாகிறது. ஏற்றுமதி தடைப்படுகிறது. நடப்புக் கணக்கில் அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலையில் துண்டுவிழுகிறது. இதுபோன்ற நிலைகள் நீடிக்கப்பட்டால் பாதுகாப்பு நிதி குறைந்துவிடுகிறது. இதை நாம் முந்திய அதிகாரங்களில் பார்த்திருக்கிறோம். பண வீக்கத்தைப் பற்றிப் பொதுவாக விவாதிக்கும்போது சாதாரண மிதமான வீக்கத்தின் (Mild inflation) விளைவு அவ்வளவு பாதகமானதன்று. பொருளாதாரிகள் மித பண வீக்கத்தின் சமுதாயச் செலவு மிகச் சாதாரணமானது என்று நினைக்கின்றனர். இதுபோலவே, விலைவாசிகளின் மிதமான சரிவும் (recession) பல சமயங்களில் நல்ல விளைவுகளையே கொடுக்கும். மிதமான பண வீக்கம் மொத்தத் தேவையை (Aggregate demand) அதிகரிப்பதோடல்லாமல் மொத்த உண்மையான உற்பத்தியைப் பெருக்கவும் உதவும்.

மிதமான பண வீக்கம் நன்மை பயப்பதாக இருந்தபோதிலும், அதி தீவிரமாக அடையும் பண வீக்கம் மிகப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று முன்னமேயே பார்த்தோம். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் அதி தீவிரமான பண வீக்கம் ஏற்படவில்லை.

அதி தீவிரமான பண வீக்கம் (Hyper inflation) அநேகமாக பெரிய போர்களுக்குப் (wars) பின்னால் ஏற்படும். இதுபோன்ற வீக்கத்திற்குக் காரணம் அரசாங்கம் தன் செலவுகளைச் சமாளிக்கத் தொடர்ந்து பணத்தை அச்சடித்துப் புழக்கத்திற்குக் கொண்டு வருவதே ஆகும். ஆரம்பத்தில் அரசாங்கத்தின் பற்றுக்குறை சிறிய அளவாக இருக்கலாம். அப்போது ஏற்படும் விலை உயர்வு சாதாரணமாக இருக்கும். விலைகள் அதிகமாக அதிகமாக, அதிகமான காகிதப் பணத்தை அச்சிட்டு அரசாங்கம் உண்மையான சாதனங்களைப் பெற விரும்புகிறது. பின்னர், நுகர்வோர்களும் முதலீடு செய்வோர்களும் போட்டிப் போட்டுக்கொண்டு உண்மையான சாதனங்களை அடைய முயலும்போது, அதி தீவிரமாக விலைவாசிகள் ஏறுகின்றன. பணச் சுழற்சியின் வேகமும் அதிகரிக்கிறது. ஓர் அரசாங்கம் இதுபோல நோட்டுகளை அடித்துக்கொண்டே உண்மையான சாதனங்களைப் பெறமுடியாது. விலைவாசிகள் அதி தீவிரமாக அதிகரிக்கும்போது, பொது மக்களுக்குக் காகிதப் பணத்தின்மீது இருக்கும் நம்பிக்கை குறைந்து, வாணிபம்

பணத்தைக் கொண்டு நடக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடும். பணப் பொருளாதாரம் முறிந்துபோய், பண்டமாற்று பரிவர்த்தனை ஏற்பட்டுவிடும். அதி தீவிரமான பணவீக்கம் மக்களின் மனப்போக்கை மாற்றி அமைத்துவிடும். காலையில் விற்கும் பொருள் மாலையில் இரட்டிப்பாக விலை ஏறினால் அதை அந்த வர்த்தகர் விற்காமல் இருப்பதோடு பணநோட்டுகள்மீது நம்பிக்கையையும் இழந்து விடுவார். பரிவர்த்தனை, பழங்காலப் பண்டமாற்றுமுறைபோல் மாறிவிடும். உற்பத்தியும் இதனால் பாதிக்கப்படும். கார் உற்பத்திச் சாலையில் உள்ளவர்களுக்குப், பணத்தில் கூலியையும், சம்பளத்தையும் பட்டுவாடா செய்ய முடியாது. காரின் பல பாகங்களைக் கூறுகளாகப் பிரித்து ஊதியத்தைக் கொடுப்பதற்கில்லை. இதுபோன்ற நிலையில், ஊக வாணிபம் பெருகும். வர்த்தகச் சூதாடிகள் பொருளாதாரத்தில் அதிக லாபத்தை அடைய முயல்வர். பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து அழிந்து போகும்.

பணவீக்கத்தின் இடைவெளியைத் தொடரவிடாமல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அப்போதுதான் அதி தீவிரப் பணவீக்கம் இல்லாமல் தவிர்க்க முடியும். பொருளாதார வளர்ச்சி



உற்பத்தியை அதிகரிப்பதின் மூலம்
பணவீக்க இடைவெளியை மூடுதல்
(எல்லாம் உண்மை மதிப்புகளில்)

படம் 63

காரணமாக உற்பத்திச் சாத்தியக் கோட்டை (production possibility curve) மேல்நோக்கி உயர்த்தி உற்பத்தியை அதிகரிக்கலாம்.

இதனுல் உற்பத்தி உண்மையான கணக்கில் அதிகமாகிறது. இதன் காரணமாகப் பணவீக்க இடைவெளியை மூடிவிட முடியும். இதை முன் பக்கத்தில் காட்டியுள்ள வரைபடம்மூலம் விளக்கம் செய்ய முடியும்.

சில காலங்களுக்குப் பின்னர் முழுவேலை உற்பத்தி அதிகமாவதை நாம் பார்க்கிறேம். நுகர்வோர்களிடமிருந்து நுகர்ச்சியை விலக்கி, அந்தச் சேமிப்பிலிருந்து, அரசாங்கங்கள் கல்வி, பள்ளிக்கூடம் முதலிய நிலையங்களில் முதலீடு செய்யும்போது, சமுதாயத்தின் உற்பத்திக்கோடு பெயர்ச்சி அடைந்து அதிகமாகிறது. மொத்த அளிப்புக்கோடு பிறழ்ந்து மொத்த உற்பத்தியானது Y_0*-லிருந்து Y_1* ஆக உயர்ந்ததால்தான் பணவீக்க இடைவெளியை மூட முடிந்தது. பணவீக்கத்திற்கு, இறுதியாக உற்பத்தியை அதிரிப்பதுதான் நல்ல கொள்கையாகும். பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நீண்ட காலப் பிரச்சனையாகும்.

செலவினுல் உந்தப்பட்ட பணவீக்கம்

கீன்ஸின் அதிகத் தேவையில் ஏற்படும் பணவீக்கத்தைப்பற்றியும், பண அளவுக்கோட்பாட்டின்மூலம் விளக்கம் பெறும் பணவீக்கத்தைப்பற்றியும் இதுவரைப் பார்த்தோம். 1950ஆம் ஆண்டில் அளிப்பு அல்லது செலவினுல் ஏற்படும் பணவீக்கம் மறுபடியும் முக்கியத்துவம் அடைந்தது. இது புதுப் பணவீக்கம் (New Inflation)[1] என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. இதில் புதுமை ஒன்றுமில்லை. செலவினுல்தான் பணவீக்கம் ஏற்படுகிறது என்பது சாதாரண மனிதனின் கருத்து. பணவீக்கம் ஏற்படும்போது, இதனுல்தான் மக்கள் இலாபக்காரர்களைப் பற்றியும், ஊகலாபக்காரர்களையும், பதுக்கல் செய்பவர்களையும், தன் நிலைமைக்குமேல் வாழும் விவசாயிகளையும் குறை சொல்கிருர்கள்.

சமீப காலத்தில் நடந்த ஆராய்ச்சிகளின்மூலம் செலவினுல் உந்தப்பட்ட பணவீக்கம் சில சமூக நிலையங்களினுலும் (Social institutions) பொருளாதார அமைப்பினுலும் ஏற்படுகின்றன என்று தெரியவருகிறது. இக் கருத்துகள் எல்லாம் சமீப காலத்தில் ஏற்பட்டபோதிலும், செலவினுல் உந்தப்பட்ட பணவீக்கம்பற்றி பல காலமாகக் கருத்து நிலவி வந்திருக்கிறது.

மக்களிடம் உள்ள சாதாரண கருத்தை ஒரு வரைபடம்மூலம் விளக்கம் செய்யலாம். மொத்தத் தேவையினுல் இந்தப் பணவீக்கம் ஏற்படவில்லை. மொத்த அளிப்புக்கோடானது மேல்

[1] New Inflation by W. L. Thorp and R. E. Quandt. Mc. Graw Hill, 1959.

நோக்கிப் பெயர்ச்சி செய்கிறது. இதனால் கொடுக்கப்பட்ட மொத்த உற்பத்தியின் விலை அதி தீவிரமாக அதிகரித்து வருகிறது. பொருளாதார அமைப்பில் இருக்கும் சில காரணிகள் தங்களுடைய ஏகபோக சக்திகளினால் செலவை உயர்த்துகின்றன. கீழேயுள்ள வரைபடத்தில் முழு அளிப்புச் சார்பு (Aggregate supply function) பெயர்ச்சி செய்வதைக் காட்டியிருக்கிறோம்.



படம் 64

ஒரு மொத்த அளிப்புக் கோட்டிற்குப் பதிலாக மூன்று மொத்த அளிப்புக் கோடுகள் இருக்கின்றன. O_1 என்ற உற்பத்தியில் இப் பொருளாதாரம் முழுவேலையில் இயங்க முடியும். மொத்த அளிப்புச் சார்பு S_1-லிருந்து S_2க்குப் பெயர்ந்து செல்வதாக வைத்துக்கொள் வோம். மொத்தத் தேவை மாறாமல் பண வருமானம் மாறாமல் இருக்கும்போது, உற்பத்தியானது O_2 க்குக் குறைந்து விடுகிறது. விலையோ P^2ஆக உயர்ந்து விடுகிறது. S_3 மொத்த அளிப்பாக இருக் கும்போது உற்பத்தியானது O_3 ஆகக் குறைந்துவிடுகிறது. விலையோ P_3 ஆக உயர்ந்துவிடுவதையும் பார்க்கிறோம். இதுபோல அளிப்புக் கோடு பெயர்ச்சி செய்ய விலைவாசிகள் அதிகமாகிக் கொண்டே இருக்கும். இதுபோன்ற நிலையைத்தான் அளிப்பினால், அல்லது செலவினால் உந்தப்பட்ட பணவீக்கம் என்று கூறுகிறோம்.[1] இவ் வளிப்புச் சார்பு பெயர்ந்து செல்ல இரண்டு முக்கியக் காரணங்கள் இருக்கின்றன. இவை மார்க்கெட்டில் இருக்கும் ஏகபோகச் சக்தி களைப் பயன்படுத்திக்கொண்டு விலைவாசிகளை உயர்த்துகின்றன. இந்தக் காரணங்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

[1] Survey of Inflation Theory—American Economic Review Sep. 1963 p. 613.

1. கூலியினால் உந்தப்பட்ட பணவீக்கம் (Wage Push Inflation)
2. இலாபத்தினால் உந்தப்பட்ட பணவீக்கம் (Profit Push Inflation)

கூலியினால் உந்தப்பட்ட பணவீக்கம்

உற்பத்தித் திறனுக்குமேல் கூலியும் சம்பளமும் உயருமானால் அளிப்புச் சார்பு மேல்நோக்கிப் பெயர்ந்து எழுந்து செல்லும், உழைப்புக்கு அதிகமான தேவை இருக்கும்போது, கூலிக் கட்டணங்கள் அதிகரிக்கச் செய்கின்றன. பொருளாதாரம் முழு வேலையை அடைந்தவுடன், பண வருமானம் அதிகரித்தால் விலைவாசிகள் அதிகரிக்கச் செய்யும். நாம் முன்னர்க் காட்டி இருக்கிற வரைபடத்தில் சமநிலை முதலில் O_1P_1-ல் இருக்கிறது; பண வருமானம் Y_1-லிருந்து Y_2 ஆக உயரும்போது, விலைவாசிகள் P_1-லிருந்து P_4 ஆக உயர்ந்து விடுவதைப் பார்க்கிறோம். இதுபோன்று விலைகள் உயருவது ஆரம்பத்தில் அதிக இலாபத்தை நிறுவனங்களுக்குத் தருகின்றன. அதிக இலாபத்திற்காக நிறுவனங்கள் உற்பத்தியைப் பெருக்க நினைக்கின்றன. நிறுவனங்களுக்குத் தேவையான உழைப்புச் சக்தி மார்க்கெட்டில் கிடைப்பதில்லை. இதனால் கூலியும் அதிகமாகி முழு அளிப்புக்கோடு மேல்நோக்கி எழும்புகிறது. இதுபோன்ற நிலைகளினால் கூலிக் கட்டணங்கள் உயர்ந்து உற்பத்தித்திறன் இல்லாமல் போய்விடுகிறது. இதுபோன்ற கூலி உயர்வானது தூண்டப்படாமல் (autonomous) ஏற்பட்டது. தூண்டப்பட்ட பெயர்ச்சி ஏற்படவேண்டுமென்றால், தொழிற்சங்கங்களினாலோ அல்லது மற்ற சக்திகளினாலோ கூலி உயர்த்தப்பட வேண்டும்.

நிறைவுப் போட்டியுள்ள ஒரு மார்க்கெட்டில், கூலி உயர்வு பண வீக்கம் ஏற்படுவதற்கில்லை. அதுபோன்ற மார்க்கெட்டில் தேவை அளிப்புச் சக்திகள், கூலியை முடிவு செய்கின்றன. கூலி உயர்ந்துசெல்ல முழுமையான ஏகபோக சக்தி நிறைந்த தொழிற்சங்கங்கள் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. பெரும்பான்மையான உழைக்கும் சக்தி தொழிற்சங்க விதிகளுக்கு உட்பட்டு விட்டால் உற்பத்தித் திறமைக்குமேல் ஊதியத்தை உயர்த்த முடியும். பெரும்பான்மையான சுதந்திர நாடுகளில், தொழிற்சங்கமுள்ள தொழில்களும் தொழில் யூனியன் வலுவில்லாத் தொழில்களும் இருக்கின்றன. வலுவுள்ள தொழிற்சங்கம் இருக்கும் தொழிற்சாலையிலிருந்து ஊதியம் உந்தப்பட்டு, எல்லாத் தொழிலுக்கும் பரவும் வாய்ப்பு இருக்கின்றது. இதனால் எல்லாத் தொழிலிலும் ஊதியம் அதிகரிக்கப்பட்டு மொத்த அளிப்புக்கோடு மேல்நோக்கி எழும்.

இலாபத்தினுல் உந்தப்பட்ட பண வீக்கம் (Profit Push Inflation)

சில நிறுவனங்கள் விலைகளை நிர்வாகம் செய்கின்றன என்றும், இதனுல் நிர்வகிக்கப்பட்ட விலைகள் (Administered Prices) மார்க்கெட்டில் உண்டாகின்றன என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. ஏக போக லாபத்தை அடைய சில முற்றுரிமை நிறுவனங்களும், அல்லது முற்றுரிமையுடைய ஒரே நிறுவனமும் அதிக லாபத்திற்காக விலைகளை ஏற்றி, அதனுல் பண வீக்கம் ஏற்படுகிறது என்ற கருத்தும் சமீப காலத்தில் இருந்துவருகிறது. இக் கருத்தை ஒத்துக்கொள்வதில் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. நிறுவனத்தின் இலாபம் விலையைமாத்திரம் பொறுத்தது அன்று. பொருளின் விற்பனை, சராசரி செலவு, இறுதிநிலைச் செலவு ஆகியவற்றையும் பொறுத்திருக்கிறது. விலைகளை மார்க்கெட்டில் இருக்கும் உண்மைகளை வைத்துக்கொண்டுதான் முடிவு செய்யவேண்டும். எனவே விலையை உயர்த்தி இலாபத்தை உயர்த்துவது என்பது சிக்கலான ஒரு பிரச்சனையாகும். ஆனுல், கூலியை உயர்த்துவது நடைமுறையில் சாத்தியமானது. தொழிற்சங்கங்கள் உழைப்புக்குள்ள தேவையை நெகிழ்வற்றது என்று நினைக்கின்றன. கூலி வீதங்களை உயர்த்துவதனுல் ஏற்படும் வேலையின்மையைப் பற்றித் தொழிற்சங்கங்கள் கவலைப்படுவதில்லை.

பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தலும் பிலிப்ஸ் வளைகோடும் (Inflation control and the Philips curve)

பண அளவுக் கோட்பாடுபடி பணவீக்கத்தைத் தடுக்கப் பணக்கொள்கை மிகச் சிறந்ததாகும். பண அளிப்பைக் கட்டுப்படுத்துவதன்மூலம் அதிக தேவையினுல் ஏற்படும் பண வீக்கத்தைத் தடுக்க முடியும். கீன்ஸின் கருத்துப்படி, நிதிக் கொள்கை, பணக்கொள்கை ஆகியவற்றைப் பயன்படுத்தி முழுத் தேவையைக் குறைப்பதன் மூலம் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தமுடியும்.

மொத்த அளிப்பினுல், ஏற்படும் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த பணக்கொள்கையும், நிதிக் கொள்கையும் அவ்வளவு பயன்படக் கூடிய ஆயுதங்கள் ஆகா. மொத்த அளிப்பினுல் பண வீக்கம் ஏற்படும்போது, முழுவேலை உற்பத்தியைவிட, உற்பத்தி குறைவாக இருக்கலாம். எனவே, மொத்தத் தேவையைக் குறைக்கும் பண நிதிக் கொள்கைகள் பிரச்சனையை அதிகப்படுத்தும். பண நிதிக் கொள்கையால் மொத்தத் தேவையைக் குறைத்து, அதனுல் உற்பத்தி குறைந்து வேலையின்மை ஏற்படும். இப்படி வேலையின்மை வீதத்தை அதிகப்படுத்துவதனுல், கூலியினுல் உந்தப்பட்ட பண வீக்கத்தைக் குறைக்கமுடியாது என்று வாதிடலாம். உண்மைதான்.

இதை ஒத்துக்கொண்டால், 'விலையை நிலைப்படுத்துவதற்காகச்' சமுதாயக் கொந்தளிப்பையும் குறைந்த பொருளாதார வளர்ச்சியையும் நாம் சந்திக்க நேரிடும்.

விலைவாசிகளில் கூலி மிக முக்கியமான பாகத்தைப் பெற்றிருப்பதால், சமீப காலங்களில் பொருளாதாரிகள் இதுபற்றிக் கவனிக்கச் செய்தார்கள். கூலியின் வீதம் உயர்வதற்கும், வேலையின்மை வீதத்திற்கும் உள்ள சார்பு உறவு என்ன என்பதை A. W. Philips[1] என்ற பிரிட்டிஷ் பொருளாதார அறிஞர், ஆராய்ந்து சில முடிவுகளுக்கு வந்தார். இவருடைய பெயரால், பிலிப்ஸ் வளைகோடு என்ற கருத்து ஒன்று பேசப்படுகிறது. இதைச் சுலபமாகச் சொல்ல வேண்டுமென்றால் Y அச்சில் சதவீதக் கணக்கில் உயர்ந்த பணக் கூலியை எடுத்துக்கொள்ளவேண்டும். X அச்சில் அதற்கு இணையான வேலையின்மை சதவீதத்தைக் காட்டவேண்டும். இந்த நியமப்புள்ளிகளில் வந்துசேரும் கோட்டைக் கீழ்க்கண்ட முறையில் காட்டலாம்.



படம் 65

ஒவ்வொரு பணக்கூலி உயர்வையும், பண வீக்கம் என்று சொல்லக் கூடாது. OW_1 கூலி வீதத்தில் ஒரு படுக்கைக் கோட்டை வரைந்து விலைவாசிகளை அதிகப்படுத்தாமல் கூலி உயர்வையும் கொடுத்து உற்பத்தித் திறனையும் பெருக்கிக் கொள்ளலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 3% அல்லது 3·2% வேலையின்மையை வைத்துக்

[1] The Relationship between unemployment and rate of change of Money wage rates in U. K. 1862—1957. Economica 1958. p. 238—99.

கொண்டு விலையை நிலைப்படுத்தி வைத்துக்கொள்ள முடியும் என்று கூறப்படுகிறது. அமெரிக்கப் பொருளாதாரிகளால் ஒத்துக் கொள்ளப்படும் வேலையின்மையை 3% முதல் 4% என்று சொல்லலாம். OU_1, OW_1 என்று இரண்டு கோடுகள் சந்திக்குமிடம் H இதனால் முக்கியத்துவம் பெறுகிறது. பிலிப்ஸ் வளைகோடு இந்த H என்ற புள்ளிக்கு இடப்பக்கத்தில் வந்தால், கூலியால் உந்தப் பட்ட அளிப்புப் பண வீக்கத்தை, பண நிதிக்கொள்கைமூலம் தேவையைக் குறைத்துக் கட்டுப்படுத்த முடியும். OW_2 என்பது பண வீக்க சக்தி நிறைந்த கூலிவீதம் என்று குறிப்பிடுவோம். அஃதாவது OW_2 என்ற கூலி வீதத்தில் உற்பத்தித் திறனுக்குமேல் கூலி கொடுக்கிறோம். இங்கே சரியான கூலிவீதம் OW_1 மொத்தத் தேவையைக் குறைப்பதன்மூலம், வேலையின்மையை u_3க்குக் குறைத்து விலைவாசிகளைச் சமப்படுத்தமுடியும். இந்த u_3 என்ற வேலையின்மைச் சதவீதம் H என்ற எல்லைக்கோட்டின் இடப்பக்கத்திலேயே விழுந்து விடுவதால் சமுதாயத்தினால் தாங்கக்கூடிய u_3 வேலையின்மையே ஏற்படுகிறது. பிலிப்ஸ் வளைகோடு Bயை எடுத்துப் பரிசோதிப்போம். W_1 என்ற கூலிவீதத்தில் B, பிலிப்ஸ் வளைகோட்டில் u_4 % வேலையின்மை ஏற்படுகிறது. U_4 H என்ற எல்லைக் கோட்டைத் தாண்டி இருப்பதால் இந்த வேலையின்மையைச் சமூகம் ஒத்துக் கொள்ளப்போவதில்லை. இதுபோன்ற நிலையில் பண நிதிக்கொள்கைகள் பலனில்லாமல் போய்விடுகின்றன.

நாம் இதுவரை விவரித்த பிலிப்ஸ் வளைகோடுமூலம் ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். வேலையின்மை வீதம் குறைய விலைகளின் மீதுள்ள அழுத்தம் அதிகரிக்கப்பட்டு விலைகள் ஏறுமுகமாகச் செல்லும். இம் முடிவைத்தான் A. W. பிலிப்ஸ் அவர்கள், இங்கிலாந்தின் பணக்கூலியையும் வேலையின்மையையும் 1816—1957 வரை ஆராய்ந்து வெளிப்படுத்தினர்.

பிலிப்ஸ் அவர்களின் முடிவுகளைக் கீழ்க்கண்டபடி தொகுத்துச் சொல்லலாம். (a) 2% உற்பத்தித்திறன் வளர்ச்சி அடையும்போது நிலைபெற்ற விலை ஏற்பட 2·5% வேலையின்மை ஏற்படும். அப்போது தான் அதிகமாகும் உற்பத்திக்கு ஏற்ப, பணக்கூலியை அதிகப் படுத்தமுடியும். (b) நிலைபெற்ற கூலி வீதம் இருக்கவேண்டு மென்றால் 5·5% வேலையின்மை ஒத்துக் கொள்ளப்படவேண்டும்.

பிலிப்ஸ் வளைகோடு, வெளிநாட்டுத்துறை சம்பந்தமான மாறிகளைக் கவனத்தில் கொள்ளவில்லை. இறக்குமதி விலை அதிக மாவதன் காரணமாகவும் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் சிக்கல்கள் காரணமாகவும் விலைகள் ஏறும். இதுவரை

தேவை மூலமாக ஏற்படும் பண வீக்கத்தைப்பற்றியும் அளிப்பு மூலமாக ஏற்படும் பணவீக்கத்தைப்பற்றியும் பிரித்துப் பாகுபாடு செய்து கவனித்தோம். முழுவேலை என்பதைப் புள்ளி(Point) ஆகக் கருதக்கூடாது. அதை ஒரு மண்டலமாக (Zone) கருத வேண்டும். அதிகமான மொத்தத் தேவை இருக்கும் சமூக அமைப்பில், உழைப்புக் குறிப்பிட்ட நேரத்திற்குமேல் வேலைக்குக் கிடைக்கும். பெண்கள் உழைப்புச் சக்தியைக் கொடுக்க முன் வருவார்கள். நாம் முன்னர்ப் பார்த்ததுபோல் முழு வேலையை அடைவதற்கு முன்னுலேயே பண வீக்கம் ஏற்பட்டுவிடுகிறது. இதுபோன்ற வேலையின்மை எவ்வளவு சதவீதம் இருக்கவேண்டும் என்பது பற்றி பொருளாதாரிகளின் இடையில் இரண்டுவிதமான கருத்துகள் காணப்படுகின்றன. சிலர் வேலையின்மையை 1·5%க்குள் குறைக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். மனிதாபிமானத்தோடு சொல்லப்படும் இக் கருத்து அதிகமான காரணிகள் உற்பத்தியில் ஈடுபடுவதால் தேசிய உற்பத்தி அதிகமாகும் என்ற பொருளாதார நன்மையையும் சொல்லுகிறது.

மற்றொரு கருத்துப் பேராசிரியர் ஃபெய்ஸ் (F. W. Paish) என்பவரால் கொண்டுவரப்பட்டது. இவருடைய கருத்துப்படி இங்கிலாந்தில் இருக்கும் பணவீக்கத்தின் தொல்லைகளுக்குக் காரணம், இங்கிலாந்தின் பொருளாதாரத்தில் ஒரு பெரிய அளவிற்கு வேலை வாய்ப்பு இருப்பதுதான். பெரிய வேலை வாய்ப்புகள் இருப்பதால் இரண்டு விதமான விளைவுகள் ஏற்படுகின்றன. (1) பொருளாதாரத்தின் சில துறைகளில் அதிகமான தேவை ஏற்பட்டு, உற்பத்திச் செலவு, கூலியின் உயர்வு காரணமாக அதிகரிக்கிறது. (2) கூலி உயர்வு அடிக்கடி அதிகமாகிறது. இதனால் இங்கிலாந்து நாட்டின் விளைவாசிகள் மற்ற எல்லா நாட்டைவிட அதிகரித்து அயல் நாட்டுக் கொடுப்பல் நிலையில் தொல்லைகள் ஏற்படுகின்றன. மேலும் இக் கருத்தைக் கொள்ளும் பொருளாதாரிகள் அதிகமான வேலையின்மைவீதம் நாட்டு உற்பத்தியைக் குறைத்துவிடாது என்று நம்பினர். நிலையான விலைகளினுல், விலைக் கருவி நன்கு செயல்பட்டு உற்பத்தித்திறன் வளர்ச்சி அடைகிறது. அரசாங்கத்தின் செயற்கையான கட்டுப்பாடுகளினுல் திறமையற்ற நிறுவனங்கள்கூட உபரிகளை ஈட்டமுடிகிறது. இதனுல், வேலையின்மையுடன் கூடிய நிலையான விலைகளே ஒரு பொருளாதாரத்தை வலுப்படுத்தும்.

நடைமுறையில் அரசியல் கருத்துகளே இதுபற்றி முடிவு செய்கின்றன. விலைகளை நிலைப்படுத்துவதற்காக வேலையின்மையை அதிக அளவில் வைத்திருக்கும் ஓர் அரசாங்கம் நிலைத்துப் பதவியில்

இருப்பதற்கில்லை. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர்ப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன.

அமைச்சர்களும் அதிகாரத்தில் உள்ளவர்களும் உற்பத்தியை அதிகரிக்கும்படி வேண்டுகோள் விடுக்கிறார்கள். தேசிய சேமிப்பு அமைப்புகள், தங்கள் பிரச்சாரம்மூலம் தொழிற்சங்கங்களை சேமிக்கக் கோருகின்றன. கம்பெனிகளை ஈவுத்தொகைகளைப் பகிர்ந்து கொடுக்க முடியாதபடி கேட்டுக் கொள்ளலாம். தனியார்த்துறை இயங்கும் பொருளியல் அமைப்பில் இதுபோன்ற வேண்டுகோளால் அதிகப் பலன் இருக்கப் போவதில்லை. அதற்குப் பதிலாக, ஏற்றுமதிக்கும் உற்பத்தி, அதிகரிப்புக்கும் ஊக்கம் கொடுக்கும்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நேரிடையான கட்டுப்பாடுகள்மூலம் நுகர்ச்சிச் செலவையும் முதலீட்டுச் செலவையும் குறைக்க முயற்சி செய்யலாம். இதனால் அதிகத் தேவையினால் ஏற்படும் பணவீக்கத்தைக் குறைக்க முடியும். விலைக் கட்டுப்பாடுகள், நுகர்ச்சிப் பொருள்களைப் பங்கீட்டுமுறைமூலம் பகிர்வு செய்தல்போன்ற காரியங்களை அரசாங்கம் செய்யலாம். பின்னர்க் கூலி, வருமானம், இலாபம் இவற்றின்மீது கட்டுப்பாடுகளைக் கொண்டுவரலாம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1946–48, 1950–51, 1956–58, 1965–66, 1972 ஆண்டுகளில் ஏறுமுகமான விலைவாசிகள் காணப்பட்டன. இவை நாம் முன்னர் விவரித்த கோட்பாடுகளின் எந்த அடிப்படையில் உயர்வு கண்டன என்பதை எழுதுவது சிக்கலான காரியமாகும். அதிகத் தேவையினால் ஏற்பட்ட பணவீக்கத்தைப் பணநிதிக் கொள்கைமூலமாகக் கட்டுப்படுத்திக் கொண்டுவர முடியும். அளிப்பினால் ஏற்பட்ட பணவீக்கமாக இருந்தால், மார்க்கெட் கருவியைச் சரிப்படுத்த வேண்டும். மார்க்கெட்டில் ஏற்படும் ஏகபோகச் சக்திகளைக் களைந்தெறிய சட்டங்கள் செய்து அமுல்படுத்த வேண்டும். செலவினால் உந்தப்பட்ட பணவீக்கத்தைக் குறைக்க தொழிற்சங்கங்களைக் கட்டுபடுத்தும் கடுமையான சட்டங்கள் கொண்டு வரவேண்டும். விலைவாசிகளை ஓர் அளவுக்கு மேல் அதிகரிக்க விடாமல் பார்த்துக்கொண்டு, பொருளாதாரத்தில் ஒரு நல்ல ஸ்திரமான நிலையை ஏற்படுத்த வேண்டும்.

21. வாணிபச் சுழற்சி
(Business Cycle)

நாட்டு வருமானத்தை நிர்ணயம் செய்யும் பொருளாதார சக்திகளை இதுவரை பார்த்தோம். சேமிப்பு, முதலீடு இவற்றின் சமன்பாட்டையும் கவனித்தோம். இப்படி நிர்ணயம் செய்யப்படும் வருமானம் வளர்ச்சி அடைவதை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். ஆண்டுக்கு 2 அல்லது 4% பொருளாதார வளர்ச்சி பெற்றுச் செல்லும் நீண்டகாலப் போக்கு (Secular trend), இரண்டாவது குறுகிய காலத்தில் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி. இதைத் தான் நாம் இங்கு ஆராயப்போகிறோம். இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை வரைபடங்கள் மூலம் விளக்கம் செய்ய முடியும்.



படம் 66

வளர்ச்சியும் சுழற்சியினால் ஏற்படும் ஏற்ற இறக்கங்களும் AB நீண்டகால வளர்ச்சிப் போக்கைக் காட்டுகின்றன. வரைபடம் (a)-ல் வளர்ச்சியில்லை. வரைபடம் (b)-ல் வளர்ச்சி ஏறுமுகமாக இருக்கிறது. AC என்பது நீண்டகால வளர்ச்சிப் போக்கில் ஏற் படும் ஏற்ற இறக்கச் சுழற்சிகளைக் (Cyclical fluctuations) காட்டு கிறது.

வருமானம், வேலையின்மை, உற்பத்தி, விலைகள், இலாபங்கள் ஆகியவற்றின் போக்கு ஒழுங்காக ஒரே ரீதியில் இருப்பதில்லை. வியாபாரச் சூழ்நிலைகள் மாறுதல் அடைகின்றன. பொருளாதார மறுமலர்ச்சி (recovery) சில சமயங்களில் மெதுவாகவும் அல்லது வேகமாகவும் காணப்படுகின்றன. நல்ல செழிப்பான பொருளாதாரநிலை மாறி நெருக்கடிகள் ஏற்பட்டுவிடுகின்றன. சில மறுமலர்ச்சிகள் முற்றுப் பெறுமல் போய்விடுகின்றன. சில மறுமலர்ச்சிகள் நீண்டநாள் நீடிக்கப்பட்டு நல்ல சுறுசுறுப்பான மார்க்கெட் நிலையும், ஏராளமான வேலை நிறைந்த பொருளியல் உயர்வும் ஏற்பட்டு நன்மை பயக்கும். சில சமயங்களில் பணவீக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் உயர்த்தப்பட்டு, ஊக வாணிகம் எல்லைக்குமேல் போய் நெருக்கடி ஏற்பட்டுப் பொருளாதார மந்தங்கள் ஏற்படலாம்.

கடந்த 150 ஆண்டுகளாகத் தனியார்த்துறை இயங்கும் தொழில் நிறைந்த நாடுகளில் வாணிப சுழற்சி ஏற்பட்டு, அதன் காரணமாக வேலையும் வருமானமும் ஏறியும் இறங்கியும் சுழன்று வந்தன. இரண்டு வணிகச் சுழற்சிகளில் ஒன்று, மற்றதைப்போல இருப்பதில்லை. இவற்றின் காலப்போக்கைச் சரியாகச் சொல்ல முடியாது. குழந்தைகளின் உடல்நிலை வெப்பத்தைப்போல, வணிகச் சுழற்சிகள் தாறுமாறுகக் காணப்படுகின்றன.

வியாபாரச் சுழற்சியை அளவீடு செய்தல்

ஒரு நாட்டின் வரலாறு முழுவதும், வியாபாரச் சுழற்சி இருந்து வந்திருக்கிறது. ஆனால் 1929-ல் ஏற்பட்ட பொருளாதார மந்தம் போல இதுவரை திரும்பி ஏற்பட்டதில்லை. இங்கிலாந்து, ஜெர்மனி, முதலிய நாடுகளிலும் நீண்டகாலமாக இதுபோன்ற ஏற்ற இறக்கச் சுழற்சிகள் காணப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சராசரி வேலையின்மை நீண்டதாகவும், வேறுபட்டதாகவும் காணப்படுகிறது. ஜெர்மனி நாட்டைக் காட்டிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பொருளாதார ஏற்ற இறக்கம் அதிகமாகக் காணப்பட்டது. கடந்த 30 வருடங்களில்தான் ஒரு பெரிய பொருளாதார மந்தம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஏற்படவில்லை. 1948 – 1949, 1953 - 54, 1957 – 58, 1960 – 61, பொருளாதார இறக்கங்கள் (Recession) ஏற்பட்டன. இந்த வருடங்களில் உற்பத்தி, வேலையின்மை, வருமானம் ஆகியவற்றில் பல இறக்கங்கள் காணப்பட்டன. பொருளாதாரத்திற்கு வேறுபட்ட விஷயங்களான கல்யாணம், குழந்தை பிறப்பு. தற்கொலைகள், சரியான போஷாக்கின்மை ஆகியவற்றில்கூட, வியாபாரச் சுழற்சி தன் சக்தி, களைப் பயன்படுத்தி, அவற்றின் போக்கை மாற்றி அமைத்திருக்

கின்றன. 1960-ல் ஏற்பட்ட பொருளாதார இறக்கம் காரணமாக, கென்னடி வெற்றி பெற முடிந்தது. 1930 ஹூவர் (Hoover) காலத்தியப் பொருளாதார மந்தத்தினால் ரூஸ்வெல்ட் வெற்றியடைய முடிந்தது.

பொருளாதாரிகள் இந்த வியாபாரச் சுழற்சியை நான்காகப் பிரித்துக் கூறுவது வழக்கம். இறக்கம், மறுமலர்ச்சி, ஏற்றம், உச்சிச்செல்லல் என்று நான்கு வகையாகப் பொருளாதார ஏற்ற இறக்கங்களைப் பிரிக்கலாம். பொருளாதார இறக்கம் ஏற்பட்டு வருமானம், உற்பத்தி குறைந்துகொண்டேபோய் ஒரு திருப்பம் ஏற்படுகிறது. இத் திருப்பத்தில் இறக்கம் நீங்கி மறுமலர்ச்சி ஏற்படுகிறது. இம் மறுமலர்ச்சி ஏற்றத்தைக் கொடுத்து வருமானமும் வேலை, உற்பத்தி ஆகியவை வளர்கின்றன. இவை ஓர் உச்ச நிலை அடைந்து மறுபடியும் ஒரு திருப்பம் ஏற்படுகிறது. பொருளாதார நடவடிக்கைகள் இறங்குமுகமாகச் செல்கின்றன. இதைக் கீழ்க் கண்ட வரைபடத்தில் காட்டலாம்.



படம் 67

இந்த வியாபாரச் சுழற்சியின் காலம் எவ்வளவு இருக்கும் என்று அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. பெரிய சுழற்சிகள் எல்லாம் 8 வருடத்திற்கு ஒருமுறை ஏற்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1795 – 1937வரை 8·35 வருடத்திற்கு ஒரு முறையாக 17 சுழற்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. பெரிய சுழற்சிகள் கட்டடம் கட்டும் (building construction) தொழிலில் 15 அல்லது 25 வருடங்களுக்கு ஒருமுறை ஏற்படுகின்றன.[1]

ஹேன்ஸன் (Hansen) அவர்கள், வியாபாரச் சுழற்சி ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன என்பதை வகைப்படுத்தினார். சில பொருளாதார மாறிகள் (economic variables) ஏற்ற இறக்

[1] Kuzhets cycle being named for the Scholar who first noticed them in 1930.

கங்கள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. எஃகு உற்பத்தியையும், சிகரெட் (cigarettes) நுகர்ச்சியையும் இரண்டு வரைபடங்களாகப் போட்டால், சிகரெட் உற்பத்தியில் எவ்விதமான வியாபாரச் சுழற்சியும் நாம் காண்பதற்கில்லை. சிகரெட் என்பது ஒரு நுகர்ச்சிப் பொருள். நல்ல காலத்திலும், கெட்ட காலத்திலும், புகை பிடித்துப் பழக்கமுள்ளவர்கள் சிகரெட் பிடிப்பதை நிறுத்தப் போவதில்லை. எஃகு உற்பத்தி என்பது உறுதிப்பொருள் (Durable good). இதுபோன்ற பொருளைப் பொருளாதாரத்தில் மோசமான காலத்தில் வாங்குவதை நிறுத்திவிடலாம். தொழில், வீடு கட்டுதல், கார் உற்பத்தி, துணி துவைக்கும் இயந்திரங்கள், மற்ற உறுதியான நுகர்வுப் பொருள்கள் (Durable consumer goods) முதலியவை வியாபாரச் சுழற்சியினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

வியாபாரச் சுழற்சியின் ஏற்ற இறக்கங்களைப் பற்றிப் பேசும்போது நாம் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில் தரும்படி நேருகிறது. அவ் வினாக்களை வரிசைப்படுத்தி நாம் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

1. வியாபாரச் சுழற்சியில் ஏற்றமும் இறக்கமும் ஏன் ஏற்பட வேண்டும்?
2. ஏன் இந்தச் சுழற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன?
3. அவை ஏன் இறுதிவரை பெருகிப் பின்னர் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துகின்றன?
4. முழு வேலை அடைவதற்கு முன்னமேயே ஏன் பொருளாதாரச் செழிப்பு முறிந்துவிடுகிறது?
5. ஏன் வியாபாரச் சுழற்சியினால் உறுதிப் பொருள்களும், ஏற்றுமதிப் பொருள்களும் பேரளவில் பாதிக்கப்படுகின்றன?
6. பொருளாதார பந்தம் ஏற்படும்போது சரியும் விலைகள் பொருளாதாரச் செழிப்பின்போது ஏறுமுகமாகின்றன.
7. ஏன் வியாபாரச் சுழற்சி 7 அல்லது 8 வருடங்கள் நீடிக்கின்றன?

வியாபாரச் சுழற்சியை விளக்கப் பலவிதமான கோட்பாடுகள் இருக்கின்றன.

சில கோட்பாடுகள், முதலீடுகள் ஏற்ற, இறக்கங்களால் வியாபாரச் சுழற்சி ஏற்படுவதாகக் கூறுகின்றன. சிலர் தொழில்

நுட்பத்தில் புதுமைகள் (technological innovations) மாற்றத்தால் மூதலீடு பாதிக்கப்பட்டு அதனல் ஏற்படுகிறது என்றனர். இக் கருத்துகள் மாறுபட்டவைபோலத் தோன்றினலும், இவை, சேமிப்பு முதலீட்டின் பல பகுதிகளைப்பற்றியே தங்கள் கோட்பாட்டில் கூறுகின்றன. இருந்தாலும் இந்தக் கோட்பாடுகளில் சில மாறுபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. இது போன்ற பல கோட்பாடுகளை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். அவையாவன. 1. அகக்கோட்பாடுகள் (internal theories), 2. புறக் கோட்பாடுகள் (external theories).

புறக் கோட்பாடுகள், பொருளதார அமைப்பிற்கு வெளிப்பட்ட சில காரணங்களை, வியாபாரச் சுழற்சியுடன் சார்பு படுத்திக் காட்டுகின்றன. சூரியனில் ஏற்பட்ட ஒரு புள்ளியில் பல கோளாறுகள் ஏற்பட்டு பருவத்தைப் பாதித்து, அதன் காரணமாக வியாபாரச் சுழற்சி ஏற்படுகிறது என்று சொல்வார்கள். யுத்தம், புரட்சி, புது இடங்களைக் கண்டுபிடித்தல், விஞ்ஞானத் தொழிலில் முன்னேற்றம், புதுமைகள் ஆகியவற்றினல் வியாபாரச் சுழற்சி ஏற்படும் என்ற கருத்தும் நிலவுகிறது.

இயந்திரங்கள், 8 அல்லது 9 ஆண்டுகளுக்கு நீடித்து உழைக்கின்றன. மார்க்ஸ், இந்த இயந்திரங்களின் உறுதித் தன்மையோடு, வியாபாரச் சுழற்சியை இணைத்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும். பொருளாதாரச் செழிப்பின் ஆரம்ப காலத்தில் இயந்திரங்களும், முதலீட்டுப் பொருள்களும் சேர்த்துக் குவிக்கப்படுகின்றன. 8 அல்லது 10 வருடங்கள் கழித்து இந்த இயந்திரங்கள், தேய்ந்துபோய், அவை பயன்பட முடியாமல் போய்விடுகின்றன. இந்த எட்டு அல்லது 10 வருடங்களும் முதலீட்டுப் பொருள்களையும் இயந்திரங்களையும் மாற்ற வேண்டிய அவசியமில்லை. இதனல் பொருளாதார மந்தம் உண்டாகிறது. இந்தத் தேய்ந்துபோன இயந்திரங்களையும் ஆலைகளையும் சீர்ப்படுத்தும்போது தேவை பெருகி மறுபடியும் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுகிறது. இக் கருத்து அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை. எட்டு அல்லது 10 ஆண்டுகள் என்று ஒரே காலத்தில் இயந்திரங்கள் தேய்ந்து போவதில்லை. இயந்திரங்களின் உறுதித்தன்மை வேறுபட்டவை. எனவே, தேய்மானத்தை ஈடுகட்ட ஒரே காலத்தில் பணம் செலவழிக்கப்படுவதில்லை. இந்தக் கோட்பாடு குறையுள்ளதாகத் தோன்றினலும், இயந்திரங்களின் உறுதித்தன்மை வியாபாரச் சுழற்சிக்கு ஒரு காரணமாக இருக்கிறது என்பதை விளக்கம் செய்கிறது.

இன்றைய தினம் பொருளாதாரிகள், அகக்கோட்பாடுகள், புறக்கோட்பாடுகள் ஆகிய இரண்டையும் கலந்து, அவற்றின் உண்மைகளைத் தொகுத்து, வாணிபச் சுழற்சிகளை விளக்கம் செய்கிறார்கள். வாணிபச் சுழற்சிக்கு முக்கியக் காரணம் முதலீட்டுப் பொருள்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

நாம், இவ் வியாபாரச் சுழற்சியை விளக்குவதற்குத், தற்போது அதிகமாகப் பயன்படுத்தப்படும் **நவீனக் கோட்பாடுகள்**[1] சில வற்றை எடுத்துக் கொள்வோம். வியாபாரச் சுழற்சியைப்பற்றி விவரிக்கும் பல இலக்கியங்களையும் நூல்களையும் பார்த்த பின்னர், நாம் கீழ்க்கண்ட சில முடிவுகளுக்கு வரவேண்டி இருக்கிறது. முதலீடு, தேவையின் அளவைப் பொறுத்திருக்கிறது என்பதைக் காட்டிலும், முதலீடு, மாறுபடும் தேவையைப் பொறுத்திருக்கிறது என்று சொல்வதே சரியானதாகும். மாறுபடும் தேவையானது, உற்பத்தியை அதிகரிக்கத், தூண்டுகோலாக இருக்கிறது. அதிகமாகத் தேவைக்காக இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. இது போல மாறுபடும் தேவையை, மாறுபடும் முதலீட்டுடன் சார்புப் படுத்திச் சொல்வதை நாம் வேக வளர்ச்சி (Acceleration principle) என்று குறிப்பிடலாம். இதைச் சமன்பாட்டு வடிவில் நாம் கீழ்க் கண்டவாறு குறிப்பிடலாம்.

$I = I(i, \triangle Y)$ முதலீடு வட்டி வீதத்தையும், மாறுபடும் வருமானத்தையும் சார்ந்திருக்கிறது என்று நாம் இதைப் படிக்க வேண்டும். இந்த வேக வளர்ச்சிக் கோட்பாடானது, எப்படி வியாபார நடவடிக்கைகளைப் பாதிக்கிறது என்பதை நாம் இனி விவரிக்க வேண்டும்.

நாம், ஒரு நுகர்ச்சிப் பொருள் இருக்கக்கூடிய பொருளாதார மாதிரியை எடுத்துக் கொள்வோம். அந்த நுகர்ச்சிப் பொருளை Y என்று குறிப்பிடுவோம். இந்த Y என்ற நுகர்ச்சிப் பொருள், எல்லாவித நுகர்ச்சியையும் ஈடுகட்டி விடுகிறது என்று கற்பனை செய்து கொள்வோம். இந்த Y நுகர்ச்சிப் பொருளை நாளுக்கு ஒன்றாக உற்பத்தி செய்ய ஓர் இயந்திரம் தேவைப்படுகிறது. ஓர் இயந்திரத்தைச் செய்யும்போது 3, Yகளை வாங்கக்கூடிய வருமானம் இந்த முதலீட்டிலிருந்து உண்டாகிறது என்று வைத்துக் கொள்வோம். இந்த வருமானம் அடுத்த நாளில் செலவு

1 J. R. Hicks. A contribution to the Theory of Trade cycle. Oxford University Press. London, 1950.

P. A. Samuelson: Interaction between Multiplier and the principle of celebration Review of Economics and Statisics. 21 : 78 – 88 1939.

செய்யப்படுகிறது. இந்த இயந்திரம் 10 நாள்வரை உறுதியோடு நீடிக்கும். அங்கேயுள்ள இறுதிநிலே நுகர்ச்சி நாட்டம் $\frac{2}{3}$ என்று வைத்துக்கொள்வோம். மேலும் இந்த இயந்திரங்களே உடனுக்குடன் உற்பத்தி செய்ய முடியும் என்று வைததுக்கொள்வோம். இந்தப் பொருளாதார மாதிரியை வைத்துக்கொண்டு, நுகர்ச்சியை மாற்றுவதன்மூலம் எப்படி முதலீடு மாறுகிறது என்பதை நாம் காட்டமுடியும். இதைக் கீழேயுள்ள பட்டியலே ஊன்றிக் கவனிக்கும் போது தெரியவரும்.

பட்டியல் XVI

காலம் (1)	நுகர்ச்சி (2)	தேவைப்படும் இயந்திரங்கள் (3)	கையிருப்பில் உள்ள இயந்திரம் (4)	மொத்த முதலீடு[1] (5)
முதல் நாள்	20	20	18	2
2ஆம் நாள்	20	20	18	2
3ஆம் நாள்	21	21	18	3
4ஆம் நாள்	23	23	19	4
5ஆம் நாள்	25	25	21	4
6ஆம் நாள்	25	25	23	2
7ஆம் நாள்	21	21	23	0
8ஆம் நாள்	17	17	21	0
9ஆம் நாள்	17	17	19	0
10ஆம் நாள்	17	17	17	0
11ஆம் நாள்	17	17	15	2
12ஆம் நாள்	21	21	15	6
13ஆம் நாள்	29	29	18	11

[1] இந்தக் கோட்பாட்டை வெளிப்படுத்தியவர்களில் முக்கியமானவர் J. M. Clark என்பவராவர்.

(Business Acceleration and Law demand)

முன் பக்கத்திலுள்ளபட்டியலில் உள்ள பொருளாதாரம் ஆரம் பத்பத்தில் '0' சேமிப்புடையதாக இருக்கிறது. இங்கே நிகர முதலீடும் பூஜ்யமாக இருக்கிறது. இங்கேயுள்ள வருமானம் 20 Y. தினமும் இரண்டு இயந்திரங்களுக்குத் தேய்மானம் ஆகிறது என்று வைத்துக் கொள்வோம். மொத்த முதலீடு இரண்டு இயந்திரங்கள் 6 Y வருமானத்தைக் கொண்டிருப்பதால் இங்குள்ள மொத்த வருமானம் 26 Y ஆகும். பட்டியலில்குறிக்கப் பெற்ற 1ஆம் நாளும், இரண்டாம் நாளும் நிலைபெற்ற வருமானத்தைப் பெற்றிருக் கின்றன. மூன்றும் நாள் 5% நுகர்ச்சியை அதிகரித்து, உப நுகர்ச் சியை 21 நுகர்ச்சிப்பொருள்களாக அதிகமாக்கினால் என்ன விளை வுகள் ஏற்படும்? 21 நுகர்ச்சிப் பொருளைச் செய்ய 21 இயந்திரங்கள் தேவைப்படும். எனவே, முதலீடு இரண்டிலிருந்து, 3 ஆக (21—18) உயரவேண்டியிருக்கிறது. இப்படி ஓர் இயந்திரம் அதிகமாவதால் 3 Y வருமானம் உண்டாக்கப்படுகிறது. இதில் $\frac{2}{3}$ இறுதிநிலை நுகர்ச்சி நாட்டமாக இருப்பதால் 4ஆம் நாள் நுகர்ச்சி 23 ஆக உயர்வடைகிறது. அதற்கு 23 இயந்திரங்கள் தேவைப்படும். இருப்பு நிலைபோகத் தேவைப்படும். புது இயந்திரம் (23 — 19) 4ஆக மாறும் எனவே ஓர் இயந்திரம் அதிகப்படுத்துவதால் நுகர்ச்சி 5ஆம் நாள் 23 லிருந்து 25 Yஆக அதிகப்படுகிறது. ஆனால் 6ஆம் நாளும் நுகர்ச்சி 25ஆக மாறாமல் இருப்பதைப் பார்க்கலாம். இதற்குக் காரணம் மொத்த முதலீடு மாறாமல் இருப்பதே ஆகும். எனவே, வருமானம் நிலைப்பெற்றுவிடுகிறது. 7ஆம் நாள் தொடக்கத்தி லிருந்து நுகர்ச்சி குறைந்துகொண்டே சென்று 11ஆம் நாள்வரை 17-ல் நிலைபெற்று இருக்கிறது. 12ஆம் நாளில் மறுமலர்ச்சி ஏற்பட்டு மறுபடியும் பொருளாதாரம் ஏற்றம் பெறுகிறது.

இப் பட்டியலில் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கியக் கருத்துகள் யாவை? இயந்திரங்களின் உறுதித் தன்மையால், பொருளாதாரத்தின் சமநிலை வெகுவாகப் பாதிக்கப்படும். இயந் திரங்களின் தேய்மானம் அதிகரித்து, குறுகிய காலத்தில் இயந் திரங்கள் பாதிக்கப்பட்டால், அதிகமான தேவை ஏற்பட்டுக் குறுகிய காலத்தில் பொருளாதார மந்தங்களிலிருந்து விடுபட முடியும். மேலே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் 10 நாள்களுக்கு ஒருமுறை இயந்திரம் தேய்வுபடுகிறது. அதுவே 5 நாள்களுக்குள் தேய்மானம் ஆகியிருந்தால், இரண்டு இயந்திரங்களுக்குப் பதிலாக நான்கு இயந்திரங்களுக்குத் தேவை ஏற்பட்டிருக்கும்.

நாம் மேலே குறிப்பிட்ட மாதிரியில் சில மாற்றங்கள் செய்து T. R. ஹிக்ஸ் (T. R. Hicks) அவர்களின் வாணிபச் சுழற்சிக்

* Hicks-A contribution to the Theory of Trade cycle.

கோட்பாட்டைப் பார்ப்போம். முதலாவதாக ஹிக்ஸ் அவர்கள், ஊக்கிவைக்கப்படும் முதலீடு மாறுபடும் நுகர்ச்சிச் செலவை மாத்திரம் சேர்ந்திருக்கவில்லை. முதலீடு மாறுபடும் உற்பத்தியைச் சார்ந்திருக்கிறது என்று ஹிக்ஸ் வாதிட்டார். இரண்டாவதாக நாம் மேலே குறிப்பிட்டுள்ள மாதிரியில் நுகர்ச்சி வேகமாக மாறுமையால், மறுமலர்ச்சி மேல்நோக்கிச் செல்லாமல், கீழே செல்ல ஆரம்பித்துவிடுகிறது. இதை ஹிக்ஸ், சுதந்திரமான சுழற்சி (free cycle) என்று கூறுவார். ஹிக்ஸ் வேக வளர்ச்சி விதியின் குணகமும்[1] (Acceleration coefficient) இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்தின் மதிப்பும் பொருளாதாரப் பெருக்கத்தை ஏற்படுத்தி வியாபாரச் செழிப்பு ஏற்படுகின்றது என்றார். இந்தச் செழிப்பானது தொடர்ந்து செல்லாமல் இருப்பதற்குக் காரணம் சில புறச் சம்பந்தமான காரணிகளின் குறுக்கீடே ஆகும் (outside interfering factors). இந்தக் குறுக்கிடும் காரணியை Hick அவர்கள், உண்மைச் சாதனங்களின் உச்சவரம்பு (Ceiling of real resources) என்று குறிப்பிடுகிறார். இந்த உச்சவரம்பு ஏற்படுவதற்குக் காரணம் முழுவேலையும் முழு அளவில் உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துவதே ஆகும். உச்சவரம்பைச் சந்தித்த சுழற்சிகள், இடர்ப்பாடுடைய சுழற்சிகளாக மாறிவிடுகின்றன (constrained cycle). மூன்றாவதாக ஹிக்ஸ், முதலீட்டை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார். தூண்டப்படும் முதலீடு (induced investment) மாறுபாடும் உற்பத்தியைச் சார்ந்திருக்கிறது. தூண்டப்படாத முதலீடு (autonomous investment) நடப்பு இலாபத்தைக் கொள்ளாமல் நீண்டகாலக் காரணிகளான மக்கள் தொகை, தொழில் நுட்ப மாற்றம் ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது.

பெருக்கி - வேகவளர்ச்சி - வியாபாரச் சுழற்சி மாதிரிகள் (The Multiplier-Accelerator Model of Business Cycle)

பெருக்கி வேகவளர்ச்சியால் ஏற்படும் வியாபாரச் சுழற்சியைப் பற்றி இரண்டுவிதமான கருத்துகள் நிலவுகின்றன. ஹிக்ஸ் (Hicks), குட்வின் (Goodwin) முதலியோர், பெருக்கி வேக வளர்ச்சியின் சக்திகளால் வெடித்தெழும் சுழற்சிகள் ஏற்படும் என்று நினைத்தார்கள் (explosive cycles). ஹேன்ஸன் (Hansen) என்பவர், பலம் குறைந்த வேகவளர்ச்சி வீதத்தில் நம்பிக்கை வைத்தார். இதனால் சாதாரணச் சுழற்சிகள் (damped cycle) என்று இவர் கருதினர்.

[1] The acceleration coefficient is defined as the amount of extra capacity required to produce an additional unit of output.

நாம் முன்னதாக Hicks அவர்களின் மாதிரியைப் பார்த்தோம். கால்டார் (Kaldor) என்பவர், தன் வாணிபச் சுழற்சி கோட்பாட்டில் வேகவளர்ச்சிக் கோட்பாட்டைப் பயன்படுத்தவில்லை. கால்டார் மாதிரியில் (Kaldors model) முதலீடு வருமான அளவீட்டை நேராகச் சார்ந்தும், முதல் இருப்போடு (Capital Stock) எதிர்மறையான உறவையும் பொறுத்திருக்கிறது.

வேகவளர்ச்சியோடு சார்ந்திருக்கும் முதலீட்டுச் சார்பை நாம்

$$It = In + W\ (Yt_{-1} - Yt_{-2})$$

என்று குறிப்பிடலாம். கால்டா மாதிரியில்

$$It = Ia + hYt_{-1} - jKt$$

என்று மாறுதல் அடையும். இங்கே K என்பது இருப்பில் இருக்கும் முதலையும், t என்பது ஆரம்பகாலத்தையும், h, J மாறிலியாகவும் இருக்கின்றன.

Hicks அவர்களின் கோட்பாடு நெகிழ்வற்றதாய் இருந்தாலும் எல்லாப் பொருளாதாரிகளும் அம் மாதிரியை வெகுவாகப் பாராட்டத்தான் செய்கின்றனர். Hicks-ன் கோட்பாடுகளில் பல பகுதிகள் விமர்சனம் செய்யப்பட்டாலும், ஹிக்ஸின் மாதிரியே வியாபாரச் சுழற்சிக் கோட்பாட்டில் கடைசி வார்த்தையாக இருந்துவருகிறது.

மேற்கோள் நூற்பட்டியல்
(BIBLIOGRAPHY)

G. ACKLEY —'*Macro Economic Theory*,' (Macmillan, New York, 1961).

DERNBURG AND MC. DOUGALL — '*Macro Economics*,' McGraw Hill Book Company, New York.

F. S. BROOMAN — '*Macro Economics*,' 4th Edn. (Allen and Unwin).

D. DILLARD — '*The Economics of J. M. Keynes* (Crosby Lockwood).'

A. H. HANSEN — '*A Guide to Keynes* (McGraw Hills, 1953).'

J. M. KEYNES — '*The General Theory of Employment, Interest and Money* (Macmillan).'

A. W. STONIER AND D. C. HAGUE — '*A Text Book of Economic Theory* (Longmans).'

S. BOBER — '*The Economics of Cycle and Growth* (Wiley, 1968).'

கலைச்சொற்கள்

(ஆங்கிலம்—தமிழ்)

A

Acceleration coefficient	—	வேகவளர்ச்சி குணகம்
Acceleration principle	—	வேகவளர்ச்சி விதி
Adjustments - dynamic	—	இயக்க நிலையில் சரிப்படுத்தல்
Aggregate consumption	—	மொத்த நுகர்ச்சி
Aggregate demand	—	முழுத்தேவை
Assets and interest rate	—	சொத்துகளும் வட்டிவீதமும்
Autonomous investment	—	தூண்டப்படா முதலீடு

B

Balanced Budget Theorm	—	சரிசம பட்ஜெட் கோட்பாடு
Balance of payment account	—	அயல் நாட்டுச் செலுத்து இருப்புநிலைக் கணக்கு
Bonds	—	பத்திரங்கள்
Business cycle	—	வாணிபச் சுழற்சி
Business sector	—	வணிகத்துறை

C

Capital accumulation	—	முதல் திரட்சி
Captıal coefficient	—	முதல் குணகம்
Capital consumption allowance	—	தேய்மானச் செலவு
Classial model	—	தொன்மைப் பொருளாதாரி களின் மாதிரி
Consumer price index	—	நுகர்வோர் விலைக்குறியீடு
Consumption function	—	நுகர்ச்சிச் சார்பு
Cost push inflation	—	செலவினால் உந்தப்பட்ட பண வீக்கம்

D

Deflation	—	பொருளாதார மந்தம்
Deposit creation	—	கடன்களை உற்பத்தி செய்தல்

Devaluation — மதிப்புக் குறைப்பு
Discounting — தள்ளுபடி செய்தல்

E

Employment — வேலை
Equilibrium — சமநிலை
Exchange rate — பரிவர்த்தனை வீதம்

F

Factor cost — உற்பத்திச் செலவு
Fiscal policy — நிதிக் கொள்கை
Full employment — முழுவேலை

G

Gold standard — பொன் நாணயத்திட்டம்
Government sector — அரசாங்கத்துறை
Gross National product — நாட்டின் மொத்த ஆக்கம்
Growth — வளர்ச்சி

H

Household sector — இல்லத்துறை

I

Innovations — புதுமைகள்
Income — வருமானம்
International trade — பன்னாட்டு வாணிகம்
Investment — முதலீடு

L

Lobour market equilibrium — உழைப்பு மார்க்கெட் சமன்பாடு
Leakages — கசிவுகள்

M

Macro economics — பேரியல் பொருளாதாரம்
Marginal efficiency of capital — முதலீட்டின் இறுதிநிலைத்திறன்

Marginal propensity to consume — இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம்
Monetary policy — பணக்கொள்கை
Money illusion — பணமாயை
Multiplier — பெருக்கி

N

National income — நாட்டு வருமானம்
National net products — நாட்டு நிகர ஆக்கம்
Natural rate of interest — இயற்கையான வட்டிவீதம்

P

Per capita income — தனி நபர் வருமானம்
Production function — உற்பத்திச் சார்பு

R

Resource allocation — சாதனப் பங்கீடு

S

Speculative demand — ஊக வணிகத்திற்கான தேவை
Stagnation — தேக்கம்

T

Transaction demand — பேரத்திற்கான பணத்தேவை

U

Unemployment — வேலையின்மை